# ஆழ்வார்கள் அருளிச்செயலில் அவதாரங்கள்

தி. அரங்கநாதன்

# ஆழ்வார்கள் அருளிச்செயலில் அவதாரங்கள்

**டாக்டர் தி. அரங்கநாதன்,**
தமிழ் முதுநிலை விரிவுரையாளர்,
அரசு ஆடவர் கல்லூரி, (தன்னாட்சி)
கும்பகோணம்.

THIS BOOK IS PUBLISHED WITH THE FINANCIAL ASSISTANCE OF TIRUMALA TIRUPATI DEVASTHANAMS UNDER THEIR SCHEME : AID TO PUBLISH RELIGIOUS BOOKS

**ஸ்ரீ மங்கைப் பதிப்பகம்**
15, அண்ணா நகர்,
கும்பகோணம் - 612 001.

நூல் பெயர் : ஆழ்வார்கள் அருளிச்செயலில் அவதாரங்கள்

ஆசிரியர் : டாக்டர். தி. அரங்கநாதன்.

மொழி : தமிழ்

பதிப்பு : முதல் பதிப்பு
பிப்ரவரி, 1997

உரிமை : ஆசிரியர்க்கு

வெளியீடு : ஸ்ரீ மங்கைப் பதிப்பகம்,
15, அண்ணா நகர்,
கும்பகோணம் - 612 001.

தாள் : 13.7 KG. WT.

நூல் அளவு : 22 x 14 செ.மீ.

எழுத்து : 10 புள்ளிகள்

பக்கம் : xviii +199

படிகள் : 1000

நூல் கட்டு : இணைப்புக் கட்டு

விலை : ரூபாய் **80/-**

அச்சும் அமைப்பும் : சந்திரா (ஆப்செட்) பிரிண்டர்ஸ்,
கும்பகோணம். போன் : 20717

ஸ்ரீ:

# அணிந்துரை

ஸ்ரீ உப.வே. வ.ந. **கோபால தேசிகாசார்ய ஸ்வாமிகள்**
M.A., M.Sc.(Lond), I.R.T.S. (Retd.)
ஒப்பிலியப்பன் ஸந்நிதி

மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து, பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் கொண்டு, ஆவார் ஆர்துணை என்று அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல் பிறவிக் கடலுள் நின்று நாம் துளங்கும் இந்நீர்மை இனியாம் உறாமல், பிறவிப் பெருங் கடல் நீந்துவதற்கு உறுதுணையாக, அஞ்சேல் என்று கைகவித்து நிற்கின்றான் திருமகள் கேள்வனான தாமரைக் கண்ணன். நம்மை நல்வழிப் படுத்த அவன் செய்யும் உபகாரங்கள் எண்ணிலடங்கா என்கிறார் வைணவ ஆசாரியப் பெருந்தகை ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன். '' அழியாத அருளாழிப் பெருமான் செய்யும் அந்தமிலா உதவி எல்லாம் அளப்பார் ஆரே'' என்று வியக்கின்றார்.

கருணைக்கடலான எம்பெருமான் அறிவிலா மனிசராகிய நம்முடைய அறியாமை என்னும் இருளை நீக்க, ஆதியில் பிரமனைப் படைத்து, அவன் மூலமாக நந்தா ஞானச் சுடர் விளக்காகிய வேதங்களை நமக்குக் காட்டியருளினான். மற்றும் ஸ்ம்ருதிகள் போன்ற சாஸ்த்ரங்களையும் ரிஷிகள் மூலமாக நமக்கு உண்டாக்கியருளினான். சாஸ்த்ரங்களை அறிந்து அவற்றின் வழி ஒழுக வேண்டியதற்கான அறிவையும், சக்தியையும் மானிடனுக்குக் கொடுத்திருக்கின்றான்.

குழவி கிணற்றில் வீழ்ந்தால், அதைக் காப்பாற்ற அக்கிணற்றில் குதிக்கும் தந்தையைப் போல, இப்பிறவிப் பெருங்கடலில் விழுந்து தத்தளிக்கும் நம்மைக் காத்தருள் வதற்காக, பக்தவத்ஸலனான பெருமானும், '' ஸம்பவாமி யுகே யுகே'' என்றபடி இந்நிலவுலகில் பற்பல அவதாரங்களை எடுக்கிறான். பாஞ்சராத்ர சாஸ்த்ரம், பகவத் கீதை போன்ற வற்றைத் தானே அருளிச் செய்கிறான்.

பின்னும் நம்மாழ்வார், திருமங்கை மன்னன் போன்ற பத்து ஆழ்வார்களாக, ஒரு புதிய தசாவதாரம் செய்தருளி, மேகங்கள், உப்புக் கலந்ததால் மானிடர்க்கு உபயோகப்படாத ஸமுத்ர ஜலத்தை வாங்கி, எல்லார்க்கும் பயன்படும் மழைத் தண்ணீராக உமிழுமாப்போலே, வேதங்கள் போன்ற சாஸ்த்ரங்களில் உள்ள கடினமான பொருளை யாவரும் அறிந்து கொள்ளும்படி திவ்யப்ரபந்தமாக வெளியிட்டருளினான். ஆசார்யர்கள் மூலமாக நுண்ணிய சாஸ்த்ரார்த்தங்களை ப்ரகாசிப்பித்தான்.

இதைத்தான் '' ஸ்ரீமந்நாராயணன் மனிதசரீரத்தை எடுத்துக் கொண்டு, ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் ஜீவர்களைச் சாஸ்த்ரமாகிற கையினால், கருணையுடன், தானே கரையேற்று கிறான்'' என்று சாஸ்த்ரம் சொல்கிறது.

ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்|
மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ர பாணிநா||
(ஜயாக்ய ஸம்ஹிதை)

இன்னும் அவன் செய்யும் உபகாரங்களையெல்லாம் பன்னி உரைக்குங்கால் பாரதமாம். இவற்றைப் பற்றி ஆசார்ய வள்ளல் தேசிகன் '' உபகாரஸங்க்ரஹம்'' என்னும் நூலில் எடுத்துரைக் கின்றார்.

தான் எடுக்கும் அவதாரங்களின் தத்துவத்தைக் கண்ணனே கீதையில் விளக்குகின்றான். தன் அவதாரங்கள் எல்லாம் ஸத்யம், அவை மெய்யாகவே நடந்தனவேயன்றி மாயையல்ல. அவதாரங்களிலும் தன் இயற்கைத் தன்மையுடனேயே விளங்குகின்றான். எடுக்கும் அவதாரங்கள் (பிறப்புக்கள்), தேவர்கள், மனிதர்களைப் போல் கர்மத்தால் - வினைப்பயனால் ஏற்படுபவையன்று; அவனுடைய திவ்யஸங்கல்பத்தாலேயே ஏற்படுபவை. அவதாரத் திருமேனியும் நம்மைப்போன்று பஞ்ச பூதங்களால் ஏற்படுவதன்று; சுத்த ஸத்வமயமானது. எப்பொழுது தர்மத்துக்கு வாட்டம் ஏற்படுகின்றதோ, எப்பொழுது அதர்மம் மேலோங்குகின்றதோ, அப்பொழுதெல்லாம் அவதாரம் எடுக்கின்றான் பெருமான். ஸாதுக்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநிறுத்தவும் யுகந்தோறும் அவதரிக்கிறான்.

இப்படி இறைவன் எடுக்கும் அவதாரங்களைப் பற்றி வேதமும் பல இடங்களில் பகருகின்றது. ''பிறப்பிலியாய் இருந்த போதிலும் பலபடியாகப் பிறக்கிறான் '' என்கிறது மறை (அஜாயமாநோ பஹுதா விஜாயதே). இங்குப் பிறப்பிலி என்றது அவனுக்கு ஊழ்வினைப்பயனால் வரும் பிறப்புக் கிடையாது என்பதனை உணர்த்துகின்றது. ''எல்லாருக்கும் தந்தையான ஈசன், தன் மகன்களில் ஒருவனைத் தந்தையாகக் கொண்டு பலபிறப்புகளும் எடுக்கிறான்'' என்று மீண்டும் வலியுறுத்து கின்றது எழுதாமறை (பிதா புத்ரேந பித்ருமாந் யோனியோ நௌ).'' அவன் அவதாரங்களை எடுத்து விளங்குகின்றான்'' என்கிறது (ஸ உச்ரேயாந் பவதி ஜாயமாந:).

வேதத்தின் ஒரு பகுதியான சாந்தோக்ய உபநிஷத் இன்னும் ஒருபடி மேலே போய்க் கண்ணனுடைய அவதாரத்தையே தெளிவாகக் கூறுகின்றது. '' தேவகியின் மகனான க்ருஷ்ணனுக்கு என்று சொல்லி ..... '' என்கிறது (க்ருஷ்ணாய தேவகீ புத்ராய உக்த்வா ......).

இறைவனின் அவதாரங்கள் சங்க இலக்கியங்களிலும் பாடப்பெறுகின்றன. இரண்டாம் பரிபாடல் '' கேழல் திகழ்வரக்கோலமொடு பெயரிய ஊழி ஒருவினை உணர்த்தலின்'' என்று வராஹாவதாரத்தையும், ''நீயே வளையொடுபுரையும் வாலியோற்கு அவன் இளையன் என்போர்க்கு இளையை'' என்று பலராமாவதாரத்தையும், க்ருஷ்ணாவதாரத்தையும் பாடுகின்றது. மூன்றாம் பரிபாடல் ''அவற்றுள் கீழ் ஏழுலகமும் உற்ற அடியினை'' என்று த்ரிவிக்ரமாவதாரத்தையும், நான்காம் பரிபாடல் ''நின் புகழ புகைந்த நெஞ்சின் புலர்ந்த சாந்தின் பிருங்கலாதன் பலபல பிணி பட வலந்துழி ...... உறு வரை மார்பின் படிமதம் சாம்ப ஒதுங்கு .... வெடிபடா ஒடிதூண் தடியொடு .... வகிர் வாய்த்த உகிரினை'' என்று நரஸிம்ஹாவதாரத்தையும் பேசுகின்றன. இன்னும் பல சங்க நூல்களும் அவதாரங்களைப் பாடுகின்றன.

நாம் கர்மத்தின் பயனாகப் பல பிறப்புகள் எடுக்கின்றோம்; பக்தவத்ஸலனான எம்பெருமான் நம்மைக் காப்பதற்காகப் பல பிறப்புகள் எடுக்கின்றான் என்கிறார் நம்மாழ்வார் (நிலைவரம் பில பல பிறப்பாய் ஒளிவரு முழு நலம் - திருவாய் மொழி - 1-3-2)

பரமாத்மாவான எம்பெருமானுடைய ஸ்வரூபம் பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்று ஐவகைப் படும். பரம் என்பது ஸ்ரீ வைகுண்டத்திலே இருக்கும் நிலை. வ்யூஹம் என்பது வாஸுதேவன், ஸங்கர்ஷணன்,ப்ரத்யும்னன், அனிருத்தன் என்று நால்வராக நின்று உலகை ஸ்ருஷ்டித்தல், அழித்தல், காத்தல், சாஸ்த்ரங்களை வெளியிடுதல், தர்மோப தேசம் முதலியவற்றைச் செய்யும் நிலை. விபவம் என்பது திருவவதாரங்களைக் குறிக்கும். அந்தர்யாமி என்பது ஒருவனுடைய இருதயத்தில் இருக்கும் நிலையையும் அர்ச்சை திருக்கோயில்களில் இருக்கும் நிலையையும் குறிக்கும்.

''எந்நின்றயோனியுமாய்ப் பிறந்தாய்'' என்று நம்மாழ் வாரும், ''மண்மிசையோனிகள் தோறும் பிறந்து'' என்று அமுதனாரும் கூறுகிறபடியே, தேவர்கள், மனிதர்கள், மிருகங்கள், ஸ்தாவரங்கள் என்று பலபடியாகவும் அடியார்களைக் காக்க அவதரித்தான் பரமன். ஒருசமயம், தண்டகாரண்யத் திலிருந்த ரிஷிகளின் பசியைத்தீர்ப்பதற்காக, அவர்கள் பழங்களைப் பறித்துக் கொள்ள வாகாக, ஒரு குட்டை மாமரமாகவும் அவதரித்தான் ஈசன்.

இப்படி இறைவன் எடுத்த பல அவதாரங்களில் தசாவதாரம் என்று விசேஷித்துப் போற்றப்படும் பத்து அவதாரங்களில் ஆழ்வார்கள் மிகவும் ஈடுபட்டு அனுபவித்துப் பாடினர். ஆழ்வார்களிலே முதலாழ்வார்கள் என்று அழைக்கப்படும் பொய்கையார், பூதத்தார், பேயார் மூவரும் மேன்மைக் கெல்லையான பரத்வத்திலேயே பெரும்பாலும் மண்டிக் கிடந்தனர். திருமங்கையாழ்வார் '' தானுகந்த ஊரெல்லாம் தன் தாள்பாடி '' என்றபடி அர்ச்சாவதாரத்திலேயே பெரும்பாலும் ஊன்றினார். மற்ற ஆழ்வார்கள் விபவாவதாரங்களில் ஆழ்ந்து அனுபவித்துப் பாடினர். அவர்களில் பெரியாழ்வாரும் நம்மாழ்வாரும் க்ருஷ்ணாவதாரத்தைப் பெரும்பாலும் அனுபவித்துப் போந்தனர்.

க்ருஷ்ணாவதாரமென்றால் ஆழ்வார்களெல்லாருமாகப் பரிவராயிருப்பர்கள்; இதுக்கடியென் என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்டார். பட்டர் விளக்கியருளினார் - ராமாவதாரத்தில் பிள்ளைகள் தாம் மிடுக்கராய், நிறை குணம் உடையராய், பிதா வல்லமை பொருந்திய சூரனுமாய், மந்திரிகள் வஸிஷ்டர்

போல்வராய், ஊர் அயோத்யையுமாய், காலமும் த்ரே தாயுகமாயிருந்த படியால், அங்கு ஒரு பயமுமில்லை. க்ருஷ்ணனோ வந்து பிறந்தவிடம் விரோதியான கம்ஸனுடைய சிறைச்சாலை. கம்ஸனோ கண்ணனைவதம் செய்யப் பல அசுரர்களையும் அனுப்பி வைத்த கொடியவன். தகப்பன் இடையனுமாய், ஊர் இடைச்சேரியுமாய், பிள்ளைகள் தாம் தீம்பருமாய், காலம் கலியுகத்தோடு தோள் தீண்டியாயிருந்தது. ப்ருந்தாவனத்திலே எழும் பூண்டுகள் அகப்பட அஸுரமய மாயிருக்கும். ரக்ஷகரானவர்கள் ஓரடிதாழநிற்கில் பாம்பின் வாயிலே விழும் படியாயிற்று இவன்தன் படிகளிருப்பது. அக்காலத்திலே உணர்ந்து நோக்கப் பெற்றிலராய் அவ்விழவுக்கு இன்றிருந்து நோவுபடுகிறார்கள்.

மேலும், ஒருவனுக்கு துக்கம் சிலநாள் கழிந்தால் பொறுக்கலாம். அணித்தானால் ஆறியிருக்கப் போகாதன்றோ. அல்லாத அவதாரங்களைப் போலன்றிக்கே க்ருஷ்ணாவதாரம் ஸம காலமாகையாலே ஒரு செவ்வாய்க் கிழமை முற்படப் பெற்றிலோமே. இப்படியும் பல்லிலே பட்டுத் தெறிப்பதே என்னும் இழவாலே வயிறெரிந்திருந்தனர் ஆழ்வார்கள். பட்டரின் இந்த விளக்கம் ஆழ்வார்கள் க்ருஷ்ணாவதாரத்தில் மண்டிக் கிடந்த மனநிலையை ப்ரதிபலிக்கின்றது.

எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். '' வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸமஹாத்மா ஸுதுர்லப : '' என்று ஸ்ரீ கீதையில் கண்ணன் அருளிச்செய்தபடி உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் என்ற நிலையில் திகழ்ந்தவர்கள். கண்ணனுக்கே ஆமது காமம் என்ற விழுமிய நெறியில் விளங்கியவர்கள்.

வைணவத்தில், தமிழிலேயே கூட, முதல் முதலாகப் பிள்ளைத்தமிழ் உருவானது பெரியாழ்வாருடைய ப்ரபந்தத்தில் தான். கண்ணன் பிள்ளைத் தமிழை அருளிச் செய்த பெருந்தகை பெரியாழ்வார் ஆவர். கண்ணன் திருவவதாரத்தில் ஆரம்பித்து அவன் திருமேனி வர்ணனை, தாலாட்டு, அம்புலிப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், தளர்நடைப்பருவம் என்று வரிசையாகப் பிள்ளைத் தமிழ் பாடுகின்றார். கண்ணன் திருவிளையாடல்களைக் கொஞ்சு தமிழில் சுவைக்கச் சுவைக்க

இனிப்பூட்டும் வகையில் பாடியுள்ளார் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

ஞானத்தில் தம் பேச்சு; ப்ரேமத்தில் பெண்பேச்சு என்றபடி ஆழ்வார்கள் பரந்தாமனைப் பாடும் போது நாயகி பாவத்தையும் ஏறிட்டுக் கொண்டுள்ளனர். தாமாகப் பாடும் பாசுரங்களைத் தவிர, தலைவி பாசுரங்களாகவும், தாய்ப்பாசுரங்களாகவும் தோழி மார்பாசுரங்களாகவும் பாடியுள்ளனர். அவற்றில் எல்லாம் அவதாரங்கள் அழகு நடைபோட்டுக் கொஞ்சு தமிழில் குலவுகின்றன.

ராமாயண மஹாகாவ்யத்தையே முழுதுமாகப் பத்துப் பாசுரங்களில் பாடி அனுபவிக்கின்றார் குலசேகராழ்வார். சக்ரவர்த்தித் திருமகனான ஸ்ரீ ராமனுடைய திருநக்ஷத்ரமான புனர்வஸூவிலேயே அவதரித்து, அவனைப் போலவே நாடாண்டவர் குலசேகராழ்வார். சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றையுமே ஒரு குடைக்கீழ்த்தாம் ஆண்டு வந்ததை அவரே கூறுகின்றார். (கொல்லி காவலன் கூடல் நாயகன் கோழிக் கோன் குலசேகரன் - கொல்லி சேரநாட்டையும், கூடல் பாண்டிய நாட்டையும், கோழி சோழ நாட்டையும் குறிக்கும்) அப்படி ரகுராமன் மேல் பித்தரான குலசேகராழ்வார் ராமகாதையைப் பாடியதிலும், ராமனுக்குத் தாலாட்டுப் பாடியதிலும் வியப்பொன்றுமில்லை. ஆழ்வார் "மன்னுபுகழ்க்கௌசலை தன் மணிவயிறு வாய்த்தவனே" என்று ஆரம்பித்துப் பாடிய தீஞ்சுவைப் பாடல்கள் பத்தும் இன்றும் நாடும் நகரமும் இன்புற இனிதாக நன்கு ஒலிக்கின்றன.

ஆழ்வார்கள் பலரும் திருவரங்கனைக் கண்ணனாகவே கண்டு பாடினர். ஆய்ச்சியின் கயிற்றால் கட்டுண்டிருந்த கண்ணனின் எளிமையை நம்மாழ்வார் "எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே!" என்று வியந்து பாடினார். பாடியவாறே, அந்தப் பரம்பொருளின் எளிமையை நினைந்து மூர்ச்சையுற்றார். ஆறுமாதம் அப்படி மோஹித்துக் கிடந்தார் என்று கூறுவர். நம்மாழ்வார் மறுபடியும் "(கண்ணன்) பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரிய பாரதம் கைசெய்து ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்டுச் செய்து போன மாயங்களும் நிறந்தனூடுபுக்கு என தாவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற" என்று பாடினார். மீண்டும், கண்ணன் மேல் கொண்ட மையலால் மூர்ச்சையுற்று ஆறுமாதம் மோஹித்திருந்தார்.

திருமங்கையாழ்வார் அர்ச்சையிலே ஊன்றி நின்றபோதும் அவதாரங்களையும் அனுபவித்தார். பெரியதிருமொழி 10-6 தசகத்தில் மற்ற அவதாரங்களின் மேன்மையை வியந்து போற்றச் செய்தே, அந்தப் பரஞ்சோதி ஆய்ச்சியரால் அளைவெண்ணெயுண்டு ஆப்புண்டிருந்தவன் என்று பலகாலும் சொல்லி, அவன் நீர்மையைப் போற்றிப் பாடுகின்றார். மீண்டும் திருமாலின் அவதாரங்களிலே ஈடுபட்டு மத்ஸ்ய, கூர்ம, வராஹம் முதலிய அவதாரங்களை அடைவே பாடுகின்றார். (பெரிய திருமொழி - 11-4 )

இக்காலத்தில் பட்டிமன்றம், வழக்காடு மன்றம் என்றெல்லாம் தமிழ் நாட்டில் நிகழ்கின்றன. இந்தப் பட்டிமன்றத்துக்கு வித்திட்டவர்கள் ஆழ்வார்களேயாவர் !! ஆம், அவர்கள்தாம் பட்டிமன்றத்தை ஆரம்பித்து வைத்தனர். இரு பெண்கள் ராமனுடைய பெருமை சிறந்ததா அல்லது க்ருஷ்ணனுடைய பெருமை சிறந்ததா என்று பட்டிமன்றம் நிகழ்த்தியதாகப் பெரியாழ்வார் கூறுகின்றார். ராமன் பெருமையையும் கண்ணன் பெருமையையும் மாறிமாறிப் பாடினர் பெண்கள். (பெரியாழ்வார் திருமொழி - 3-9 )

திருமங்கையாழ்வாரும் ஒருபட்டிமன்றம் நடத்துகின்றார். போற்றுதற்குரியது கண்ணனுடைய எளிமையா, மேன்மையா என்பது தலைப்பு. இரு பக்கங்களிலும் பெண்கள் மாறி மாறி வாதிடுகின்றனர். ஆழ்ந்து அனுபவிக்க வேண்டியவை இந்தத் தீஞ்சுவைப் பாசுரங்கள். (பெரிய திருமொழி - 11-5)

ஆக, இறைவனுடைய அவதாரங்களில் ஆழ்வார்கள் மண்டிக்கிடந்ததைச் சுருக்கமாகப் பார்த்தோம். இக்கருத்தைக் கொண்டு உருவாகிய இந்நூலின் ஆசிரியரான நம் இனிய நண்பர் அரங்கநாதன் வயதில் இளையவராயினும் அறிவில் மிக மூத்தவர். அருளிச்செயலில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு, மிகத் திறமையுடன் ஆராய்ச்சி செய்து, இந்நூலை நமக்கு விருந்தாகப் படைக்கிறார். இந்நூல் பற்றிப் பலமணிநேரங்கள் அன்பர் என்னுடன் கலந்து பேசியபோது, அவர்தம் நுண்ணிய அறிவாற்றலையும், புலமையையும், ஆராய்ச்சித் திறனையும், ஆழ்வார்களிடம் கொண்டுள்ள ஈடுபாட்டையும் கண்டு வியந்து மகிழ்வுற்றேன்.

புராணக்கதைகளைப் பற்றியும் அவதாரங்களைப் பற்றியும் ஆழ்வார் பாசுரங்களில் உள்ள குறிப்புகளை மிகப் பொருத்தமாக நயம்பட எடுத்துரைக்கும் பாங்கு மிகச் சிறப்பாக மிளிர்கின்றது.

அவதாரங்களில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை வெவ்வேறு ஆழ்வார்கள் போற்றிப் புகழ்வதை நூலாசிரியர் நன்கு ஆராய்ச்சிசெய்து வெளிப்படுத்துகின்றார். முக்கியமான பத்து அவதாரங்களைத் தவிர அன்ன அவதாரம், மோகினி அவதாரம், ஹயக்ரீவ அவதாரம், நரநாராயண அவதாரம் போன்றவற்றையும் விரிவாக மேற்கோள்களுடன் எடுத்துரைக்கின்றார். இராமாவதாரத்தையும் கண்ணன் அவதாரத்தையும் தனித்தனி அதிகாரங்களில் மிகவிரிவாக ஆய்ந்திருக்கிறார். இராமன் ஒரு மானிடன்தான் என்ற நோக்கில் வால்மீகியும், இராமன் இறைவனுடைய அவதாரம் என்றநோக்கில் கம்பனும் ராமாயணத்தை வரைந்திருப்பதைச் சுட்டுகின்றார் அரங்கநாதன்.

இராமனையும் கண்ணனையும் பற்றிய பல பாடல்கள் ஆண்டாள் திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் அருளிச் செய்திருக்கின்றாள். அவை ச்ருங்காரம், ஹாஸ்யம் முதலிய நவரசங்களும் பொருந்தியவை; மிக உயர்ந்த இலக்கிய நயம் கொண்டவை; மனத்தை உருக்கிக் கொள்ளை கொள்பவை. அன்பர் அரங்கநாதன் அப்பாடல்களின் சிறப்பையும் கவிதை நயத்தையும் சிறப்பாக விளக்கி இருக்கலாம். அனுபவிக்க அனுபவிக்கத் திகட்டாத அப்பாசுரங்களை இன்னும் சுவைபடச் சுட்டியிருக்கலாம். திருமால் உலகுண்டது பற்றித் திருமங்கையாழ்வார் ஒரு முழுப் பதிகமே (பத்துப் பாசுரங்கள் - மைந்நின்ற கருங்கடல்- பெரிய திருமொழி - 11-6) பாடியுள்ளார். அதுபற்றி விளக்கிக் கூறி இருக்கலாம்.

சுவையுள்ள விஷயங்களை மிகவும் சுவைபடக் கூறியிருக்கின்றார் நூலாசிரியர். தொய்வின்றி நூலைக் கொண்டு செல்கிறார். இந்நூலில் நிறைகள் மிக நிறைய உள்ளன; குறைகள் இல்லையென்றே சொல்லலாம்.

இப்புத்தகத்தை எல்லோரும் படித்து இன்புற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். அன்பர் அரங்கநாதன் இதுபோல இன்னும் பல சுவையான நூல்களை எழுதி மக்களுக்கு ஆன்மீக உணர்வு உண்டாக்க வேண்டும் என்று வாழ்த்தி, அரங்கநாதனுக்கு எல்லா மங்களங்களையும் அளிக்குமாறு ஸ்ரீ ஒப்பிலியப்பனை வேண்டி நிற்கின்றேன்.

ஒப்பிலியப்பன் ஸந்நிதி
10 - 02 - 1997

**கோபாலதேசிகாசாரியர்.**

# வாழ்த்துரை

பேராசிரியர். **பொன். சௌரிராஜன்,** எம்.ஏ., பிஎச்.டி.,
முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்,
திருப்பதி - 517 502.

இதோ உங்கள் கையில் திகழும் ஆழ்வார்கள் அருளிச் செயலில் அவதாரங்கள் என்னும் இந்த நூல் திரு. தி. அரங்கநாதன் என்னும் இளைஞர் பல்லாண்டுகள் தன் இளமை இன்பங்களைத் துறந்து ஆராய்ச்சி என்னும் ஒரு கட்டுக்குள் தன்னை நெறிப்படுத்திக் கொண்டு கண்டு தேர்ந்த ஒரு பக்தி ஞானப் பெட்டகம்.

உலக நாடுகளெல்லாம் தத்தமக்குரிய புராணக் கதைகளைப் பெற்றுள்ளன. அவை அந்தந்த நாட்டு இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. ஒவ்வொரு புராணக்கதையும் நிகழ்ச்சியும் யுகம் யுகமாக மண்ணில் நிகழ்ந்து, நிகழ்ந்த வருகின்ற மாறுதல்களை உருவகங்களாக எடுத்து உரைக்கின்றன.

இப்புராணக்கதைகளும் நிகழ்ச்சிகளும் தொன்மை அடிப்படையில் காலாகாலமாக ஆங்காங்கு நிகழ்ந்து வந்துள்ள மண்ணியல், விண்ணியல், மனவியல் மாறுபாடுகளை, அவற்றின் காரணங்களைக் காண முயல்வனவாக அமைந்துள்ளன. அறிவியல், சமுதாயவியல், சமயவியல் அறிஞர்கள் தத்தம் துறை விளக்கம் காணும் வகையில் இப்புராண நிகழ்ச்சிகளை வகை தொகை செய்து ஆய்ந்து உண்மைகளைக் கண்டு உரைத்து வருகின்றனர். இவ்வகையில் சமய நோக்கில் திவ்வியப் பிரபந்தப் புராணச் செய்திகளை இந்த இளைஞர் மிகச் சிறந்த முறையில் ஆய்ந்து உண்மை தேர்ந்து எடுத்துரைத்துள்ளார்.

இந்த நல்ல முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்ற இவரைப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறேன். அரிய இந்த நூலை உங்கள் இனிய இல்லத்தின் நூல்நிலையத்தில் இடம் பெறச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

திருப்பதி
07 - 01 - 1997

**பொன். சௌரிராஜன்.**

# முன்னுரை

செடியாயவல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன்பவளவாய் காண்பேனே

ஓங்கி உலகளந்த உத்தமனின் அருட்செயல்களை உணர்த்த ஆழ்வார்கள் பாசுரங்களை அருளிச் செய்தனர். அவை இலக்கியச் செழுமையும் பொருட்சிறப்பும் மிகுந்தவை. எளிதில் உணர வொண்ணா உயர்பொருளை நம் கண் முன் நிறுத்த அவர்கள் அருந்தமிழில் பாசுரங்களாய் நமக்கு அளித்தனர். அவற்றைப் பக்தியுணர்வோடு பயின்றபோது அவற்றில் எடுத்தாளப் பெற்றுள்ள புராணக்கதைகள் ஆழ்வார்களின் உள்ளுணர்வை மிகத் தெளிவாய்ப் படம் பிடித்துக் காட்டும் வகையில் அமைந் திருத்தலை அறிய முடிந்தது. அக்கதைகளை மிகத்தெளிவாய் அறிய வேண்டும், மற்றவர்க்கும் உரைக்க வேண்டும் என்ற அவாவின் வெளிப்பாடே இந்நூல்.

புராணக்கதைகள் காலந்தோறும் புதிது புதிதாகத் தோன்றுகின்றன; சில மாறுகின்றன; சில மறைகின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால் இறையைப் பற்றிய புராணக் கதைகள் அவ்வாறு மாறுவதில்லை, மறைவதில்லை. தமிழகச் சமயங்கள் அவற்றைத் தம் கருவூலமாகக் கருதுகின்றன. அந்த வகையில் வைணவம் இப்புராணக் கதைகளை மிகப் போற்றிப் பாதுகாத்து வருகிறது. தமிழகச் சமயங்களில் வைணவத்திற்கெனத் தனிச் சிறப்புண்டு. திராவிட வேதமான திவ்வியப் பிரபந்த பாசுரங்களின் கருத்தையும், உரைநயத்தையும் வைணவம் மரபுவழி மாறாமல் காத்து வருகிறது. அந்த மரபின் அடிப்படையிலேயே வைணவ சமயக் கருத்துக்கள் சொல்லப்பட்டும், விவரிக்கப்பட்டும் வந்துள்ளன. ஆழ்வார்களின் இறையனுபவத்தை மிகப் பல ஆண்டுகளுக்குப் பின்னரே நாதமுனிகள் தொகுத்தருளினார். அதற்குப் பெரியவாச்சான் பிள்ளை போன்றோர் வியாக்கியானங்களை எழுதினர். அவை எல்லாம் ஆழ்வார்களின் பக்தி உளப்பாங்கைப் பன்மடங்கு உணர்த்துவனவாக அமைந்தன. ஆழ்வார்கள்

திருமாலின் கலியாண குணங்களை உணர்த்த எடுத்தாண்ட கதைகளும் ஆசாரியர்களின் உரையால் நன்கு விளக்கப் பட்டன, விவரிக்கப்பட்டன.

திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெற்றிருந்த இராமாவதார நிகழ்ச்சிகளையும், கண்ணன் அவதார நிகழ்ச்சிகளையும் காஞ்சிபுரம் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் ' ஆழ்வார்கள் உகந்த இராமன்,' 'ஆழ்வார்கள் புகழ்ந்த கண்ணன்' என்ற தலைப்புக்களில் தொகுத்து நூலாக வெளியிட்டார்கள். அந்த நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தபோது, எல்லா அவதார நிகழ்ச்சிகளையும் புராணக்கதைகளையும், திருமாலுடன் தொடர்புபடுத்திக் கூறப்பெறும் அனைத்தையும் தொகுக்க வேண்டும் என்னும் அவா எழுந்தது. அவ்வாறு தொகுத்தபோது ஆழ்வார்கள் திருவுளப் பாங்கு நன்கு விளங்கியது.

இப்புராணக் கதைகளில் சில சங்க காலத்திலிருந்தே தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்று வந்துள்ளன. பரிபாடலில் திருமாலைப் பற்றிய புராணக் கதைகள் இடம் பெற்றிருந்தாலும் அவை முழுமை உடையனவாக அமையவில்லை. ஆழ்வார்கள் தான் பக்தி நோக்கோடு அவற்றை மிகுதியும் எடுத்தாளுகின்றனர்.

ஆழ்வார்கள் எடுத்தாண்ட புராணக்கதைகள் திருமால் திறத்தை எவ்வாறு விளக்குகின்றன என்பதையும் அவை முதன் முதல் எந்த இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன என்பதையும் அவற்றோடு தொடர்புடைய கதைகள் எவ்வகையில் வழங்கி வருகின்றன என்பதையும் நான் இந்நூலில் சொல்ல முயன்றிருக்கிறேன். வடமொழி மூலங்களைக் குறிப்பிட வில்லை. புராணக்கதைகள் பற்றியும் ஆழ்வார்கள் பற்றியும் பல இடங்களில் பல சூழல்களில் குறிப்பிட வேண்டி இருந்ததால் கூறியது கூறல் தவிர்க்க இயலாததாகி விட்டது. கற்பார் பொறுத்தருள வேண்டுகிறேன்.

வைணவ சம்பிரதாயத்தை உலகுக்கு உணர்த்தி வரும் ஒப்பிலியப்பன் ஸந்நிதி ஸ்ரீ உப.வே.வ.ந. கோபாலதேசிகாசார்ய ஸ்வாமிகளுடன் எனக்கேற்பட்ட தொடர்பு பெறுதற்கரிய பேறாகும். புரிந்து கொள்வதற்கு அரிய பெரிய கருத்துக் களையும் ஸ்வாமிகள் மிக எளிமையாக விளக்கிக் கேட்பார்

மனங்கொள்ளும் வகையில் வைணவ சித்தாந்தத்தை எடுத்துரைத்து நன்னெறிக்கு இட்டுச் செல்லும் அரும் தொண்டினை ஆற்றி வருகிறார்கள். ஸ்வாமிகளின் தமிழ், வடமொழிப் புலமை வைணவப் பெருமக்கள் நன்கு அறிந்த ஒன்று. ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆன்மீக நூல்கள் எழுதியும், நரஸிம்ஹப்ரியா, ரங்கநாத பாதுகா ஆகிய வைணவப் பத்திரிகைகளில் பல ஆண்டுகளாக அரிய கருத்துக்களை எளிய முறையில் எழுதியும் அன்பர்கள் அழைக்கும் இடங்களுக் கெல்லாம் சென்று ஆன்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் எந்த விதமான கைம்மாறையும் ஏற்றுக் கொள்ளாமல் ஸ்வாமிகள் திருமால் சீர் பரப்பித் திருத்தொண்டாற்றி வருகிறார்கள். இந்நூல் உருவாகும்போது பல நாட்கள், பல மணிநேரங்கள் ஸ்வாமிகளிடம் யான் அறிவுரை கேட்டேன். ஸ்வாமிகள் அவதாரங்களைப் பற்றியும் ஆழ்வார்களைப் பற்றியும் கூறிய மிகச் சிறந்த நுட்பமான கருத்துக்கள் இந்நூலை உருவாக்குவதில் எனக்குப் பேருதவியாக இருந்தன. ஸ்வாமிகள் பற்பல அலுவல்களுக்கிடையில் எனக்குப் பொறுமையுடன் பற்பல விளக்கங்கள் கொடுத்து இந்நூல் சிறப்பாக அமைய உதவியமைக்கு மிக்க நன்றியுடையேன். இந்நூலுக்கு ஓர் அணிந்துரை நல்குமாறு நான் ஸ்வாமிகளைக் கேட்டுக் கொண்டபடி, மனமுவந்து பொருள் செறிந்த அழகிய அணிந்துரை அளித்தமைக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை உருவாக்க என்னை உற்சாகப் படுத்தியவர்; என்னுடைய முன்னேற்றத்தின் ஒவ்வொரு படிநிலையிலும் என்னை நெறிப்படுத்தியவர் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பொன்.சௌரிராஜன் ஆவார். என் வேண்டு கோளுக்கிணங்கி வாழ்த்துரை நல்கி உதவியுள்ள அவருக்கு என் அன்பு கலந்த நன்றி என்றும் உரித்து.

இந்நூலை அச்சேற்றும் பணியில் மிகுந்த அலுவல் களுக்கிடையேயும் அச்சுப்படியைத் திருத்தி உதவிய பேராசிரியர் தா.ம.வெள்ளை வாரணம் அவர்களுக்கும் உடன் வந்து ஒத்துழைத்து ஊக்கப்படுத்திய குடந்தை அரசு ஆடவர் கல்லூரித்

தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர். த. கோதண்டபாணி அவர்களுக்கும் நன்றியுடையேன்.

இந்நூல் உருவாகப் பல வகையில் உதவி ஊக்கப் படுத்திய குடந்தை அரசு ஆடவர் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் திரு. பொன். முத்தையன் அவர்களுக்கும், திரு. சிவ. திருச்சிற்றம்பலம் அவர்களுக்கும், திரு.பா. சிவநேசன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலைப் பதிப்பிக்க நிதியுதவி அளித்த திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாருக்கும் அச்சிட்டுக் கொடுத்த கும்பகோணம் சந்திரா (ஆப்செட்) பிரிண்டர்ஸ் பொறுப்பாளர் களான திரு.ஏ.ஆர். இராமையர் அவர்களுக்கும், திரு. ஆர். சேது அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம்
10 - 02 - 1997

**தி. அரங்கநாதன்.**

உயர்வறவுயர் நலம் உடையவன்யவனவன்

மயர்வறமதிநலம் அருளினன்யவனவன்

அயர்வறுமமரர்கள் அதிபதியவனவன்

துயரறு சுடரடி தொழுதெழென் மனனே

—திருவாய்மொழி

## உள்ளடக்கம்


**1. அவதாரங்கள்** 1 - 22

*திவ்வியப் பிரபந்தத்தின் சிறப்பு-திவ்வியப் பிரபந்தத்தில் புராணக்கதைகள்-அவதாரங்கள்-பகவத்கீதையும் அவதாரமும்-வேதமும் அவதாரங்களும்-அவதாரத்தால் தாழாமை- அவதாரங் களின் நோக்கம்-மனிதனும் அவதாரமும்-அவதாரங்களின் தெய்வத்தன்மை-அவதாரங்களின் மறைபொருள்- திருமாலின் அவதாரங்கள்- அவதாரங்களுக்குக் காரணம்- அவதார வகைகள்-அவதாரங்களின் எண்ணிக்கை-அவதாரங்களின் செயல்கள்-அம்சாவதாரம் - அவதாரங்களின் சிறப்பு - அவதாரங்களும் வருணாசிரமமும்.*

**2. ஆழ்வார்களும் அவதாரங்களும்** 23 - 54

*மச்சாவதாரம்-கூர்மாவதாரம்-வராகாவதாரம் மச்சம், கூர்மம்,வராகம்-ஒற்றுமை-நரசிம்மாவதாரம்-வாமனாவதாரம்-பரசுராமாவதாரம்-பலராமாவதாரம்-கல்கி யவதாரம்-அன்ன அவதாரம்-மோகினி அவதாரம்-அயக்கிரிவ அவதாரம்-நரநாராயண அவதாரம்.*

**3. இராமாவதாரம்** 55 - 74

*இராமாவதாரச்சிறப்பு-இராமாவதாரம்-ஒப்பற்றதலைவன்-ஒப்பற்றவீரன்-கடவுட்தன்மை-அருளும் தன்மை-ஏனைய கதைக் குறிப்புக்கள்.*

**4. கண்ணன் அவதாரம்** 75 - 101

*கண்ணன் அவதாரச்சிறப்பு-இறைக்குணம்-கீழ்க்குலம் புக்கது-வீரதீரச் செயல்கள்-கண்ணன் அவதாரச் செயல்கள்-கண்ணன் பிறப்பு-தலைவனாம் தன்மை-பகை வெல்லுகை-*

இறைத்தன்மை-அருட்சிறப்பு-உலக வாழ்வுடன் தொடர்புடையவை-கண்ணனும் தேவியரும்-கண்ணனும் ஆய்ச்சியரும்-செயற்கரியன செய்யும் ஆற்றல்-கண்ணனும் பாரதமும்.

5. புராணக்கதைகள் 102 – 158

இலக்கிய உத்தி-கருத்தெளிமையாக்கல்-நுண்பொருள் விளக்கம்-ஆழ்வார்களும் கதைக்குறிப்புக்களும்-திருமாலின் முழுமுதல் தன்மை-நான்முகனைப் படைத்தது-கடல் கடைந்தது-யானைக்கருளியது-மதிகோள் விடுத்தது-திருமால் உலகுண்டது-காமனைப் படைத்தது-வேதம் விரித்துரைத்தது-சிவன் சாபம் தீர்த்தது-சிவனுக்குப்பாகமளித்தது-மார்க்கண்டேயனுக்கருளியது-பிரமன் மடியில் குழந்தையாய்த் தவழ்ந்தது- திருமால் வடிவுடன் நீங்கா இடம் பெறுவன-திருமாலும் திருமகளும் நிலமகள் கேள்வன்-திருமகள்-நிலமகள்-ஆய்மகள்-திருமாலும் கருடனும்-கருடக்கொடி-திருமாலும் ஆயுதங்களும்-சங்கும்சக்கரமும்-சக்கரம்-சார்ங்கம்-பஞ்சாயுதங்கள்-அரவணை-திருப்பாற்கடல்-சிவனைப்பற்றிய கதைகள்-திரிபுரம் எரித்தமை-தக்கன் வேள்வி தகர்த்தது-சிவன் நால்வருக்கு உபதேசித்தது-சிவனைப் பற்றிய வருணனை அடியவர் பற்றிய கதைகள்- அரசர் பற்றிய கதைகள்-கங்கையைப் பற்றிய கதைக்குறிப்புக்கள்-திருமடல்கள் காட்டும் கதைகள்-ஆசாரியர்கள் உரைவழி அறியும் கதைகள்.

6. ஆழ்வார்கள் பாடியுள்ள திறம் 159 – 192

புராண நிகழ்ச்சிகளைக் குறித்தல்-இலக்கியச்சுவை-இறையின் பெருமை பேசுதல்-புராண நிகழ்ச்சிகளை இணைத்தல்-புதிய நிகழ்ச்சிகளைப் படைத்தல்-கதை முழுவதையும் பாடுதல்-ஏனைய கடவுளருடன் இணைத்துப் பாடுதல்-பெயர்களை மட்டும் சுட்டுதல்-திருப்பதிகளும் புராணக்கதைகளும்.

துணைநூற்பட்டியல் 193–199

# ஆழ்வார்கள் அருளிச் செயலில் அவதாரங்கள்

## 1. அவதாரங்கள்

பக்தி இயக்கம் தந்த இலக்கியங்களில் சைவத்திருமுறைகளும் திவ்வியப் பிரபந்தமும் மிகச்சிறப்புடையனவாகும். இடைக்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் பின்னர்த் தொகுக்கப் பெற்றுத் திருமுறைகளாகவும் திவ்வியப் பிரபந்தமாகவும் உருப்பெற்றன. சைவம் வைணவம் என்னும் இரு பெரும் சமயங்களின் அடித்தளமாக விளங்கும் அவை, பக்திப் பாக்களாக அமைந்து சமயங்களின் சிறப்பை விளக்குகின்றன.

வைணவ சமயத்தின் தத்துவ விளக்கங்கள் இராமாநுசரால் விரித்துரைக்கப் பெற்றன. அவ்விளக்கங்களுக்கு அடிப்படையாக அமைவனவற்றுள் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் சிறப்பிடம் பெறுகிறது. நாலாயிரம் ' திராவிட வேதம் ' எனப் போற்றப்பெறும் சிறப்பை உடையது.[1] தமிழில் அமைந்த எந்த இலக்கியத்துக்கும் இல்லாத சிறப்பை நாலாயிரம் பெற்று விளங்குகிறது.

### திவ்வியப்பிரபந்தத்தின் சிறப்பு

வேதத்தை 'வாய்மொழி' [2] என்று பரிபாடல் குறிக்கின்றது. ' திரு ' வெனும் அடை சேரத் திருவாய்மொழி என்னும் நம்மாழ்வாரின் பிரபந்தம் வேதத்தை விளக்குவதாகும். வடமொழி வேதம் போல் அல்லாது மறையோர், மட்டுமன்றி எளியோரும் உணரும் வகையில் அமைந்தது திவ்வியப் பிரபந்தமாகும்.

வடமொழி வேதத்திற்கும் மேலான சிறப்புடையதாக நாலாயிரத்தை வைணவர்கள் போற்றுகின்றனர்.

பாடாய் நீ
எமைஎன வழுதி நாட்டுள குருகைமூதூ ராழ்வார் பால்
உருகெழு சிறுகல் நீர்த்திட நடவு தாளா [3]

என்னும் பாடல், திருமாலே விரும்பிச்சென்று கேட்கும் சிறப்பினை உடையது என்னும் நிலையை விளக்கும்.

வடமொழி வேதம் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்று நால்வகையாய் அமையும். திவ்வியப் பிரபந்தமும் நான்கு ஆயிரமாய் அமைந்து இரு பகுதிகளாய்த் திகழ்கிறது. இசைப்பாவில் மூவாயிரம் பாடல்களும் இயற்பாவில் ஓராயிரம் பாடல்களும் இடம் பெற்று உள்ளன. நால்வேதத்தையும் வேதவியாசர் தொகுத்தது போலத் திவ்வியப் பிரபந்தமும் நாதமுனிகளால் தொகுக்கப் பெற்ற சிறப்பை உடையது.

வடமொழிவேதங்கள் வழி அறிய இயலாத கருத்துக்களையும், திராவிட வேதமாகிய நாலாயிரத்தின் வழி அறியலாம் என்பதை,

செய்ய தமிழ் மாலைகள் தெளிய ஓதித்
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே [4]

என்னும் தொடர்கள் மூலம் உணரலாம்.

முக்திக்கு வழி வகுக்கும் நூல்கள் பல உண்டாயினும் அவற்றுள் திவ்வியப் பிரபந்தத்திற்குத் தனிச் சிறப்புண்டு.

ஆழ்வார் களையும் அருளிச் செயல்களையும்
தாழ்வா நினைப்பவர்கள் தாம்நரகில் - வீழ்வார்கள் [5]

என்னும் கூற்று, ஆழ்வார்களுக்குரிய சிறப்பையும் திவ்வியப் பிரபந்தத்திற்குரிய ஏற்றத்தையும் விளக்குவதாகும்.

தெளிந்த பக்தி உணர்வின் அடிப்படையில் படைக்கப் பெற்ற பாக்களால் விளங்கும் திவ்வியப்பிரபந்தம்,

ஆழ்வார்களின் இறையனுபவத்தைக் காட்டுவதாகும். அவ்வுணர்வு யாராலும் எளிதில் உணரத்தக்கதன்று என்பதைத்

தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை யாரறிவார்
அருளிச் செயலை யாரறிவார் [6]

என்ற தொடர்கள் விளக்குகின்றன.

சங்க காலம் தொடங்கி ஆழ்வார்கள் காலம் வரையில், திருமாலைப் போற்றியமையும் பாடல்கள் உளவாயினும் அவற்றில் திருமாலின் முழுமுதல் தன்மையை வலியுறுத்தும் பக்திப் பாக்கள் மிகக்குறைவே. திவ்வியப்பிரபந்தம் மட்டுமே முதன்முதலில் அவ்வகையில் மிகச் சிறப்புடையதாய்த் திருமாலின் முழுமுதல் தன்மையை வலியுறுத்துகிறது. திவ் வியப் பிரபந்ததிற்குப் பின் இத்தகு ஏற்றமுடைய இலக்கியம் அமையவில்லை என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

நாலாயிரம், திருமாலின் காத்தருளும் குணத்தையும் சரணடையத்தக்கதாய் அமையும் நிலையையும் இப்பிர பஞ்சத்துக்கு அடிப்படையாகத் திகழும் திறத்தையும் திருமகளுடன் இணைபிரியாது இருக்கும் இருப்பையும் விளக்குகிறது.

எல்லாப் பொருளும் இதன்பா லுளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லை [7]

சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து [8]

என்னும் தொடர்கள் திருக்குறளுக்கு உரியதாயினும் நாலாயிரத்துக்கும் இவை பொருந்துவன என்றால் அது மிகையன்று.

ஆழ்வார்கள் என்பதற்குத் திருமாலின் கலியாண குணங்களில் ஆழங்கால்பட்டவர்கள் என்று பொருள். நம்மாழ்வார் திருமாலிடம் ஆழங்கால்பட்டதை,

காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும் - நீலாழிச்
சோதியாய் ஆதியாய் தொல்வினையெம் பால்கடியும்
நீதியாய் நிற்சார்ந்து நின்று [9]

என்று பாடுகின்றார். பிறரை அடிமை கொண்டு ஆள்பவர் 'ஆழ்வார்' என்ற பொருளில் அச்சொல் வழங்கி வந்துள்ளது. ஆள்வார் என்பதே ஆழ்வார் என்று திரிந்தது என்பர்.[10] ஆழ்ந்தறியும் அறிவு விசேஷம் உடையவர்கள் ஆழ்வார்கள் என்று வழங்கப்பட்டனர் [11] என்ற கருத்தும் ஈண்டு நினையத்தக்கது.

ஆழ்வார்கள் பதின்மர் என்றும் பன்னிருவர் என்றும் வழங்கப்பெறுவர்.

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யன் அருள்மாறன் சேரலர்கோன் - துய்யபட்ட
நாதன் அன்பர்தாள்தூளி நற்பாணன் நன்கலியன்
ஈதிவர்தோற்றத் தடைவா மிங்கு [12]

என்னும் பாடல் ஆழ்வார்களைப் பதின்மராகக் கூறுகிறது.

பொய்கை பூதன் பேயார் பொன்மழிசைக்
கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான் - வையகமெண்
பட்டர்பிரான் கோதை தொண்டர் பாதப்பொடி
பாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு [13]

என்ற பாடல் ஆழ்வார்களைப் பன்னிருவராகக் குறிக்கின்றது.

ஆழ்வார்கள் அனைவரும் இவ்வுலகில் திருமாலின் அம்சமாக வந்து அவதரித்தவர்கள். மானிட வடிவெடுத்து மக்களிடை உழன்று திருமாலைப் போற்றுதல் ஒன்றே ஆழ்வார்கட்குரியதாகும். தன் அருட் செயல்களால் உலக மக்களைத் திருத்த இயலாத போது ஆழ்வார்களைப் படைத்துத் தன் சிறப்புக்களைத் திருமால் வெளிப்படுத்தினான் என்று வைணவர் கூறுவர்.

ஆழ்வார்கள் கருவிலேயே திருவுடையவர்கள். கற்றறிந்த ஞானமன்றிப் பிறப்பால் அமைந்த ஞானமே ஆழ்வார்களிடம் சிறப்பாக அமைந்துள்ளது என வைணவர்கள் போற்றுகின்றனர். பெரியாழ்வார் முறையான வேதக்கல்வி எதுவுமின்றி வேத வேதாந்தங்களை விளக்கித் திருமாலின் முழுமுதற்றன்மையை எடுத்துரைத்தார்; நம்மாழ்வார் பதினாறு வயது வரையில் கல்வி

கற்காது செந்தமிழ் செய்தார் என்பன ஆழ்வார்கள் பிறப்பால் ஞானம் கைவரப் பெற்றவர்கள் என்பதை விளக்கும்.

ஆழ்வார்கள் பாடியவை பிற்காலத்தில் திவ்வியப் பிரபந்தமாகத் தொகுக்கப் பெற்றன. இவர்கள் பாடிய பிரபந்தங்கள் காலஅடிப்படையில் தொகுக்கப் படாமல் அவற்றின் சீர்மையையொட்டித் திருப்பல்லாண்டு முதல் இராமாநுச நூற்றந்தாதி ஈறாக முறைப்படுத்தப் பெற்றுள்ளன. பிரபந்தங்கள் இருபத்து நான்கு எனக் குறிப்பினும், எண்ணிக்கை பற்றி வேறொரு கருத்தும் உண்டு. பிரபந்தங்கள் இருபத்து நான்கென்பதை 'அவர்தாம் செய்த துய்ய தமிழ் இருபத்து நான்கு'[14] என்னும் கூற்று கொண்டு உணரலாம்.

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் காலமுறைப்படி தொகுக்கப் பெறவில்லை. ஆயினும் திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ள பிரபந்தங்களுக்குத் தத்துவ விளக்கங்கள் கூறப் பெறுகின்றன. திருப்பல்லாண்டு முதல் அமலனாதி பிரான் ஈறான பிரபந்தங்கள் பிரணவார்த்தத்தை விளக்கு கின்றன. கண்ணிநுண் சிறுத்தாம்பு ' நம ' சப்த அர்த்தத்தை விவரிக்கிறது. பெரிய திருமொழி முதல் பெரிய திருமடல் ஈறாக உள்ள பிரபந்தங்கள் நாராயண சப்தத்தை விளக்கு கின்றன. ஈற்றிலுள்ள திருவாய்மொழி சரணாகதியை விளக்குகின்றது.

திருமாலுக்குரிய எட்டெழுத்தின் சிறப்பு இப்பிர பந்தங்களுக்கு உரைக்கப் பெறுகின்றது. பிரணவம், நமஸ் என்பவற்றின் விளக்கமாக முதலாயிரமும் நாராயண சப்தத்தின் விளக்கமாகப் பெரியதிருமொழியும் துவயார்த்தத்தை விளக்கு வதாகத் திருவாய்மொழியும் சரமசுலோகத்தை விளக்குவதாக இயற்பாவும் அமைகின்றன. இந்த அடிப்படையிலேயே அவை தொகுக்கப் பெற்றன என்று வைணவர்கள் விளக்குவர்.[15].

## திவ்வியப் பிரபந்தத்தில் புராணக்கதைகள்

ஆழ்வார்களின் பாடல்களில் திருமால் பற்றிய புராணக் கதைகள் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. ' பக்தியுணர்வால்

எழுந்த அவர்களின் பாடல்கள் திருமாலை முழுமுதற் கடவுளாகக் காட்ட முயல்வன. இவ்வகையில் அமைந்துள்ள புராணக் கதைகள் அனைத்தும் பதினெண் புராணங்களி லிருந்தும் இருபெரும் இதிகாசங்களிலிருந்தும் அரிவம்சம், விஷ்ணு தர்மம் ஆகியவற்றிலிருந்தும் எடுத்தாளப் பெறுகின்றன.

ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ள புராணக் கதைகளும் கதைக்கூறுகளும் சில வரையறைகளுக்குள் அடங்கு வனவாக அமைகின்றன. வைணவம் அவதாரக் கொள்கை யில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட சமயமாகும். பத்தவ தாரங்கள் வைணவத்தில் போற்றப் பெறும் சிறப்புடையன. பத்து அவதாரங்களைப் பற்றி அனைத்து ஆழ்வார்களுமே பாடியுள்ளனர் எனக் கூறலாம். அவற்றிலும் இராமன், கண்ணன் அவதாரங்கள் மிகச் சிறப்பாக ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. திவ்வியப் பிரபந்தமே அவதாரங்களை விளக்கும் புராணம் என்று கொள்ளும் வகையில் அமைந் துள்ளது. ஏனைய கதைகளும் மற்றப் புராணங்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றை ஆழ்வார்கள் தம் பாடல்களில் எடுத் தாளுகின்றனர். ஆகையால் ஆழ்வார்களின் பாடல்களில் அமைந்துள்ள அவதாரக் கதைகளையும் கதைக்கூறுகளையும் ஒரு நிலையிலும் இராமன் கண்ணன் அவதாரங்களை ஒரு நிலையிலும், இவ்விரு வகையிலும் அல்லாதவை புராணக் கதைகள் என்ற நிலையிலும் ஆராயத்தக்கன.

## அவதாரங்கள்

வைதிக சமயங்கள் மனித ஆற்றலுக்கும் மேற்பட்ட இறைசக்தி உலகில் தோன்றுவதை அவதாரம் என்ற சொல்லால் குறிக்கின்றன. மனித வடிவுடன் வந்து இவ்வுலக வாழ்வில் கலந்து திகழும் நிலை அவதாரங்களால் நிகழ்த்தப் பெறுவதாகும். முனிவர்கள், கடவுளர்கள், தூதர்கள், செயற்கரியன செய்யும் பெரியோர்கள் ஆகியோர் பூமியில் தோன்றி வளர்வதையும் வாழ்வதையும் காணலாம் . அவதாரம் என்பது பிறத்தல், தோன்றுதல் என்ற பொருள்களில் அமையினும் மனித ஆற்றலினும் உயர்நிலை உடையவரையே அச்சொல் குறிக்கும். இறைவனை மனிதனிடமிருந்து பிரித்துக்காட்ட விரும்பாத

நிலையில் அவதாரம் பற்றிய கொள்கை வலியுறுத்தப் பெற்றது எனலாம். அவதாரம் தோன்றுதல் என்னும் பொருளில் அமையினும் வைதிக சமயக் கடவுளருக்கு அவதாரங் களாலேயே சிறப்புக்கள் ஏற்பட்டதெனலாம். திருமாலின் அவதாரம் என்னும் தனிநிலை வைணவத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

இறைவன் தன் வடிவிலிருந்து மாற்று வடிவம் எடுப்பது என்பது வைதிக சமயங்களில் ஏற்றுக் கொள்ளப் பெற்ற நிலை. மனிதவடிவுடன் வந்தமை அவற்றுள் சிறப்பிடம் பெறுகின்றது. பிறவாயாக்கைப் பெரியோனாகிய[16] சிவன் மனிதவடிவுடன் வந்து திருவிளையாடல்கள் நிகழ்த்தியதைத் திருவிளையாடற் புராணம் போற்றுகிறது. அடியவர்கள் பொருட்டாகச் சிவன் அடியவர் வடிவம் கொண்டு வந்ததைப் பெரியபுராணம் கூறுகின்றது. ஆயினும் அவை அவதாரம் என்ற சொல்லால் குறிக்கப் பெறுவதில்லை. அடியவர்க்குச் சோதனை ஏற்படும்போது சிவன் அருளும் பான்மையன் என்பதை விளக்க அவை அமைந்தன. கருப்பையில் தங்கி இறைவன் மனித வடிவம் எடுப்பதைச் சைவம் ஏற்றுக் கொள்வதில்லை. அந்நிலை மனிதனையும் இறைவனையும் ஒன்றாக்கிவிடும் என்ற காரணத்தால் சைவம் இதைப் போற்ற வில்லை. சைவக்கடவுளான முருகன் பிறப்புப் பற்றிப் பிற் காலத்தெழுந்த புராணக்கதைகள் இதற்குத் தக்க சான்றுகளாகும்.

வைணவம், சைவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டுத் தேடற்கரிய இறைவன் கருவில் வந்து தங்கி மனித வடிவம் எடுப்பதைச் சிறந்த கொள்கையாகப் போற்றி வருகின்றது. இக்கொள்கையே திருமாலின் அவதாரங்கள் மிகப் பலவாகப் பெருக வாய்ப்பளித்தன. புராணங்களைப் படைத்த வியாசர் முதல் வைதிக சமய எதிர்ப்பு இயக்கமான பௌத்தம் தொடங்கிய புத்தர் வரை அவதாரவரிசையில் இடம் பெற்றுள்ள நிலையைக் காண முடிகிறது. இவ்வகையில் வளர்ந்து வந்துள்ள அவதாரக் கொள்கை, இனி எடுக்க இருக்கும் திருமாலின் ஓர் அவதாரத்தையும் குறிக்கின்றது.

இவ்வாறு வைணவர்கள் அவதாரங்களைப் போற்றிக் கூறுவதற்குக் காரணங்கள் சில உள. அவை,

1. அடியார்களைக் காப்பாற்றுவதற்காகவே அவதாரங்கள் எடுக்கப்பட்டன.
2. அவதார காலங்களில் இருந்த மக்களுடன் தோழமை பூண்டு அருள்பாலிக்க எடுக்கப்பட்டன.
3. இறைவனால் நிகழ்த்தப் பெற்றவை என்ற காரணத்தால் அவை புனிதத் தன்மை உடையன.

என்பவை ஆகும்.

வைதிக சமயத்தில் தனிச்சிறப்புடைய வைணவம் திருமால் கொண்டுள்ள நிலைகளை ஐந்தாகக் கூறுகிறது. திருமால் கொண்டுள்ள இவ்வடிவங்கள் உயிர்களுக்கு அருளும் பொருட்டாக அமைந்தவை. அவையாவன 1. பரம் (விண்ணாட்டு நிலை ) 2. வியூகம் (அணிவகுப்பு நிலை ) 3.விபவம் (பிறப்பு நிலை ) 4. அர்ச்சை (வழிபடு நிலை ) 5. அந்தர்யாமி (உள்ளுறை நிலை ) என்பன. அவற்றுள் பரம், வியூகம், அந்தர்யாமி ஆகியவை மனிதர்களின் கண்ணால் காண இயலாதவை. பக்தி முற்றிய நிலையில் ' கோல் தேடியோடும் கொழுந்ததே '[17] போல் திருமாலைச் சிந்தனையில் கொண்டவருக்கு மட்டுமே அவை உணரக் கூடியனவாக அமையும். இவ்வுலக வாழ்வில் ஈடுபட்டுத் துன்பக்கடலில் உழலும் உயிர்களுக்குக் கண்முன் தோன்றுவனவாக அமைவன விபவம், அர்ச்சை என்னும் இருநிலைகளாகும். இவற்றுள் விபவம், என்பது விபவ அவதாரம் என்றும் கூறப்பெறும். யுகம்தோறும் திருமால் உருவத் திருமேனியோடு தோன்றுவது என்று பொருள்படும். அர்ச்சை என்பது அர்ச்சாவதாரம் என்றும் கூறப்பெறும். திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள திருமாலின் திவ்விய விக்கிரக வடிவங்கள் அர்ச்சாவதாரம் ஆகும். அவை ஸ்வயம் வ்யக்தம், ஸைத்தம், ஆர்ஷம், திவ்யம், மாநுஷம் என ஐவகையாகக் கூறப்பெறுகின்றன.[18] இவற்றை நோக்க அவதாரம் என்பது கண்ணுக்குக் கிட்டுவதாய் அமையும் தன்மையுடையது என்பதும் அருள் செய்யும் தன்மையுடையது என்பதும் விளங்கும்.

திருமாலின் அவதாரங்களை ஐவகையாகப் பிரிக்கலாம்.அவை,

1. திருமால் முழுமையான வடிவத்துடன் உலகில் திகழ்ந்து உயிர்களுக்கு அருளிய அவதாரங்கள்.
2. அவ்வப்போது தோன்றி மறைந்துவிடும் அவதாரங்கள்.
3. ஆவேசம் என்னும் வடிவுடன் திகழும் அவதாரங்கள்.
4. அம்சம் என்று கூறப்பெறும் தன்மையுடன் திருமாலின் ஏதாவதொரு கூறு உலகில் தோன்றுதல் .
5. சாத்திரங்களையும் நற்கருத்துக்களையும் நல்கிய பெரியோர்களைத் திருமாலின் அவதாரங்களாய்க் கூறும் நிலை.

ஆகியன ஆகும். இவ்வாறு திருமாலின் அவதாரங்கள் பல்வகையில் அமையினும், அவற்றின் நோக்கம் இவ்வுலக உயிர்களுக்கு நல்லருள் செய்வது ஒன்றேயாகும்.

திருமாலின் அவதாரம் பற்றிய கொள்கை மிகப் பழங்காலந்தொட்டே வழங்கி வந்துள்ளது. வடமொழி[19] வேதங்களில் வாமனன் பெயர் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. தமிழில் சங்ககால முல்லைப்பாட்டு, வாமனாவதாரச் செயலையும்[20] அகநானூறு, கண்ணன் செயலையும்[21] கூறு கின்றன. அவற்றில் திருமாலின் செயல்களான அவதாரங்கள் என்ற குறிப்பு அமையவில்லை. ஆயினும் திருமாலின் முழு முதற் கடவுள் தன்மையை விளக்கும் பரிபாடலில்தான் திருமாலின் அவதாரங்கள் பற்றிய கொள்கையை உணர முடிகிறது. இலக்கியங்களில் இடம்பெறும் கடவுளர் பற்றிய விளக்கங்களும் புராணக்கதைகளும் ஒரு காலத்தில் எழுந்து உடன் முழுமை பெறுவனவல்ல. அவ்வகையில் பரிபாடல் காலம் வரை வழங்கி வந்த அவதாரக் கொள்கை பரிபாடலில் இடம் பெற்றது எனலாம்.

பரிபாடல் காலத்திற்குப் பின்னர் வளர்ந்த அவதாரக் கொள்கை பக்தி இயக்க காலத்தில் வலுப்பெற்றுப்பக்திப் பாடல்களில் இடம் பெற்றது. வைணவம் திருமாலின் பெருமையை உணர்த்த, அவதாரங்கள் உயர் சிறப்புடையவை என்று கூறியது. சைவம் வைணவத்தினும் உயர்ந்தது என்பதை விளக்கத் திருமாலின் அவதாரங்களில் சில, சிவனால்

அடக்கப்பெற்றன என்று கூறிக் கொண்டது. இவ்வகையில் வைணவத்துடன் ஒருவகையில் போட்டியிட்டாலும் சைவம், திருமாலின் அவதாரக்கொள்கையை ஏற்றுக்கொண்டது எனக்கூறலாம்.

திருமால் அவதாரங்களின் எண்ணிக்கை பற்றிய கொள்கையில் வெவ்வேறான நிலைகள் அமைகின்றன. வைணவர்களால் பின்பற்றப்பெறும் பாஞ்சராத்திர ஆகமத்தில் திருமாலின் அவதாரங்கள் முப்பத்தொன்பது என்று கூறப் பெற்றுள்ளது.[22] அவற்றுள் திருமாலின் பத்து அவதாரங்களன்றி முனிவர் முதலானோரும் திருமாலின் அவதாரங்களாகக் கூறப்பெறுகின்றனர். கபிலர், பரசுராமர் முதலானவர்கள் அவதாரங்களாகக் குறிக்கப்பெறினும் அவர்கள் முழுமை உடைய அவதாரங்களாக வைணவர்களால் ஏற்றுக் கொள்ளப் பெறுவதில்லை. இறைத்தன்மையுடன் கூடிய சக்தி இறங்கி வந்து இவ்வுலக மாந்தருக்கு அருளுவது அவதாரம் என்னும் பொருளில் அவதாரங்களின் எண்ணிக்கை மிகுதியானது எனலாம்.

தனக்குரிய முத்தொழில்களை விடுத்துத் தானும் பிறப்பது திருமாலுக்குரிய சிறப்புக்களில் மிக இன்றியமையாததாகும். பிறப்பிலியாக இருந்துவைத்தே பலபடியாகவும் திருமால் பிறக்கிறான் என்று வேதங்கள் சொல்லுகின்றன. 'அஜாயமாநோ பஹுதா விஜாயதே'[23] என்று புருஷ சூக்தம் கூறுகிறது. இதன் பொருள் மானிடர்களைப் போல வினைப்பயனின் அடிப் படையாக அவனுக்குப் பிறப்புக் கிடையாது; ஆனால் அடியார் களைக் காக்க அவன் இச்சைப்படியே அவதாரங்களை எடுக் கிறான் என்பதாகும். வைகுந்தத்தில் இருப்பது போலவே புகருடனும் எல்லா நற்குணங்களுடனும் அவதாரங்களிலும் திகழ்கிறான் என்பதை 'ஆதியஞ் சோதியுருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த'[24] என்றும், அடியார்களைக் காக்கவே அவன் அவதாரங்கள் எடுக்கிறான் என்பதை 'உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா'[25] என்றும் நம்மாழ்வார் கூறுகின்றார்.

## பகவத்கீதையும் அவதாரமும்

திருமால் எடுத்த அவதாரங்களில் இறுதியில் அமைவது கண்ணன் அவதாரமாகும். கண்ணன் தன் அவதாரத்தில் பகவத் கீதையை உபதேசித்தான். அதில் அவதாரங்களின் நோக்கம், தன்மை, செயல் முதலானவை கண்ணனால் விவரிக்கப் பெறுகின்றன. பகவத் கீதை உலகம் முழுதும் மக்களால் புகழ்ந்து போற்றப்பெறும் சிறப்பை உடையது. போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட அய்யம் தெளிவிப்பதற்குக் கண்ணன் பகவத் கீதையை உரைத்தான். அதில்,

> நான் புதிதாக ஒன்றும் உபதேசிக்கப் போவதில்லை. ஆதியில் விவசுவானுக்கு இதை நான் உபதேசித்தேன். அவன் மனுவுக்கும் மனு இட்சுவாகுக்கும் உபதேசிக்க இப்படிப் பரம்பரையாக வந்த யோகத்தை ராஜரிஷிகள் அறிவர். வெகுகாலத்திற்குப் பின் மறைந்து போன யோகத்தை நான் இப்போது உபதேசிக்கிறேன்.[26]

என்று கண்ணன் கூறுகின்றான். மேலும் தனக்கும் அர்ச்சுனனுக்கும் பல பிறப்புக்கள் உள என்று கூறி, தான் விவசுவானுக்கு உபதேசித்ததைக் கூறுகிறான். தான் பிறப்பு இறப்பு இல்லாதவனாய் இருப்பினும் தன்னுடைய தணியாத இயற்கையைப் பின்பற்றித் தன்னுடைய மாயையால் தான் பிறப்பதாகக் கூறுகிறான்.[27] தான் அவதரிப்பதற்கான காரணத்தை,

> நல்லாரைக் காப்பதற்கும் கெட்டவரைக் கரந்
> தொடுக்குவதற்கும் தர்மத்தை நிலைநாட்டு
> வதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்.[28]

என்று கண்ணன் கூறுகிறான். இதுவே திருமாலின் எல்லா அவதாரங்களுக்கும் உரிய காரணமாகும்.

திருமால் அருளால் தோன்றியதாகக் கூறப்பெறும் இவ்வுலகிலும் இவ்வுலகப் பொருட்களிலும் அவன் மறை பொருளாய் (அந்தர்யாமியாக) இருக்கிறான். ஆயினும் எல்லாவற்றையும் அவன் பெயரிட்டு அழைப்பதில்லை. அவை

மாயையாகிய அசித்துடன் தொடர்புடையவை. திருமாலின் அவதாரங்களும் இவ்வுலக உயிர்களின் வடிவிலேயே அமைகின்றன. ஆயினும் அவை அசித்தின் தொடர்பு உடையனவல்ல. இதனையே கண்ணன் தான் அசித்துடன் தொடர்பில்லாதவன் என்று குறிக்கின்றான்.

## வேதமும் அவதாரங்களும்

வைதிக சமயங்களுக்கு அடித்தளமாக விளங்குவன வேதங்கள். இந்தியப்பண்பாட்டின் பழமையைப் பறை சாற்றும் அவை ஆதிகாலச் சமய வாழ்வையும் வழிபாட்டு முறையையும் விளக்குவன. அவற்றிலேயே அவதாரம் பற்றிய கொள்கை இடம் பெற்றிருக்கிறது. சுக்கில எசுர் வேதத்தில் உள்ள புருட சூக்தத்தில் உள்ள இரண்டாம் அனுவாகத்தில் பிறக்காதவன் பிறக்கிறான் என்ற கருத்து காணப்படுகிறது. யூபத்தில் கயிறு கட்டும்போது சொல்லப்பெறும் திருமாலைக் குறிக்கும் மந்திரமொன்று, அவன் பிறந்து கொண்டே பெருமை அடைகிறான் என்று கூறுகிறது.[20]

## அவதாரத்தால் தாழாமை

திருமாலின் அவதாரம் ஒரு புல் நுனியில் அமையும் பனித்துளியையொத்தது. மிகப்பெரும் மலையைக்கூட அப் பனித் துளியில் காண்பதுபோல அவதாரங்கள் தெய்வத்தன்மையையும் அருள்பாலிப்பையும் மனித வடிவில் அல்லது விலங்கு வடிவில் வெளிப்படுத்தக் காணலாம். சூரியனிடமிருந்து ஒளி வெளிப்பட்டுக் கொண்டே இருப்பினும் அதன் ஒளிவிடும் தன்மை குறைவது இல்லை. அதுபோலப் பரம்பொருள் எவ் வடிவில் வரினும் அதன் முழுமையில் குறைவதில்லை. ஆதலின் வடிவு முதலானவற்றால் இறைவனுக்கு ஊறில்லை. வடிவுடன் வருவதால் பரம்பொருளுக்குப் பெருமை சேருமேயன்றிச் சிறுமை சேருவதில்லை.

## அவதாரங்களின் நோக்கம்

வடிவுடன் வரும் இறைவன் தன் இச்சை காரணமாகவே அவ்வாறு வருவதாகச் சமயங்கள் வலியுறுத்துகின்றன.

அவ்விச்சைக்கும் வலுவான காரணங்கள் அமையவேண்டும். அவையே இறைவனுக்கு அவதார நோக்கமாக அமையும். அவை,

1. தன்னிடம் பக்தி செலுத்துவோருக்குத் தன்னுடைய திறத்தை வெளிப்படுத்துதல்.
2. உலக உயிர்களுக்குத் தீமைகளைச் செய்யும் தீயவர்களைத் தண்டித்து அவர்களால் பாதிக்கப் பட்ட நல்லவர்களுக்கு அருளுதல்.
3. இவ்வுலகில் உயர் கருத்துக்கள் நலியும் போது அவதரித்து அருள் குணத்தை வெளிக்காட்டி நற் கருத்தை நிலைநாட்டி இவ்வுலகத்தாரை நன்னெறியில் செலுத்தி, உய்வித்தல்.

என்ற அடிப்படையில் அமைகின்றன எனக் கொள்ளலாம்.

## மனிதனும் அவதாரமும்

சுத்தசிருட்டியாய்த் திகழும் அவதாரங்கள் மானிட வடிவுடனும் அமைகின்றன. மனிதன் தன்னிலையில் தன்னை மறந்து பரம்பொருளையும் மறந்து வாழும் நிலையை உடையவன். ஆயினும் அவதாரங்கள் மனித வடிவில் வந்து இவ்வுலகில் இயங்கித் தன் கருத்துப் பொருள் முடிவுறும் வரை வாழக் காணலாம். எளிய மனிதன் தன் உடலோடும் உள்ளத்தோடும் மிகுதியும் ஒன்றி விடுகிறான். தன்னையும் தன் அறிவையும் வரையறைக்குள் உட்படுத்தும் அவனுடைய நிலை குருடனுடன் ஒத்ததாய் ஆகிவிடுகிறது. ஆனால் மனித வடிவில் அவதாரங்களாய்த் திகழும் இறைவன் இந்நிலைக்கு ஆட்படுவதில்லை. மனித வடிவில் இறையின் குணம் நன்கு வெளிப்படுகிறது.

## அவதாரங்களின் தெய்வத்தன்மை

கண்ணன் கீதையில், ' எனது தெய்வத்தன்மை கொண்டு பிறக்கும் செயல் இவ்வாறு உள்ளது என்பதை உள்ளபடி உணர்வோன் உடலைத் துறந்து பின்னர் மறுபிறப்பு எய்துவதில்லை. அர்ச்சுனா ! அவன் என்னை அடைகிறான்.'

என்று கூறுகிறான்.[30] அதனால் அவதாரத்தின் உட்பொருள் முக்திக்கு வழி வகுப்பது என்பது புலனாகிறது. இறை நிலையை நம்மாழ்வார்,

> உணர்ந் துணர்ந்து இழிந்தகன்று உயர்ந்து உருவியந்த இந்நிலைமை
> உணர்ந் துணர்ந்து உணரினும் இறைநிலை உணர்வரிது உயிர்காள்[31]

என்று குறிப்பிடுகின்றார். ஆயினும் அவதாரங்கள் இறை நிலையின் எளிமையை விளக்குவன. இதனையே 'யாரும் ஓர் நிலைமையனென அறிவெளிய எம்பிரான்'[32] என்று போற்றுவர்.

## அவதாரங்களின் மறைபொருள்

1. அவதாரங்களின் மறைபொருளாகச் சில கருத்துக்கள் கூறப்பெறுகின்றன. திருமாலின் அவதாரங்களில் சில உடன் தோன்றி மறைந்து விடும் இயல்பினவாக உள்ளன. அவை இந்திரஜாலங்கள் போல அமையினும் உண்மையுடையன வாகப் போற்றப்பெறுகின்றன. உண்மை என்பது ஈண்டு இறைத்தன்மையைச் சுட்டும். வைணவத்தில் இறைத்தன்மை என்பது திருமாலின் பரத்துவநிலையை விளக்கும். பரத்துவ நிலையை முழுவதுமாக வைணவர்கள் போற்று கின்றனர்.

2. திருமால் அவதாரங்களில் சில, மானிடக்கருப்பையில் தங்கிப் பிறந்த நிலையில் அமைகின்றன. இதற்கு வாமனன், இராமன், கண்ணன் அவதாரங்கள் சான்றாகும். திருமால் மானிட வடிவில் வந்து பிறந்தாலும் உலக இன்ப துன்ப சூழ்நிலை களுக்கு ஆளாகாமல் தான் எந்நோக்கம் கொண்டு இப் பூவுலகுக்கு வந்தானோ அந்நோக்கத்தை மறப்பதில்லை.

3. அவதாரங்களாய் இவ்வுலகில் வந்து வாழ்ந்தபோதும் வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்கள் அவர்களைப் பாதிப்பதில்லை. ஈண்டு இராமாவதாரத்தை இவ்வகையில் காட்டாகக் கொள்ளலாம். மனித வாழ்வில் இராமன் இன்பம் துன்பம் இரண்டையும் எய்திய நிலையை இராமகாதை

கூறுகின்றது. தேவர்கள் பொருட்டாக இராவணவதமே இராமனின் நோக்கமாயிருந்தது.

4. திருமால் பூவுலகில் வந்து அவதரிப்பதற்கு வினைகள் ஏதும் காரணமாவதில்லை. இதைப் போன்றே அவதாரங் களாய் இருந்து செயலாற்றும்போது செய்யும் வினைகள் எவ்விதத்திலும் பாதிப்பதுமில்லை.

5. பூவுலகில் தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கும் போது இறைவன் அவதரிக்கின்றான். அவதாரக்கதைகள் அனைத்துமே இதை வலியுறுத்துகின்றன.

6. அனைத்திற்கும் மேலாகத் தன்பால் பக்தி செலுத்தித் தன்னைத் தொழும் எளியவர்க்கு அருள் செய்வதும் அவதாரத் தின் மறை பொருளாகும்.

## திருமாலின் அவதாரங்கள்

அவதாரம் என்னும் சொல் வைணவர்கள் குறிப்பிடும் விபவ அவதாரங்களைச் சுட்டும். ஆதலின் அவற்றை விபவரூபங்கள் என்று குறிப்பிடுவதும் உண்டு. இவை முப்பத்தாறு ரூபங்களாகத் தோன்றுகின்றன என்று கூறுவர். இவை முப்பத்தெட்டு என்றும் முப்பதொன்பது என்றும் கூறும் மரபு உண்டு. திருமாலின் பத்து அவதாரங்களும் இவற்றிலேயே அடங்கும். இப்பத்தும் மிகச் சிறப்பாகப் போற்றப் பெறுகின்றன. மற்ற அவதாரங்களைக் காட்டிலும் பத்து அவதாரங்களால் உலகிற்கு விளைந்த நன்மைகள் மிகுதியாதலால் அவை சிறப்பிடம் பெறுகின்றன.

திருமாலின் அவதாரங்கள் சிலவற்றில் ஓர் உருவம் இன்னோர் உருவமாக மாறும். அவ்வாறு அமையினும் அவ்வவதாரம் விபவரூபத்தின் தொகுதியாகவே அமையும். கபிலர், பரசுராமர் முதலானோர் நேரடியாகத் திருமாலின் அவதாரங்களாகக் கொள்ளப் பெறுவதில்லை. பெரும் புண்ணியத்தால் புகழ் படைத்த அவர்களுக்குள் திருமால் உட்புகுந்து செயல்களைச் செய்விக்கிறான் என்று வைணவம் கூறுகின்றது. அதனால் அவர்கள் சீவர்களில் மேன்மையுடைய

வர்களாக மட்டுமே கொள்ளப் பெறுகின்றனரேயன்றி வழிபடப் பெறுவதில்லை.

கபிலர், பரசுராமர் முதலானவர்களைப் போலல்லாது இராமன் கண்ணன் அவதாரங்கள் வினைக்கு வயப்பட்டு இன்ப துன்பங்களை அனுபவிக்கும் நிலை அவர்களுடைய வாழ்க்கையில் அமைகிறது. அதற்கு வைணவத்தில் வேறு காரணம் உரைக்கப்பெறுகிறது. இவ்வுலகை நலிவிக்கும் கொடியவர்களைத் திருத்தும் பொருட்டு அவதார மனிதர்கள் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றனர். கொடியவர்களும் அவதாரங்களை எளிய மனிதராகவே எண்ணி அவர்களுக்குத் துன்பங்களைத் தருகின்றனர். பின்னர் உண்மைநிலை உணர்ந்து அவர்கள் இறை என அறிந்து தம் தவறை உணர்கின்றனர். இதனை இராமனைப் போர்க்களத்தில் கண்ட இராவணன்,

> ' தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன் அல்லன்
> இவனோதான் அவ்வேத முதல் காரணன் ' [33]

என்று தெளிந்ததாகக் கம்பர் காட்டுகிறார். ஆதலின் அவதாரங்கள் இன்ப துன்பங்களை அனுபவிப்பது என்பது சூழலுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்டு நடிக்கும் இயல்பை ஒத்ததேயாகும்.

## அவதாரங்களுக்குக் காரணம்

புராண இதிகாசங்களில் பிருகு முனிவரின் சாபமே திருமாலின் அவதாரங்களுக்குக் காரணம் என்று கூறப் பெறுகிறது. ஈண்டு, பிருகுமுனிவர் சாபம் காரணம் என்று வெளிப் படையாய்த் தோன்றினும், திருமாலின் இச்சையே உண்மைக் காரணம் என்று வைணவர்கள் கொள்கின்றனர்.[34]

## அவதார வகைகள்

திருமாலின் அவதாரங்கள் முக்கியம், கவுணம் என்று இருவகைப்படும். முக்கியம் என்பது இறைவனின் நேரடி அவதாரம். கவுணம் என்பது திருமாலின் ஆவேச அவதாரம். ஆவேசம் இருவகைப்படும். சுயரூபாவேசம், சத்தியாவேசம்

என்பன அவை. சுவரூபாவேசம் என்பது திருமால் தன்னுடைய அசாதாரண உருவத்துடன் ஆவேசித்து நிற்றல். பரசு ராமாவதாரம் இதற்குச் சான்றாகும். சத்தியாவேசம் என்பது செயலாற்றும் காலங்களில் பிரமன் சிவன் முதலான சேதனரிடத்தில் சக்தி அளவில் ஆவேசித்து நிற்றல்.[35] மேலும் அவதாரங்களை உருவ அடிப்படையில் மூன்று வகைகளாகப் பிரிக்கக் காணலாம். அவை 1. மானுடம், 2.விலங்கினம், 3. தாவரம் என்பன. மானுடம் என்பது மனித உடலுடன் கூடிய வடிவுடன் வந்து இயங்கிய அவதாரங்களைக் குறிப்பது. விலங்கினம் என்பது விலங்குருக் கொண்டு திகழும் வடிவங்களை உடைய அவதாரங்களைச் சுட்டுவது. மீன், ஆமை முதலான அவதாரங்கள் இவ்வகையன. தாவரம் என்பது தண்டகாரண்யத்தில் முனிவர் களின் பசியைப் போக்க எடுத்த குட்டை மாமரம் முதலான அவதாரங்கள்.[36] நான்முகனும் சிவனும் பரசுராமரும் வியாசரும் ஆவேசத்துக்குரிய குணங் களால் அமைவதால் அவர்களுக்கு வைணவ வழிபாட்டில் சிறப்பிடம் தரப்பெறவில்லை. பாண்டு புத்திரனான அர்ச்சுனனைத் திருமாலின் ஆவேச அவதார வகையில் அடக்கும் மரபு உண்டு.

## அவதாரங்களின் எண்ணிக்கை

திருமால் அவதாரங்களின் எண்ணிக்கை பற்றிய கருத்துக்கள் பலவாக அமைகின்றன. வடமொழி பாகவதம் திருமால் அவதாரங்கள் பதினேழு எனக் கூறுகின்றது.[38] அவதாரங்கள் முப்பத்தொன்பது என அகிர்புத்யயை சம்கிதை கூறுகிறது. விசுவத்சேநசம்கிதை அவதாரங்களை முப்பத் தாறாகக் கூறுகிறது.[39] எண்ணிக்கை பற்றிய மாறுபாடு காலந்தோறும் திருமாலின் அவதாரக் கொள்கை வளர்ந்து வந்துள்ளதை விளக்குகிறது எனலாம்.

## அவதாரங்களின் செயல்கள்

அவதாரங்கள் திருமாலின் வியூக வடிவங்களில் ஒன்றான அநிருத்த வடிவிலிருந்துதான் தோன்றுகின்றன என வைணவர்கள் கொள்கின்றனர். அவதாரங்களில் பல இந்திரனுக்கு உதவியாக இருந்து உலகைக் காக்கும் செயல்களைச்

செய்துள்ளன. அவன் இழந்த செல்வத்தை மீட்டுக் கொடுக்கத் திரிவிக்கிரம அவதாரமும் அமிர்தத்தைக் கொடுக்கத் ததிபத்தன் அவதாரமும் உலக ஆளுகையை மீட்டுக் கொடுக்கஇராமாவ தாரமும் அமைந்தன. தேவர்களுக்குரிய வேதத்தை மீட்க எடுத்த அவதாரங்கள், அன்னம், அயக்கிரீவன் முதலான அவதாரங்கள்.

ஆசிரியன் மாணவன் முதலானோர் இருக்கவேண்டிய நிலையை உணர்த்த எழுந்தது நரநாராயண அவதாரம்; நீதியை நிலைநாட்டுதல் பொருட்டு அமைந்தது கண்ணன் அவதாரம்; உலகைத் தீயோர் நலிவிக்கும் போது எடுத்தது நரசிம்ம அவதாரம்; இனி எடுக்க இருப்பது கல்கிஅவதாரம்.

அடியவருக்குத் துன்பம் நேரின் பொறாதவனாய் அதை நீக்கவும் துயர் செய்வாருக்குத் தண்டனை அளிக்கவும் அவதரித்துத் திருமால் தன் இருப்பை விளக்குகிறான். தான் நினைத்த அளவிலேயே எல்லாவற்றையும் நடத்தவல்ல திருமால் தன்னை முற்றிலும் மாற்றிக் கொண்டு வந்து இழிந்த மானிடப் பிறவியாய்ப் பிறந்து வளர்ந்ததை அறிய முடிகிறது. இவ்வாறு அமைவதெல்லாம் பிரகலாதன் முதலான அடியவர் களின் பொருட்டாகத்தான்.

## அம்சாவதாரம்

திருமாலைத் தம் கடவுளாய்க் கொண்டு பக்தி வளர்த்து வைணவம் தழைக்கச் செய்த ஆழ்வார்களையும் அவதாரங்கள் என்று போற்றுவதுண்டு. வேட்டுவர் மானைக் காட்டி மானைப் பிடித்தல் போலவும் கிணற்றில் விழுந்த மகவை எடுக்கத் தானும் விழுந்த தாயைப் போலவும் திருமால் ஆழ்வார்களாய் அவதரித்தான் என்பர்.[40] பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின் ஒவ்வொரு கூறாகப் பிறந்தவர்கள்; திருமாலின் மேல் பெரும் பக்தி கொண்டு அவனைத் தொழுதவர்கள். பக்திப் பாக்களால் திருமால் புகழைப் பரப்பியவர்கள். அவர்கள் திருமாலையும் அவனுக்குரிய அவதாரங்களையும் வேறுவேறாக பிரித்துக் காணாது இரண்டையும் ஒன்றாகவே உணர்ந்து பாடியுள்ளனர். திருமாலுக்குரிய கலியாண குணங்கள் பலவாகும். அவற்றுள்

வாத்சல்யம், சௌலப்பியம், சௌசில்யம், சுவாமித்துவம், ஞானம் என்னும் ஐந்து குணங்கள் ஆழ்வார்களால் மிகச் சிறப்பாகப் போற்றப் பெறுகின்றன. ஒவ்வொரு ஆழ்வாரும் ஒவ்வொரு குணத்தில் மிக ஈடுபட்டுப் பாடியுள்ளனர். அதைப்போன்றே திருமாலின் வெவ்வேறு அவதாரங்களில் ஈடுபாடு கொண்டும் பாடியுள்ளனர்.

## அவதாரங்களின் சிறப்பு

அவதாரங்களின் தன்மை பெருக்காறுபோல அமையும்.[41] அவதார காலங்களில் வாழ்ந்தவர்கள் மட்டுமே துய்க்கக் கூடியதாகத் திகழ்ந்தவை அவதாரங்கள். பெருக்காறு சென்று மடுக்களில் தேங்குவது போல விபவ அவதாரங்களின் தன்மைகள் அர்ச்சாவதாரங்களில் அமைகின்றன. அவ்வகையில் அர்ச்சைகள் அவதார காலங்களில் துய்க்காதவரும் துய்க்கலாம் படி அமைகின்றன.

ஒரு தத்துவப் பொருளைக் கேட்டுத் தெளிதல் என்பது கடினமான செயலாகும். அவதாரங்கள் அத்தத்துவத்தை வாழ்வின் மூலம் விளக்க முயல்கின்றன. மேலும் வாழ்வின் செயல்கள் அவதாரங்களின் அருளுக்கு உறைவிடமாகின்றன. அவற்றைக் காண இயலாதவரும் நினைக்க இயலாதவரும் அவதாரங்களின் உண்மை இயல்பை உணரும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறு உண்மைப்பொருளை விளக்கும் வடிவமாக அவதாரங்கள் திகழ்கின்றன என்றால் அது மிகையாகாது.

அவதாரங்கள் வழி உணர்த்தப் பெறுவன வரலாற்றுத் தன்மை உடையனவல்ல; உருவகித்துக் கூறப்பெறும் இயல்புடையன. சாத்திரங்கள் காட்டும் அவை கற்பனை உடையவை மட்டுமன்று; அவை உருவுடன் வந்து ஊனும் உதிரமும் பெற்ற உடலையும் உடையவையாய்ப் படைக்கப் பெற்றுள்ளன. அவதாரங்கள் மனித வாழ்வை மேற்கொண்டுள்ளனவாகத் திகழ்கின்றன. ஆதலில் அவதாரங்களின் வாழ்க்கை ஆன்மீக உண்மைகளை வெளிப்படுத்துவனவாகக் காட்டப் பெற்றுள்ளன. கடலில் அலைகள் தோன்றிக் கொண்டே இருப்பது போல் அவதாரங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

அவதாரங்கள் மண்ணில் தோன்றி வளரும்போது அவற்றின் நோக்கத்தையும் இயல்பையும் அறிவது இயலாததாய் இருக்கும். இதனை வாமனாவதாரமும் இராமாவதாரமும் உணர்த்துகின்றன. அவதாரங்களின் நோக்கங்களையும் செயல்களையும் இதிகாசங்கள் நன்குஎடுத்தியம்புகின்றன. வடமொழியில் பத்து அவதாரங்கள் பற்றிய செய்திகள் இலக்கிய வடிவம் பெற்றுள்ளன. புராணங்கள், இதிகாசங்கள், பாஞ்சராத்திர ஆகமம் முதலானவை திருமாலின் குணங்களை விவரிக்கின்றன. அக்குணங்கள் அவதாரங்களின் வாழ்வில் இடம் பெற்றுள்ள நிலை அவற்றில் விளக்க பெறுகின்றது.

வைதிக சமயத்துக்கு எதிரான கொள்கையைக் கொண்டது புத்தசமயம். அச்சமயத்தைப் பரப்பிய புத்தனையும் வைணவர்கள் திருமாலின் ஓர் அவதாரமாகக் கொள்கின்றனர். ' வேதம் பிரமாணம் அன்று என்று கூறி வேத நிலையில் உள்ள சுவையைக் குலைப்பதற்காகக் கள்ளனைப் போல் வேதத்துக்குப் புறத்தனான புத்தனும் தள்ளத்தக்கவன் '[42] என்று கொள்வர். அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், ' மாவுருவில் கள்ள வேடம்'[43] எனக் குறிப்பிடும் தொடர் ' கள்ள வேடத்தைக் கொண்டுபோய்ப் புரம் புக்கவாறும் '[44] என்று புத்தாவதாரத்தைக் குறிப்பதாய்க் கொள்வர். இவற்றால் அவதாரம் பற்றிய கொள்கை மிகப் பரந்த ஒன்றாக அமைகிறது என்பது விளங்கும்.

## அவதாரங்களும் வருணாசிரமமும்

வருணாசிரமக் கொள்கை இதிகாசங்களிலும் புராணங்களிலும்இடம் பெற்றுள்ளது. அக்கொள்கை திருமால் அவதாரங்களுடன் தொடர்புபடுத்தப் பெறுகின்றது.திருமால் எடுத்த அவதாரங்கள் யுகந்தோறும் நிகழ்ந்தனவாகக் கூறப்பெறுகின்றன. மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம் ஆகிய நான்கும் கிருத யுகத்தில் நிகழ்ந்தவை. இராமாவதாரம் திரேதாயுகத்தில் நிகழ்ந்தது. கண்ணன், பலராமன் அவதாரங்கள் துவாபர யுகத்தில் நிகழ்ந்தவை. கல்கியவதாரம் கலியுகத்தில் நிகழ இருப்பது. இவ்வாறு ஒவ்வொரு யுகத்திலும் அவதாரங்கள் நிகழினும், ஒவ்வொரு வருணத்திலும் வெவ்வேறு யுகங்களில் நிகழ்ந்ததாகக் கூறுவர். கிருத யுகத்தில் அந்தணர் மரபில்

பரசுராமனாய் அவதரித்த திருமால், திரேதாயுகத்தில் க்ஷத்ரிய குலத்தில் தசரதராமனாக அவதரித்ததாகவும் துவாபரயுகத் தில் வைசிய மரபில் கண்ணனாக வளர்ந்ததாகவும் கொள்வர். ஆழ்வார்களில் தலைமைத் தன்மையுடையவரான நம்மாழ்வாரை வியாசரைப் போன்று அவதாரமாகக் கொண்டு கலியுகத்தில் வேளாண் மரபில் அவதரித்ததாகக் குறிப்பர்.[45]

## குறிப்புக்கள்

1. வார்த்தாமாலை. பின்பழகிய பெருமாள் ஜீயர் தனியன்.
2. பரிபாடல். 3. அடி. 11.
3. அழகர் பிள்ளைத் தமிழ். பா. 8.
4. தேசிகப்பிரபந்தம். அதிகாரசங்கிரகம், பா. 1.
5. உபதேசரத்தின மாலை. பா. 35.
6. மேற்படி. பா. 36.
7. திருவள்ளுவ மாலை. பா. 29.
8. மேற்படி. பா. 51.
9. பெரிய திருவந்தாதி. பா. 34.
10. இராகவையங்கார், மு, ஆழ்வார்கள் காலநிலை, ப. 23.
11. திவ்வியப்பிரபந்த முகவுரை. ப. 9.
12. உபதேசரத்தினமாலை. பா. 4.
13. அஷ்டப்பிரபந்தம்,நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி.பா.1.
14. தேசிகப்பிரபந்தம். பா. 383.
15. வார்த்தா மாலை. வா. 56.
16. சிலப்பதிகாரம் காதை. 5. அடி. 169.
17. இரண்டாம் திருவந்தாதி. பா. 27.
18 சில்லரை ரஹஸ்யங்கள். ப. 540.
19. Subbu Reddiar, N.,Religion and philosophy of Nalayiram, with special reference to Nammalvar, P.26
20. முல்லைப்பாட்டு. அடி. 1-5.
21 அகநானூறு . பா. 59.
22. சில்லரை ரஹஸ்யங்கள். ப-ள். 538-39.
23. புருஷ சூக்தம்.
24. திருவாய்மொழி. 3.5.5.
25. திருவிருத்தம். பா. 1.
26. பகவத்கீதை, அத்தியாயம் 4. சுலோகம். 1-2.
27. மேற்படி. அத்தியாயம்.4. சுலோக. 5-6.
28. மேற்படி. அத்தியாயம். 4. சுலோகம். 8.

29. அக்னி ஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியார், வரலாற்றில் பிறந்த வைணவம், ப-ள். 125-126.
30. பகவத்கீதை, அத்தியாயம். 4. சுலோகம். 9.
31. திருவாய் மொழி. 1. 3. 6.
32. மேற்படி. 1. 3. 4.
33. கம்பராமாயணம். பா. 9837.
34. தத்வத்திரயம். மூலம். 194.
35. மேற்படி. மூலம். 189.
36. மேற்படி. மூலம். 190.
37. மேற்படி. மூலம். 192.
38. மேற்படி. மூலம். 193.
39. மேற்படி.
40. ஆர்த்திப்பிரபந்தம். பா. 9.
41. வசனபூஷணம், சூத்திரம். 42.
42. ஆசாரியஹிருதயம். ப. 206.
43. மேற்படி.
44. திருவாயமொழி. 5. 10. 4.
45. ஆசாரியஹிருதயம். ப. 212.

# 2. ஆழ்வார்களும் அவதாரங்களும்

வைணவத்தில் அவதாரங்கள் பற்றிய கொள்கை பல நிலைகளில் வளர்ந்து வந்திருப்பினும், அவதாரங்கள் என்றால் பத்தவதாரங்களையே மிகுதியும் குறிக்கும் சிறப்பைக் காணலாம். ஆழ்வார்களின் பாடல்களில் இப்பத்தவதாரங்களே மிகுதியும் இடம் பெற்றுள்ளன. இவற்றை,

தேவுடைய மீனமாயாமையாய் ஏனமாயரியாய்க் குறளாய்
மூவுருவி னிராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய்[1]

என்று பெரியாழ்வாரும்

மீனோடு ஆமை கேழலரி குறளாய் முன்னு
மிராமனாய்த்
தானாய் பின்னுமிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும்[2]

என்று திருமங்கையாழ்வாரும் போற்றியுரைப்பர்.

பத்து அவதாரங்கள் பற்றிய செய்திகள் வடமொழியில் அமைந்துள்ளது. போன்று தமிழில் தனி நூல்களாய் அமைய வில்லை. ஆயினும் அவதார நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் காலந்தோறும் தோன்றிய பழந்தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. பரிபாடல் ஒன்றே திருமாலையும் அவதாரங் களையும் இணைத்துரைக்கும் சங்கநூலாகும். சங்க இலக் கியத்தில் ஏழு அவதாரங்கள் பற்றிய செய்திகள் காணப் பெறுகின்றன. பத்தவதாரம் என்ற நிலை ஆழ்வார்கள் காலத்தில் தான் முழுமையாக வலுப்பெற்றது என்று கூறலாம்.

ஆழ்வார்கள் பாஞ்சராத்திர ஆகமம் குறிப்பிடும் முப்பத்தொன்பது அவதாரங்களையும் பாடவில்லை. ஆயினும் அவற்றுள் இடம் பெற்றுள்ள பத்து அவதாரங்களையும் சிறப்பித்துப் பாடுகின்றனர். புராணக்கதை வடிவில் இருந்த

நிகழ்ச்சிகளை இலக்கிய வடிவாக்கிச் சிறப்பித்தபன்னிரு ஆழ்வார்கள், பத்து அவதாரங்களை மட்டுமன்றி, சிறப்புடன் போற்றப்பெற்ற மோகினி அவதாரம், அன்ன அவதாரம், நரநாராயண அவதாரம், அயக்ரீவ அவதாரம் முதலான அவதாரங்களையும் பாடியுள்ளனர். ஆழ்வார்கள் அவதாரங்களைப் பாடும் நிலையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. முதல் ஏழு அவதாரங்களைப் பாடுதல்
2. இராமன், கண்ணன் அவதாரங்களைப் பாடுதல்
3. பத்தவதாரங்களில் இடம் பெறா அவதாரங்களையும் பாடுதல்

என்பன அவை. இவற்றுள் இராமன், கண்ணன் அவதாரங் களில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் திருமாலின் இறைத்தன்மையை வெளிப்படுத்துவதாகும். அவ்விரு அவதாரங்களிலும் மிகுதியான நிகழ்ச்சிகள் ஆழ்வார்களால் பாடப் பெறுகின்றன. ஆதலின் அவை மிகச் சிறப்பிடம் பெறுகின்றன.

## மச்சாவதாரம்

பத்துஅவதாரங்களில் முதன்மையானதாகக் கூறப் பெறுவது மச்சாவதாரம். வடமொழியில் ' மத்ஸ்யம் ' என்ற சொல்லால் குறிப்பர். மச்சாவதாரம் பற்றிய குறிப்பு, சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை. வடமொழியில் மச்சாவதாரம் பற்றிய குறிப்பு முதன்முதல் சதபதபிராமணத்தில் இடம் பெற்றுள்ளது.[3]

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

மச்சாவதாரம் ஆழ்வார்களால் மீன் என்றே பெரும்பான்மை சுட்டப்பெறுகிறது. மற்றைய அவதாரங்களின் பெயர்களை வடசொல்லாலும் குறிக்கின்றனர். ஆயினும் இந்த அவதாரத்தை ஆழ்வார்கள் மச்சம் என்ற சொல்லால் குறிக்கவில்லை. திருமங்கையாழ்வார் 'கெண்டை'[4] என்ற சொல்லால் இவ்வவதாரத்தைப் பாடுகின்றார்.

## கதைக்குறிப்பு

திருமால் மன்வந்தரப் பிரளயத்தில் எல்லா உயிர்களையும், அவற்றுக்குத் தலைவனான மனுவையும், தன்னால் ஏற்படுத்தப் பட்டதொரு கப்பலில் வைத்து எல்லாம் வல்லவனான தான் ஒரு மீனாகி அக்கப்பலைப் பிரளயவெள்ளம் கொள்ளா வகையில் இழுத்துச் சென்று காத்தான். பிரமனின் கண்ணான வேதங் களையும் திருப்பிக் கொடுத்து அவனைக் கொண்டு படைப்புத் தொழிலைச் செய்யச் செய்தான்[5] என்பது உரையாசிரியர்களால் கூறப்பெறும் கதைக்குறிப்பாகும்.

## அவதாரச்செயல்

தங்குவதற்கு எங்கும் இடமின்றி வெள்ளம் வானவர் நாடுவரைத் திகழ இமையவரும் தனக்குச் சரணில்லை என்று திருமாலை அடைய, திருமால் மீனுருவெடுத்து நீர் குழம்ப முதுகில் மலைகளைச் சுமந்து வந்தான்[6] என்று திருமங்கை யாழ்வார் பாடுகின்றார். பிரளய வெள்ளம் பற்றிய செய்தி ஆழ்வார்களின் பாக்களில் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. வானுலகம் முழுவதும் நீரால் மூடிய காலத்தில் திருமால் மீனாய் உய்யக் கொண்டான்[7] என்னும் கூற்று இவ்வவ தாரத்தின் சிறப்பை விளக்குகிறது. ஆழ்வார்களின் பாடல் களில் மேற்கூறிய கதைக்குறிப்பு முழுவதும் அமைய வில்லையாயினும் தேவர்கள் வேண்ட, திருமால் மீனாய் வந்தநிலை சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளது.

## அவதாரச்சிறப்பு

பத்து அவதாரங்களில் சிறப்புடைய மனித அவதாரங் களுக்குச் சமமாக மச்சாவதாரம் ஆழ்வார்களால் பாடப்பெறு கிறது. உயிர்களின் தொடக்கம் நீரில்தான் நிகழ்ந்திருக்க வேண்டும் என்னும் கூர்தலற வளர்ச்சியைக் குறிக்கும் கருத்தின் கூறாக இவ்வவதாரம் பத்தவதாரங்களுள் முதலில் இடம் பெற்றிருக்கலாம். அவதாரங்களில் இது பழைமை உடையது என்பதை 'மீனுமாய ஆதியை'[8] என்ற தொடரின் வழி அறியலாம். மச்சாவதாரம் சாத்திரங்களுக்குக் காரணமான அவதாரம் என்றும்

வித்தியாவதாரம் என்றும் உரையாசிரியர்களால் போற்றப் பெறுகின்றது.[9] தனக்கு ஏதும் பயனின்றி மீன்வடிவெடுத்த திருமாலின் சிறப்பு 'மீனாய் உயிரளிக்கும் வித்து '[10] என்று துதிக்கப் பெறுகிறது.

மச்சாவதாரத்தை உரையாசிரியர்கள் ' பிரளயாபத் சகமான மத்ஸ்யம் ' என்று குறிப்பிடுவர்.[11] ஆதலின் பிரளய காலத்தில் நீரால் அழிவு ஏற்படும் என்ற கருத்தை வலியுறுத்தி அதிலிருந்து உலகைக் காக்கத் திருமால் மீன்வடிவு எடுத்தான் என்பதை விளக்குகின்றனர்.

## தொடர்புடைய கதைகள்

ஆழ்வார்களால் இவ்வகையில் எடுத்தாளப்பெற்ற மச்சாவதாரம் பற்றிய கதை பல்வேறு வடிவங்களில் திகழ் கின்றது. பிற்காலத் தமிழ்ப் பாகவதம் வேதங்களை மறைத்து வைத்த அயக்கிரீவன் என்னும் அசுரனைத் திருமால் மீனாய் அவதரித்துக் கொன்றான் என்று குறிப்பிடுகின்றது.[12] கந்தபுராணம் அவ்வசுரனைச் சோமுகன் என்று கூறுகின்றது.[13] பேராசிரியரும் அவ்வாறே கூறுகின்றார்.[14]

இவற்றை நோக்க, மச்சாவதாரக் கதைக்குறிப்பு காலந்தோறும் வேறுபட்டு வழங்கி வந்துள்ளது என்பது விளங்கும். ஆழ்வார்கள் அசுரன் பற்றியோ திருமால் அவனை அழித்தது பற்றியோ கூறவில்லை. மாறாக தான் படைத்த உலகில் திருமால் தானும் ஓர் உயிரானான் என்ற சிறப்பை விளக்க ஆழ்வார்கள் இந்த அவதாரத்தை எடுத்தாளுகின்றனர்.

## கூர்மாவதாரம்

திருமாலின் பத்து அவதாரங்களில் இரண்டாவதாக அமைவது கூர்மாவதாரம் ஆகும். 'ஆமையாகி ஆழ்கடல் துயின்ற ஆதிதேவ'[15] என்று திருமழிசை ஆழ்வார் இதைக் குறிக் கின்றார்.சங்க இலக்கியங்களில் கூர்மாவதாரம் பற்றிய செய்தி இடம் பெறவில்லை. சிலப்பதிகாரத்தில் இந்த அவதாரத்துடன் தொடர்புடைய திருமால் கடல் கடைந்த நிகழ்ச்சி மட்டும் சுட்டப்பெறுகிறது.[16] அடக்கத்துக்கு உவமைப் பொருளாகக்

கூறப்பெறும் ஆமையின் வடிவெடுத்துத் திருமால் இவ்வுலகுக்கு அருளியதைக் கூறுவது கூர்மாவதாரக் கதையாகும்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

கூர்மம் என்ற வடமொழிச் சொல்லால் சுட்டப்பெறும் இவ்வவதாரத்தை ஆழ்வார்கள் 'ஆமை' என்றே குறிக்கின்றனர். ஆழ்வார்களின் பாடல்களில் கூர்மம்என்னும் சொல் இடம்பெறவில்லை.

## கதைக்குறிப்பு

எப்போதும் முடியுடையவராய் இருக்கும் தேவர்கள் திருமாலின் திருவடியில் வந்து விழுந்து வணங்கித் தேவர்கள் வாழும் பொருட்டு அருள் செய்ய வேண்டுமென்று வேண்ட, அவர்களுக்கு அசுரர்களால் வந்த துன்பத்தைப் போக்கிக்காப்பதற்காக மந்தரத்தைத் தரிக்க வல்ல ஆமையின் வடிவை ஏற்றுத் தேவர்களைக் காத்தான் என்பது உரையாசிரியரால் கூறப்பெறும் கதைக் குறிப்பாகும்.[17]

## அவதாரச்செயல்

தேவர்களும் அசுரர்களும் கடலைக் கடைந்தபோது மந்தரமலை சாயத் தொடங்கிய நிலையில், திருமால் ஆமையாய் வடிவம் கொண்டு அதனைச் சாயாவண்ணம் நிறுத்தினான். இச்செயல் ஒன்றே தேவர்கள் அமுதம் பெற ஏதுவாயிற்று என்ற அடிப்படையில் ஆழ்வார்கள் பாடுகின்றனர். தேவர்களுக்குச் சாவாகிய நோய்தீர் மருந்தாம் அமுதத்தை அளித்தான் எனத் திருமழிசையாழ்வார் விவரித்துக் கூறுகின்றார்.[18] ஆமையின் பெரு வடிவு 'அருவரையன்ன தன்மை அடல் ஆமை'[19] என்று போற்றப் பெறுகிறது.

## அவதாரச்சிறப்பு

தேவர்கள் பொருட்டாகத் திருமால் பல அவதாரங்கள் எடுத்திருப்பினும் அவற்றிலிருந்து வேறுபட்டது கூர்மாவதாரம். ஆமை பயனற்ற ஓர் உயிரினமாகக் கருதப்

பெறுவது. திருமால் தேவர்கள் பொருட்டாகவே ஆமை வடிவம் எடுத்து வந்தான். ஆதியான நிலையை உடையதாக இவ்வவதாரம் கூறப் பெறுகின்றது.[30] தான் பள்ளி கொண்டிருக்கும் கடலிலேயே இவ்வுலக உயிர் ஒன்றாய் வடிவெடுத்துத் திரிந்த நிலையைத் திருமாலின் எளிவந்த தன்மைக்குச் சான்றாகக் கூறுவர். உலக இயற்கை வடிவங்களின் பேருருவாகத் திகழும் மந்தரமலை, பாற்கடல், வாசுகி என்னும் பாம்பு ஆகியவற்றுடன் ஒப்பிடக் கூடிய பேராற்றல் உடையதாக ஆமை வடிவின் பெருநிலை அமைகிறது. கூர்மாவதாரம் சாத்திரங்களுக்குக் காரணமான அவதாரம் என்று போற்றப் பெறுகிறது.[31] உரையாசிரியர்கள் 'மந்தராதாரமான கூர்மம்'[32] என்று குறிக்கின்றனர். ஆதலின் மந்தரமலையைத் தாங்கிய சிறப்பே ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெறுகிறது.

## தொடர்புடைய கதைகள்

கூர்மாவதாரம் பற்றிய கதைகள் பல வடிவில் வழங்குகின்றன. பிற்காலத்தில் கம்பரும் தம் இராமகாதையில் இந்த அவதாரத்தைக் குறிக்கின்றார்.[33] விஷ்ணுபுராணம் திருமால் கடல் கடைந்தபோது இருவேறு வடிவங்கள் கொண்டு தேவர்கள் பக்கத்திலும் அசுரர்கள் பக்கத்திலும் நின்றான் என்று கூறுகின்றது.[34] திருமாலைப் பாடும் இலக்கியங்கள் ஆமைவடிவு எடுத்த திருமாலைப் போற்றுகின்றன. கடல் கடைந்த போது ஆமைவடிவில் திருமால் தருக்கித் திரிந்ததாகவும் சிவன் அதை அடக்கி அதன் ஓட்டை அணிந்ததாகவும் சைவம் கூறுகின்றது.[35] சைவம் சிவனார் பெருமை கூற இத்தகைய கதையைக் கையாளுகின்றது.

கடல் கடைந்த நிலையில் கூர்மாவதாரமன்றி, மோகினி, தத்தாத்ரேயன், தன்வந்தரி முதலான அவதாரங்களும் நிகழ்ந்ததாகக் கூறுவர். அவற்றுள் இவ்வாமை அவதாரமே வைணவத்தில் மிகச் சிறப்பாகக் கூறப்பெறுகிறது.

## வராகாவதாரம்

அவதாரங்களில் மூன்றாவதாக அமைவது வராக அவதாரம் ஆகும். வராகம் என்பதற்குப் பன்றி என்று பொருள்.

இந்த அவதாரத்தை ' வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும் ஞானப்பிரான்'.[36] என்று நம்மாழ்வார் போற்றுகின்றார். சங்க நூலான பரிபாடலில் இவ்வவதாரம் பற்றிய முதல் குறிப்பு இடம் பெற்றுள்ளது. பல ஊழிக்காலம் நீரில் மூழ்கி இருந்த பூமியைத் திருமால் வராக வடிவில் வந்து மீட்டதைப் பரிபாடல் கூறுகிறது.[37]

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

ஆழ்வார்கள் வராக அவதாரத்தை ஏனம், [28] பன்றி, [29] கேழல், [30] வராகம் , [31] ஆதிவராகம் [32] என்னும் சொற்களால் பாடுகின்றனர். இவ்வாறு அமையும் அவதாரம் கொம்பொன்று கொண்டிருந்ததும் ஆழ்வார்களின் பாடல்களில் குறிக்கப் பெறுகிறது.

## கதைக்குறிப்பு

நெடுங்காலம் நீரில் மூழ்கி இருந்த நிலமகள் வேண்டுகோளால், திருமால் பன்றி வடிவு கொண்டு நீரில் மூழ்கி நிலவுலகைத் தன் கோட்டில் நிறுவினான் என்பது ஆழ்வார்களின் பாடல்கள் வழி அறியலாகும் கதைக் குறிப்பாகும். [33] திருமால் நிலமகளை மீட்டு மணந்தான் என்ற செய்தியும் இவ்வவதாரத்துடன் தொடர்புடைய கதைக்குறிப்பாகும்.

## அவதாரச்செயல்

வராகாவதாரத்தின் நிகழ்ச்சிகளை ஆழ்வார்கள் முன்னைய இரு அவதார நிகழ்ச்சிகளைக் காட்டிலும் மிகுதியாக எடுத்தாண்டு உள்ளனர். நெடுங்காலம் இப்பூவுலகு நீரில் மூழ்கிக் கிடந்தமையால் [34] நிலமகள் வேண்டத் திருமால் வராகமாய் வந்தமை, [35] பூவுலகை நீரிலிருந்து மீட்டமை, [36] தன் கோட்டிடை நிறுவியமை, [37] நிலமகளைச் சேர்ந்தமை [38] என்னும் இவற்றை ஆழ்வார்கள் குறிக்கின்றனர். குற்றமற்ற திங்கள் சுடர்விடும்படி உலகேழினோடும் உடலில் மண்சுமந்து மலையாறும், ஏழுகடலும் மண்டலத்தின் ஒருபால் ஒடுங்கும்படியாகத் திருமால் வராக வடிவம் எடுத்ததாகக் குறிப்பர். [39] வராகத்தின் பெருவடிவு,

சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரியமேரு
திருக்குளம்பில் கணகணப்பத் திருவாகாரம்
குலுங்க நில மடந்தைதனை யிடந்து புல்கிக்
கோட்டிடை வைத்தருளிய எம்கோமான் [40]

என்று போற்றப்பெறுகிறது. வராக வடிவம் ஐம்பூதமாய்த் திகழும் இயல்பினது [41] என்னும் கூற்றும் வராக அவதாரத்தின் சிறப்பை விளக்குவதாகும்.

## அவதாரச்சிறப்பு

திருமாலின் அவதாரங்களில் இழிபிறப்பாய் அமைந்தது இது ஒன்றே. ஆயினும் ஆழ்வார்கள் பாடும் நிலையில் இவ் வவதாரத்தை மற்றை மனித அவதாரத்துடன் ஒத்தமைத்தே பாடுகின்றனர்.[42] நிலமகளைத் திருமாலின் துணைவியாகக் கூறுவது மரபு. அது பற்றிய செய்தியை விளக்குவதாக அமைகிறது வராக அவதாரக் கதை. இந்த அவதாரம் ' பிரளயம் கொண்ட பூமியை நீருக்கும் சேற்றுக்கும் இறாயாத வடிவைக் கொண்டு எடுத்தது போன்று சம்சாரப் பிரளயத்திலிருந்து எடுக்க வல்லவன் திருமால்'[43] என்னும் கருத்தை வலியுறுத்துவதாய் அமைகிறது என்பர்.

## தொடர்புடைய கதைகள்

உலகைப் பாயாய்ச் சுருட்டி இரணியாட்சன் என்னும் அசுரன் மறைக்கத் திருமால் அதை வெளிக் கொணர வராக அவதாரம் எடுத்து இரணியாட்சனைக் கொன்று நிலமகளை அடைந்தான் எனப் பாகவதம் கூறுகிறது. [44] இரணியாட்சன், இரணியன் இளவல் என்பதைக் கம்பரும் குறிப்பிடுகின்றார்.[45] திருமாலின் பெருமையை விளக்கும் நூல்கள் இவ்வாறு கூறினும் சைவ இலக்கியம் இவ்வராக அவதாரத்தின் சிறப்பைக் குறைத்து உரைக்கின்றது. பூமியைத் தாங்கும் கூர்மத்துடன் போரிடச் சிவன் வராகத்தின் கொம்பினைப் பிடுங்கித் தரித்தான் என்று சைவர்கள் கூறுகின்றனர்.[46] மற்றொரு கதையும் இவ்வவதாரத்துடன் தொடர்புடையதாக அமைகிறது. சிவனின் அடியையும் முடியையும் காண நான்முகனும்

திருமாலும் முறையே அன்னவடிவும் பன்றி வடிவும் கொண்டனர். நான்முகன் அன்னமாய் முடிகாண முயன்றான். திருமால் பன்றி வடிவாய்ச் சிவனின் திருவடி காண முயன்றான். இக்கதை சைவத்தில் சிவனின் சிறப்பை விளக்கக் கூறப் பெறுகிறது. சைவத்தில் திருமாலின் பன்றி வடிவை வராகம் என்று கூறும் மரபில்லை. ஆயினும் திருமாலைத் தாழ்வுபடுத்த வெண்ணிச் சைவர்கள் இத்தகைய கதைகள் படைத்தனர் எனக் கொள்ளலாம்.

வராகத்தின் வகைகளை ஞானவராகம், நீலவராகம், சுவேதவராகம், பூவராகம் என்று நான்காகக் கூறுவர்.[47] வராக அவதாரம் பற்றிய கதை மற்றைய இரு அவதாரங்களைக் காட்டிலும் வளர்ச்சி பெற்றுத் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. இவ்வளர்ச்சிநிலை சைவம், வைணவம் ஆகிய இரு சமயங் களாலுமே ஏற்பட்டது என்றால் மிகையாகாது.

### மச்சம், கூர்மம், வராகம்-ஒற்றுமை

மனிதரல்லா உயிரின வடிவாயினும் இவ்வவதாரங்களை ஆழ்வார்கள் ஏனைய மனித அவதாரங்களைப் போலவே பாடியுள்ளனர். இவை பற்றியமைந்த கதைகளில் மச்சா வதாரத்தில் அயக்கிரீவனும் வராக அவதாரத்தில் இரண்யாட் சனும் ஆகிய அசுரர்கள் கொல்லப் பெற்றமை குறிக்கப் பெறுகின்றன. கூர்மாவதாரத்தில் இத்தகைய செயல் நிகழ வில்லையாயினும் அதனால் ஏற்பட்ட பயன் தேவர் களுக்குக் கிடைத்தது. ஆயினும் மேற்கூறிய செய்திகள் ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெறவில்லை. திருமால் மாற்றுரு எடுப்பதே சிறப்புடையது என்று ஆழ்வார்கள் கருதினர் போலும். அதன் காரணமாகத்தான் அசுரர்கள் பற்றிய செய்திகள் இடம் பெறவில்லை எனலாம்.

இவற்றை நோக்க ஆழ்வார்கள் திருமாலின் பெருமையை, நற்செயலைக் கூறுவதன் மூலமே விளக்க முயன்றனர் என்பது விளங்கும்.ஆயினும் பின்னமைந்த அவதாரங்களில் இதற்கு முரணான நிலையைக் காணலாம். தீயோர் அழிவதை நீக்கி அவ்வவதாரங்களின் கருத்துப் பொருளை விளக்க இயலாத நிலையில் ஆழ்வார்கள் அவதார நிகழ்ச்சிகளை அமைத்துள்ளனர்.

இம்மூன்று அவதாரங்களில் அவ்வாறு நீக்கினும் கருத்துப் பொருள் எளிதாய் விளங்கும் என்ற நிலையில் அசுரர்களின் அழிவை ஆழ்வார்கள் பாடவில்லை எனலாம்.

### நரசிம்மவதாரம்

அவதாரங்களில் வியத்தற்குரிய வடிவத்துடன் திருமால் எடுத்தது நரசிம்மாவதாரம். இவ்வவதாரம் பற்றிய முதற்குறிப்பு பரிபாடலில் காணப்பெறுகிறது. பிரகலாதன் பிருங்கலாதன் என்று குறிக்கப் பெறுகிறான். இரணியன் வெகுண்டெழுந்து அவனை அச்சுறுத்திய நிலையைப் பரிபாடல் விளக்குகிறது. [48] திருமால் சிங்கத்தலையுடனும் மனித உடலுடனும் வந்து இரணியனைக் கொன்றதைக் குறிப்பது இவ்வவதாரக் கதை.

### ஆழ்வார்கள் பாடும் பாங்கு

நரசிம்மாவதாரத்தில் ஆழ்வார்கள் மிகுதியும் ஈடுபாடு கொண்டு பாடுகின்றனர். ஆழ்வார்கள், சிங்கம், [49] அரி, [50] ஆளரி, [51] நரசிங்கம், [52] சிங்கபிரான், [53] அரிமுகத்து அச்சுதன், [54] சீயம், [55] நரம் கலந்த சிங்கம் [56] என்னும் தொடர்களால் இந்த அவதாரத்தைப் பாடுகின்றனர். இரணியன், பொன்பெயரோன், [57] பரியோன், [58] தானவன் [59] என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகிறான்.

### கதைக்குறிப்பு

நரசிம்மாவதாரம் பற்றிய தெளிவான கதைக் குறிப்புத் தமிழ் இலக்கியங்களில் ஆழ்வார்களின் பாடல்களுக்கு முன் கிடைக்கவில்லை. கதை நிகழ்ச்சியைப் பெரியதிருமடல் விரிவாக எடுத்தியம்புகிறது. 'இந்திரனுடைய வானமும் வானவர்களின் உலகையும் தன்னுடைய வலியால் கைக்கொண்ட இரணியனைப் பின் ஓர் ஆளரி உருவாய் வந்து அவன் எரியும்படி விழித்துப் போர்க்களத்தில் கொல்லாது அவனைப் பிடித்து இழுத்துத் தாளில் கிடத்தி அவனுடைய மார்பை வள்ளுகிரால் கிழித்தவன்.[60] என்று திருமங்கையாழ்வார் திருமாலைப் போற்று கின்றார். இவ்வரலாற்றில் இரணியன் பெற்ற வரங்களின்

சிறப்பும் ஆளரி வடிவின் தன்மையும் பிரகலாதன் பொருட்டு அவதரித்தமையும் தூணிலிருந்து திருமால் வெளிப்பட்டமையும் இடம் பெறவில்லையாயினும் இவ்வவதாரக் குறிப்புக்கள் அனைத்தும் வெவ்வேறு பாடல்கள் வழி அறியலாகின்றன.

## அவதாரச்செயல்

முன்னைய அவதாரங்கள் போலன்றி நரசிம்மா வதாரத்தில் பல நிகழ்ச்சிகள் ஆழ்வார்களால் பாடப் பெறுகின்றன. சினம் கொண்டு இரணியன் தூணைப் புடைத்தமை,[61] அதிலிருந்து நரசிங்கம் தோன்றியமை [62] முதலானவற்றை ஆழ்வார்கள் கூறுகின்றனர். இவை நரசிம்மாவதாரத்தின் சிறப்புடை நிகழ்ச்சிகளாக அமைபவை. பிரகலாதன் பள்ளியில் கற்றமை [63] அந்தியம் போதில் திருமால் நரசிங்க வடிவில் வந்தமை, [64] இரணியனைத் தன் தாளிலிட்டு நகங்களால் மார்பைப் பிளந்து கொன்றமை[65] முதலான நிகழ்ச்சிகளும் ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. திருமால் செயல் ஒவ்வொன்றும் இரணியன் பெற்ற வரத்திற்கு அப்பாற் பட்டதாக அமைகிறது. இந்த அவதாரக் குறிப்புடைய பாடல்கள் அனைத்தும் திருமரல் இரணியனை வள்ளுகிரால் பிளந்தான் என்ற கருத்து விளங்கும் படித் திகழ்கின்றன.

பிற்கால வைணவ உரையாசிரியர்கள் நரசிம்மாவதாரத்தைப் பாகவத சேஷத்துவத்தை விளக்குவதற்குச் சான்றாகக் காட்டுவர். பிரகலாதன் திருமால் அடியவனாகப் போற்றப் பெறுபவன். ஆழ்வார்கள் பிரகலாதனுக்கு அருள் செய்யத் திருமால் வந்தான் என்பதைச் சில இடங்களிலேயே குறிக்கின்றனர். [66]

## அவதாரச் சிறப்பு

முழுமுதற் கடவுளாய் வணங்கப் பெறும் நிலையில், மாற்று வடிவங்கள் கொண்டு வருதல் சிறப்புடையதாக அமையும். அடியாரின் வேண்டுகோளுக்கு இணங்க, திருமால் எங்கும் தோன்றுவான் என்ற கருத்தை வலியுறுத்த இக்கதை எழுந்தது. திருமாலின் அவதாரங்களில் பரசுராமனும் பலராமனும் சினத்தின்வடிவமாகத் திகழ்பவர்கள். அவர்களை

மிக வணங்கும் நிலை வைணவத்தில் இடம் பெறவில்லை. நரசிம்மாவதாரம் சினத்தின் எல்லையைக் காட்டுவதாய் அமையினும் இவ்வடிவைப் போற்றி வணங்கும் மரபு வைணவர்களிடத்தில் காணப்பெறுகிறது. திருமால் கொண்ட அர்ச்சாவடிவங்களில் சிங்க உருவமும் ஒன்று. ஏனைய விலங்குருவ அர்ச்சாவடிவங்கள் பாடப்பெறா நிலையில் நரசிம்ம வடிவை மட்டிலும் ஒரு திருமொழியில் சிங்கவேள்குன்றம் என்னும் திருப்பதியைப் பாடும் வகையில் திருமங்கையாழ்வார் போற்றுகிறார்."[67] நரசிம்ம அவதாரம் எடுத்த காரணத்தை ' முழுக்கூர்மையான திருவுகிரை ஆயுதமாகக் கொண்டு பிளத்தல் கிழித்தல் செய்யளவன்றிக்கே, அவன் மகனை மெய்ம்மை கொளக்கருதி'[68] என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

## தொடர்புடைய கதைகள்

நரசிம்மாவதாரம் பற்றிய முழு வரலாற்றைக் கம்பரே முதலில் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.[69] சீவக சிந்தாமணியிலும் திருத்தக்க தேவர் ' இரணியன்பட்ட தெம்மிறை எய்தினான் '[70] என இந்த அவதாரத்தைக் குறிக்கிறார். திருமால் இரணியனைக் கொன்றமை அகளங்காஷ்டகம் என்னும் சைவ நூலில் கூறப்பட்டுள்ளதென்பர். இவ்வவதாரச் செயல் சைனக் கடவுளான அருகனுக்கும் ஏற்றி உரைக்கப் பெறுகின்றது.[71] பல இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ள இவ்வவதாரம் விஷ்ணுபுராணத்திலும் பாகவதத்திலும் கூர்மபுராணத்திலும் விரிவாகப் பாடப் பெறுகின்றது.

சைவமும் நரசிம்மாவதாரக் கதையைச் சிவனின் பெருமையை விளக்க எடுத்தாண்டுள்ளது, இரணியனின் உதிரத்தைப் பருகியதால் சீற்றம் தணியாது திரிந்த நரசிம்மத்தின் உதிரத்தைச் சிவன் சரபப்பறவையாக வந்து குடித்தான், அதனால் அதன் சீற்றம் தணிந்தது என்று சைவர்கள் நரசிம்மாவதாரத்துடன் தொடர்புப்படுத்தி ஒரு கதையைக் கூறுகின்றனர். இது அபிதான சிந்தாமணியில் இடம் பெற்றுள்ளது.[72] பின்னர்த் திருமால் சிவனுடைய சினத்தைக் குறைக்க நாராயணப் பறவை உருக்கொண்டு வந்தான் என்ற செய்தியும் அறியத் தக்கது.[73]

இவற்றை நோக்க நரசிம்மாவதாரம் பற்றிய கதைகள் பல வடிவங்களில் இலக்கியங்களிலும் வழக்கு மொழிகளிலும் இடம் பெற்று வந்துள்ளன என்பது இனிது விளங்கும்.

### வாமனாவதாரம்

பத்து அவதாரங்களில் முழுமையான முதல் மனித அவதாரமாக அமைவது வாமனாவதாரமாகும். வாமனன் என்ற சொல்லுக்குக் குறுகியவன் என்று பொருள். இவ்வவதாரம் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.[74] இரட்டைக் காப்பியங்களிலும் வாமனாவதாரம் பற்றிய குறிப்புக்கள் காணப் பெறுகின்றன.[75] மிகப் பழங்காலம் தொட்டு வழங்கி வரும் இந்த அவதாரத்தை வைணவர்கள் சிறப்புடன் போற்றுகின்றனர். திருமால் குறுகிய வடிவம் கொண்டு வந்து இவ்வுலகை அளந்து அசுர மன்னனான மாவலியை அழித்தமையைக் கூறுவது இவ்வவதாரத்தின் சிறப்பாகும்.

### ஆழ்வார்கள் பாடும்பாங்கு

திருமால் குறுகிய வடிவம் கொண்டு வந்ததை ஆழ்வார்கள் பலவாறு பாடுகின்றனர். குறுகிய வடிவைக் குறிக்க, வாமனன்,[76] குறளன்,[77] குட்டன்,[78] மாணி,[79] மாணிக்குறளன்[80] என்னும் சொற்களை ஆழ்வார்கள் கையாளுகின்றனர். இந்நிலவுலகைப் பெறத் திருமால் மாவலியிடம் இரந்தான் என்றும் பாடுகின்றனர். மாவலியின் மேன்மையும் வள்ளல் தன்மையும் எடுத்துரைக்கப் பெறுகின்றன. மாவலி அவுணன்,[81] வாணன்[82] என்ற தொடர் களால் குறிக்கப் பெறுகிறான்.

### கதைக்குறிப்பு

வாமனாவதாரத்தில் அவன் உலகளந்தமையே சிறப்பாகச் சொல்லப் பெறுகிறது. ' தன்னுருவம் ஒருவரும் அறியாதவாறு தான் மாவலி வேள்வியில் சென்று அவன் மண்ணைப் பெற நினைத்து வஞ்சித்துத் தன்னுடைய பாதத்தால் தான் அளப்பன் மூவடி மண் மன்னா தருகவென, அவனும் தர அப்போதே

பேருருவம் கொண்டு கழற்கால் ஏழுலகும் போய்க்கடந்து அசுரர் வருந்தும்படிச் செல நீட்டி மாவலியை வஞ்சித்துத் தன்னுலகு கொண்டான்'[83] எனத் திருமங்கையாழ்வார் வாமனாவதாரக் கதையைக் கூறுகின்றார்.

## அவதாரச்செயல்

ஆழ்வார்கள் திருமால் உலகளந்த நிலையை விளக்கப் பெரும்பாலும் இந்த அவதாரத்தைப் பாடுகின்றனர். திருமால் வாமனனாய் அந்தணகுலத்தில் அவதரித்தமை,[84] மாவலியிடம் வந்துஇரந்தமை,[85] வாமனன் கையில் நீரேற்றமை,[86] முதலானவை ஆழ்வார்களின் பாடல்களில் குறிக்கப் பெறுகின்றன. கையில் நீரேற்றவுடன் வாமனன் பெருவடிவம் கொண்ட நிலை ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெறுகிறது. வாமனன் உலகளந்ததை 'அண்டமும் நிலனும் அடியொன்றினால் கொண்டவன்'[87] என்று ஆண்டாளும் 'உலகை ஈரடியால் நடந்த நம்பி',[88] என்று திருமங்கையாழ்வாரும் பாடுகின்றனர். கள்ளவடிவில் மாணியாய் வந்ததை ஆழ்வார்கள் எடுத்துரைக் கின்றனர். மாவலி வாமனனுக்குத் தானம் தருவதைத் தடுத்த சுக்கிரனின் கண்ணை வாமனன் துரும்பால் கிறிய செய்தியும்[89] முன்கொண்ட வடிவுடனே மூவடி அளப்பாயாக என்று கூறி வந்த நமுசியை வாமனன் வானில் சுழற்றிய செய்தியும்[90] இவ்வவதாரத்துடன் தொடர்புடைய கதைக்குறிப்புக்களாகும். வாமனனின் குறுவடிவம்,

> கொண்டகோலக் குறளுருவாய்ச்சென்று
> பண்டுமாவலி தன்பெருவேள்வியில்
> அண்டமும்நிலனும் அடியொன்றினால்
> கொண்டவன்[91]

என்று உரைக்கப் பெறுகிறது. வாமனாவதாரத்தில் வாமனன் ஈரடியால் உலகளந்ததையே ஆழ்வார்கள் பெரிதும் குறிக் கின்றனர். மூன்றாவதடி மாவலிதலையின் மேல் வைக்கப் பட்டதை ஆழ்வார்கள் சிறுபான்மையே பாடுகின்றனர்.

நரசிம்மாவதாரத்தில் இரணியனின் அழிவுக்குச் சிறப் பிடம் கொடுக்கப் பெற்றதனால் ஆழ்வார்கள் இரணியனின்

அழிவு பற்றி மிகுதியும் எடுத்துரைக்கின்றனர். வாமனா வதாரத்திலும் அசுரன் மாவலியின் அழிவு இடம் பெற்றிருப் பினும் ஆழ்வார்கள் மிகுதியும் சுட்டாததற்குக் காரணம் உளது. மாவலியை அழித்தலை விட இவ்வுலகை அளத்தல் திரு மாலுக்குச் சிறப்புச் சேர்ப்பதாகும். அதனால்தான் ஆழ்வார்களின் பாடல்களில் மாவலி அழிவு மிகுதியும் இடம் பெறவில்லை. திரிவிக்கிரம அவதாரம் இந்த அவதாரத்துடன் தொடர்புடையது. குறளனாய் இருந்த வாமனன் பெருவடிவம் கொண்ட நிலை திரிவிக்கிரம அவதாரம். ஆழ்வார்கள் திரிவிக்கிரம அவதாரத்தின் பெயரையும் நிகழ்ச்சியையும் பாடுகின்றனர். ஆயினும் இவ்விருவடிவங்களையும் அவர்கள் பிரித்துக் காணவில்லை என்றே கூறலாம். வாமனன் உலகளந்த போது அவன் திருவடி யிலிருந்து கங்கை பெருகிற்று[38] என நம்மாழ்வார் காட்டும் குறிப்பு மேற்கூறிய கருத்துக்கு அரண் செய்வதாகும்.

### அவதாரச்சிறப்பு

திருமாலின் அவதாரங்களில் முன் கூறியவற்றை ஒப்பிட்டு நோக்க வாமனாவதாரத்தில் வஞ்சக நோக்கம் இடம் பெறுவதை உணர முடிகிறது. இதையடுத்த நிலையில் வஞ்சக உணர்வை மிகக் கொண்டு திகழும் அவதாரம் கண்ணன் அவதாரமாகும். தேவர்கள் பொருட்டாகத் திருமால் தான் படைத்த இவ் வுலகையே பிறரிடம் வந்து இரந்து பெற்றான் என்று அவனுடைய எளிவந்தகுணம் இந்த அவதாரத்தின் வழி போற்றப்பெறுகிறது. திருமாலால் படைக்கப்பெற்ற இவ்வுலகம் அவனால்மட்டும் அளக்கும் தன்மை உடையது என்ற கருத்தும் வாமனாவதாரத்தின் மூலம் விளங்கும் செய்தியாகும். 'பரப்பை உடைத்தான பூமியை அளக்கிறவிடத்தில் வசிட்டர் என்றும் சண்டாளர் என்றும் சொல்லுகிற வேற்றுமை அற எல்லார் தலை களிலும் ஒக்க திருவடி வைத்தான்'[39] என உரையாசிரியர் வாமனன் உலகிற்கு அருளியதைக் கூறுகிறார்.

### தொடர்புடைய கதைகள்

வாமனாவதாரம் பற்றிய குறிப்புக்கள் பிற்கால இலக்கியங்கள் பலவற்றிலும் இடம் பெற்றுள்ளன. கம்பர் இந்த

அவதாரத்தின் வரலாற்றைத் தெளிவாக விளக்குகிறார்.[94] கூர்ம புராணத்திலும்,[95] பாகவதத்திலும்[96] இவ்வவதாரக் கதை இடம் பெற்றுள்ளது.

**பரசுராமாவதாரம்**

முற்கூறிய அவதாரங்கள் யாவும் கொண்ட வடிவால் பெயர் பெற்றவை. பரசுராமாவதாரம் தன் கையில் கொண்ட படை யால் பெயர் பெற்றது. இவ்வவதாரம் பற்றிய குறிப்புச் சங்க இலக்கியத்தில் முதன்முதலில் அமைகிறது.[97] மணிமேகலை யிலும் இவ்வவதாரம் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.[98] திருமால் பரசுராமனாக அவதரித்து உலகில் அரசர்களை அழித்ததைக் கூறுவது இவ்வவதாரத்தின் வரலாறு.

**ஆழ்வார்கள் பாடும் பாங்கு**

'மூவுருவின் இராமன் '[99] என இராமாவதாரத்துடன் ஒப்பிட்டுப் பாடும் சிறப்புடையது பரசுராமாவதாரம். ஆழ்வார்கள் இவ்வவதாரத்தை 'மழுவலம் கொண்ட இராம நம்பி '[100] தவமாமுனி,[101] முனிவன் ,[102] பாழியான்,[103] நீண்மழுவான்[104] எனப் பாடுகின்றனர்.

**கதைக்குறிப்பு**

பரசுராமன் பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஏதும் பழைய இலக்கியங்களில் அமையவில்லை. பிற்காலத்தில மைந்த வரலாறுகள் வடமொழியில் இருந்து வந்தவை. இவ்வவதாரக் கதைக் குறிப்பை உரையாசிரியர், 'பிராமணரை முன்னாகக் கொண்டு நடக்கக் கடவதான சத்திரிய மரியாதையானது குலைய அத்தாலே ஜமதக்னி பகவான் சீற, அது ஏதுவாக அதுக்கு நிமித்தபூதரான சத்திரியரை இருபத்தொரு படிகால் மழுவாலே துணித்துப் பொகட்ட ஸ்ரீபரசுராமாழ் வான் '[105] என்று குறிக்கிறார்.

**அவதாரச்செயல்**

பரசுராமனுடைய தோற்றம், வாழ்வு, இறுதி முதலானவை ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெறவில்லை.

மழுவினால் அவனிஅரசை மூவெழுகால் மணிமுடி
பொடிபடுத்துதிரக்
குழவுவார் புனலுள் குளித்து வெங்கோபம் தவிர்ந்தவன் [106]

எனப் பரசுராமன் அரசர்களை அழித்ததைத் திருமங்கை யாழ்வார் பாடுகின்றார். பரசுராமாவதாரத்தில் கார்த்தவீரி யார்ச்சுனன் என்ற அசுரன் கொல்லப்பெற்ற செய்தி சிறப்பு உடையதாகும். கம்பரும் இதனைக் குறிக்கிறார். [107] இதனைச் ' சினத்தோள் அவை ஆயிரமும் மழுவால் அழித்திட்டவன் '[108] என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார்.

## அவதாரச்சிறப்பு

பரசுராமாவதாரத்தின் பிற்காலக் கதை வளர்ச்சியை நோக்க அவ்வவதாரம் சினத்தின் வடிவாக விளங்குகிறது எனலாம். திருமாலின் அவதாரங்களில் இருவேறு நிலையுடையவர்கள் ஒரே இடத்தில் சந்தித்தமை இவ்வவதாரக் கதையில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. இராமனும் பரசுராமனும் சந்தித்த நிலையை இராமாயணம் கூறுகின்றது. பரசுராமன் முனிவனாய் இருந்த நிலை ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ளது.

பிற்கால வைணவ உரையாசிரியர்கள் பரசுராமன் கையில் கொண்டிருந்த மழு அழகுக்காகக் கொள்ளப்பட்டதென்பர். மழுவால் பெயர் பெற்ற பரசுராமனை ஆழ்வார்கள் அப்பெயரால் குறிக்கவில்லை.

## தொடர்புடைய கதைகள்

பரசுராமன் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியம் முதலானவற்றில் இடம் பெற்றிருப்பினும் அவை பரசுராமனைத் திருமாலின் அவதாரம் என்று குறிக்கவில்லை. ஆழ்வார்களே அவ்வாறு கூறுகின்றனர். பிற்காலத்தில் அவ்வவதாரம் பற்றிய கதை மிக வளர்ந்துவிட்டது. பாகவதம் பரசுராமன் வரலாற்றை மிக விரிவாக எடுத்துரைக்கிறது.

## பலராமாவதாரம்

திருமாலின் அவதாரங்களில் எட்டாவதாக அமைவது பலராமாவதாரம். சங்க இலக்கியத்திலும்[109] சிலப்பதிகாரத்திலும்[110] பலராமனுக்குரிய திருக்கோயில் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. வழிபாட்டளவில் ஏனைய அவதாரங்களுக்கு இல்லாத சிறப்புப் பலராமாவதாரத்திற்குரியதாகும். சங்க இலக்கியங்கள் அவனை வெள்ளை நிறத்தவன் [111] என்றும் கலப்பையை (உழுபடையை) ஏந்தியவன் [112] என்றும் குழையை அணிந்தவன் [113] என்றும் கூறுகின்றன. மேலும் பலராமனைக் கண்ணனுடன் இணைத்துக் கூறும் மரபும் காணப்பெறுகிறது.[114]

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

ஆழ்வார்கள் மற்றை அவதாரங்களைப் போன்று பலராமாவதாரத்தைப் பாடவில்லை. பலராமனை ' மூவுருவினில் இராமனாய் '[115] என்று பெரியாழ்வார் குறிக்கின்றார். ஆழ்வார்கள் பலதேவன் என்றும் குறிக்கின்றனர். வெள்ளை நிறத்தினன் என்று விளிக்கும் மரபும் அமைகிறது.[116]

## கதைக்குறிப்பு

பலராமன் பற்றிய தனிக்கதை ஏதும் வழங்கப் பெறவில்லை. கண்ணனுடன் இணைந்தே இந்த அவதாரக் கதை வழங்கி வருகிறது. பிற்காலத்தில் தமிழில் அமைந்த பாகவதம் முதலான நூல்களில் கண்ணனின் அனைத்துச் செயல்களிலும் பலராமன் பங்கு கொண்டதாக வரலாறு இல்லை. ஆழ்வார்களின் பாடல்களிலிருந்து பலதேவன் பற்றிய இரு செய்திகள் அறிய வருகின்றன. அவை , 1. பலராமன் பல அரக்கர்களை வென்றது. 2. பிலம்பன் என்னும் அசுரனை அழித்தது என்பனவாகும்.

## அவதாரச்செயல்

திருமால் அவதாரங்களில் பலராமன் ஆவேச அவதாரம் ஆகும். ஆழ்வார்கள்,

'பிலம்பன் தன்னைப் பண்ணழியப் பலதேவன் வென்ற'[117]

வெற்றித் தொழிலார் வேல்வேந்தர் விண்பால் செல்ல வெஞ்சமத்து
செற்ற கொற்றத் தொழிலானை [118]

என்று போற்றுகின்றனர். இவை தவிர பலராமாவதாரம் பற்றிய ஏனைய செயல் குறிப்புகள் ஏதும் ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெறவில்லை. கண்ணனின் உடன்பிறப்பாகப் படைக்கப் பெற்ற காரணத்தால் இவ்வவதாரம் சிறப்பிடம் பெறவில்லை என்று கூறலாம். கண்ணன் தளர்நடை பயிலும்போது பல ராமனுடன் விளையாடிய தன்மையைப் பெரியாழ்வார் கூறுகின்றார்.[119] இச்செய்தி இலக்கியச்சுவை கருதிக் கற்பனை யாய்ப் படைக்கப்பெற்றது. ஆண்டாள் பாடலிலும் இத்தகைய குறிப்பு அமைகிறது. [120] பலதேவன் ஒற்றைக் குழையையும் நாஞ்சிற் படையையும் உடையவன் என்று ஆழ்வார்கள் குறிக்கின்றனர். [121]

## அவதாரச்சிறப்பு

திருமால் அவதாரம் என்று கூறப்பெறும் பலதேவனை ஆதிசேடனின் அம்சம் என்று கூறும் மரபும் உண்டு. ஆதிசேடனின் அம்சமான இலக்குவன் தொண்டிற்கு உவந்து அவனைத் தான் வணங்கும் பொருட்டாகத் திருமால் கண்ணன் அவதாரத்தில் தன்னுடைய முன்னோனாகப் பிறக்கச் செய்தான். இவ்வரலாற்றை அண்ணங்கராசாரியரும் குறிப்பிடுகிறார்.[122] வியூகமூர்த்தி நால்வருள் பலதேவன் சங்கர்ஷணனாகக் கூறப் பெறுகிறான்.

## தொடர்புடைய கதைகள்

திருமால் அவதாரங்களை விரிவாக எடுத்துரைக்கும் பாகவதமும் பலதேவன் அவதாரத்தைப் பெரிதாகக் கூறவில்லை. ஆயினும் பாகவதம் மற்றை இலக்கியங்களை விட மிகுதியான செய்திகளைக் கூறுகிறது. பலராமன் தேவகியின் வயிற்றில் ஆறு திங்கள் இருந்ததைப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் குறிப் பிடுகின்றார். [123]

சங்க காலத்தில் பலதேவன் வழிபாட்டு முறையில் சிறப்பிடம் பெற்றிருந்தாலும் இடைக்காலத்திலும் பிற்காலத் திலும் பலதேவ வழிபாடு அருகிவிட்டது. வைணவர்கள் மட்டும் திருமாலின் அவதாரம் என்ற வகையில் பலதேவனைப் போற்றுகின்றனர்.

## கல்கியவதாரம்

திருமாலின் பத்து அவதாரங்களில் கல்கியவதாரம் இறுதியில் அமைவதாகும். இனி எடுக்கவிருக்கும் அவதாரம் என இந்த அவதாரத்தை வைணவர்கள் குறிக்கின்றனர். சங்க இலக்கியங்களிலும் சங்கம் மருவிய கால இலக்கியங்களிலும் கல்கியவதாரம் பற்றிய குறிப்பேதும் அமையவில்லை. ஆழ்வார்களே இந்த அவதாரத்தை முதலில் குறிக்கின்றனர்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

கல்கி என்ற பெயரிலேயே ஆழ்வார்கள் இந்த அவதாரத்தைச் குறிக்கின்றனர். இந்த அவதாரம் கலியுகத்தின் இறுதியில் தோன்ற இருப்பதாகக் கூறப் பெறுகிறது. ஆயினும் ஆழ்வார்கள் அது பற்றி குறிப்பிடவில்லை.

## கதைக்குறிப்பு

'ஜகத்தை அடைய நோக்குகைக்காகப் பெரிய வேகத்தை உடைய குதிரையின் மேலேறி அக்குதிரை காலிலே பிரதி பட்சத்தைத் துகைத்துப் போடும் வடிவினை உடைய கடிதான செலவை உடைத்தாய் மேலான பரியை' [124] எனக் கல்கி அவதாரத்தை வைணவ உரையாசிரியர்கள் விவரிக்கின்றனர்.

கல்கி அவதாரம் பற்றிய வருணனைகளோ அதன் செயல்களோ ஆழ்வார்களால் கூறப்பெறவில்லை. திருமங்கை யாழ்வார் 'கடும்பரிமேல் கற்கியை' [125] என்று கூறுவது கொண்டு திருமால் குதிரை மேல்வரும் அவதாரம் என மட்டுமே பொருள் கொள்ள முடிகிறது. 'கலி கல்க தூஷதரான துஷ்டரை நிரசிக்கைக் காகக் கல்கியவதாரமாய்' [126] என அவ்வதாரத்தின் நோக்கத்தை உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

## தொடர்புடைய கதைகள்

கல்கியவதாரம் பற்றிய முழுமையான கதையைப் பாகவதம் மட்டுமே எடுத்துரைக்கின்றது. அவ்வவதாரம் கலியுகத்தில் நிகழவிருப்பதாகப் பாகவதம் கூறுகிறது. அந்தணர் குலத்தில் சம்பளக் கிராமத்தில் திருமாலின் அடியவருக்குக் கல்கி அவதரிப்பார் என்ற செய்தி பாகவதம் வழி அறியலாகிறது. [127]

தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள கல்கி அவதாரம் பற்றிய செய்திகளை ஆராயும்போது அவை வடமொழியின் மொழி பெயர்ப்பாகவே உள்ளன. தமிழகத்தில் இந்த அவதாரம் சிறப்பாகப் போற்றப் பெறவில்லை. வைணவர்கள் மட்டுமே திருமாலின் அவதாரம் என்ற வகையில் இதைப் போற்றுகின்றனர்.

திருமாலின் பத்தவதாரங்களன்றி ஏனைய சில அவதாரங்களையும் ஆழ்வார்கள் பாடுகின்றனர். மிகுதியாக வழக்கில் இருந்த காரணத்தால் அவை ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெற்றிருக்கக் கூடும் . பத்து அவதாரங் களைப் போலவே இவையும் திருமாலுக்குப் பெருமை சேர்ப்பனவாகவே அமைகின்றன. ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ள ஏனைய அவதாரங்கள் 1. அன்ன அவதாரம் 2. மோகினி அவதாரம் 3. அயக்கிரீவ அவதாரம் 4. நரநாராயண அவதாரம் என்பன.

## அன்ன அவதாரம்

அன்ன அவதாரம் வடமொழியில் ' ஹம்ஸாவதாரம் ' என்று கூறப்பெறுகிறது. இந்த அவதாரம் பற்றிய முதற்குறிப்பு பரிபாடலில் அமைகின்றது. ' மேகங்கள் பொழிவதால் வீழ்கின்ற நீரை அன்னச்சேவலாகி நின் சிறகினால் வறளச் செய்தோய் ' [128] என்று திருமாலின் சிறப்புக் கூறப்பெறும். ஆயினும் திருமால் அன்னமாய் வந்து அருமறையைத் தந்ததை ஆழ்வார்கள் பாடுகின்றனர்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

ஆழ்வார்கள் அன்ன அவதாரத்தையும் ஏனைய அவதாரங்களைப் போலவே சிறப்பித்துப் பாடுகின்றனர்.

திருமங்கையாழ்வார் திருமாலின் அவதாரங்களைப் பாடும் போது இராமாவதாரத்துக்குப்பின் இதனை வைத்துப் பாடியுள்ளமை இதன் சிறப்பை விளக்கும்.[129] ஆழ்வார்கள் இந்த அவதாரத்தை அன்னம் [130] என்றும் புள் [131] என்றும் பாடுகின்றனர்.

## கதைக்குறிப்பு

ஆழ்வார்களின் பாடல்களில் அமையும் கருத்துக்களைக் கொண்டு, இவ்வவதாரக் கதையை ஒருவாறு ஊகிக்க முடிகிறது. 'இப்பூவுலகும் மலைகளும் கடலும் வானமும் தானவர் உலகமும் ஒளி சுருங்கிப் பேரிருள் மிக ஆதிகாலத்தில் நான்குமறைகளும் மறைய பின்னரும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அம்மறைகளை நல்கிப் பேரிருள் கெடும்படித் திருமால் அன்னமாய்த் தோன்றி அருமறையைத் தந்தான்.' [132]

## அவதாரச்செயல்

அன்னமாய் வந்த திருமாலின் செயல் பிற்காலக்கதை களில் மாறுபட்டுள்ளதைக் காணமுடிகிறது. அவை திருமால் வேதத்தை மீட்டுக் கொடுத்தான் என்று கூறுகின்றன. ஆழ்வார்கள் அன்னவடிவாய் மறையைத் தந்ததை, அருமறை தந்தான் [133] ஓதினாய், [134] பயந்தான், [135] அறநூல் உரைத்தவது [136] என்று குறிக் கின்றனர். ' நான்முகன் வேதங்களை மது கைடபர்கள் என்ற அரக்கர்களிடம் பறிகொடுக்க, திருமால் அயக்கிரீவ அவதார மெடுத்து அவர்களைக் கொன்று மீனாய் இருந்து வேதங் களைக் கவர்ந்து அன்னமாய் உருவெடுத்து வேதங்களை உபதேசித்தவன், [137] என உரைப்பது கொண்டு வேதங்களை நிலைநிறுத்த எடுத்தது இவ்வவதாரம் என்பது விளங்கும்.

அன்ன அவதாரத்தில் வேதத்தை மீட்டுக் கொடுத்த செய்தியே சிறப்பிடம் பெறுகிறது. வேதம் மறைந்ததால் இவ்வுலகை இருள் சூழ்ந்தமையும், [138] திருமால் அன்னமாய் அவதரித்து அருமறை தந்தமையும் [139] ஆழ்வார்களின் பாடல்களில் சிறப்பாக எடுத்துரைக்கப் பெறுகின்றன.

## அவதாரச்சிறப்பு

தான் முன் ஓதிய வேதத்தைத் தவறவிட்ட போதிலும் சினம் கொள்ளாது தன்னைத் தாழவிட்டுக் கொண்டு

பறவையினமான அன்னமாய் வந்த திருமாலின் பெருமை அன்ன அவதாரம் வழி வெளிப்படும். வேதங்கள் திருமாலை அடைவதற்குரிய வழியைக் காட்டுவன. அவற்றை அவனே தந்து கடைப்பிடிக்கச் செய்தமை சிறப்பாகப் போற்றப் பெறுகிறது. அன்ன அவதாரம் திருமாலின் வித்தியாவதாரங் களில் ஒன்று என்று குறிப்பிடுவர்.[140] வைணவ உரையாசிரியர்கள் ' வேதப்ரதானமான ஹம்சம் ' என்று குறிக்கின்றனர்.[141] அருமறை பயந்த நிலையை அவர்கள் பெரிதும் போற்றுகின்றனர்.

## மோகினி அவதாரம்

திருமால் அவதாரங்களில் மோகினி அவதாரம் தனிச்சிறப்புடையதாக அமைகிறது. பரிபாடலில் இவ்வவதாரம் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. அசுரர்களை வஞ்சித்துத் தேவர்களுக்கு மட்டுமே அமுதம் தந்ததைப் பரிபாடல் கூறுகிறது.[142] இந்த அவதாரம் திருமால் கண்டோர் விரும்பும் அழகிய பெண்வடிவம் கொண்டு வந்ததை விளக்குகிறது.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

ஆழ்வார்கள் ஏனைய அவதாரங்களைப் போல மோகினி அவதாரத்தையும் சிறப்பித்துப் பாடுகின்றனர். மோகினி அவதார நிகழ்ச்சியைத் திருமங்கையாழ்வார் ' பெண்ணுருவாகி அஞ்சுவை அமுதம் அன்று அளித்தான்'[143] என்று கூறுகின்றார். இவ்வவதாரம் பற்றிய நம்மாழ்வார் குறிப்புக்கள் மோகினி அவதாரம் என வெளிப் படையாகக் கூறவில்லையாயினும் அது பற்றிய குறிப்புப் பொருளைத் தருவனவாக அமைந்துள்ளன.

## கதைக்குறிப்பு

அமுதம் எடுக்கத் திருப்பாற்கடலைக் கடைந்த போது அவுணர்களும் தேவர்களும் அதில் ஈடுபட்டனர். அமுதம் வெளிப்பட்டபோது அவுணர்களுக்குப் பகைவர்களான வித்தியாதரர், சாரணர், சித்தர் முதலான தேவர்களுக்கு ஈடு பாடுள்ளவராய்த் துதிக்கும்படி அமையும் திருமால் பெண் வடிவு கொண்டு அமுதத்தைத் தேவர்களுக்கு மட்டுமே அளித்தான்.[144]

## அவதாரச்செயல்

கடல்கடைந்த நிகழ்ச்சி தொடர்பான திருமாலின் செயல்கள் மூன்று விதமாக ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. 1. கூர்மாவதாரம். 2. மோகினி அவதாரம் 3. திருமால் கடல் கடைந்தது என்பன அவை. இவை யாவும் திருமாலின் செயல்களேயாயினும் இவற்றின் பயனாகிய அமுதத்தைத் தேவர்களுக்களித்தமை மோகினி அவதாரத்திலேயே நிகழ்ந்தது. திருமால் பெண்ணுருவாகி அவுணர்களை வஞ்சித்துத் தேவர்களுக்கு மட்டுமே அமுதமளித்து அருளினான்.

## அவதாரச்சிறப்பு

திருமால் அவதாரங்களில் பெண்வடிவாய் அமைந்த அவதாரம் இதுவொன்றே. ‘ திருமாலாகிய நீ வேண்டா, எங்களுக்குச் சாவாமைக்கு உரிய பொருளை உண்டாக்கித் தரவேண்டும் என்னும் தேவர்களுக்கு அவர்கள் உகந்த பொருளைத் தன்கையாலே கொடுத்தவன்’ [165] என்னும் சிறப்பு இந்த அவதாரத்தின் வழி விளக்கப் பெறுகிறது. இதனால் விழைவார்க்கு அருளும் திருமாலின் அருட்குணம் விளங்குகிறது. புருஷோத்தமனான தன்படிக்குச் சேராத ஸ்திரி வேஷத்தை ஏறிட்டுக் கொண்டு அவன் [166] என்று திருமாலின் பெண்ணுரு அவதாரத்தை வைணவர்கள் குறிப்பர்.

## தொடர்புடைய கதைகள்

சங்க காலம் தொட்டு வழங்கிவரும் இந்த அவதாரத்தைப் பாகவதம் மிக விரிவாகக் கூறுகிறது. திருமாலைப் பெண்மைத் தன்மை உடையவனாகக் கூறுவது சைவமரபு . இவ்வகையில் மோகினி அவதாரம் சைவத்திலும் போற்றப்பெறுகிறது. பெண்ணுருவெடுத்த திருமாலை ஏமாற்றி அமுதம் பருகிய இராகுவும் கேதுவுமாகிய கோள்கள் சாபத்திற்குள்ளான நிகழ்ச்சி புராணங்களில் இடம் பெற்றுள்ளது. சிவனைப் பத்மாசுரன் என்னும் அசுரனிடம் இருந்து காப்பாற்ற திருமால் பெண்ணுரு வெடுத்த கதையும் ஈண்டுக் கருதத்தக்கது. தற்காலத்தில் வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றிருக்கும் ஐயப்பன்

அரிஅரபுத்திரன் என்று உரைக்கப்பெறுகிறான். பெண்ணுருக் கொண்ட திருமாலிடம் சிவன் கொண்ட காதலால் பிறந்தவன் ஐயப்பன் என்றும் ஒரு புராணக்குறிப்பு வழங்குகிறது. சைவ வைணவப் பிணக்கைப் போக்க இவ்வகையான கதை எழுந்திருக்கலாம்.

## அயக்கிரீவ அவதாரம்

திருமாலின் விலங்குருவ அவதாரங்களில் இதுவும் ஒன்று. குதிரை வடிவுடைய இவ்வவதாரத்தைப் பற்றிய குறிப்பேதும் பழைய இலக்கியங்களில் இடம் பெறவில்லை. ஆழ்வார்களே இதை முதலில் குறிக்கின்றனர். இந்த அவதாரம் வடமொழிப் புராண இதிகாசங்களிலிருந்து தமிழில் இடம் பெற்றது என்பது வெளிப்படை. அயக்கிரீவன் என்னும் பெயரில் அசுரன் ஒருவன் இருந்தமை மச்சாவதாரக் கதை வழி அறியப் பெறுகிறது.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

அயக்ரீவ அவதாரம் ஆழ்வார்களால் பரி [147]எனவும் மா[148] எனவும் குறிக்கப்பெறுகிறது. வைணவ உரையா சிரியர்கள் அரி என்னும் சொல் இந்த அவதாரத்தைக் குறிக்கிறது என்று கூறுகின்றனர்.

## கதைக்குறிப்பு

விப்பிரலம்பாதி தோஷ சம்பாவனையில்லாத நாலு வேதத்தைக் கொடுத்து முன்போல இவற்றை உண்டாக்கு என்று விட அவனும் வேதத்தை அசுரர் கையிலே பறிகொடுத்துக் கண்ணும் கண்ணீருமாய் நின்று கூப்பிட அவன் பக்கலிலே கிருபைபண்ணி அவன்தன் அதிகாரத்தில் குலையாதே நின்றாய்ந்து அபேட்சித்தது. ஓராசார்ய அனுவர்த்தனம் பண்ணிக் கேட்கவென்றால் இவனிறாய்க்கும் என்று தன்னைத் தாழவிட்டு அயக்கிரீவனாய் நின்றாய்ந்து உபதேசித்தது' [149] என்று உரையாசிரியர் இவ்வவதாரக் கதையைக் கூறுகிறார்.

## அவதாரச்செயல்

அவதார நிகழ்ச்சிகள் பற்றிய வேறுபாடுகள் ஆழ்வார்கள் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. திருமால் அயக்கிரீவ வடிவெடுத்து மதுகைடபர்களைக் கொன்றான் என்று ஒரு புராணக்கதை கூறுகிறது.[150] ஆயினும் ஆழ்வார்கள் காட்டும் குறிப்புக்கள் இதிலிருந்து மாறுபடுகின்றன. ' நால் வேதப் பொருளைப் பரிமுகமாய் அருளிய எம்பிரான் '[151] வேத நூலொன்றைப் பயந்தவனே [152] என்னும் தொடர்கள் திருமால் வேதத்தை ஓதினான் என்றே குறிக்கின்றன.

நான்முகனுடைய வேதங்கள் காணாமற் போனதால் உலகேழிலும் இருள் மண்டியநிலையும் [153] முனிவர்களும் தானவர்களும் திகைத்த நிலையும் [154]ஆழ்வார்களின் பாடல் களில் குறிக்கப்பெறுகின்றன. நான்மறைகளை இழந்த நான்முகனுக்குத் திருமால் பரியாய் வந்து அருளிச் சிறப்பு மிக்க வேதநூலொன்றைப் பயந்தான் [155] என்னும் கூற்று இவ்வ வதாரச் செயலை விளக்குவதாகும்.

## அவதாரச்சிறப்பு

உலகப் படைப்புத்தொழிலாற்ற கொடுக்கப் பெற்ற வேதத்தை நான்முகன் இழந்தபோது தான் அவனைக் கடியாது அவன் வேண்ட உலக உயிர்களில் ஒன்றாய்த் தோன்றித் திருமால் வேதங்களை உபதேசித்தது இவ்வவதாரத்துக்குரிய சிறப்பாகும், திருமாலின் வித்தியாவதாரங்களில் இதுவும் ஒன்று. [156] காத்தல் தொழிலில் சாத்திரம் முதலானவற்றைக் கொடுத்தலும் அடங்கும்.

## தொடர்புடைய கதைகள்

நான்முகன் வேதங்களை மது கைடபரிடத்தில் பறி கொடுக்கத் திருமால் அயக்ரீவ அவதாரமெடுத்து அவர்களைக் கொன்று மீனாய் இருந்து வேதங்களைக் கவர்ந்து அன்னமாய் இருந்து அவற்றை உபதேசித்தவன் [157] என்னும் கூற்று மூன்று அவதாரங்களை இணைக்கின்றது. மதுகைடபர்கள் பற்றிய ஆழ்வார்களின் பாடல்களில் இக்குறிப்பு இடம் பெறவில்லை. திருமால் அவர்களை அழித்ததையும் [158] ஆதிசேடனின் வெப்ப

மூச்சால் அவ்வரக்கர்கள் வயிறு உருகி மாண்டதையும் பிரபந்தப் பாடல்கள் குறிக்கின்றன.[159]

அவற்றை நோக்க, பல புராணங்களிலும் பல வடிவங் களுடன் திகழ்ந்த கதைகள் இணைக்கப் பெற்றுப் பிற்காலத்தில் ஓர் உருப்பெற்றன என்று கூறலாம்.

## நரநாராயண அவதாரம்

திருமால் அவதாரங்களில் மிகச் சிறப்புப் பெற்றதாய் அமைவது நரநாராயண அவதாரம். பழைய இலக்கியங்களில் இந்த அவதாரம் பற்றிய குறிப்பு இடம் பெறவில்லை. நரநாராயண அவதாரம் ஆழ்வார் பாடல்களிலேயே முதலில் எடுத்துரைக்கப் பெறுகிறது. திருமால் நரனாயும் நாராயணனாயும் இருவேறு வடிவெடுத்ததைக் கூறுவது இந்த அவதாரம்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

ஆழ்வார்கள் இந்த அவதாரத்தை நரநாரணன் என்றே குறிக்கின்றனர். உலகத்து அறநூலை நரநாரணனாய்த் திருமால் விரித்தமையைத் திருமங்கையாழ்வார் கூறுகின்றார்.[160]

## கதைக்குறிப்பு

உலகிற்கு அறநூலின் சிறப்புணர்த்தும் பொருட்டுத் திருமால் நரநாரண வடிவம் கொண்டு அறத்தை உரைத்தான் என்பது வரலாறு. இதைத் திருமங்கையாழ்வார்,

எங்கானும் ஈதொப்பதோர் மாயமுண்டே
நரநாரணனாய் உலகத் தறநூல்
சிங்காமை விரித்தவன் எம்பெருமான்[161]

எனக் குறிக்கக் காணலாம்.

நரநாரண அவதாரம் பற்றிய குறிப்புப் பிற்காலப் புராணங்களிலேயே காணப்பெறுகிறது. இரு வடிவங்களைக் கொண்டு பதரிகாசிரமத்தில் திருமால் திருமந்திரப்பொருளை வெளியிட்டருளினான். ஆசிரியன், மாணவன் இருக்க வேண்டிய நிலையை விளக்க இந்த அவதாரம் எடுக்கப் பெற்றதாகக்

கூறுவர்.[162] பாரதப் போரில் கண்ணனாகிய நாராயணன் நரனாகிய அர்ச்சுனனுக்குப் பகவத்கீதை உரைத்ததை இவ்வவதாரம் குறிப்பதாகவும் கொள்ளலாம். சைவத்திற்குரிய கூர்மபுராணம் பதரிகாசிரமத்தில் நரநாரணர்க்குச் சாங்கிய யோகத்தைச் சிவன் உரைத்தான் என்று கூறுகிறது.[163]

வைணவ தத்துவப்பொருளைத் திருமால் வெளியிட்டருளிய நிகழ்ச்சி இந்த அவதாரத்தில் இடம் பெறுவதால் வைணவர்கள் இதைச் சிறப்பாகப் போற்றுகின்றனர்.

அவதாரங்கள் என்னும் நோக்கில் ஆழ்வார்கள் இவ்வகையான நிலைகளில் திருமாலைப் பாடுகின்றனர். பிற்கால வைணவத் தத்துவ விளக்கங்கள் பத்தவதாரங்களுக்குச் சிறப்பிடம் தந்தாலும் ஆழ்வார்களின் நோக்கில் அனைத்து அவதாரங்களுமே சிறப்புடையனவாகத் திகழ்ந்தன என்பது இனிது விளங்குகிறது.

## குறிப்புக்கள்

1. பெரியாழ்வார் திருமொழி. 4. 9. 9.
2. பெரியதிருமொழி. 8. 8. 10.
3. Wilkins, W.J., Hindu Mythology - Vedic and Puranic. P. 113.
4. பெரிய திருமொழி. 4. 5. 6.
5. நான்முகன் திருவந்தாதி, திவ்வியப்பிரபந்தசார வியாக்கியானம். ப. 112.
6. பெரியதிருமொழி. 11. 4. 1.
7. மேற்படி. 8. 8. 1, 9. 1. 3.
8. மேற்படி. 9. 2. 10.
9. திருவாய் மொழி. 1. 8. 8. ஈடு. ப. 224.
10. நான்முகன் திருவந்தாதி. பா. 22.
11. பெரியாழ்வார் திருமொழி, மணவாளமாமுனிகள் வியாக்கியானம். ப. 113.
12. பாகவதம். 8. 8. 12.
13. கந்தபுராணம். 1. 25. 34.
14. தொல்காப்பியம், செய்யுளியல். ப. 78.
15. திருச்சந்தவிருத்தம். பா. 14.
16. சிலப்பதிகாரம். காதை. 17. பாட்டு. 2.

17. பெரியதிருமொழி, பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 561.
18. திருச்சந்தவிருத்தம். பா. 88.
19. பெரியதிருமொழி. 11. 4. 2.
20. மேற்படி. 5. 3. 6.
21. திருவாய்மொழி. (2. 8. 5. ). ஈடு. ப. 224.
22. திருச்சந்தவிருத்தம், பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 403.
23. கம்பராமாயணம். பா. 9452.
24. விஷ்ணுபுராணம். ப. 42.
25. கந்தபுராணம். 4. 7. 17.
26. திருவிருத்தம். பா. 99.
27. பரிபாடல். 2. 2-19.
28. பெரியாழ்வார் திருமொழி. 4. 9. 9.
29. நாச்சியார் திருமொழி. 11. 8.
30. பெரியதிருமொழி. 6. 10. 1.
31. முதல் திருவந்தாதி. பா. 84.
32. பெரியதிருமொழி. 7. 7. 4.
33. திருவாய்மொழி. 4. 2. 6.
34. மேற்படி. 7. 4. 3.
35. பெருமாள் திருமொழி. 2. 3.
36. பெரியதிருமொழி. 3. 2. 3.
37. நான்முகன் திருவந்தாதி. 70.
38. பெரியதிருவந்தாதி. பா. 7.
39. பெரியதிருமொழி 11. 4. 3.
40. மேற்படி 4. 4. 8.
41. முதல் திருவந்தாதி. பா. 12.
42. பெரியாழ்வார் திருமொழி. 4. 9. 9.
43. திருவாய்மொழி. ( 1. 7. 6. ). ஈடு. ப. 23.
44. பாகவதம். 3. 19. 37.
45. கம்பராமாயணம். பா. 6239.
46. கந்தபுராணம். 4. 7. 17.
47. மேற்படி.
48. பரிபாடல். 4. அடி. 10-14.
49. பெரியாழ்வார் திருமொழி. 3. 6. 5.
50. நாச்சியார் திருமொழி. 6. 2.
51. பெரியதிருமொழி. 10. 4.
52. பெரியாழ்வார் திருமொழி. 5. 1. 9.
53. மேற்படி. 5. 4. 2.
54. நாச்சியார் திருமொழி. 6. 9.
55. பெரியாழ்வார் திருமொழி. 4. 8. 8.

56. இரண்டாம் திருவந்தாதி. பா. 84.
57. பெரியதிருமொழி. 3. 9.
58. மேற்படி. 7. 7. 5.
59. பெரிய திருமடல். கண்ணி 99.
60. மேற்படி. பெரிய வாச்சான் பிள்ளை, வியாக்கியானம் ப-ள். 57-58.
61. பெரியாழ்வார் திருமொழி. 1. 6. 9.
62. பெரியதிருமொழி. 1. 6. 9.
63. மேற்படி. 2. 9. 8.
64. திருப்பல்லாண்டு. 6.
65. திருச்சந்தவிருத்தம். 25.
66. பெரியாழ்வார் திருமொழி. 1. 5. 2, பெரியதிருமொழி 2. 3. 8, 3. 10. 4 திருவாய்மொழி. 2. 8. 9.
67. பெரியதிருமொழி. 1.7.
68. பெரியாழ்வார் திருமொழி, திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம். ப. 29.
69. கம்பராமாயணம். பா. 6189-6364.
70. சீவகசிந்தாமணி. பா. 1813.
71. சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியர் உரை. ப. 483.
72. அபிதான சிந்தாமணி.ப. 381
73. மேற்படி. ப. 933.
74. பரிபாடல். 3. அடி. 20; பெரும்பாணாற்றுப்படை அடி. 29; முல்லைப்பாட்டு. அடி. 3.
75. சிலப்பதிகாரம் . காதை. 17. அடி. 34, 35, மணிமேகலை. காதை. 3. அடி. 124; காதை. 19. அடி. 51-54
76. சிறிய திருமடல். கண்ணி 45.
77. பெரியதிருமொழி. 2. 8. 2.
78. பெரியாழ்வார் திருமொழி. 4. 3. 9.
79. நாச்சியார் திருமொழி. 12. 2.
80. பெரியாழ்வார் திருமொழி. 1. 3. 1.
81. பெரியதிருமொழி. 1. 8. 5.
82. மேற்படி. 11. 4. 5.
83. பெரிய திருவந்தாதி, பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப 61.
84. பெரியதிருமொழி. 5. 6. 7.
85. பெரியாழ்வார் திருமொழி. 2. 10. 7.
86. நாச்சியார் திருமொழி. 11. 5.
87. மேற்படி. 4. 9.
88. பெரியதிருமொழி. 6. 10. 1.
89. பெரியாழ்வார் திருமொழி. 1. 8. 8.
90. மேற்படி. 1. 8. 8.

91. நாச்சியார் திருமொழி. 4. 9.
92. திருவாய்மொழி. 9. 2. 2.
93. திருவாய்மொழி (முதல் பத்து ). ஈடு .ப – ள். 173-174.
94. கம்பராமாயணம். பா. 410-430.
95. கூர்மபுராணம். ப. 97.
96. பாகவதம். 8. 15. 1, 8. 16. 62.
97. அகநானூறு. பா. 220 அடி. 5-6
98. மணிமேகலை. 22. 25.
99. பெரியாழ்வார் திருமொழி. 4. 9. 9.
100. மேற்படி. 5. 4. 6.
101. பெரியதிருமொழி. 3. 2. 5.
102. மேற்படி. 8. 5. 8.
103. மேற்படி. 8. 8. 8.
104. திருவாய்மொழி. 6. 2. 10.
105. பெரியதிருமொழி. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 149.
106. பெரியதிருமொழி. 9. 1. 6.
107. கம்பராமாயணம். பா. 5203.
108. பெரியதிருமொழி. 10. 6. 6.
109. பரிபாடல். 4. அடி. 38, புறநானூறு. பா. 58.
110. சிலப்பதிகாரம் காதை. 9. அடி. 10.
111. புறநானூறு. பா. 58. அடி. 14.
112. மேற்படி. பா. 55. அடி. 3-6.
113. கலித்தொகை. பா. 26. அடி. 1.
114. புறநானூறு. பா. 58. வரி. 14.
115. பெரியாழ்வார் திருமொழி. 4. 9. 9.
116. திருவாய்மொழி. 2. 7. 7.
117. நாச்சியார் திருமொழி. 12. 7.
118. பெரியதிருமொழி. 8. 8. 8.
119. பெரியாழ்வார் திருமொழி. 1. 7. 5.
120. திருப்பாவை. பா. 17.
121. பெரியதிருமொழி. 8. 8. 8.
122. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம். ப. 27.
123. அஷ்டப்பிரபந்தம், திருவரங்கத்துமாலை. 47.
124. பெரியதிருமொழி. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 31.
125. பெரியதிருமொழி. 2. 8. 3.
126. பெரியாழ்வார் திருமொழி. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 1172.
127. பாகவதம். 12. 2. 2.
128. பரிபாடல். 3. அடி. 25-26

129. பெரியதிருமொழி. 11. 4. 7.
130. திருநெடுந்தாண்டகம். அடி. 30.
131. திருச்சந்தவிருத்தம். 19.
132. பெரியதிருமொழி. 4. 5. 6.
133. பெரியாழ்வார் திருமொழி. 1. 8. 10.
134. திருச்சந்தவிருத்தம். 19.
135. பெரியதிருமொழி. 5. 7. 3.
136. மேற்படி. 11. 4. 8.
137. பெரிய திருவந்தாதி, பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 200.
138. பெரியாழ்வார் திருமொழி. 1. 8. 10.
139. பெரியதிருமொழி. 5. 3. 8.
140. பெரியதிருமடல். பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 200.
141. திருச்சந்தவிருத்தம், பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப 57.
142. பரிபாடல். 3. வரி. 64-68.
143. பெரியதிருமொழி. 2. 3. 3.
144. மேற்படி. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 274.
145. திருவாய்மொழி. (முதல் பத்து ). ஈடு. ப. 272.
146. பெரியதிருமொழி, பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 274.
147. பெரியதிருமொழி. 7. 8. 2.
148. திருவாய்மொழி. 2. 8. 5.
149. பெரியதிருமொழி, பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 858.
150. மூன்றாம் திருவந்தாதி. 66.
151. பெரியதிருமொழி. 7. 8. 2.
152. மேற்படி. 5. 3. 2.
153. மேற்படி. 7. 8. 2.
154. மேற்படி.
155. மேற்படி. 5. 3. 2.
156. பெரியதிருமொழி, பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 200.
157. மேற்படி.
158. பெரியதிருமொழி. 10. 6. 3.
159. மூன்றாம் திருவந்தாதி. 66.
160. பெரியதிருமொழி. 10. 6. 3.
161. மேற்படி. 10. 6. 1.
162. செம்பொருள், மூலம். 5.
163. கூர்மபுராணம். ப. 68.

# 3. இராமாவதாரம்

அவதாரம் என்னும் சொல் எல்லா வைதிக சமயங் களாலும் எடுத்தாளப் பெறுகின்றது. மனித வடிவில் சிறப்பான வற்றைச் செய்யும் மனிதர்களைக் கூட அவதாரம் என அழைக்கக் காணலாம். மனிதநிலைக்கும் இறைநிலைக்கும் இடைப்பட்ட நிலையை அவதாரம் எனப் போற்றும் மரபு உண்டு. எங்கும் பரவி இருக்கும் பரம்பொருள் மனிதவடிவம் ஏற்றுவரும் என்பது ஏற்றுக்கொள்ள இயலாதது. குணம் குறியற்ற ஒன்றைக் குறுகியவட்டத்தில் காண்பது என்பது இறைநிலைக்கு ஏற்புடையதன்று எனக்கூறும் வைதிக சமயமும் உண்டு. ஆயினும் வைணவ சமயத்தில் இவ்வாறு பிறப்பெடுக்கும் நிலை அவதாரம் என்று சிறப்புடன் போற்றப் பெறுகின்றது.

பரம்பொருளாய் இருக்கும் இறையை உணர்வது என்பது எல்லோருக்கும் எளியதன்று. அதன் நிலை அவரவர் தன்மைக் கேற்பவே உணர இயலும். ஈண்டு நிலை என்பது பக்தியின் வசத்தால் மனமுதிர்ச்சி பெற்று ஞானத்தை அடையும் பக்குவ நிலையைக் குறிக்கும். சைவ சமயம் இறையருளைப் பெற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறி களைக் கூறுகிறது.[1] வைணவத்தில் பக்தி என்னும் மார்க்கம் உண்டென்றாலும் பிரபத்திமார்க்கமே சிறந்தது என அச்சமயம் வலியுறுத்துகிறது. திருமாலை ஐந்து நிலைகளாக வைணவம் படைத்துக் காட்டும் தன்மை பக்திநிலையில் அவரவர் பெற்ற ஞானத்திற்கு ஏற்ப அமையும்.[2]

பரம் ( விண்ணாட்டு நிலை ) }
வியூகம் ( அணிவகுப்பு நிலை ) }

பரமபதத்தில் உள்ள நித்திய சூரிகளும் இறையருளைப் பெற்றுப் பரமபதம் அடைந்த முக்தர்களும் அறியக் கூடியது.

விபவம் ( பிறப்பு நிலை ) :

அவதாரங்கள் நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்த வர்கள் மட்டும் உணரக்கூடியது.

அர்ச்சை ( வழிபடு நிலை ) :

உலகவாழ் உயிர்கள் அனைத்தும் கண்டு வழிபடக் கூடியது.

அந்தர்யாமி ( உள்ளுறை நிலை ) :

பக்தர்கள் தம் உள்ளுணர்வால் இறைவன் எல்லாவற்றிலும் நிறைந்திருக்கும் தன்மையைப் போற்றி உணர்வது.

இவ்வைந்து நிலைகளிலும் விபவமும் (பிறப்பு நிலையும்) அர்ச்சையும் (வழிபடு நிலையும்) எல்லோராலும் துதிக்கப் படுவதாய் அமைவன.

திருமாலின் அவதார நிகழ்ச்சிகள் அவற்றின் தன்மைக் கேற்ப வளர்ந்து வந்துள்ளன. மச்சம் , கூர்மம் , வராகம், நரசிம்மம் , வாமனம் ,பரசுராமன் , இராமன் , பலராமன் , கண்ணன் , கல்கி எனப்பத்து அவதாரங்களின் வளர்ச்சி நிலை அமையும் . முதலிரண்டும் நீருடன் தொடர்புடையன . வராக அவதாரம் நீரில் மூழ்கி இருந்த உலகை மீட்டதைக் கூறுவது . நரசிம்மம் மனிதவிலங்கு வடிவுடன் அமைவது . வாமனன் முதல் கண்ணன் முடிய அமைந்த அவதாரங்கள் மனித வடிவுடன் விளங்குபவை. அவை ஒவ்வொன்றிலும் ஒரு சிறப்புத்தன்மை அமைகிறது. அவற்றுள் இராமன் கண்ணன் அவதாரங்கள் மிகச் சிறப்பிடம் பெறுகின்றன.

இந்திய இதிகாசங்களும், வழக்குக் கதைகளும் இவ்விரு அவதாரங்களையே பெரிதும் எடுத்துரைக்கின்றன.வைணவ சமயமும் இவ்விரு அவதாரங்களுக்கே சிறப்பிடம் தருகிறது. இவற்றையன்றி ஆழ்வார்களின் அருளிச்செயல்களும் அவர் களுக்கு முன்னைய இலக்கியங்களும் மற்றை அவதாரங் களைக் காட்டிலும் இவ்விரு அவதார நிகழ்ச்சிகளையே மிகுதியும் எடுத்துரைக்கின்றன. அவற்றை நோக்க இவ்விரு அவதாரங்களின் சிறப்பு விளங்கும் .

## இராமாவதாரச் சிறப்பு

அவதாரங்கள் பத்தினுள் முழுமையான மனித அவதாரமாகப் படைக்கப்பட்டிருப்பது இராமாவதாரமே ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை மனிதஇயல்பு மிக்கிருப்பது இந்த அவதாரத்தில் மட்டுமே. இந்தியா முழுவதும் மிகப் பரவி வழங்கி வரும் இராமகாதை எல்லா வைதிகசமயங்களாலும் போற்றப் பெறுகிறது. தமிழில் இராமகாதை பெற்ற சிறப்பு ஏனைய இலக்கியங்களுக்கு இல்லாததாகும். இத்தகைய சிறப்புடைய இராமாவதாரத்தின் செயல்களை ஆழ்வார்கள் மிகுதியும் பாடியுள்ளனர்.

## திருமாலும் திருமகளும் அவதரித்தமை

இராமாயணம் சிறை இருந்தவளின் ஏற்றம் சொல்கிறது எனக் குறிப்பர்.[3] இவ்வாறு சீதைக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுவதையும் திருமாலின் அருள் பெறத் திருமகளின் புருஷகாரம் இன்றியமையாதது என்பதை விளக்கவும் இவ்வாறு குறிப்பர் . திருமாலின் அவதாரங்களில் திருமகளும் பூமியில் தோன்றியதாக அவதாரக்கதை ஏதும் இல்லை. இராமாவ தாரத்தில் மட்டுமே இருவரும் தோன்றி இப்பூவுலகில் துயர்பட்டனர் எனக் கூறப்பெறுகிறது. கண்ணன் அவதாரத்தில் தேவியர் பலர் கூறப்பட்டிருப்பினும் இத்தகைய சிறப்பு அவர்களில் எவருக்கு மில்லை. சீதை பூமியில் அவதரித்ததைப் பிரஜை கிணற்றிலே விழுந்தால் ஒக்கக்குதித்தெடுக்கும் மாதாவைப் போலே [4] என்று கூறுவர். ஆதலின் திருமாலின் உபாயத்துவமும் திருமகளின் புருஷகார வைபவமும் விளங்குவது இந்த அவதாரத்திலேயாம்.

## திருமாலும் திருத்தொண்டரும்

சமயங்கள் யாவும் தொண்டரின் சிறப்பை மிகப் போற்றுவன. ‘அடியார் அடியார் தம்மடியார் அடியார் தமக்கடியார்’[5] என அடியார் திறம் போற்றப்பெறும். இராமகாதையில் அடிமைத் தொண்டால் சிறந்து விளங்கியவர்களாக இலக்குவன், பரதன் , குகன் , வீடணன்

முதலானோர் போற்றப் பெறுகின்றனர். சரணாகதி என்னும் தத்துவத்தோடு பலன் எதிர்பாராத் திருத்தொண்டும் இறையருளுக்கு வழிவகுக்கும் என்பது இராமாவதாரத்தால் உணரும் கருத்து. இராமாவதாரத்தில் செய்த திருத்தொண்டால் இலக்குவன் கண்ணன் அவதாரத்தில் பலதேவனாய்ப் பிறந்தான் என்பது புராணச்செய்தி . இவற்றை நோக்க அடியார்க்கருளும் திருமாலின் பெருமையும் அடியார் சிறப்பையும் கூற வந்தது இராமாவதாரம் என்பது விளங்கும் .

## திருமாலும் ஏனைய உயிரினமும்

சமயக்கதைகளும் தத்துவங்களும் இறைவன் விலங்கு வடிவு கொண்டு வந்து உயிர்களுக்கு அருளிய நிலையை எடுத்துக் கூறுகின்றன. இராமாவதாரம் இவற்றிலிருந்து வேறுபட்டுத் திகழ்கிறது . இராமனால் பறவையான சடாயுவும் குரக்கினமும் அரக்கர்களும் சிறப்புப் பெற்றனர். அனுமன் சிறந்த தொண்டன் எனவும், ' சொல்லின் செல்வன் ' [6] எனவும், சுக்ரீவன் ' பேரரசன் ' [7] எனவும் போற்றப்படும் சிறப்பைக் காணலாம் . ஏனைய அவதாரங்களில் மற்றவர்களுக்கு அந்தச் சிறப்பு அளிக்கப் பெறவில்லை.

## உலகவாழ்வும் இராமாவதாரமும்

இல்லற வாழ்வென்பது முக்திக்கு வழி வகுக்காது; மிக்க இடர் தரக்கூடியது என்பனவற்றை வைதிகமல்லாத சமயங்கள் கூறிவந்த காலத்தில் இராமன் மனிதனாய்ப் பிறந்து மனையாள் பொருட்டு இடர் மிகப்பட்டுப் பின் மீண்டான் என்பதை விளக்க இராமகாதை எழுந்தது. இல்லறவாழ்வின் சிறப்பை எடுத்து ரைக்கும் இராமாவதாரம் மற்றைய சமயங்கள் உணர்த்தாத கருத்துக்களை உடையதாக அமைகிறது. இவ்வுலக இன்பத்தின் அடிப்படை, உறவும் இல்லற வாழ்வும் என்பதை எடுத்துக்காட்ட இராமகாதை எழுந்தது.

## இருவேறு அவதாரங்கள்

இராமாவதாரத்தில் இருவேறு அவதாரங்கள் சந்திக்கும் நிலையைக் காணலாம். சினத்தின் உருவாய்த் திகழும்

பரசுராமனை இராமன் சந்திக்கும் நிலை பாலகாண்டத்தில் அமையும்.[8] கண்ணன் அவதார நிகழ்ச்சியிலும் இவ்வாறு இரு அவதாரங்கள் கூறப்பெற்றாலும் இராமாவதார நிகழ்ச்சி அதிலிருந்து வேறுபடுகிறது. பரசுராம அவதாரம் முக்கியமல்லா அவதாரமாகச் சுட்டப்பெறும்.[9] பரசுராமன் தன் தவம் முழுவதையுமே இராமன் அம்புக்கு இலக்காக்கிய செய்தி இராமகாதையில் கூறப்பெறுகிறது.[10] இராமாவதாரத்தின் சிறப்பை விளக்கவே அந்நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. ஏனைய அவதாரங்களில் அமையாத சாந்த குணமும் சினச்செயலும் இராமகாதையில் அமையக் காணலாம். மனித இயல்பும் கடவுள் சிறப்பும் உடையவனாக இராமன் படைக்கப் பெற்றுள்ளமை ஈண்டு நினையத்தக்கது.

## இராமகாதை – நாராயணகதை

நாராயணன் ஒருவனே எண்ணற்ற அவதாரங்கள் எடுத்து இவ்வுலகுக்கு அருளினான். அவற்றின் முழுமையான கதைகள் இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் இடம்பெற்றுள்ளன. பாரதத்தில் கண்ணன் வரலாறு மட்டுமன்றிப் பாண்டவர், கௌரவர் வரலாறுகளும் மிகுதியாக அமைகின்றன. ஆனால் இராமனுடைய கதையை விளக்கும் இராமாயணம் , நாராயணன் கதை என்று கூறப்பெறுகின்றது.[11] அதனால் மற்றெல்லா அவதாரங்களைவிட முழுமையாகத் திருமாலின் சிறப்பை விளக்க வல்லது இராமாவதாரம் என்பது விளங்கும். வேதங்களில் புருஷசூக்தமும் தர்ம சாத்திரங்களில் மனுப்பிரணீதமும் சாரமாய் இருப்பன.[12] அதுபோல ஏனைய அவதாரங்களின் தன்மைகளையெல்லாம் விளக்குவதாய் அமைவதும் திருமாலின் கலியாண குணங்களை விளக்குவதாய் அமைவதும் இராமாவதாரமேயாகும்.

வைணவம் திருமாலை நீங்காதவர்களாக ஆதிசேடன், சுதர்சனர், கருடன், திருமகள் முதலானவர்களைக் கூறுகிறது. ஆதிசேடன் இலக்குவனாய் அவதரித்து இராமனுக்குப் பெருந் தொண்டாற்றிய செயல் இராமாவதாரத்தில் எடுத்துரைக்கப் படுகிறது. கண்ணன் அவதாரத்திலும் பலராமன் ஆதிசேடன் அம்சமாகக் கூறப்பெறுகின்றான். இலக்குவன் செய்த அடிமைத்தொண்டால் புகழ் பெற்றான். இளைய பெருமாள் என்ற சிறப்பும் பெற்றான்.

## அருளாற்றல்

திருமால் அவதாரங்களில் பகைவர் பலரை அழித்த நிலை கதைகளில் கூறப்பெறுகின்றது . ஆயினும் உடனிருந்தோர் பெற்ற நற்கதி பற்றிய வரலாறுகள் குறைவு . நரசிம்ம அவதாரத்தில் பிரகலாதனும் , கண்ணன் அவதாரத்தில் விதுரன் முதலானோரும் நற்கதி பெற்ற வரலாறு கூறப்பெறும். ஆனால் இராமா வதாரத்தில் இராமனுடன் தொடர்புடைய அனைவருமே சிறப்புப்பெற்றுப் போற்றப் பெறுவதைக் காணலாம். பரதன் பரதாழ்வான் எனவும், குகன் குகப்பெருமாள் எனவும், இலக்குவன் இளைய பெருமாள் எனவும், சுக்ரீவன் மகாராஜன் எனவும், சடாயு பெரியவுடையார் எனவும், வீடணன் விபீஷ்ணாழ்வான்[13] எனவும் போற்றப் பெறுகின்றனர். இத்தகைய சிறப்பு ஏனைய அவதாரங்களில் அமையவில்லை.

## மனித அவதாரம்

அவதாரங்கள் அரக்கர்களின் கொடிய செயலை ஒழிக்க எழுந்தவை என்று வலியுறுத்தப் பெறுகின்றன. மாவலியும் இரணியனும் கம்சனும் பேராற்றல் படைத்த அரக்கர்கள். இதுபோல இராவணனும் பேராற்றல் பெற்றவனே. திருமாலே அவன் ஆற்றல் கண்டு பிரமன் மடியில் தவழ்ந்து அவனுக்கு இராவணனை அடையாளம் உணர்த்திய செய்தி கூறப்பெறும்.[14] அத்தகைய பெரியவரங்களைப் பெற்ற இராவணன் மானுடன் ஒருவனான இராமனால் அழிக்கப் பெற்றான். மனிதவடிவாய் அவதாரம் எடுக்க விரும்பித் திருமால் கொண்டது இந்த இராமா வதாரமேயாம்.

' கிணற்றிலே விழுந்த குழந்தையை எடுக்கத் தாய் கிணற்றிலே குதிப்பது போன்று திருமால் உயிர்களைக் காக்க உலகிலே அவதரிக்கிறான் '[15] என்று வைணவம் கூறுகின்றது. இச்செய்தி முற்றிலும் பொருந்துவது இராமாவதாரத்துக்கே எனலாம். ' மண்ணில் பிறந்து மனிசர்க்காய்ப் படாதன பட்டு '[16] எனும் கூற்று இராமாவதாரத்திற்கே உரியதாம்.

அவதாரத்தின் தன்மையையும் சிறப்பையும் கண்ணன் அவதாரத்தில் பகவத்கீதையில் கண்ணன் எடுத்துரைக்கக்

காணலாம். பகவத்கீதை சமயக்கொள்கைகளையும் கடவுள் உண்மையையும் எடுத்துரைப்பது. ஆனால் இராமாவதாரம் தனிமனிதவாழ்வில் கடைப்பிடிக்கக் கூடிய உணர்வுகளை, செயல்களை எடுத்துக் காட்டக் கூடியதாக அமைந்துள்ளது. கடவுள் சிறப்பு, தனிநூல் வழி விளங்க, மனிதவாழ்வின் சிறப்பு இராமாவதாரச் செயல்வழி விளங்குகின்றது. சொல்லால் கண்ணனும் செயலால் இராமனும் போற்றப் பெறும் நிலை அறியத்தக்கது.

## இராமாவதாரமும் அர்ச்சையும்

திருப்பதிகள் நூற்றெட்டென வழங்குதல் வைணவ மரபு. அவற்றுள் நூற்றாறு திருப்பதிகள் இப்பூவுலகில் உள. எஞ்சிய இரண்டில் ஒன்று பரமபதம். மற்றது திருப்பாற்கடல். திருமாலின் அர்ச்சை நிலைகள் நின்ற, இருந்த, கிடந்த நிலைகளில் திருப்பதிகளில் இடம் பெற்றுள்ளன. அர்ச்சைகளில் அவதார வடிவ விக்கிரகங்கள் சில திருப்பதிகளிலே உள. அவற்றுள் இராமாவதாரமே பெரும்பான்மை அர்ச்சா வடிவங் களாய்த் திகழ்கின்றது. இதனை நோக்க ஏனைய அவதாரங்களைக் காட்டிலும் இராமா வதாரத்திற்கு வழிபாட்டு நிலையில் அளிக்கப் பெற்றுள்ள சிறப்பிடம் இனிது விளங்கும்.

## உயர்குண அவதாரம்

வால்மீகி இராமாயணத்தை,' இவ்வுலகில் எல்லா விதமான சிறந்த குணங்களும் பொருந்தி இருக்கும் புருஷன் ஒருவன் இருக்கிறானா ?' என்ற வினாவுடன் தொடங்குகிறார். நாரதர் தம் விடையில் மிக்க அடக்கமுடையவர் எனத் தொடங்கி இராமனின் வீரம், அழகு, இளமை, அறிவு, நீதி தவறாத குணம், நாவன்மை, பெருமை, எழில்நலம் இவற்றை எடுத்துரைக்கின்றார்.[17] இவ்வாறு காட்டப்பெறும் இராமாவதாரம் மனித குணநலனை மிகுதியும் எடுத்துரைக்கின்றது. திருமால் அவதாரங்களில் எல்லா நற்குணங்களும் உடைய அவதாரமாக இராமன் விளங்குகிறான்.

திருமால் அவதார நிகழ்ச்சிகளில் சில வஞ்சகச் செயல்களும் இடம் பெற்றுள்ளன. வாமன அவதாரத்தில் மூன்றடி பெற்ற விதமும் கண்ணன் அவதாரத்தில் பெரும் பான்மைச் செயல் களும் இவ்வாறு அமைவனவே. ஆனால் இராமாவதாரத்தில் இத்தகைய செயல்கள் இல்லை என்றே கூறலாம். ஆயினும் வாலி வதம் ஒன்றே அவ்வாறு அமைவது போல் தோன்றும். அதற்கும் வாலியின் பெருவரமும் காரணமாகத் திகழ்கின்றது. வஞ்சகத்தால் நிகழ்ந்தது போலத் தோன்றினும் ஆழ்வார்கள் இராமனின் அம்புக்கு இலக்கான வாலிக்கு இராமனால் அருட்பேறு கிட்டியதாகக் கொள்வர். இதனை நோக்க மனிதவாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை வலியுறுத்த எழுந்தது இராமாவதாரம் என்பது விளங்கும்.

## இராமாவதாரம்

இந்திய இலக்கியவகைகளில் காவியங்கள் மிகச் சிறப் பிடம் பெறுகின்றன. இராமாயணம் மகாபாரதம் இரண்டும் மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. அவற்றுள் இராமகாதை மக்களிடையே இருவகையில் செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. 1. மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளை எடுத்துரைக்கும் நிலை. 2. வைணவ சமயத்தின் கடவுளான திருமாலின் பெருமை பேசும் திறம் என்பன அவை. இவ்விரு நிலைகளிலும் தனிமனிதனுக்கும் சமுதாயத்துக்கும் இராமாவதாரத்தால் கிடைத்த பயன்கள் அளவிடற்கரியன. இராமாவதாரம் சமய அடிப்படையில் வணங்கப்பட்ட தன்மை இராமனுக்கு வழிபாட்டு நிலையில் உரிய சிறப்பிடத்தைக் கொடுத்தது. ஆதலின் இராமனின் ஒவ்வொரு செயலிலும் இறைத் தன்மையைக் காணுதல் சமயவாதிகளின் நோக்கமாயிற்று.

வான்மீகி இராமனை மனிதனாய்ப் பாடினார் என்பர். [18] ஆயினும் சில இடங்களில் திருமாலின் அவதாரமாகக் கூறப் பெறும் சிறப்பையும் காணமுடிகிறது. [19] இடைக்காலத்தில் வாழ்ந்த திருமால் பற்றுடைய ஆழ்வார்கள் இராமனை இறைவனாகவும் திருமாலின் அவதாரமாகவும் மிக வலியுறுத்திப் பாடுகின்றனர். சங்க இலக்கியங்களில் இராமனைப் பற்றிய குறிப்புக்கள் மூன்று இடங்களில் அமைகின்றன. [21]

தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவி யென்ன செவியே [22]

என்னும் இளங்கோவின் கூற்று, பிற்கால ஆழ்வார்களின் பாடல்களுக்கு அடிகோலியது எனலாம். சிலப்பதிகாரக் காலத்தில்தான் இராமனைத் திருமாலாகப் போற்றத் தொடங்கிய நிலையை அறியமுடிகிறது.

இத்தகைய இறைத்தன்மை இராமாவதாரத்திற்குக் கொடுக்கப் பெற்ற காரணத்தினால் பிற்காலத்தெழுந்த கம்பராமாயணத்தில் இராமன் இறைத்தன்மை உடையவனாகப் படைக்கப்பெற்றான். வால்மீகி முனிவருக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கும் இடைப்பட்ட பல நூற்றாண்டுகளில் இந்நாட்டு மக்களின் உள்ளத்தில் ஒப்புயர்வற்ற உன்னத குணங்களாலும், பண்புகளாலும், ஒழுக்கசீலத்தாலும், அறத்தின் திறத்தினாலும், ஈடும் எடுப்புமற்ற வீரத்தாலும், வரம்பற்ற வள்ளல் தன்மையினாலும் எல்லையற்ற அருளினாலும், இராமன் தெய்வமாகவே இடம் பெற்றுவிட்டான் [23] என்ற கருத்து இராமகாதை காலந்தோறும் போற்றப் பெற்று வந்தது என்பதை விளக்கும்.

தமிழில் கம்பராமாயணத்துக்கு முன் இராமன் வரலாற்றை முழுமையாகப் படைத்தவர்கள் ஆழ்வார்களேயாவர். வைணவ உரையாசிரியர் பெரியவாச்சான் பிள்ளை ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ள இராமன் வரலாற்றைத் தொகுத்துப் பாசுரப்படி இராமாயணம் என்று பெயரிட்டுள்ளார். ஆழ்வார்களின் பாடற்குறிப்புக்களே கம்பரின் இராமாயணத்துக்கு அடிப்படையானது என்பர்.[24] ஆழ்வார்களில் பெரும் பான்மையோர் இராமாவதாரத்தைப் பாடுகின்றனர். அவர்களில் குலசேகரர் மட்டும் இராமகாதையை முழுதுமாகப் பாடுகின்றார் [25] இராமாயண உத்தரகாண்ட செய்திகளும் அதில் இடம் பெற்றுள்ளன. இராமன் பிறப்புத் தொடங்கித் திருவடி சோதிக்குத் திரும்பியது வரை அவர் அமைக்கும் பத்துப் பாடல்கள் முழுமையான இராமகாதையைக் கூறும் முதற்குறிப்பாகும். பெரியாழ்வார், அனுமன் சீதைக்கு அடையாளம் உரைத்ததைப் பத்துப் பாடல்களில் குறிக்கிறார். [26]

இராமன் சீதையைப் பிரியும் வரை நடந்த நிகழ்ச்சிகள் அதில் இடம் பெற்றுள்ளன. இவையே இராமனைப் பற்றி ஆழ்வார்கள் பாடும் முழுமையான வரலாறாக அமைகின்றன. ஏனைய ஆழ்வார்கள் இராமாவதாரத்தின் பல நிகழ்ச்சிகளை ஆங்காங்கு எடுத்துரைக்கின்றனர்.

குலசேகராழ்வார் தன் வடமொழிப் புலமையால் வால்மீகியின் இராமாயணத்தின் கதைப் போக்கை உணர்ந்து பாடினார் என்று கூறலாம். வடமொழியில் பத்மபுராணம், இலிங்கபுராணம், ஸ்காந்தபுராணம், கூர்மபுராணம் ஆகிய வற்றிலும் இராமனுடைய வரலாறு இடம் பெற்றுள்ளது. இவற்றிலெல்லாம் இராமன் வரலாறு மிக விரிவாகச் சொல்லப் பெறவில்லை. இத்தகைய வடமொழிப் புராணங்கள் வழியறிந்த இராமனுடைய வரலாறும் பிற செவிவழிச் செய்திகளும் ஆழ்வார்களின் பாடல்களில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

ஆழ்வார்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ள இராமாவதாரப் புராணக்கதைகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1. இராமனை ஒப்பற்ற தலைவனாகக் காட்டும் புராணக் கதைகள்
2. இராமனை மிகச்சிறந்த வீரனாக எடுத்துரைக்கும் புராணக் கதைகள்
3. இராமனின் இறைத்தன்மையைக் காட்டும் புராணக் கதைகள்
4. இராமனின் அருட்சிறப்பை விளக்கும் புராணக்கதைகள்
5. ஏனைய புராணக் கதைகள்

என்பன அவை.

## ஒப்பற்ற தலைவன்

இராமன் மனுவழிவந்தவன்[37] என்றும் சூரிய குலத் தோன்றல்[38] என்றும் ஆழ்வார்கள் எடுத்துரைக்கின்றனர். அரசர்க்குரிய நீதிமுறை வழி உலகைக் காக்க வந்தவனாக இராமனைப் போற்றுகின்றனர். 'திருவுடை மன்னரைக்காணின் திருமாலைக் கண்டேன் !' [39] என்னும் மரபுக்கு இலக்கணமாக

அமைவது இராமாவதாரம். இராமன் முறைதவறிய அரசுகளை அழித்ததை அறியமுடிகிறது. வாலியும் இராவணனும் அயற் பெண்டிரைக் கவர்ந்து கொடுங்கோலாட்சி நடத்தியவர்கள்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்[30]

என்னும் குறள்நெறிக்கு ஏற்ப, நெறி தவறிய வாலியையும்[31] இராவணனையும்[32] இராமன் அழித்தமையை ஆழ்வார்கள் பாடுகின்றனர்.

கம்பரும் ஆழ்வார்கள் வழிநின்று வாலியின் கூற்றாகவே இராமனை,

மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள்
வில்லுந்தாங்கி
கால் தரை தோய நின்று கட்புலக்கு உற்றதம்மா[33]

என்று பரம்பொருளாகக் காட்டுகிறார். வாலியின் அரசு வானரங்களுக்கும், இராவணன் அரசு தேவர்களுக்கும் மனிதர் களுக்கும், பெருந்துயர் விளைவித்தன. ஐயறிவுடைய விலங்கு களுக்கும் மனிதர்களுக்கும் மனிதரினும் மேம்பட்டவராகக் கூறப்பெறும் தேவர்களுக்கும் துயர் நீக்கிய சிறப்பு மனித அவதாரமாகிய இராமனுக்கு ஏற்பட்டது. சுக்ரீவன் பொருட்டாக இராமன் வாலியைக் கொன்றதை ஆழ்வார்கள் பாடுகின்றனர்.[34] சுக்ரீவன் பெருந்தகை[35] எனவும் இளையவானரம்[36] எனவும் போற்றப் பெறுகின்றான். வாலியை அழித்து இளையவனுக்கு இராமன் அரசளித்த செயல் இராவண அழிவுக்கு முன்னோடியாக நிகழ்வது. தவறிழைத்த வாலியைத் திருத்தும் ஆற்றலோ அழிக்கும் ஆற்றலோ வேறு எவருக்கும் இல்லையாதலால் இராமன் ஒருவனே அச்செயல் செய்ய வல்லவனாகக் கூறப் பெறுகிறான்.

அறம் தவறிய நிலையில் ஆட்சி செய்த இராவணனை இராமன் அழித்தது இராமகாதையின் முடிவாகும். இராமன் இராவணனை அழித்ததை ஆழ்வார்கள் மிகுதியாகப் பாடு கின்றனர். சீதையின் பொருட்டாக இராவணனை அழித்ததைச் சிறப்பாக உரைக்கின்றனர்.[37] இராமன் இராவணனுடைய

பத்துத்தலைகளையும் இருபது தோள்களையும் வீழ்த்தியதைக் குறிக்கின்றனர்.[36] இராமனுக்குரிய பெருமைகளாக இவை உரைக்கப்பெற்றாலும், ஆழ்வார்களின் நோக்கம் திருமாலைப் பாராட்டுவதே என்னும் நிலை இக்குறிப்புக்கள் வழி விளங்கு கின்றது. அதனால் திருமாலையும் இராமனையும் பிரித்துக் காணா ஆழ்வார்களின் மனநிலை இனிது விளங்கும்.

இப்பூவுலகில் அறம் தழைக்கும் பொருட்டுத் திருமால் இராமனாக அவதரித்தான். அறம் தவறி மறம் கொண்ட இருவரை அழித்து அவர்தம் இளையோர்க்கு ஆட்சியளித்து நல்லாட்சி நிலவச் செய்த பெருமையும் இராமனால் நிகழ்த்தப் பெற்றன.

### ஒப்பற்றவீரன்

காவியங்களின் தலைவர்கள் ஒப்பற்ற வீரர்களாய்ப் படைக்கப் பெறுகின்றனர். அகவாழ்விலும் புறவாழ்விலும் அவ்வகையில் அமைக்கும் சிறப்புத் தமிழ் மரபுக்கு உண்டு. வீரம் கொண்ட தலைவர் பலர் சங்கப் புறநூல்களில் படைக்கப் பெற்றுள்ளனர். காவியத் தலைவர்கள் புறவாழ்வை விட அகவாழ்வில் மிக ஈடுபட்ட நிலையைக் காணமுடிகிறது. கோவலன், சீவகன், இராமன் முதலானோர் காவியம் காட்டும் தலைவர்களில் சிலர். இவர்கள் வீரப் பெருமக்களாய்த் திகழ்ந்ததைக் காவியங்கள் எடுத்துரைக்கின்றன.

மறம் நீக்கி அறம் நிறுவும் பொருட்டே இராமன் வீரனாய்ப் படைக்கப் பெறுகின்றான். ஆழ்வார்கள் பாடல்களில் அவனுடைய வீரம் தெய்வத்தன்மையுடன் பாடப்பட்டுள்ளது என்றாலும் அவற்றில் காவிய உணர்ச்சியையும் காணமுடிகிறது. இராமன் வரலாறு கூறும் குலசேகரர் அவன் போரிட்ட செய்திகளைக் கூறுகின்றார். ஏனைய ஆழ்வார்களும் இராமனின் போர்கள் பற்றி எடுத்துரைக்கின்றனர். அவற்றில் வீரத்தன்மை யுடன் இறைத்தன்மையும் இணைக்கப் பெற்றுள்ளது. கம்ப ராமாயணத்தில் இராமனின் வீர ஆற்றலைக்கண்டு போரிட்ட வர்கள் அனைவரும் இராமனைப் புகழக் காணலாம். காவியப் போக்கில் அது பொருத்தமுடையதாக அமையும்.

இராமகாதையில் வாலியும் இராவணனும் மிகப் பேராற்றல் படைத்த வீரர்களாகத் திகழ்ந்தவர்கள். அவர்களை அறம் நிறுவ இராமன் அழித்தான் என்பது செய்தி. மேலும் இராமனின் வீரச் செயல்கள் பல ஆங்காங்கு நிகழ்த்தப் பெறுகின்றன. கதை அமைப்பில் அவை இராமனின் வீர ஆற்றலைக் காட்டுவனவாக அமைகின்றன. கௌசிக முனிவர் பொருட்டாய் வேள்வி காக்க அரக்கியாகிய தாடகையை அழித்த செயலை ஆழ்வார்கள் பாடுகின்றனர்.[39] சிவனுடைய வில்லை முறித்த செய்தி[40] இராமனின் பரம் பொருட் தன்மையைக் காட்டுவதாய் அமையினும் அக்குறிப்பில் இராமனின் வீரத்தன்மையே மிகுதியும் பாராட்டப் பெறுகின்றது.

வில்லாற்றலில் வல்ல இராமன் மாயமானைத் தொடர்ந்து சென்று தன் அம்பு துறந்த செய்தி 'மான் முனிந்தொரு கால்வரி சிலை வளைத்த மன்னவன்'[41] என எடுத்தியம்பப் பெறுகிறது. வாலியை வீழ்த்தும் பொருட்டாக இராமனின் வில்லாற்றலைச் சுக்ரீவன் சோதித்த செய்தி இராமாயணத்தில் கூறப்பெறுகின்றது.[42] சீவக சிந்தாமணியிலும் இச்செய்தி குறிப்பாய் அமைகிறது.[43] இதனை,

> உடைந்தவாலி தன்தனக்கு உதவவந்து இராமனாய்
> மிடைந்த ஏழ்மரங்களும் அடங்க வெய்து[44]

எனத் திருமழிசையாழ்வார் குறிக்கின்றார். மராமரம் செற்றமை ஆழ்வார்களால் பெரிதும் போற்றப்பெறுகின்றது. வாலியின் பொருட்டாக இராமனால் ஏழ் மராமரம் துளைக்கப்பட்ட செய்தியைப் பல ஆழ்வார்களும் குறிக்கின்றனர். மற்றும் உத்தரகாண்ட செய்தியான மாலி,[45] சுமாலி,[46] மாலியவான்[47] முதலானோரை அழித்தமையை ஆழ்வார்கள் பாடுகின்றனர்.

இராமகாதையில் இராவணனை அழித்தது ஒன்றே முதற்பொருளாகக் கூறப்பட்டாலும் இராமன் வீரத்தைக் குறிப்பனவாகப் பல நிகழ்ச்சிகளை ஆழ்வார்கள் தம் பாக்களில் அமைத்துப் பாடுகின்றனர். அவை, இராமன் இலங்கையை அழித்தமை,[48] இலங்கையை எரித்தமை,[49] இலங்கை அரக்கர் குலம் அழித்தமை[50] என மூவகையாய் எடுத்துரைக்கப் பெறுகின்றன. இராமன் இலங்கையை அழித்ததாய் அமையும்

குறிப்புக்கள் பெரும்பாலும் இராமனின் வில்லாற்றலை விளக்குவனவாக அமைகின்றன. இலங்கையை எரித்தது பற்றிய குறிப்புக்கள் இராமன் தீயூட்டினான் என்ற பொருளில் அமைகின்றன. இராமகாதையில் இராமன் இலங்கையை நெருப்புக்கிரையாக்கியதைத் திருமங்கையாழ்வார், ' அன்று அரக்கனூர் அழலால் உண்டானை'[51] என்று பாடுகின்றார். இலங்கை வாழ் அரக்கர்குலம் அழிக்கப்பட்டமை இராமனின் வீரச் சிறப்பைக் காட்டுவதாய் அமைகிறது. இவையன்றி கரன்முரன்,[52] கவந்தன்,[53] விராதன்[54] முதலானோரை அழித்த செய்திகளும் ஆழ்வார்களால் பாடப் பெறுகின்றன.

### கடவுட் தன்மை

இராமனை மனிதனாகக் காட்டிய வழக்கு வான்மீகரால் ஏற்பட்டது. எனினும் முழுமையான திருமாலின் அவதாரமாக ஆக்கிய பெருமை ஆழ்வார்களையே சாரும். முழுமுதற் பொருள் மானிட வடிவுடன் எளிய மக்களுடன் வாழ்ந்த நிலை இராமாவதாரத்தில் கூறப்பெறுகின்றது. ஏனை அவதாரங் களிலிருந்து இது மாறுபட்டது. திருமால் ஏனைய தேவர்களை விடச் சிறப்புடையவன் என்பது ஆழ்வார்கள் கொண்ட கருத்து. மற்ற இருகடவுளரினும் சிறப்புடையவன் திருமால் என்பதை ஆழ்வார்கள் முடிபாகக் கொண்டிருந்தாலும் ஈண்டு மானிட வடிவில் வந்த இராமன் மற்றைய தேவர்களினும் உயர்ந்த வனாவான் என்னும் கருத்துத் தோன்ற சில குறிப்புக்களை அமைக்கின்றனர்.

ஐம்பெரும்பூதங்களில் ஒன்றான வருணக்கடவுளை அழைத்துக் கடலில் அணைகட்டிய செய்தி ஆழ்வார்களால் பாடப் பெறுகின்றது.[55] ' வேலை வேவவில் வளைத்த வெல் சினத்த வீர '[56] என அக்குறிப்பு எடுத்தாளப்பெறும். கடலில் அணைகட்டிய பெரும் செயலும்,[57] அணை கட்ட அணில் செய்த உதவியும்[58] ஆழ்வார்கள் பாடல்களில் அமைகின்றன. இரு அவதாரங்கள் ஓரிடத்தில் சந்தித்த நிலை இராமாவதாரத்தில் அமைவதாம். அரச குலத்தைப் பழிவாங்கும் நிலையில் பரசுராமன் இராமனைச் சந்திப்பதாய் இராமகாதை கூறுகின்றது.

சிவன் கைக்கொண்ட வில்லைப் பரசுராமனிடமிருந்து பெற்று நாணேற்றி அவனுடைய தவப்பயனை இலக்காக்கிக் கொண்டமை பெரியாழ்வாரால் பாடப்பெறுகின்றது.[30] இந் நிகழ்ச்சியை அனுமன் சீதையிடம் அடையாளமாகக் கூறுவதாக அவர் பாடுகின்றார்.

ஆழ்வார்கள் பாடல்களுக்கு முன் அவதாரக் கொள்கை வலுப்பெற்றிருந்த நிலையைப் பரிபாடல் ஒன்றின் வழியேதான் அறியமுடிகிறது. ஆனால் இராமனும் பரசுராமனும் இடம் பெறும் நிலையையும் இருவரின் சிறப்பையும் வியாக்கியான உரை ஆசிரியர்கள் விளக்க முயல்கின்றனர். ஈண்டுப் பரசு ராமனும் இராமனும் சந்திக்கின்ற நிலையில் இராமா வதாரத்துக்குக் கடவுட் தன்மை உண்டாக்கும் பொருட்டுப் பரசு ராமனின் தவப்பயன் இராமனுக்கு இலக்காகிற இச்செய்தி எடுத்தாளப் பெறுகிறது.

## அருளும் தன்மை

முழு வரலாற்றுடன் அமையும் கண்ணன், இராமன் அவதாரங்களில் வாழ்வின் இறுதிவரை அடியார்க்கு அருளுந் தன்மையைக் காணலாம். கண்ணன் பிறந்ததால் யதுகுலமும், வளர்ந்ததால் ஆய்ப்பாடியும் சிறப்படைந்தன. அது போன்றே இராமன் பிறந்ததால் இப்புவனம் முழுவதுமே சிறப்புப்பெற்றது. அவனருளுக்கு அனைத்து உயிர்களும் பாத்திரமாயின.

இராமகாதை அமைப்பில் இராமனின் அருள்தன்மையைப் பலவகைகளில் ஆழ்வார்கள் குறிக்கின்றனர். வேண்டுவோர்க்கு வேண்டியதை அளிக்கும் அருட்குணம் இராமனுக்குரியதாகிறது. இராமனின் பிரிவால் துயருற்று வாடிய பரதன் வேண்ட, பாதுகை ஈந்தமை அருள் தந்தமையைச் சுட்டும். சுக்ரீவன் இவ்வுலக வாழ்வுக்குப் பொருளான அரசையும் வீடணன் அருளையும் வேண்டி இராமனை அடைந்தனர். இராமனுடைய அம்பாலே உயிரிழக்க இருந்த காகத்திற்கு அவனே உயிரை அளித்தமையும் ஈண்டுக் கருதத்தக்கது.

வேண்டியவர் தமக்கு வேண்டும் பொருளை அளிக்குந் தன்மை கடவுட்குரிய சிறப்பியல்புகளில் ஒன்றாக அமையும்.

இராமனை அழைத்து வருவதற்குக் கானகம் சென்ற பரதனுக்கு இராமன் தன் அடியினை ஈந்தமை,

முடியொன்றி மூவுல கங்களு மாண்டுஉன்
அடியேற் கருளென் றவன்பின் தொடர்ந்த
படியில் குணத்துப் பரதநம்பிக்கு அன்று
அடிநிலை யீந்தானை "

என்று எடுத்துரைக்கப்பெறும். இதன் மூலம் இராமனின் அருட்கொடையும் பரதனின் பக்திப்பெருக்கும் நன்கு புலனாகின்றன.

வீடணன் அருளையும், சுக்ரீவன் அரசையும் விரும்பி இராமனை அடைந்தவர்கள். அவன் அவர்கள் விரும்பியபடி குறை தீர்த்து அருளினான். வீடணனுக்கு அருளரசு அன்றி புவியரசையும் சுக்ரீவனுக்குப் புவியரசன்றி அருளரசையும் அருளிய பெருமை இராமனுக்கு உரியதாகும்.

தவறு செய்தவர் தம்குறை உணர்ந்து திருவடி வீழின் இறையருள் கிடைக்கும் என்பது சமயங்களால் வற்புறுத்தப் பெறும் செய்தி. தான் செய்த தவறால் இராமனின் சினத்துக்கு ஆளாகிக் காப்பார் இன்றி இராமனின் திருவடியை அடைந்த காகம் அவனாலேயே காக்கப்பட்டது. காகம் பற்றிய செய்தியை,

சித்திரக் கூடத்திருப்பச் சிறுகாக்கை முலை தீண்ட
அத்திரமே கொண்டெறிய அனைத்துலகும் திரிந்தோடி
வித்தகனே யிராமாஓ நின்னபயம் என்றழைப்ப
அத்திரமே அதன்கண்ணை அறுத்ததுமோர் அடையாளம்"

எனப் பெரியாழ்வார் உரைக்கின்றார். பகைவர்க்கும் அருளும் குணமும், அபயம் அடைந்தார் குறை தீர்க்கும் திறமும் இதனால் வெளிப்படும். அன்றியும் உயிர் காத்து உயர்வு பெற்ற சிறப்பும் இராமனுக்கு உரைக்கப் பெறும்.

## ஏனைய கதைக்குறிப்புகள்

இராமகாதையின் முழுவரலாற்றைக் குலசேகரர் பாடுகின்றார். பிற ஆழ்வார்களும் இராமாவதாரத்தின் அனைத்து

இன்றியமையா நிகழ்ச்சிகளையும் பாடுகின்றனர். இராமன் இளம் வயதில் கூனியின் முதுகில் மண்ணுண்டையால் அடித்த செயல்,

நின்றுண்டை கொண்டோட்டி வன்கூன்நிமிர
நினைந்த பெருமான்[62]

என்று எடுத்துரைக்கப்படும். ஏனைய ஆழ்வார்களும் இந்நிகழ்ச்சியைப் பாடுகின்றனர். இராமன் கானகம் சென்றது காப்பிய அமைப்பிலும் கதை நோக்கிலும் சிறப்பிடம் பெறுகிறது. அவ்வகையில் இராமன் கானகம் சென்றதை ஆழ்வார்கள் எடுத்துரைக்கின்றனர்.[63] கைகேயி வரத்தால் சென்றமை,[64] இலக்குவனுடனும் சீதையுடனும் சென்றமை,[65] பரதனுக்குப் பாதுகையும் அரசும் அருளிச் சென்றமை, [66] கூனி சொல்லக் கைகேயி கேட்டு ஆணையிட அதனால் கானகம் சென்றமை [67] கடுங்கானம் திரிந்தமை [68] முதலானவை ஆழ்வார்கள் பாடல்கள் வழி அறியப் பெறுகின்றன.

இராமன் சீதை ஆகியோரின் அகவாழ்வு நிகழ்ச்சிகள் ஏதும் ஆழ்வார்களால் பாடப் பெறவில்லை. ஆயினும் பெரியாழ்வார் மட்டும் அகநிகழ்ச்சி ஒன்றைச் சுட்டுகின்றார். தனியிடத்து இருக்க, சீதை மல்லிகை மாலையால் இராமனைக் கட்டியதாக அனுமன் அடையாளம் உரைக்குமிடத்தில் ஆழ்வாரால் பாடப் பெறு கின்றது.[69] இந்நிகழ்ச்சி புராண இதிகாசங்கள் எதிலும் அமைய வில்லை. இஃது ஒன்றே அகவாழ்வு பற்றிய செய்தியாகும்.

இராமனின் கானக வாழ்வில் சூர்ப்பநகையாகிய அரக்கி யின் மூக்கும் காதும் அரிந்தமை மிக முக்கியமான நிகழ்ச்சி யாகும். ஆழ்வார்கள் இதனை மிகுதியும் பாடுகின்றனர்.[70] இராமாயண அமைப்பின்படி அரக்கியின் மூக்கரிந்தவன் இலக்குவனாவான். ஆயினும் ஆழ்வார்கள் இதைக் கூறும் தோறும் இராமனே சூர்ப்பநகையின் மூக்கரிந்ததாகக் கூறுவர். 'மலைபோல் உருவத்தோடு இராக்கதி மூக்கரிந்திட்டவன்'[71] என்ற தொடர் அதற்குச் சான்றாகும். இலக்குவன் செய்த செயலை இராமனுக்கு ஏற்றி உரைப்பது மரபென்றாலும் 'தன்னை நயந்தாளைத் தான்முனிந்து மூக்கரிந்து '[72] எனும் கூற்று இராமன் செயலாகவே கூறுகின்றது. இதனை நோக்க இவ்வடிப்

படையில்கூட, கதை வழங்கியிருக்கலாம் எனக்கொள்ள வாய்ப்புள்ளது.

ஆழ்வார்கள் இராமனின் தெய்வத்தன்மை ஒன்றையே விளக்கப் பல முறைகளைக் கையாண்டுள்ளனர். வீரத்தன்மையும் தெய்வச்சிறப்பும் மனித குணமும் கொண்டதே இராமாவதாரம். இக்கருத்துக்கள் வெளிப்படும் வகையில் பக்திப்பாக்கள் அமைந்துள்ளன. இராமாயணத்தின் சிறப்பு, பிராட்டியின் பெருமை பேசுவது எனப் பிற்கால ஆசாரியர்கள் கூறுவர். வைணவ சமயச்சிறப்புக்குக் காரணமான ஆழ்வார்களின் பாடல் களில் சீதையின் பெருமை பெரிதும் எடுத்துரைக்கப்படவில்லை என்பது ஈண்டுக் கருதத்தக்கது.

ஆழ்வார்களின் இராமகாதைக் குறிப்புக்களே பிற்காலத்தில் கம்பராமாயணத்துக்கு அடிப்படையாயின. தமிழில் இதற்கு முன் தெளிவாய் இல்லாத இராமகாதையைப் படைத்தளித்த பெருமை ஆழ்வார்களுக்குரியது. அன்றியும் உத்தரகாண்டச் செய்திகள் சிலவும் ஆழ்வார்களால் பாடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. இதனால் ஆழ்வார்கள் இராமன்பாற்கொண்ட ஈடுபாடும் திருமாலாய் எண்ணிய பாங்கும் இனிது விளங்கும்.

## குறிப்புக்கள்

1. சிவஞானபோதம். சூத்திரம். 8.
2. தத்வத்திரயம். மூலம். 182.
3. வசனபூஷணம். சூத்திரம். 5.
4. மேற்படி. வியாக்கியானம். ப. 50.
5. திருவாய்மொழி. 3. 7. 10.
6. கம்பராமாயணம். பா. 3768.
7. வசனபூஷணம் வியாக்கியானம். ப. 278
8. கம்பராமாயணம். பா. 1268-1306.
9. தத்வத்திரயம். வியாக்கியானம். ப. 108.
10. கம்பராமாயணம். பா. 1301.
11. ஆசாரியஹிருதயம். ப . 243.
12. மேற்படி.
13. வசனபூஷணம். சூத்திரம். 81.
14. நான்முகன் திருவந்தாதி. பா. 44.

15. ஆர்த்திப்பிரபந்தம். பா. 9.
16. திருவாய்மொழி. 6. 3. 2.
17. இஸ்மாயில், மு.மு., கம்பன் கண்ட இராமன். ப. 2.
18. மேற்படி. ப . 16.
19. Thirumeni, C., Dr. An Exploration of the Origin of Kambaramayanam, P. 60.
20. அகநானூறு. பா. 70. அடி. 13-17.
21. சிலப்பதிகாரம். காதை. 13. அடி. 63-66, காதை. 17. பாட்டு. 35. காதை. 14. அடி. 46-49.
22. மேற்படி. காதை. 17. பாட்டு. 35.
23. இஸ்மாயில். மு.மு.,கம்பன் கண்ட இராமன், ப. 3.
24. Thirumeni, C., Dr, An Exploration of the origin of Kambaramayanam, P. 192.
25. பெருமாள் திருமொழி. 10.
26. பெரியாழ்வார் திருமொழி. 3. 10.
27. பெரியதிருமொழி. 9. 8. 4.
28. திருப்பள்ளியெழுச்சி. பா. 4.
29. திருவாய்மொழி. 4. 4. 8.
30 திருக்குறள். 388.
31. பெருமாள் திருமொழி. 8. 7. நான்முகன் திருவந்தாதி. பா. 28. 85 பெரியதிருமொழி. 1. 2. 1., 2. 10. 5.,3. 4. 6, 4. 6. 3., 10. 9.8.
32. திவ்வியப்பிரபந்தத்தில் ஐம்பது குறிப்புக்கள்
33. கம்பராமாயணம். பா. 4069.
34. பெருமாள் திருமொழி. 8. 7, நான்முகன் திருவந்தாதி. பா. 85.
35. பெரியதிருமொழி. 10. 9. 8.
36. பெருமாள் திருமொழி. 8. 7.
37. பெரியதிருமொழி. 8. 6. 3.
38. மேற்படி. 3. 10. 6, இரண்டாம் திருவந்தாதி. பா. 43.
39. பெரியாழ்வார் திருமொழி. 3. 9. 2., பெருமாள் திருமொழி. 8. 2. 10.2. திருப்பள்ளியெழுச்சி. பா. 4., பெரியதிருமொழி. 8.6.3., 9.8.4., பெரியதிருமடல். 146
40. பெரியாழ்வார் திருமொழி. 2. 8. 7., 3. 10. 9., 4. 1. 2. பெருமாள் திருமொழி. 9. 4., 10. 3. நான்முகன் திருவந்தாதி. பா. 8. பெரியதிருமொழி. 3. 1. 8. 4. 1. 8.
41. பெரியதிருமொழி. 1. 4. 8.
42. கம்பராமாயணம். பா. 3865.
43. சீவகசிந்தாமணி. பா. 2432.
44. திருச்சந்தவிருத்தம். பா. 81.

45. பெரியதிருமொழி. 2. 10. 4.
46. திருச்சந்தவிருத்தம். பா. 107.
47. மேற்படி. பா. 28.
48. திவ்வியப் பிரபந்தத்தில் நாற்பத்தைந்து குறிப்புக்கள்.
49. திவ்வியப் பிரபந்தத்தில் பதினெட்டுக் குறிப்புக்கள்.
50. திவ்வியப் பிரபந்தத்தில் பதினொன்கு குறிப்புக்கள்.
51. பெரியதிருமொழி. 5. 6. 5.
52. திருச்சந்தவிருத்தம். பா. 104.
53. பெரியதிருமொழி. 3. 4. 6.
54. பெருமாள் திருமொழி. 10. 5.
55. பெரியாழ்வார் திருமொழி.1. 6. 7. பெருமாள் திருமொழி. 10. 7. திருச்சந்தவிருத்தம்.31.50. பெரியதிருமொழி. 3.2.6
56. திருச்சந்தவிருத்தம். பா. 31.
57. திவ்வியப்பிரந்தத்தில் இருபத்தாறு குறிப்புக்கள்.
58. திருமாலை. பா. 27.
59. பெரியாழ்வார் திருமொழி. 3. 9. 2.
60. மேற்படி. 3. 9. 6.
61. மேற்படி. 3. 10. 6.
62. பெரியதிருமொழி. 10. 6. 2.
63. திவ்வியப்பிரபந்தத்தில் பதினெட்டுக் குறிப்புக்கள்
64. பெரியாழ்வார் திருமொழி. 3. 10. 3.
65. பெருமாள் திருமொழி. 9. 2.
66. பெரியாழ்வார் திருமொழி. 3. 10. 3.
67. மேற்படி. 4. 8. 4.
68. பெரியதிருமொழி. 7. 1. 5.
69. பெரியாழ்வார் திருமொழி. 3. 10. 2.
70. திவ்வியப்பிரபந்தத்தில் பதினாறு குறிப்புக்கள்
71. பெரியதிருமொழி. 10. 6. 7.
72. பெரியதிருமடல். கண்ணி. 146.

# 4. கண்ணன் அவதாரம்

இந்திய இலக்கியங்களில் கடவுளைக் குழந்தையாக எண்ணிப் பாடும் முறை சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. மகாபாரதம் கண்ணனைக் குழந்தையாகவும் வீரனாகவும் இறைவனாகவும் திருமாலின் அவதாரமாகவும் காட்டுகிறது. கண்ணனால் உரைக்கப் பெற்ற பகவத்கீதை இந்து சமயத்தின் புனித நூலாக விளங்குகிறது. வடமொழி இதிகாசங்களில் எடுத் துரைக்கப் பெற்ற கண்ணனின் சிறப்பு, தமிழில் ஆழ்வார்களின் பாடல் வழி விளக்கப்பெறுகிறது. ஆழ்வார்களுக்கு முன் எழுந்த சங்க இலக்கியங்களில் கண்ணனின் அவதார நிகழ்ச்சிகள் சில எடுத்துரைக்கப் பெறுகின்றன. மாயோன், மால் என்னும் சொற்கள் கண்ணனைக் குறிப்பனவாக அமைகின்றன.

திருமாலின் அவதாரங்களில் கண்ணன் அவதாரம் முழுமையானது. அவ்வவதாரத்தின் வாழ்வும் செயலும் அதனை வலியுத்துகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை கண்ணன் வாழ்வு கூறப்பெறுவதும் அதற்குக் காரணமாக அமையும். அதனால்தான் இந்த அவதாரம் உணர்த்தும் உட்பொருளும் நல்லுரைகளும் பெரிதும் மதிக்கப் பெறுகின்றன. இராமன் கண்ணன் அவதாரங் களை ஒப்பிடும் போது அவை ஒன்றின் ஒன்று உயர்ந்து விளங்கு கின்றது. பத்து அவதாரங்களில் இராமன் கண்ணன் அவதாரங் களை ஆழ்வார்கள் மிகுதியாகப் பாடியுள்ளனர். இராமாவதாரம் மனித இயல்புகளை மிகுதியாகக் காட்டுகிறது கண்ணன் அவதாரம் இறை இயல்புகளை எடுத்துரைக்கிறது.

## கண்ணன் அவதாரச்சிறப்பு

திருமாலின் அவதாரங்கள் எல்லாம், உயிர்கள் நற்கதி பெறுவதற்காகவும், தேவர்களுக்கு உதவுவதற்காகவும் நிகழ்த்தப் பெற்றவை. அவதார நிகழ்ச்சிகள் இதனை எடுத்துரைக்கின்றன. தேவர்களுக்குத் துயர் என்னும்போது அது மனிதர்களுக்கும் உரியதென்றாலும் அதைப் பற்றிய நிகழ்ச்சிகள் ஏதும் தெளிவாக

அவதாரக் கதைகளில் இடம் பெறவில்லை. இராமாவதாரத்தில் தான் முதன்முதலாகப் பூவுலக மக்களின் நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. இராமன் உயர்குலத்தில் தோன்றி உலகுக்கருளிய நிலை ஆழ்வார்களின் பாடல்களில் எடுத்துரைக்கப் பெறுகிறது. இராமனுடைய அருளால் தேவர்கள் அச்சம் நீங்கினர், குரக்கினம் சிறப்புப் பெற்றது, அரக்கர்களில் நற்குணமுடையோர் நற்பேறு பெற்றனர். இவை அனைத்தும் மானுடத்தால் உலக உயிர்கள் நல்வாழ்வு பெற்றதை விளக்குகின்றன.

கண்ணன் பிறக்கும்போதே இறைத்தன்மையுடன் பிறக்கிறான். இறைத்தன்மை முழுமையாக உடைய மனிதனாக வாழ்கிறான். அவனுடைய வாழ்வில் வஞ்சக நிகழ்ச்சிகளுக்கு இடமுண்டு. வஞ்சகத் தன்மை உடையவனாகக் கண்ணன் கூறப்பெற்றாலும், அவனைக் குறைத்து மதிப்பிட இயலாது. சமய அடிப்படை அதற்கு ஒரு காரணமாயினும் பகை வெல்லுதல் என்ற நிலையில் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ‘கண்ணன் கருத்துரைகளைக் கேட்டு நட, இராமன் செயல்களைப் பார்த்து நட ’ என்ற வழக்கும் இதனால் ஏற்பட்டது.

கண்ணன் அவதாரத்தில் அவன் மனிதர்களுடன் மிக நெருங்கி வாழ்ந்தமை விளக்கப் பெறுகிறது. ஆயர்குல மக்கள் வாழ்வில் மிகச் சிறப்பிடம் பெறுகிறான். ‘ மாயோன் மேய காடுறை உலகமும் ’[1] என்று கூறும் தொல்காப்பியர் காலம் தொடங்கி, கண்ணன் ஆயர்குலத் தலைவனாகக் கொள்ளப் பெறுகிறான். வளம் நிறைந்த அக்குலத்தின் வாழ்க்கை முறை தமிழ்மரபில் முல்லை நிலத்துக்குரியது. முல்லை நிலச் செல்வமான ஆநிரையை மேய்த்தலும் கானகம் திரிதலும் கண்ணன் வாழ்வில் நிகழ்ந்தவை. இவையன்றி ஆயர்குல மக்களுக்குத் துயர் வந்த போதெல்லாம் துணையாய் இருந்து துயர் போக்கிய நிலை பலவாறு எடுத்துரைக்கப் பெறுகின்றது.

யதுகுலத்தில் கண்ணன் பிறந்ததால் அக்குலம் சிறப்பைப் பெற்றது. முல்லை நிலத்தில் கண்ணனின் வாழ்வு தமிழ்ப் புலவர்களை மிகக் கவர, கண்ணன் பற்றிய கதைகள் இலக்கிய வடிவம் பெற்றன. ஐந்நிலத்துக்கும் உரியவர்களான அரும் பெரும் தெய்வங்களுள் மற்றவர்களைக் காட்டிலும் கண்ணனுக்கு ஒரு சிறப்புண்டு. ஏனைய கடவுளர்கள் அந்நில மக்களுடன்

இணைந்து வாழ்ந்ததாகக் கூறும் குறிப்புக்கள் மிகுதியும் இல்லை. முருகனைக் குறிஞ்சி நிலத்தலைவனாய்க் காட்டும்போது வள்ளியை மணம் புரிந்த நிகழ்ச்சியொன்றே அந்நிலத்தில் நிகழ்வதாகக் கூறப்பெறுகின்றது. கண்ணன் வாழ்க்கை அவ்வாறின்றி முழுவதுமாக முல்லை நிலத்தில் நிகழ்வதாக உரைக்கப் பெறுகின்றது.

## இறைக்குணம்

வைணவ சமயத்தில் திருமாலுக்குரிய குணங்களாகக் கூறப்பெறுவனவற்றுள் நான்கு குணங்கள் மிகச் சிறப்பாகப் போற்றப் பெறுபவை. அவை, 1. வாத்சல்யம் ( வாஞ்சை) 2. சுவாமித்துவம் ( தலைமை ) 3. சௌசீல்யம் ( செம்மை) 4. சௌலப்பியம் ( எளிவந்த தன்மை ) ஆகியனவாகும்.[2]

## வாத்சல்யம் (வாஞ்சை)

வாத்சல்யம் என்பது கன்றிடம் பசு கொள்கின்ற அன்பாகும். இன்னாதன செய்தாலும் அவற்றைப் பொறுத்து இன்னா செய்தாரைத் திருத்தி அருளுகின்ற ஆற்றல் இறைவனுக்குரிய குணங்களில் மிகச்சிறந்ததாகும். எல்லாச் சமயங்களிலும் இக்குணம் மிகச்சிறப்பாகப் போற்றப்பெறும். திருமாலுக்குரிய இக்குணம் கண்ணன் அவதாரத்திலேயே மிகுதியும் வெளிப் படுகிறது. போர்க்களத்தில் தனக்குரிய நெறியை மறந்து அறத்தில் இருந்து பிறழ எண்ணிய அர்ச்சுனனுக்கு அவனுடைய குற்றம் நோக்காது கண்ணன் உண்மைப்பொருளின் சிறப்பை உணர்த்திய திறத்தால் அவனுடைய வாத்சல்யகுணம் விளங்குகிறது.

## சுவாமித்துவம் (தலைமை)

சுவாமித்துவம் என்பது கடவுளர்க்கெல்லாம் தலைமைத் தன்மை உடையவனாகும் சிறப்பைக் குறிப்பது. திருமாலின் இத்தகைய சிறப்பு அனைத்து அவதாரங்களிலும் வெளிப் படுகிறது. ஆயினும் கண்ணன் அவதாரமோ அத்தகைய சிறப்புக்கு உறைவிடமாக இருக்கிறது. வாழ்வியல் அடிப் படையில் ஆயர்குல மக்களைக் காத்தமை முழுவதுமே

அக்குணத்தை வெளிப்படுத்துகிறது. கண்ணன் பகவத்கீதையை உரைத்தபோது தன்னுடைய கடவுள் தன்மையை உணரும் பொருட்டாக அர்ச்சுனனுக்குப் பரத்துவத்தை விளக்கியதால் இக்குணத்தின் சிறப்பு விளங்குகிறது.

## சௌசீல்யம் (செம்மை)

சௌசீல்யம் என்பது உயர்ந்தவன் தாழ்ந்தவனுடன் கொண்டிருக்கும் நட்பைக் குறிப்பது. திருமால் அவதரித்தல் என்பதே தன்நிலையில் தாழ்ந்து உலக உயிர்களோடு கலந்து இருக்கும் சிறப்பைக் காட்டுவது. கண்ணன் அவதாரத்தில் ஆயர்குல மக்களிடம் கொண்டிருந்த ஈடுபாடு இத்தகையதாகும். பாரதப்போர்க்களத்தில் எளிய மனிதனாகி அர்ச்சுனனுக்குத் தேரோட்டியாக இருந்து மனிதனாகிய அவன் ஏவும் அளவுக்குத் தன்னைத் தாழவிட்டுக் கொண்ட சிறப்பு, கண்ணனுக்கு உரியதாகிறது. அர்ச்சுனனுடன் கலந்து பரிமாறுகையால் கண்ணன் அவதாரத்தில் இக்குணம் மிக்கு விளங்குகிறது.

## சௌலப்பியம் (எளிமை)

இறைவனின் எளிவந்த தன்மையைக் குறிப்பது இக் குணம். எல்லாச் சமயங்களும் இறைவனின் எளிமைத் தன்மையை விளக்கப் பற்பல கதைகளை எடுத்துரைக்கின்றன. வைணவத்தில் இவ்வெளிவந்த தன்மை மிகச் சிறப்பாகப் போற்றப்பெறுகின்றது. கண்ணன் அவதாரத்தின் நோக்கமே இக்குணத்தை வெளிப்படுத்துவதாகும். உலகமாயைக்குக் கட்டுண்ணாத திருமால் மனிதவடிவில் வந்து தன் உடலை மக்களின் கண்களுக்கு இலக்காக்கிய நிலையே எளிமைக் குணத்துக்குச் சான்றாகும். கண்ணன் அவதாரம் அத்தகைய நிலையிலும் மேலாக ஆய்ச்சியரின் கடைத்தாம்புக்குக் கட்டுண்ட அவதாரம். கண்ணன் கடைத்தாம்பால் அடியுண்டமை எளிமைக் குணம் மிக்கிருப்பதைக் காட்டுவதாகும்.

கண்ணன் அவதாரத்தில் முடிந்த முடிபாகத் திகழ்வது அவன் உரைத்த பகவத்கீதை. உண்மைப் பொருளை விளக்கும் பகவத்கீதை பாரதப்போர்க்களத்தில் கண்ணனால் அர்ச்சுனனுக்கு உரைக்கப்பெற்றது. அவதாரங்களின் நோக்கத்தையும்

செயலையும் எடுத்துரைக்கும் பகவத்கீதை மக்களால் மிகவும் போற்றப்பெறுகின்றது. கண்ணனை நாராயணனாகவும், அர்ச்சுனனை நரனாகவும் கொள்வது மரபு. கண்ணனுடன் வாழ்ந்த அர்ச்சுனன் கண்ணனுடைய செயல்களைக் கண்டும் முனிவர்களின் சொற்களான ஞான நூல்களை அறிந்தும் கண்ணனுடைய சொற்களைக் கேளாதவனாக இருக்கிறான். பெற்ற கல்வியால் உண்மைப்பொருளை அவன் உணர இயலவில்லை. கண்ணன் கூறிய உபாயங்கள் தனக்குத் தஞ்சமன்று, அவனே தஞ்சம் என்று அர்ச்சுனன் தெரிந்து கொண்ட போது கண்ணனின் உண்மைத் தன்மையை அறியமுடிந்தது. இதனை நோக்க, கண்ணன் அவதாரம் தஞ்சம் தரத்தக்கதாக அமையும் நிலை விளங்குகிறது.

கண்ணன் அவதாரத்தில் கண்ணன் பல மகளிரை மணந்தமை எடுத்துரைக்கப் பெறுகிறது. ஆயர்குல மகளிருடன் விளையாடிய கண்ணன் செய்த குறும்புச் செயல்கள் பலவாகும். அவை கற்பனைத் திறத்துடன் படைக்கப்பெற்றுள்ளன. இராமாவதாரத்தில் தண்டகாரண்ய முனிவர்கள் இராமனின் பிரிவை எண்ணி வருந்தித் தம்முடைய ஆற்றாமையை எடுத்துரைத்தனர். அப்போது இராமன், கண்ணன் அவதாரத்தில் தான் ஆயர்பாடியில் வளர இருப்பதாகவும் அச்சமயம் அவர்களை ஆய்ச்சியராகப் பிறக்கச் செய்வதாயும் கூறியருளினான். தம்மையடைந்தார் நற்பேறு பெறும் பொருட்டு அருளிய இத்தன்மையால்தான் கண்ணன் அவதாரத்தில் ஆய்ச்சியர் செயல்கள் பெரிதும் போற்றப் பெறுகின்றன.

கண்ணனின் அருட்குணத்தை விளக்கும் பொருட்டாக அமையும் இச்செயல்கள் கண்ணன் அவதாரத்துக்கு மட்டுமே உரியனவாகும். ஏனைய அவதாரங்களில் அகவாழ்வு பற்றிய செய்திகள் ஏதும் இடம்பெறவில்லை.

தமிழ்மரபில், புறவாழ்வில் வீரச்செயல்கள் இன்றியமையா இடம் பெறுகின்றன. கண்ணன் அவதாரம் இத்தகைய வீரச்செயல்களை மிகுதியாகக் கொண்டமைகிறது. அவதார நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் அவை இடம் பெறுகின்றன. அவற்றை அகவாழ்வுடன் தொடர்புடையவை, புறவாழ்வுடன் தொடர்புடையவை என இரு வகையாகப் பிரிக்கலாம்.

நப்பின்னைக்காக ஏழ்விடை செற்றமை, உருக்குமிணிக்காக உருப்பனைத் தடிந்தமை, சத்திய பாமைக்காகக் கற்பகக்கா கொணர்ந்தமை ஆகிய மூன்றும் முதல்வகைக்குச் சான்றாவன. கண்ணனைக் கொல்லும் பொருட்டாகக் கம்சன் அனுப்பிய அரக்கர்களைக் கொன்றமை, ஆயர்கள் வேண்ட அவர்களைப் பல துன்பங்களிலிருந்து காத்தமை, பாரதப்போரில் வெற்றிக்குக் காரணமானமை ஆகியவை இரண்டாம் வகைக்குச் சான்றாவன. இவை இறைத்தன்மை மானிடவடிவில் திகழ்வதை எடுத்துரைக் கின்றன.

## கீழ்க்குலம்புக்கது

சிறப்புடைய இரு அவதாரங்களில் இராமன் அரசமரபில் பிறந்தவன். அதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் கண்ணன் ஆயர்குடியில் வளர்ந்தவன். இராமனின் குழந்தைப் பருவச் செயல்கள் சில கூறப்பெறுகின்றனவே அன்றி அவற்றைச் சிறப் புடையனவாகக் கூறும் மரபில்லை. கண்ணனின் வாழ்வும் செயலும் அதிலிருந்து மிக மாறுபட்டு அமையக்காணலாம். யது குலத்தில் பிறந்து ஆய்ப்பாடி மக்களிடையே வாழ்ந்தது மனதில் கொள்ள வேண்டிய கருத்தாகும். சிறையில் பிறந்து இப்புவனம் சிறக்கச் செய்த பெருமை கண்ணன் அவதாரத்துக்கு மட்டுமே உரியது.

இளமைப்பருவத்தில் கண்ணன் ஆயர்குலத்தில் வளர்ந்தது காரணமாக அக்குலம் சிறப்புப் பெற்றது. வேதங்களையும் புராணங்களையும் தந்த வியாசர் மீன் நாற்றமுடைய இடத்தில் தோன்றியவர். கண்ணன் முடை நாற்றமுடைய இடத்தில் வளர்ந்தவன். இருவரும் திருமால் அவதாரங்களாவர். இவற்றை நோக்க அரியன செய்வதற்குக் கீழ்க்குலத்திலும் பிறக்கும் இயல்பு உடையவன் திருமால் என்பது விளங்கும். இவற்றில் வழிபாட்டிற்குரியதும் பெரும்பான்மை மக்களால் அறியப் படுவதுமாக அமைவது கண்ணன் அவதாரமேயாகும்.

கண்ணன் காடுவாழ் சாதியில் வளர்ந்தவன். ஆயர்குலத் தொழிலான ஆநிரை மேய்த்தலும் காடு திரிதலும் கண்ணன் செய்தவை. இவை கண்ணன் அவதாரச் செயல்களில் சிறப்பிடம் பெறுகின்றன. ஆநிரைகளை மட்டும் அவன் காத்ததன்றி

ஆயர்குலம் முழுவதையும் காத்தான். ஆயர்குல மக்களுடன் தன்னைக் கலந்து பரிமாறிக் கொண்டமையும், அவர்களுக்குத் துன்பம் வந்தபோதெல்லாம் காத்தமையும் கண்ணன் அவதாரத்தின் செயல்களாக அமைகின்றன.

கண்ணன் வெண்ணெயைக் களவு செய்து ஆய்ச்சியால் கட்டுண்டு, தப்பித் ததிபாண்டன் வீட்டில் புகுந்து கொண்டான். எனக்கு வீடுபேறு அளிக்காவிடில் உன்னைக்காட்டிக் கொடுப்பேன் எனத் ததிபாண்டன் கூற அவ்வண்ணமே கண்ணன் ததிபாண்டனுக்கும் தயிர்த்தாழிக்கும் வீடுபேறு அளித்தான் என்று ஒரு கதை கூறுகிறது. அவரவர் தன்மைக்கு ஏற்ப இம்மைக்கு வேண்டும் செல்வம் முதல் பிறவா நிலையாகிய வீடுபேறுவரை வேண்டுவனவற்றை அளித்த பெருமை கண்ணன் அவதாரத்தில் சிறப்புடையதாய் அமைகிறது.

### வீரதீரச்செயல்கள்

திருமால் எடுத்த அவதாரங்கள் அனைத்திலும் வீரதீரச் செயல்கள் அமைகின்றன. அவதாரங்களில் சில அவற்றின் நோக்கம் நிறைவேறிய உடன் மறைந்துவிடும் இயல்பின. இராமன், கண்ணன் ஆகியோர் இம்மண்ணில் வாழ்ந்தவர் களாதலின் அவர்களுடைய வாழ்வில் வீரதீரச்செயல்கள் மிகுதியும் இடம்பெற்றன. அவை அவதாரங்களின் வீரச் சிறப்பை எடுத்துரைப்பதோடு இறைத்தன்மையையும் வெளிப் படுத்துகின்றன. இத்தன்மையில் கண்ணன் அவதாரம் இராமாவ தாரத்திலிருந்து வேறுபடுகிறது. கண்ணனின் வீரதீரச் செயல்கள் இறைத்தன்மை உடையனவாக அமைகின்றன. அவ்வகையில் அமைவனவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. கம்சன் அனுப்பிய அரக்கர்களை அழித்த செயல் 2. தேவரினும் மேம்பட்டவன் என்பதை விளக்க இந்திரனுக்கு எதிராகச் செய்த சில செயல்கள். 3.கௌரவர்களை அழிக்கப் பாண்டவருக்கு உதவிய சில நிகழ்ச்சிகள். இந்நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் கண்ணன் வெற்றி பெற்றநிலையை அவனுடைய வரலாறு எடுத்துரைக்கின்றது.

இராமாவதாரத்தில் இலக்குவன் உடன் நிற்க இராமன் பல செயல்களை நிகழ்த்துகிறான். கண்ணன் அவதாரத்தில் பலராமனுடன் பல செயல்களை நிகழ்த்துகின்றான்.

இராமாவதாரச் செயல்கள் தேவர்கள்,விசுவாமித்திரர், ஆரண்ய முனிவர்கள் முதலானோர் பொருட்டாக நிகழ்ந்தவை. கண்ணன் அவதாரச் செயல்கள் ஆயர்குல மக்களுக்காவும் பாண்டவர் களுக்காகவும் நிகழ்ந்தவை. கண்ணன் அவதாரத்தில் வஞ்சக நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றிருப்பினும் அவ்வவதாரம் போற்றப்பெறுகின்றது.

கண்ணன் அவதாரம் அறிய இயலாப் பொருள்களின் தன்மையை விளக்குவதாயும் ஆசிரியனின் செயல்களையும் புருஷகாரச் செயலையும் உபாயச்செயலையும் செய்வதாகவும் குறிப்பர்.[3] அறியாதனவற்றை அறியவைப்பது ஆசிரியனின் செயல். உண்மைப் பொருளை உணரவைப்பது என்பது இதன் பொருளாகும். வைணவத்தின் முடிந்த முடிபான சரணாகதித் தத்துவத்தைப் பகவத்கீதை மூலம் கண்ணன் உரைக்கிறான்.

கண்ணன் அர்ச்சுனனுக்குப் பரம்பொருளை அடைதற்குரிய வழிகளையெல்லாம் எடுத்துரைக்கிறான். அவற்றுக்கெல்லாம் மேலாகக் கண்ணனே உபாயமாகவும் இருக்கிறான். அவ் வகையில் உண்மைப் பொருளாயும், உயர் ஆசிரியனாயும், உபாயமாயும் இருக்கும் நிலை கண்ணனுக்கு மட்டுமே உரியது என்பதை அவன் வரலாறு விளக்குகிறது.

கண்ணன் அவதாரம் எல்லாவகையிலும் சிறப்புப்பெற்றுத் திகழ்வதாகும். மிகப்பழங்காலந்தொட்டே கண்ணன் வரலாறு மக்களிடையே வழங்கி வருகிறது. இதை இலக்கியங்கள் விளக்குகின்றன. வடமொழி நூல்களும் சமய இலக்கியங்களும் கண்ணன் வரலாற்றை மிக விரிவாக எடுத்துரைக்கின்றன. மகாபாரதம், அரிவம்சம், விஷ்ணுபுராணம், பாகவதம் விஷ்ணுதர்மம் முதலானவை கண்ணன் வரலாற்றைக் கூறுவனவற்றுள் மிக முக்கியமானவை. ஆனால் தமிழில் இத்தகைய நூல்கள் சங்ககாலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் அமையவில்லை.

கண்ணன் அவதார நிகழ்ச்சிகள் சில பழைய இலக்கியங் களில் இடம் பெற்றுள்ளன. அவற்றை நோக்க, கண்ணன் அவதாரம் பற்றிய செய்திகள் தமிழகத்தில் போற்றப்பெற்று வந்துள்ளன என்பது விளங்குகிறது. கண்ணன் அவதார

நிகழ்ச்சிகள் ஆழ்வார்களின் பாடல்களில்தான் முழுமையாக இடம் பெற்றுள்ளன. மற்றைய அவதாரங்களைக் காட்டிலும் கண்ணன் அவதாரம் ஆழ்வார்களால் மிகுதியாகப் பாடப்பெறுகின்றது.

கண்ணன் அவதார நிகழ்ச்சிகளைப் புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை மிக விரிவாக எடுத்துரைக்கின்றன. அவற்றை மூன்று வகையாகப் பிரித்துக் கூறலாம். 1. கண்ணனின் இளமைப்பருவச் செயல்கள் 2. பாண்டவர்களுடன் இயங்கி அவர்களுக்கு வெற்றி தேடித் தந்தமை 3. கண்ணனின் பிற்கால வாழ்வு என்பன அவை. கண்ணனுடைய இளமைப்பருவச் செயல்களைப் பாகவதம் எடுத்துரைக்கின்றது. பாரதப்போர் நிகழ்த்தியதை மகாபாரதம் விளக்குகின்றது. கண்ணனின் பிற்கால வாழ்வை விஷ்ணுபுராணமும் பாகவதமும் பகர்கின்றன. அவதாரத்தின் நோக்கத்தையும் இறைத்தன்மையையும் கண்ணன் உரைத்த பகவத்கீதை விளக்குகின்றது. பகவத்கீதை எல்லா வைதிக சமயங்களாலும் போற்றப்பெறும் சிறப்பைப் பெற்று விளங்குகிறது.

மேற்கூறிய மூவகையிலும் ஆழ்வார்கள் பாடியுள்ளனர். தமிழ் இலக்கியத்துக்கு அவர்களுடைய பாக்கள் ஒருவகையில் அரிவம்சமாகவும் விஷ்ணுபுராணமாகவும் பாரதமாகவும் பாகவதமாகவும் விளங்குகின்றன எனக்கூறின் மிகையாகாது.

## கண்ணன் அவதாரச்செயல்கள்

பத்து அவதாரங்களில் மனித வடிவில் அமைந்தன வற்றுள் கண்ணன் அவதாரம் பெருஞ்சிறப்பு வாய்ந்தது. கண்ணன் அல்லவை செய்யும் அரக்கனை அழிப்பதற்கு என்றே அவதரித்தவன். அதனைத் 'திண்கொள் அசுரரைத் தேய வளர் கின்றான்'[4] என்று குறிப்பர். கண்ணன் பிறப்புப் பற்றி ஆழ்வார் களுக்கு முந்தைய இலக்கியங்களில் தெளிவான குறிப்புக்கள் அமையவில்லை. திருமாலின் சிறப்பை வலியுறுத்தும் பரிபாடல் கூடக் கண்ணனின் பிறப்பைப் பற்றி எடுத்துரைக்கவில்லை. உபநிடதக் கருத்துக்களைக் கொண்ட பரிபாடல் கண்ணனையும் பலதேவனையும் சில இடங்களில் இணைத்துக் கூறுகிறது.

ஆழ்வார்களே கண்ணனின் பிறப்பு முதலிய பல செய்திகளைக் கூறுகின்றனர்.

## கண்ணன் பிறப்பு

கண்ணன் அவதாரம் திருமால் இதுவரை எடுத்த அவதாரங் களில் இறுதியானது. மனிதவடிவில் இறைத்தன்மை மிக்கிருக்கும் நிலை அவ்வவதாரத்தில் விளக்கப்பெறுகின்றது. பல சிறப்புக் களைப் பெற்றுள்ள கண்ணன் அவதாரத்தின் பிறப்பிலும் சிறப்பு அமைகிறது. கண்ணனுக்கு முன் பிறந்த அறுவரைக் கல்லிடை மோதிக்கொன்றான் கம்சன்.[5] இதைப் பெரியாழ்வார் கூறு கின்றார். இறைத்தன்மையுடைய கண்ணன் பன்னிரு திங்கள் தாயின் வயிற்றிலிருந்தான்.[6] சங்ககாலம் தொட்டுத் திருவோண நாள் திருமாலுக்குரியதாகக் கொள்ளப் பெறுகிறது. திருவோன நட்சத்திரம் திருமாலுக்குரியது என்று மறைகள் பறைதலால் திருமாலின் அவதாரமான கண்ணனையும் பெரியாழ்வார் திருவோணத்தான் என்றே கூறுகின்றார்.[7] 'அத்தத்தின் பத்தா நாள்'[8] என்பது அத்தத்தில் இருந்து பத்தாவது நட்சத்திரமான உரோகிணியைக் குறிக்கிறது.[9] ஆவணித் திங்களில் வளர் பிறையில் அட்டமி கூடிய உரோகிணியில் கண்ணன் அவதரித்ததாக விஷ்ணுபுராணம் கூறுகிறது.[10] கண்ணன் அவதரித்ததால் வசுதேவரின் தளை நீங்கியதையும் ஆழ்வார்கள் பாடுகின்றனர். கண்ணன் அரச குலத்திலே பிறந்து ஆயர் குலத்திலே வளர்ந்ததால் அக்குலங்கள் சிறப்புடையதாயின.

கண்ணன் கம்சனை அழிக்கும் பொருட்டுப் பிறந்தவன் என்பதைப் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. ஆழ்வார்களும் இதனையே பாடுகின்றனர். கண்ணன் ஆயர்பாடியில் வளர்ந்ததை அறிந்து கம்சன் அவனைக் கொல்லப் பல அரக்கர்களை அனுப்பியதையும் கண்ணன் அவர்களைக் கொன்றதையும் ஆழ்வார்கள் மிகுதியாக எடுத்தியம்புகின்றனர். இந்நிகழ்ச்சிகளை நிரலாய் அமைத்துப் பாடாது ஆழ்வார்கள் ஆங்காங்கு உரைக் கின்றனர். இவற்றில் கம்சன் பற்றிய குறிப்புக்கள் கலித்தொகை, சிலம்பு முதலான பழைய இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.[11] ஆயினும் அவன் அனுப்பிய அசுரர்கள் பற்றிய குறிப்புக்களை ஆழ்வார்களே எடுத்துரைக்கின்றனர்.

1. வஞ்சகமாய் வந்து பால் தந்து கொல்ல எண்ணிய பூதனை என்னும் அரக்கியைக் கொன்றது.
2. சகடவடிவில் நின்ற அரக்கனைக் கொன்றது.
3. கழுதைவடிவில் வந்த அரக்கனைப் பனைமரத்தில் மோதி அழித்தது.
4. குதிரைவடிவில் வந்த அரக்கனைக் கொன்றது.
5. கொக்குவடிவில் இருந்த அரக்கனை வாய்கிழித்தது.
6. கன்றாயும் விளவாயும் நின்ற அரக்கர்களைக் கொன்று அழித்தது.
7. இரட்டை மருதமரங்களை உரலிடை ஆப்புண்டு இழுத்து வந்து இடைப்புகுந்து சாய்த்தது.

முதலான கண்ணனின் செயல்கள் ஆழ்வார்களால் பாடப் பெறுகின்றன.

இவற்றில் முதல் ஆறு நிகழ்ச்சிகள் கண்ணன் பகை வென்றதைக் குறிக்கின்றன. ஏழாவதான இரட்டை மருத மரங்களை வீழ்த்திய செயல் சாபத்தால் மரங்களாய் நின்ற குபேரன் பிள்ளைகளுக்குக் கண்ணன் அருளியதைக் கூறுவது. கண்ணன் தன் வாழ்வில் கம்சனின் பெரும் பகையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதனால் கம்சன் கண்ணனை வஞ்சகமாகக் கொல்ல அனுப்பிய அசுரர்கள் அனைவரையும் அவன் பலராமனுடன் சேர்ந்து கொன்றான். கண்ணனின் செயல்கள் இயற்கையை விஞ்சிய செயல்களாக அமைகின்றன. அவற்றின் மூலம் கண்ணனின் இறைத்தன்மை வெளிப்படுகிறது.

பால் தந்து கண்ணனைக் கொல்ல வந்த அரக்கியை ஆழ்வார்கள் பூதனை என்று குறிக்கின்றனர். [12] குழந்தைப் பருவத்தில் கண்ணன் சகடத்தை உதைத்ததை ஆழ்வார்கள் பாடுகின்றனர்.

நாள்கவோர்நாலைந்து திங்களளவிலே
தாளைநிமிர்த்து சகடத்தைச் சாடிப் போய்
வாள்கொள்வளைஎயிற்று ஆருயிர்வவ்வினான் [13]

என்று பெரியாழ்வார் சகடுதைத்த நிகழ்ச்சியைப் பாடுகின்றார். மருதமரங்கள் இரண்டிடையே உரலோடு கட்டுண்டு வந்து

வீழ்த்தியதை விரிவாகப் பாடும் நோக்கம் ஆழ்வார்களிடம் அமைகிறது. மருதமரங்களாக நின்ற குபேரனின் குமாரர்களின் பெயர்கள் நளகூபரன், மணிக்ரீவன் என்பன. அவர்கள் சாப விமோசனம் பெற்றதைப் பாகவதம் கூறுகின்றது. [14]

கழுதைவடிவில் வந்து நின்ற அசுரனைப் பனைமரத்தில் மோதிக் கண்ணன் கொன்றான். அவ்வசுரன் தேனுகன் என்று அழைக்கப்பெறுகிறான். [15] அவனைப் பலராமன் பனைமரத்தில் மோதி அழித்தான். இராமாவதாரத்தில் சூர்ப்பநகையின் மூக்கரிந்த இலக்குவன் செயல் சில இடங்களில் இராமன் மேல் ஏற்றி உரைக்கப்படுவது போலப் பலராமனின் இச்செயல் கண்ணன் மேல் ஏற்றி உரைக்கப்படுகிறது. குதிரை வடிவில் வந்து நின்ற அசுரனைக் கொன்ற செய்தி ஆழ்வார்களின் பாடல்களில் இடம்பெறுகிறது. கேசி எனப்படும் அவ்வசுரன் பற்றிய குறிப்பு, கலித்தொகையிலே இடம்பெற்றுள்ளது. [16] அவ்வரக்கனை ஆழ்வார்கள் பரி, [17] மா, [18] துரங்கம், [19] என்று குறிப்பிடுகின்றனர். கொக்காய் வந்த அசுரன் கண்ணனால் கொல்லப்பெற்ற செய்தியை ஆழ்வார்கள் உரைக்கின்றனர். அசுரன் பெயர் ஏதும் கூறப்பெறவில்லை. கண்ணன் கன்றாகிய அசுரனை விளவாக நின்ற அசுரன் மேலெறிந்து இருவரையும் அழித்த செய்தி ஆழ்வார்களால் கூறப்பெறுகிறது. இக்கதைக் குறிப்பைச் சிலம்பு முதலில் எடுத்துரைக்கிறது. [20]

## தலைவனாம் தன்மை

திருமால் அவதாரங்களில் இராமனுக்கும் கண்ணனுக்கும் தலைவனாம் தன்மை மனிதவாழ்வியல் அடிப்படையில் அமையக்காணலாம். இலக்கிய நோக்கிலும் இக்கருத்து இடம் பெறுகிறது. கிரேக்கப் புராணங்களில் இடம்பெறும் கடவுளர்கள் தெய்வங்களாய் மட்டும் அமையாது மானிட வாழ்வியல் முறையில் விளக்கப் பெறுகின்றனர். இந்தியப் புராணங்களில் அத்தகைய தன்மை உண்டென்றாலும் அவற்றில் கடவுட் தன்மையே மேலோங்கி நிற்கிறது.

இராமாவதாரமும் கண்ணன் அவதாரமும் மேற்கூறிய வற்றிலிருந்து சற்று மாறுபட்டுத் திகழ்கின்றன. இராமன் அரசகுலத்துக்கு உரியவனாகலின் பிறப்பாலும் வாழ்வாலும்

காத்தற்தொழில் அவனுக்குரியதாகிறது. கண்ணன் ஆயர்பாடி மக்களுடன் இணைந்து ஓர் ஆயனாக வாழ்ந்த நிலையை அவனுடைய வரலாறு காட்டுகிறது. மேலும் ஆயர்களைக் காக்கும் பொறுப்பும் அவனுக்கு உரியதாகிறது. ' மாயோன் மேய காடுறை உலகமும்'[21] எனக்கூறினும் கண்ணனை ஒரு ஆயனாகவே காணமுடிகிறது.

ஆய்ப்பாடி மக்களுக்குத் துயர் வந்தபோதெல்லாம் அவர்களை அதிலிருந்து காப்பாற்ற கண்ணன் செய்த செயல்கள் அவனை ஆய்ப்பாடியின் தலைவனாகக் காட்டுகின்றன. கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடித்து ஆய்ப்பாடி மக்களைப் பெருமழையிலிருந்து காத்த தன்மையும், காளியன் என்னும் கொடிய பாம்பினை அடக்கி அதன் தலையில் நடம்புரிந்த செயலும் தலைமைத் தன்மையை அவனுக்குரிய தாக்குகின்றன.

இந்திரன் கல்மாரி பெய்வித்தபோது கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்து ஆய்ப்பாடி மக்களையும் அவர்தம் செல்வங்களான ஆநிரைகளையும் காத்ததை ஆழ்வார்கள் பாடுகின்றனர். மாயோன் காத்தற் தொழிற்குரியவன். அக்காத்தற் தொழிலாகிய அருட்சிறப்பு கண்ணன் அவதாரத்தில் மிக வெளிப்படுகின்றது. இந்திரனுக்கு இட்ட உணவைக் கண்ணன் பூதவடிவு கொண்டு உண்டதாகவும் அதனால் இந்திரனுக்குச் சினம் ஏற்பட்டதாகவும் ஆழ்வார்கள் குறிக்கின்றனர்.[22]

ஆய்ப்பாடியில் உள்ள மடுவில் பெருந்துயர் தந்த ஐந்தலை நாகத்தைக் கண்ணன் அடக்கியதை ஆழ்வார்கள் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றனர். ஐந்தலை நாகம் காளியன் என்ற பெயருடையதாகும்.[23] காளியனை அடக்கி அவன் தலையில் நடனமாடிய செய்தியை ஆழ்வார்கள் பாடுகின்றனர். இக் காளியன் சாபவிமோசனம் அடைந்து நற்கதி பெற்றதாகப் பிற்காலக்குறிப்புக் கூறுகிறது. இவ்விரு கதைகளும் ஆய்ப் பாடிக்குத் தலைவனாய் இருந்து ஆயர்களைக் காத்த நிலையை விளக்குகின்றன.

## பகைவெல்லுகை

தலைவனுக்குரிய பண்புகளில் பகைவெல்லுதல் சிறப்பு உடையதாக அமையும். ஆய்ப்பாடியில் வளர்ந்த கண்ணன் வஞ்சகமாய் மறைந்து வந்த அசுரர்களைக் கொன்றமை வஞ்சகத்தை வீரத்தால் வென்றதைக் கூறுகிறது. கண்ணனே மதுராபுரி சென்று கம்சனைக் கொன்றதை ஆழ்வார்கள் பாடுகின்றனர். அவனைக் கொல்வதற்கு முன் அவனால் ஏவப்பெற்ற குவலையாபீடம் என்னும் பட்டத்து யானையைக் கொன்றதுவும்[34] மல்லர்களை அழித்ததுவும்[35] வில்லை முறித்ததுவும்[36] ஆழ்வார்களின் பாடல்கள் வழி அறியலாகின்றன.

பகைவெல்லுதலில் உடல் வலுவைக் காட்டுவனவாக அவை அமைகின்றன. மிக்க பலம் பொருந்திய யானையையும் அதனை இயக்கிய பாகனையும் கொன்றதை ஆழ்வார்கள் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றனர். பெருந்தோள் மல்லர்களை அழித்ததையும் வில்லை முறித்ததையும் ஆழ்வார்கள் சிறப்பாகப் பாடவில்லை. ஒரே காலத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளை ஆழ்வார்கள் நிரலாய் அமைத்தும் பாடவில்லை. கண்ணன் ஆய்ப்பாடியில் வாழ்ந்ததன் நோக்கம் கம்சனுடைய அழிவோடு முற்றுப் பெறுகிறது.

## இறைத்தன்மை

கண்ணனை மாயோனாகக் கருதும் நிலை மிகப்பழங்காலம் முதலே வழங்கி வருகிறது. கண்ணன் ஏனைய கடவுளரினும் மேம்பட்டவனாக ஆழ்வார்களால் போற்றப் பெறுகிறான். தேவர்களின் தலைவனான இந்திரனைக் காட்டிலும் கண்ணன் சிறப்புடையவன் என்பதை அவதாரக்கதை விளக்குகிறது. கடும் சினத்தால் இந்திரன் கல்மாரி பெய்விக்க, கண்ணன் ஆயர்களை கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துக் காத்தான். இந்திரன் வேதங்களில் முக்கியம் வாய்ந்த தேவனாகத் திகழ்ந்ததைக் காணமுடிகிறது. பிற்காலப் புராணங்கள் இந்திரனைத் தாழ்ந்தவனாகக் காட்டுகின்றன. அந்நோக்கில் கண்ணன் இந்திரனை வெற்றிகொண்ட செய்தி ஆழ்வார்களால் பாடப்பெறுகிறது.

இந்திரன் தன்னரசையும் உடைமைப்பொருள்களையும் நரகன் என்னும் அசுரனிடம் இழந்தான். கண்ணன் அவனை அழித்து அவற்றை இந்திரனுக்குத் திருப்பியளித்தான் என்று ஆழ்வார்கள் பாடுகின்றனர்.[27] தன் காதலி சத்தியபாமை கற்பகக்கா வேண்ட இந்திரனுடன் போரிட்டு அதைப் பூவுலகிற்குக் கொண்டு வந்த செய்தியை ஆழ்வார்கள் பாடுகின்றனர்.[28]

தமிழகத்தில் முக்கடவுளர் கொள்கை நிலைபெற்ற போது மற்றை இருவரும் திருமாலை விடத் தாழ்ந்தவர்கள் என்னும் அடிப்படையில் சில புராணக்கதைகள் எழுந்தன. அதன் தாக்கம் கண்ணன் அவதாரத்திலும் வெளிப்படுகிறது. வாணன் என்னும் அசுரன் பற்றிய குறிப்பு சிலம்புக் காலம் முதலே வழங்கி வருகிறது. கண்ணனின் பேரனான அநிருத்தனையும் அவன் காதலி உழையையும் வாணன் சிறைவைத்தான். கண்ணன் குடக்கூத்து ஆடி வாணனைக் கொன்று அவர்களை மீட்டான். இவ்வரலாறு சிலம்பின் உரையில் காணப்பெறுகிறது.[27] ஆழ்வார்கள் இப்புராணக்குறிப்பை இருவகையில் கூறுகின்றனர். 1. கண்ணன் குடக்கூத்தாடியது 2. கண்ணன் வாணனை அழித்தது. வாணனை அழித்ததும் கண்ணன் குடக்கூத்து ஆடியதும் ஆழ்வார்களின் பாடல்களில் இணைத்துக் கூறப்பெறவில்லை. அநிருத்தனையும் உழையையும் மீட்பதற்குக் கண்ணன் வாணனுடன் போரிட்டான் என்பதைத் திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில் கூறுகின்றார். ஆழ்வார்கள் பாசுரங்களில் கண்ணன் குடக்கூத்து ஆடியது பற்றிய செய்தி காணப் படுகிறதேயன்றி அதற்கான கதைக்குறிப்பு ஏதும் காணப் படவில்லை.

திருமழிசையாழ்வார், சிவன், முருகன், பார்வதி முதலான கடவுளர்கள் வாணனுக்குத் துணை வர, கண்ணன் அவர் களையும் வென்று தோற்றோடச் செய்தான் என்று குறிப்பிடுகின்றார்.[30] சைவ வைணவ பேதத்தால் இக்கூற்றில் சிவனும் முருகனும் தொடர்புபடுத்தப் பெற்றுள்ளனர். திருமால் ஆடிய குடக் கூத்தைப் பரிபாடலும் குறிக்கின்றது.[31]

> குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல எம்கோவே[32]
> சீரார் குடமிரண்டேந்தி[33]

என்னும் தொடர்கள் குடக்கூத்தின் தன்மையை எடுத்துரைக் கின்றன.

மேற்கண்ட கருத்துக்களை நோக்க ஏனைய கடவுளரினும் மேம்பட்ட இறைத்தன்மையை உடையவன் கண்ணன் என்பதை விளக்குவதற்கு இப்புராணக்கதைகள் ஆழ்வார்களால் எடுத்தாளப் பெறுகின்றன என்பது விளங்கும்.

## அருட்சிறப்பு

இறைக்குரிய சிறப்புக்களுல் அருட்குணம் மிகப் போற்றப் பெறுகிறது. எல்லாக் கடவுளரின் அருட்குணமும் அவ்வச்சமயப் புராணக்கதைகள் வழி எடுத்தியம்பப் பெறுகின்றன. மற்றைய கடவுளர்க்கு அவ்வகையில் இல்லாத சிறப்பொன்று திருமாலுக்கு உரியதாகிறது. மனிதவடிவில் சமுதாயத்துடன் இணைந்து வாழ்ந்ததே அச்சிறப்பாகும். கண்ணனுடைய அருட்சிறப்பு இரு வகையில் வெளிப்படுகிறது. 1. இவ்வுலக வாழ்வில் ஈடுபட்டு வாழ்ந்தவர்கள் தாம் இழந்தவற்றை வேண்ட கண்ணன் அவர்களுக்கு வேண்டிய பொருள் அருளியமை. 2. இம்மைச் சிறப்பெண்ணாது இறையருள் ஒன்றையே வேண்டியவருக்கு அருளியமை என்னும் இரு வகையிலே அருட்குணத்தை ஆழ்வார்கள் பாடுகின்றனர்.

## உலகவாழ்வுடன் தொடர்புடையவை

தான் பெற்ற பயனுக்காகக் கைம்மாறாய் நன்றி செலுத்துதல் மானிடப்பண்பில் சிறப்புடையது. அக்குணத்தைக் கண்ணன் அவதாரத்தில் மிகுதியாகக் காணமுடிகிறது. தனக்குச் சந்தனம் அளித்த கூனியின் கூன் போகக் கண்ணன் அருளிய செயல் பெரியாழ்வாரால் பாடப்பெறுகிறது .[34]

தன்னை இகழ்ந்தாருக்கும் கண்ணன் அருளிய நிலை கண்ணன் அவதாரத்தில் இடம் பெறுகிறது. சிசுபாலன் கண்ணனை ஏசி அவன் சக்கராயுதத்துக்குப் பலியாகி அருள்பெற்றான். இதை ஆழ்வார்களும் குறிக்கின்றனர். [35] சீமாலிகன் என்னும் கண்ணனின் நண்பன் செருக்குற்று அலைய, கண்ணன் அவனுடைய தலையரிந்து ஆட்கொண்டருளிய நிலையைப் பெரியாழ்வார் பாடுகின்றார் .[36] இவை கண்ணனின் அருட்குணத்தைக் காட்டுவனவாக அமைகின்றன என்று ஆழ்வார்கள் கொள்கின்றனர்.

ஆசாரியன் மாணவன் இருப்பை உணர்த்த் திருமால் அவதரித்தான். கண்ணன் மாணவனாயும் ஆசாரியனாயும் திகழ்ந்த இருவேறு நிலைகள் அவனுடைய அவதார வாழ்வில் அமை கின்றன. கண்ணன் சாந்தீபினி என்னும் முனிவரிடம் கல்வி பயின்றான். அவர் கண்ணனுடைய அருளாற்றலை உணர்ந்து, கடலில் மறைந்த தன் மகனை மீட்டுத்தர வேண்டினார். கண்ணனும் குருதக்கணையாக மறைந்த மகனை மீட்டுக் கொடுத்தான்.[37] வைதிகன் ஒருவன் தான் இழந்த மக்களை மீட்டுத்தரும்படி வேண்ட, கண்ணன் மீட்டுத் தந்தான்.[38]

## கண்ணனும் தேவியரும்

பிற்காலப் புராணங்கள் கண்ணனின் தேவியர் பதினாயிரவர் என்று கூறுகின்றன. ஆழ்வார்களும் இவ்வாறு ஓரிரு இடங்களில் குறிக்கின்றனர். பாகவதம் உருக்குமிணி, சத்தியபாமை, காளிந்தி, சாம்பாவதி, மித்திரவிந்தை, சத்தியவதி, பத்திரை, இலட்சுமணை என்னும் எண்மரைக் கண்ணனின் தேவியராகக் கூறுகின்றது.[39] ஆழ்வார்களும் கண்ணனுக்குரிய தேவியரைப் பற்றிப் பாடுகின்றனர். ஆழ்வார்கள் பாடல்களிலிருந்து மூன்று தேவியரையே அறியலாகிறது. நப்பின்னை, உருக்குமிணி, சத்தியபாமை என்னும் மூவரைப் பற்றிய செய்திகளையே ஆழ்வார்களின் பாடல்கள் வழி அறிய இயலுகிறது. அவற்றுள் நப்பின்னை பற்றிய செய்திகளே மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

நப்பின்னை பற்றிய குறிப்புக்கள் பழைய தமிழ் இலக்கியங் களில் இடம்பெற்றுள்ளன.

வைய மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப்
பெய்வளைக் கையாள் நம்பின்னை தானாம்[40]

என்று சிலம்பும்,

மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவை இஃதாம்[41]

என்று மேகலையும்

நிலமகட்குக் கேள்வனும் நீணிரை நப்பின்னை
யிலவலர்வா யின்னமிர்த மெய்தினா னன்றே[42]

என்று சிந்தாமணியும் நப்பின்னையைப் பற்றிக் கூறுகின்றன.

மேலும்

> உப்பக்க நோக்கி உபகேசிதோள் மணந்தான்
> உத்தர மாமதுரைக் கச்சு[43]

என்னும் பிற்காலப் பாடலில் இடம்பெற்றுள்ள உபகேசி என்பது நப்பின்னையைத்தான் குறிக்கிறது என்பர்.[44] நப்பின்னை என்பதிலுள்ள 'ந' சிறப்புப் பொருளுணர்த்துவதோர் இடைச் சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற் போல; நம்பின்னை (என்பதன்) விகாரமுமாம் ' என்பர் நச்சினார்க் கினியர்.[45]

கண்ணன் தேவியர்களில் உருக்குமிணியும் சத்திய பாமையுமே தலைசிறந்தவர்களாகப் பாகவதம் குறிக்கின்றது. வடமொழி மரபில் கூறப்படும் சத்தியவதியே நப்பின்னை யாகும்.[46] அவளையே கண்ணன் ஏழ்விடைகளை வென்று மணந்தான் என்று அறியலாகின்றது.[47]

நப்பின்னையை நீளாதேவியின் அவதாரமாகக் கொள்ளும் மரபு உண்டு. அந்த அடிப்படையிலேயே ஆழ்வார்கள் நப்பின்னையைப் போற்றித் துதிக்கின்றனர். திருப்பாவைத் தனியனுக்கு வியாக்கியானம் எழுதிய பிள்ளை லோகம் ஜீயர் நப்பின்னையை நீளாதேவியின் அவதாரமாகக் கொள்கிறார்.[48]

நப்பின்னையைப் பற்றி ஆழ்வார்கள் மிகச்சிறப்பாகப் பாடுகின்றனர். முல்லை நில மரபின்படிக் கண்ணன் ஏழ் விடைகளை வென்று நப்பின்னையை மணந்தான் என்னும் செய்தி ஆழ்வார்களின் பாடல்களில் எடுத்துரைக்கப் பெறுகிறது. ' நப்பின்னையின் கேள்வனே ' எனக்குறிக்கும் ஆழ்வார்களின் பாடல்கள் அவளுக்குரிய தனித்தன்மையை உணர்த்துவன. மூன்று தேவியருடன் திருமால் எழுந்தருளியுள்ளதை ஆழ்வார்கள் போற்றுகின்றனர். அம்மூவருள் ஒரு தேவியான நீளையின் சிறப்பை ஆழ்வார்கள் நப்பின்னைக்கு உரியதாக்குகின்றனர். வழிபாட்டு முறையிலும் ஆழ்வார்கள் நப்பின்னைக்கு அளிக்கும் சிறப்பிடத்தை இதன்வழி உணரமுடிகிறது.

உருக்குமிணியைக் கடிமணம் புரிந்தபோது அதனை எதிர்த்த உருப்பனுடன் கண்ணன் போரிட்ட செயலைப்

பெரியாழ்வார் குறிக்கின்றார்.[49] தன் காதலி கற்பகமரம் வேண்ட, கண்ணன் அதனைத் தேவலோகத்திலிருந்து எடுத்து வந்து அளித்ததை ஆழ்வார்கள் குறிக்கின்றனர். [50] இச்செயல் சத்தியபாமையின் பொருட்டு நிகழ்ந்ததாகப் பிற்காலப் புராணங்கள் கூறுகின்றன. மேற்கண்டவை ஆழ்வார்களின் பாடல்களிலிருந்து கண்ணனுடைய தேவியர்கள் பற்றி அறியலாகும் கருத்துக்களாகும்.

## கண்ணனும் ஆய்ச்சியரும்

ஆய்ப்பாடியில் வாழ்ந்த கண்ணன் ஆயர்மகளிருடன் விளையாடிய செயல்கள் விரிவாக ஆழ்வார்களால் பாடப் பெறுகின்றன. ஆழ்வார்கள் அவற்றை இரு நிலைகளில் பாடுகின்றனர். அவையாவன 1. ஆயர்மகளிருடன் விளையாடியமை 2. ஆயர்மகளிர்க்குரிய தயிர், வெண்ணெய் முதலானவற்றைக் களவாடியமை. இந்நிகழ்ச்சிகளைக் கண்ணன் செயல்களாகவும் யசோதையிடம் முறையிடும் ஆய்மகளிரின் கூற்றுகளாகவும் ஆழ்வார்கள் அமைத்துப்பாடுகின்றனர். பெரியாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் பாடல்களில் இவை மிகுதியும் அமைகின்றன. கண்ணனின் பேரழகைக் கண்டு ஆய்மகளிர் தம்மை இழந்ததைப் பெரியாழ்வார் பாடுகின்றார்.[51] ஆயர் மகளிரிடம் கண்ணன் செய்த பொல்லாதனவற்றையும் ஆய்ச்சியர் கூற்றாகக் கூறுகின்றார். [52] பிருந்தாவனத்தே கண்ணனைக் கண்டவிதத்தை ஆய்ச்சிறுமியர் கூற்றாக ஆண்டாள் பாடுகின்றார்.[53] சிற்றில் சிதையேல் என்று கண்ணனை வேண்டும் பாடல்களும் நாச்சியார் திருமொழியில் இடம் பெற்றுள்ளன.[54] கண்ணனுடன் பின்சென்ற தன்மகளை எண்ணித் தாயாய்ப் பாடும் பெரியாழ்வாரின் நிலை ஆண்டாளைப் பிரிந்த பின் ஏற்பட்ட உணர்வை விளக்குவது என்பர். [55]

கண்ணன் ஆயர்மகளிர் நீராடும் போது அவர்களுடைய உடைகளை எடுத்துக் குருந்தம் ஏறியதை ஆழ்வார்கள் பாடுகின்றனர். இந்நிகழ்ச்சி அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது.[56] கண்ணன் குருந்தொசித்தான் என்னும் கருத்து அதன் வழி விளக்கப்பெறுகிறது. ' கோபியர் துகில்களைக் கண்ணபிரான் கவர்ந்தபின் எதிர்வந்த பலதேவன் காணாவகை அம்மகளிர்

ஒருங்கு மறையும்படி அப்பிரான் குருந்தமரத்துக் கொம்பை வளைத்துக் கொடுத்தார் '[எ] என்பது சங்ககாலக் குறிப்பாகும். இதைப் பிற்காலப் புராணங்கள் வேறுவகையில் உரைக்கின்றன. அசுரன் ஒருவன் குருந்த மரமாய் நிற்கக் கண்ணன் அதிலேறிச் சாய்த்தான் என்று அவை கூறுகின்றன. மடுவில் நீராடிய மகளிரின் ஆடைகளைக் கொண்டு கண்ணன் குருந்தமரம் ஏற அவர்கள் தம்மாடையினை வேண்டுவதாக ஆண்டாள் பாடும்பாடல்கள் சிறப்புடையனவாக அமைகின்றன. [ஐ]

ஆயர்மகளிருடன் கண்ணன் ஆடிய கூத்தினைக் குரவைக் கூத்து என்னும் பெயரால் ஆழ்வார்கள் குறிக்கின்றனர். குரவை என்பது ஆண் பெண் இருவரும் ஆடும் ஆடல் என்பதைச் சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. சிலப்பதிகாரம் இதை விரிவாக எடுத்துரைக்கின்றது. [ஸ] இந்திரனின் பெருஞ்சினத்தால் பெய்விக்கப்பெற்ற மழையிலிருந்து காக்க கோவர்த்தன மலையைக் கண்ணன் குடையாகப்பிடித்தான். அதன்பின்னர் ஆய்மகளிருடன் அவன் இணைந்து ஆடிய நடனம் 'இராசலீலா' என்று கூறப்பெறுகிறது. அந்நடனமே குரவைக்கூத்தாகும் என்பர். [ல] ஆயினும் ஆழ்வார்கள் இதனைக் குறிக்கவில்லை. தமிழ் மரபுக்கே உரிய குரவையாகிய ஒருவகைக் கூத்தினையே குறிப்பிடுகின்றனர்.

ஆய்ச்சியரிடம் கண்ணன் செய்த குறும்புச்செயல்கள் கற்பனைப் பாங்குடன் திகழ்வன. ஆழ்வார்கள் அவற்றை இலக்கியச்சுவை மிக விளங்கப் பாடுகின்றனர். பால், வெண்ணெய் திருடிய நிகழ்ச்சிகளைக் கூறும்போது ஆழ்வார் களின் கற்பனையாற்றலும் புலமைத்திறமும் வெளிப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் வடமொழிப் புராணங்களிலும் இடம் பெற்றுள்ளன. ஆழ்வார்களின் மனப் பாங்குக்கேற்ப அவை வெவ்வேறாக அமைகின்றன. கண்ணனுடன் நீங்காநிலையில் திகழ்வது அவனுடைய புல்லாங்குழலாகும். புல்லாங்குழல் பற்றிய சிறப்பைப் பெரியாழ்வார் எடுத்துரைக்கின்றார். இவ்வுலகவுயிர்கள் எல்லாம் குழலின் இசைக்கு வயப்பட்டுத் தம்மை இழந்த நிலையை ஒரு திருமொழியில் பாடுகிறார். [ள]

## செயற்கரியன செய்யும் ஆற்றல்

கண்ணன் மனிதவடிவில் இறைத்தன்மையை உள்ளடக்கிய உருவாகத் திகழ்வதை அவதாரக் கதைகள் விளக்குகின்றன. எளியமனிதனுக்கும் விளங்கும் வகையில் அவதாரநிகழ்ச்சிகள் சிலவற்றில் செயற்கரியன செய்யும் அவனுடைய ஆற்றல் வெளிப்படுகின்றது. இத்தகைய நிகழ்ச்சிகளால்தான் கண்ணன் அவதாரம் ஏனைய அவதாரங்களிலிருந்து சிறந்து விளங்குகிறது எனலாம்.

இப்பூவுலகவாழ்வில் இறப்பே முடிவானது. கண்ணனும் ஓர் அம்பால் இறந்தான் என்றும், தன் திருவடிச் சோதிக்குத் திரும்பினான் என்றும் பாகவதம் கூறுகின்றது.[a] இத்தகைய இறப்பைப் பிறர்க்குப் போக்கிய சிறப்பு கண்ணனுக்கு அமைகிறது. கண்ணன் வரலாற்றில் இந்நிகழ்ச்சி இரு இடங்களில் கூறப்பெறுகின்றது. கண்ணனின் ஆசிரியராகிய சாந்தீபினிமுனிவர் வேண்ட கடலில் மாண்ட அவருடைய புதல்வனை மீட்டுக் கொடுத்தமை ஆழ்வார்களால் பாடப் பெறுகிறது.

வைதிகன் ஒருவன் நான்கு பிள்ளைகளை இழக்க அவர்களைக் கண்ணன் கூட்டிவைத்த செய்தி ஆழ்வார்கள் பாடல்களில் இடம்பெற்றுள்ளது. அர்ச்சுனன் அவர்களை மீட்டுத்தர முயல அது இயலாமையின் கண்ணன் அவனைத் தேர் செலுத்தச் சொல்லி வைதிகனோடு அண்டத்துக்கு அப்புறம் போய் அவர்களை ஓரிடத்தில் நிறுத்தி, தான் பரமபதம் புகுந்து தன் திவ்விய செளந்தர்யத்தைக் கண்டுகளிக்கைக்காக அழைப்பித்து வைத்த அந்தப் பிள்ளைகளைப் பூர்வ ரூபத்தில் ஒன்றும் குலையாமல் கொண்டு வந்து கொடுத்தருளினான் என்ற வரலாறு பிற்காலப்புராணங்களில் எடுத்துரைக்கப் பெறுகின்றது. இக்கதை பற்றிய குறிப்புக்கள் ஆழ்வார்கள் பாடல்களிலேயே முதலில் இடம் பெற்றுள்ளன.

## கண்ணனும் பாரதமும்

கண்ணனுடைய இளம்பருவச் செயல்களைக் கூறும் பழைய தமிழ் இலக்கியங்கள் கண்ணன் வரலாறு முழுவதையும்

எடுத்துரைக்கவில்லை. சில குறிப்புக்களே ஆங்காங்கு அமைந்துள்ளன. பாண்டவர்களுடன் இயங்கிய நிலையும் அவ்வாறே அமைந்துள்ளது. மிகப் பழமையான பாரதநூல் தமிழில் இருந்தது என்றும் அது கிடைக்கவில்லை என்றும் கூறுவர். மிகப் பிற்காலத்தே தோன்றிய வில்லிபுத்தூராழ்வார் பாரதமே முழுமையான பாரதமாகும். ஆழ்வார்கள் குறிப்பிடும் பெரும் பாலான நிகழ்ச்சிகள் அதில் இடம்பெற்றுள்ளன. ஆழ்வார்கள், தம் பாடல்களில் பாரதப்போருக்குக் கண்ணனே காரணம் என்று கூறுகின்றனர்.

கௌரவர்கள் ஆணையினால் பாண்டவர்கள் கானக வாழ்க்கை மேற்கொண்டிருந்தபோது அர்ச்சுனன் காண்டவ வனத்தைத் தீயால் அழியச் செய்தான். இச்செய்தி சங்க இலக்கியத்திலும் இடம்பெற்றுள்ளது.[63] ஆழ்வார்களும் இச் செய்தியைக் கூறுகின்றனர். காண்டவவனத்தை அழித்ததற்குக் கண்ணனே காரணமாவான் என்று குறிக்கின்றனர். பாரதப் போருக்கு முன்னால் பாண்டவர்களுடன் இணைந்த நிலையில் கூறப்பெறும் குறிப்பு இதுவொன்றே.

## தூது நடந்தது

பாண்டவர்களுக்காகக் கண்ணன் தூதுநடந்த செய்தி சிலம்பில் இடம் பெற்றுள்ளது.[64] தூது சென்ற கண்ணன் கௌரவர்களிடம் பாண்டவர்களுக்காக ஐந்து ஊர்களையாவது வேண்டினான் என்று பெரியாழ்வார் பாடுகின்றார்.[65] தூதின் போது வஞ்சகச் செயலைச் செய்ய எண்ணிய துரியோதனனைக் கண்ணன் அவன் தவறு உணருமாறு செய்தான்.[66] அவையில் துச்சாதனனை அழலவிழித்த நிலையும்[67] மல்லரை அழித்ததும்[68] வஞ்சகத்தாலிட்ட ஆசனத்தை அறிந்து கண்ணன் பேருரு எடுத்ததும்[69] ஆழ்வார்களால் பாடப்பெறுகின்றன.

## தேரோட்டியது

பாரதப் போரில் துரியோதனன் வேண்டிக் கொண்டதற்கிணங்க கண்ணன் தன்படைகள் அனைத்தையும்

அவனுக்களித்துத் தான்மட்டும் பாண்டவர் பக்கம் சேர்ந்தான் என்று பாரதம் கூறுகின்றது.[70] பாண்டவர்களுக்காகக் கண்ணன் தேரோட்டினான். இதை,

> போரொக்கப் பண்ணி இப்பூமிப்பொறை தீர்ப்பான்
> தேரொக்க ஊர்ந்தாய் செழுந்தார் விசயற்காய் [71]

என்று குறிப்பர். இவ்வாறு தேரோட்டியது பூமியின் பாரம் தீர்ப்பதற்காகத்தான் என்று ஆழ்வார்கள் பாடுகின்றனர். கண்ணன் தேரோட்டிய செயல் ஒன்றே அர்ச்சுனன் உயிரைக்காத்தது என்பது அறியத்தக்கது. பாரதப்போரில் அர்ச்சுனனுடைய குதிரைகளின் தாகம் போக்குதல் பொருட்டு வருணாஸ்திரம் பயன்படுத்திப் பூமியினடியில் உள்ள நீரை வெளிக் கொணர்ந்து அவை அருந்தும்படிச் செய்து போரிட்டான் என்று பெரியாழ்வார் பாடுகின்றார். [72]

பார்த்தன் மகன் அபிமன்யுவை வஞ்சனையால் கொன்ற சயத்திரதனை அழிக்கும் பொருட்டுக் கண்ணன் தன்னாழியால் சூரியனை மறைத்த செய்தி,

> ஆழிகொண்டு அன்று இரவி மறைப்பச் சயத்திரதன்
> தலையைப்
> பாழில் உருளப்படை பொருதவன். [73]

என்று எடுத்துரைக்கப்பெறும். பகைவர் அழியும் பொருட்டாகக் கண்ணன் தன் சங்கினை ஊதிய செய்தியை ஆழ்வார்கள் பாடுகின்றனர்.[74] சிவனிடம் 'பாசுபதாஸ்திரம்' பெறச் சென்றபோது கண்ணன் காலடியில் இட்டமலர் சிவனின் திருமுடியில் இருப்பதை அர்ச்சுனன் கண்டதை நம்மாழ்வார் பாடுகின்றார்.[75] முத்தொள்ளாயிரம் இதைக் குறிப்பிடுகிறது. [76] பாரதப்போர் நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் கண்ணனே காரணமாகக் கூறப்பெறுகிறான். போரில் கண்ணன் பாண்டவர் களுக்கு அருள் செய்ததாக ஆழ்வார்கள் பாடுகின்றனர். பாண்டவர் கௌரவர் போரில் அவர்கள் குலம் முழுமையும் அழிக்கப் பெற்றது. பிள்ளைப் பாண்டவரும் அழிந்தனர். முடிவில் அவர்களுடைய சந்ததியாகத் திகழ உத்தரையின் வயிற்றில் இருந்த கருவைக் கண்ணன் காத்துப் பாண்டவர்குலம்

அழியாமல் செய்தான். இவ்வரலாறு பாகவதத்தில் இடம் பெற்றுள்ளது.[77] பெரியாழ்வார் மட்டுமே இதைக் குறிக் கின்றார்.[78]

பாரதப்போர் பற்றிய பல நிகழ்ச்சிகள் ஆழ்வார்களால் பாடப் பெறுகின்றன. வடமொழிப் பாரதத்திலும் வில்லி பாரதத்திலும் அவை இடம்பெற்றுள்ளன. கண்ணன் பகவத்கீதை உரைத்ததைத் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.[79]

பாரதப்போருக்குப்பின் கண்ணன் துவராபதி நகர் அடைந்து அரசாண்டான் எனப்பாகவதம் கூறுகிறது. கண்ணனைத் துவராபதிக் காவலன் என்று ஆழ்வார்கள் உரைக்கின்றனர். கண்ணனை நாரதர் கண்டு வழிபட்டமை பெரியாழ்வார் பாடலில் அமைகிறது.[80] கண்ணன் மகனான பிரத்தியும்நன் பற்றிய வரலாறு துவராபதி வாழ்வில் கூறப்பெறுகின்றது. பிரத்தியும்நனே காமனாவான் என்பர்.

ஆழ்வார்கள் பாடியுள்ள கண்ணன் அவதார நிகழ்ச்சிகள் வழி அறியலாகும் செய்திகள்.

1. பழந்தமிழ் இலக்கியங்கள் கண்ணன் வரலாற்றைத் தெளிவாகக் கூறவில்லை. ஆழ்வார்கள் பாடும் குறிப்புகளைக் கொண்டே கண்ணன் அவதார நிகழ்ச்சிகளைப் பெரிதும் அறியமுடிகிறது.

2. ஆழ்வார்கள் பாடியுள்ளவற்றை நோக்க வடமொழி நூல்களில் இடம்பெற்றுள்ள பல கதைக்குறிப்புக்களை அறிய முடிகிறது. அவர்கள் காலத்துக்குப்பின் மொழிபெயர்க்கப் பெற்றுள்ள பல தமிழ்ப் புராணங்களில் அவை இடம் பெற்றுள்ளன. தமிழக வழக்கில் நிலவிய பல கதைகளையும் காட்டவல்லன.

3. கண்ணன் ஆயர்மகளிருடன் விளையாடிய நிகழ்ச்சிகள் ஆழ்வார்களின் கற்பனைத் திறனைக் காட்டவல்லன.

4. ஆழ்வார்கள் கண்ணன் அவதாரத்தை மிகுதியும் பாடியுள்ளனர். அதற்கான காரணங்கள்.

அ) அவதார நிகழ்ச்சிகள் மிகுந்துள்ளமை.

ஆ) இலக்கியநயம் மிகுத்துப் பாடப் பிள்ளைப் பருவச்செயல்கள் இடம் கொடுத்தமை.

இ) கண்ணனின் வஞ்சகச் செயல்கள் மிகுதியும் இடம்பெற்றுள்ளமை.

ஈ) பலரறிந்த அவதார நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளமை.

5. மனிதவடிவில் கண்ணன் வாழினும் இறைத்தன்மை மிகுதியாக ஆழ்வார்களால் பாடப்பெறுகின்றது.

ஆழ்வார்கள், கண்ணன் அவதாரத்தை மிகுதியும் பாடியுள்ள பாங்கு மேற்கண்ட கருத்துரைகளால் இனிது விளங்கும்.

## குறிப்புக்கள்

1. தொல்காப்பியம். நூற்பா. 931.
2. முமுட்சுப்படி. மூலம். 217.
3. தத்வத்திரயம். மூலம். 181.
4. பெரியாழ்வார் திருமொழி. 1. 2. 16.
5. மேற்படி. 5. 3. 1.
6. மேற்படி. 3. 2. 8.
7. மேற்படி. 1. 1. 3., 2. 4. 2,
8. மேற்படி. 1. 2. 6.
9. அண்ணங்கராசாரியர், பெரியாழ்வார் திருமொழி திவ்யார்த்த தீபிகை உரை. ப. 33.
10. விஷ்ணுபுராணம். ப. 95.
11. சிலப்பதிகாரம். காதை. 17. படர்க்கைப் பரவல். பா. 3. கலித்தொகை. பா. 103. அடி. 53.
12. பெரியதிருமொழி. 3. 10. 7.
13. பெரியாழ்வார் திருமொழி. 1. 2. 11.
14. அண்ணா (உரை ), ஸ்ரீமத் பாகவத சாரம். 10. 9. 22.
15. பெரியதிருமொழி. 9. 8. 7.
16. கலித்தொகை. பா. 103. அடி. 53.
17. அமலனாதிபிரான். பா. 8.

18. திருநெடுந்தாண்டகம். பா. 8.
19. திருவாய்மொழி. 6. 5. 9.
20. சிலப்பதிகாரம். காதை. 17. பாட்டு. 1.
21. தொல்காப்பியம். நூற்பா. 931.
22. பெரியாழ்வார் திருமொழி. 3. 3. 8.
23. மேற்படி. 1. 5. 6.
24. திவ்வியப்பிரபந்தத்தில் எழுபத்தைந்து குறிப்புக்கள்.
25. திவ்வியப்பிரபந்தத்தில் இருபத்தெட்டு குறிப்புக்கள்.
26. பெரியதிருமொழி. 2. 3. 1; 7. 8. 9.
27. பெரியாழ்வார் திருமொழி. 4. 3. 3.
28. பெரியதிருமொழி. 4. 6. 8.
29. சிலப்பதிகாரம். அடியார்க்கு நல்லார் உரை. ப. 4.
30. திருச்சந்தவிருத்தம். பா. 53.
31. பரிபாடல். 3. அடி. 83.
32. பெரியாழ்வார் திருமொழி. 2. 7. 7.
33. சிறியதிருமடல். கண்ணி. 12.
34. பெரியாழ்வார் திருமொழி. 1. 8. 4.
35. பெரியாழ்வார் திருமொழி. 4. 3. 5., நாச்சியார் திருமொழி. 4. 7. திருவாய்மொழி. 7. 5. 3.
36. பெரியாழ்வார் திருமொழி. 2. 7. 8.
37. மேற்படி. 4. 8. 1, பெரியதிருமொழி. 5. 8. 7.
38. பெரியாழ்வார் திருமொழி. 1. 5. 7.,4. 8. 2., பெரியதிருமொழி. 5. 8. 8. திருவாய்மொழி. 8. 10. 5.
39. அண்ணா, (உரை), ஸ்ரீமத் பாகவத சாரம். 11. 58. 59.
40. சிலப்பதிகாரம். காதை. 17. அடி 16-17.
41. மணிமேகலை. காதை. 19. அடி. 65-66.
42. சீவகசிந்தாமணி. பா. 482.
43. திருவள்ளுவமாலை, பா. 21.
44. இராகவையங்கார், மு., ஆராய்ச்சித்தொகுதி, ப. 56.
45. சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியர் உரை ப. 244.
46. அருணாசலக் கவுண்டர், கு., பேராசிரியர், தமிழ்ப்பண்பாட்டில் வைணவம், ப. 53.
47. அண்ணா, (உரை) ஸ்ரீமத்பாகவத சாரம், 11. 58. 32.
48. இராகவையங்கார், மு., ஆராய்ச்சித் தொகுதி, ப. 60.
49. பெரியாழ்வார் திருமொழி. 4. 3. 1.

50. மேற்படி. 1. 9. 9., 3. 9. 1.
பெரியதிருமொழி. 3. 4. 8., 4. 6. 8.
51. பெரியாழ்வார் திருமொழி. 3. 4.
52. மேற்படி. 2. 9.
53. நாச்சியார் திருமொழி. 14 ஆம் திருமொழி.
54. மேற்படி. 2 ஆம் திருமொழி.
55. பி. ஸ்ரீ, திவ்வியப் பிரபந்த சாரம், ப. 27.
56. அகநானூறு. பா. 59. அடி. 3-7.
57. இராகவையங்கார், மு., ஆராய்ச்சித் தொகுதி, ப.63.
58. நாச்சியார் திருமொழி. 3 ஆம் திருமொழி
59. சிலப்பதிகாரம். அடியார்க்கு நல்லார் உரை. ப. 48.
60. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம், ப 53.
61. பெரியாழ்வார் திருமொழி. 3. 6.
62. நடராஜன், அ. லெ., ஸ்ரீமத் பாகவதம், ப. 36.
63. பெரும்பாணாற்றுப்படை. அடி. 47. 48.
64. சிலப்பதிகாரம். காதை. 17. படர்க்கைப் பரவல். 3.
65. பெரியாழ்வார் திருமொழி. 2. 6. 5.
66. மேற்படி. 1. 8. 5.
67. மேற்படி.
68. பெரியதிருமொழி. 9. 1. 8 .
69. மேற்படி. 9. 1. 8.
70. வில்லிபாரதம். பா. 2435.
71. பெரியாழ்வார் திருமொழி. 1. 8. 6.
72. மேற்படி 4. 2. 7.
73. மேற்படி. 4. 1. 8.
74. மேற்படி. 3. 3. 5., பெரியதிருமொழி. 6. 7. 8., 8. 5. 4.
மூன்றாம் திருவந்தாதி. 60.
75. திருவாய்மொழி. 2. 8. 6.
76. முத்தொள்ளாயிரம். பா. 3.
77. நடராஜன், அ.லெ., ஸ்ரீமத் பாகவதம், ப. 25.
78. பெரியாழ்வார் திருமொழி. 4. 9. 6.
79. நான்முகன் திருவந்தாதி. பா. 50,71.
திருவாய்மொழி 4. 8. 6.
80. பெரியாழ்வார் திருமொழி. 4. 9. 5.

# 5. புராணக்கதைகள்

புராணக்கதைகளும் குறிப்புக்களும் இலக்கியங்களுக்கு ஒருவகையில் அடிப்படையாய் அமைபவை. தொடக்க காலத்தில் தோன்றிய புராணங்கள் உலகத் தோற்றத்தை மிகுதியாக எடுத்துரைக்கின்றன. அவை கற்பனை வடிவுடன் அமையினும் மக்களின் ஊகித்துணரும் ஆற்றலை விளக்கு கின்றன. வழக்கில் இருந்த அவை வடிவம் பெற்றன. அவை, காலந்தோறும் தோன்றி வளர்ந்த இலக்கியங்களில் பல வகைகளிலும் இடம் பெற்றன எனக்கூறின் மிகையாகாது.

தமிழ் இலக்கியக்கியங்களில் அவை வளர்ந்த நிலையைச் சில வரையறைகளுக்குள் அடக்கலாம்.

1. புராணக்கதைகள் குறிப்புக்களாக இடம் பெற்றமை.
2. அவை முழுவதுமாக இலக்கிய வடிவம் பெற்றமை.
3. ஒரு கருத்தை விளக்க அவற்றை எடுத்தாண்டமை.

இம்மூன்று முறைகளும் எல்லா இலக்கியங்களுடனும் ஒரு வகையில் தொடர்புடைவை எனக்கூறலாம். தற்காலத்தில், புதுக்கருத்துக்களை விளக்கும் புதுக்கவிதைகளில் கூடப் புராணக்கதைக் குறிப்புகள் இடம் பெறுகின்றன. இவ்வடிப் படையில் ஆராயின் இலக்கியத்தில் இவற்றின் பங்கு எத்தகையது என்பது விளங்கும்.

இந்திய இலக்கிய வகைகளில் புராணங்கள் கதைகளின் இருப்பிடமாகத் திகழ்கின்றன. இலக்கியத்தில் எடுத்தாளப் பெறும் அவை பதினெண் புராணங்களிலோ, உபபுராணங் களிலோ, தலபுராணங்களிலோ இடம்பெற்றிருக்கும். அவ் வகையில் கதைகளின் ஊற்றாக அவை விளங்குகின்றன.

புராணக்கதைகளை முழுவதுமாகப் பாடும் வகையில் அமையும் இலக்கியங்களை நீக்கிக் கதைக்குறிப்புக்களைக்

கொண்டுள்ள மற்றைய இலக்கியங்களை ஆராயின் அவற்றில் இடம் பெறும் புராணக்கதைக் குறிப்புக்களைப் புலவர்கள் மூவகைகளில் எடுத்தாண்டுள்ளதை உணரலாம். 1.இலக்கிய உத்தியாக எடுத் தாண்டுள்ளமை 2.கருத்தை விளக்க எளிமைக்காக எடுத்தாண்டுள்ளமை 3.நுண்பொருள்களை விளக்க எடுத்தாண்டுள்ளமை என்பன அவை.

## இலக்கிய உத்தி

முல்லைப்பாட்டு மேகம் எழுந்தநிலையை ஓர் உவமை யுடன் விளக்குகிறது.

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல், போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி [1]

என்னும் தொடர்கள் வருணனையாக அமையாது புராணக்கதை குறிப்பு ஒன்றை உவமையாகக் கொண்டு திகழ்கிறது. இவ் வகையான இலக்கிய உத்திகள் தமிழில் பல இலக்கியங்களிலும் கையாளப் பெற்றுள்ளன.

## கருத்தெளிமையாக்கல்

புலவர்கள் தாம்சொல்ல விரும்பும் கருத்தை எளிமையாக எடுத்துக்கூறப் பல உத்திகளைக் கையாளுகின்றனர். யாவரும் அறிந்த செய்தியைக் கூறித் தெளிவிக்கும் முறையும் அதில் ஒன்று. அவ்வகையில் புராணக்கதைக்குறிப்புக்கள் சிறப்பிடம் பெறு கின்றன. பெண்ணழகில் ஈடுபட்டவர் தன்னிலை இழப்பர் என்பதைப் பழமொழி நானூறு,

விழுமிழை நல்லார் வெருள்பிணைபோல் நோக்கம்
கெழுமிய நாணை மறைக்கும் - தொழுநையுள்
மாலையும் மாலுள் மயக்குறுத் தாணஃதால், அச்
சால்பினைச் சால்பறுக்கு மாறு [2]

என்னும் இப்பாடல் வழிவிளக்குகிறது. இதில் நப்பின்னையிடம் கண்ணன் மயங்கியநிலை எடுத்துரைக்கப் பெறுகிறது. இத்தகைய முறை பல இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளது.

## நுண்பொருள்விளக்கம்

புராணக்கதைகளைக் கூறி நுண்பொருள்களை விளக்கும் முறை சமயத் தத்துவவிளக்கங்களில் மிகுதியும் இடம் பெற்றுள்ளது. சைவம் வைணவம் ஆகிய இருசமய சாத்திர நூல்களும் அதற்குச் சான்று பகர்கின்றன. சிவஞானபோதம் ஞானம் பெறுவதற்கான நிலைக்கு மாணிக்கவாசகரின் செயலைச் சான்றாகக் காட்டுகிறது.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே. [3]

என்னும் நூற்பா அதற்குச் சான்று பகரும்.

## ஆழ்வார்களும் கதைக்குறிப்புக்களும்

திருமாலின் அவதாரங்கள் பற்றி ஆழ்வார்கள் பாடுவன எல்லாம் திருமாலின் சிறப்பை எடுத்து விளக்குகின்றன. அவதாரச் செயல்களன்றித் திருமாலைப் பற்றிய ஏனைய புராணக்குறிப்புக்களும் சிவனைப் பற்றிய புராணக்கதைக் குறிப்புக்களும் பிற புராணக்குறிப்புக்களும் ஆழ்வார்களின் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றை ஐந்துவகைகளில் அடக்கலாம்.

1. திருமாலின் முழுமுதல் தன்மையை விளக்கும் கதைக்குறிப்புக்கள்.
2. சிவனைப் பற்றிய குறிப்புக்கள்.
3. திருமால் வடிவுடன் நீங்கா இடம் பெறுவன பற்றிய குறிப்புக்கள்.
4. திருமால் அடியவர் பற்றிய குறிப்புக்கள்.
5. அரசர்கள் பற்றிய குறிப்புக்கள்.

என்பன அவை.

## திருமாலின் முழுமுதல் தன்மை

ஆழ்வார்கள் பாடல்களும் அவற்றில் இடம்பெற்றுள்ள கதைக்குறிப்புக்களும் திருமாலின் முழுமுதல் தன்மையை விளக்கவந்தவை என்பதில் ஐயமில்லை. ஆழ்வார்கள் எடுத்தாண்டுள்ள சில குறிப்புக்கள் ஏனைய கடவுளர்க்கு இல்லாத சிறப்பைத் திருமாலுக்கு ஏற்றியுரைக்கின்றன. அத்தகைய குறிப்புக்கள் ஆழ்வார்களின் உளப்பாங்கை வெளிப்படுத்துகின்றன.

## நான்முகனைப் படைத்தது

உயிர்களின் படைப்பிற்குக் காரணமானவன் நான்முகனே என்பதைச் சைவம் வைணவம் இரண்டும் ஏற்கின்றன. காத்தல் தொழில் திருமாலுக்குரியது என்பதும் அவ்வாறே ஏற்றுகொள்ளப்பெறுகிறது. ஆயினும் வைணவர்கள் முத்தொழிலையும் செய்யும் ஆற்றல் உடையவன் திருமாலே என்றும் ஏனைய இரு கடவுளர்களையும் இயக்குபவன் அவனே என்றும் கூறுகின்றனர். அதன் அடிப்படையில் நான்முகனைத் திருமாலே தோற்றுவித்தான் என்று புராணங்கள் கூறுகின்றன. திருமாலின் உந்தித் தாமரையில் நான்முகன் தோன்றினான். நான்முகன் அவ்வாறு தோன்றிய செய்தி சங்க இலக்கியத்திலேயே கூறப்பெறுகிறது.[4] நான்முகன் தோன்றிச் சிவனைப் படைத்தான் என்பது ஆழ்வார்களுடைய கொள்கை.[5]

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

தோற்றம், திதி, ஒடுக்கம் ஆகிய முத்தொழில் உடைமை சமயக்கடவுளர்க்கு உரைக்கப்பெறும். திருமாலை வழிபட்ட ஆழ்வார்கள் அவற்றைத் திருமாலுக்குரியனவாகப் பாடுவதில் பெருவிருப்புக் கொண்டுள்ளனர். படைத்தற் கடவுளைப் படைத்த பெரும் பெருமை திருமாலுக்குரியதாகிறது. நான்முகனை உந்தியில் தோற்றுவித்த நிலையை,

> உய்ய உலகு படைக்க வேண்டி
> உந்தியில் தோற்றினாய் நான்முகனை[6]

எனப் போற்றக் காணலாம். இவ்வாறு தோற்றுவிக்கப் பெற்றவனைச் சதுமுகன்[7], அயன்,[8] திசைமுகன்,[9] பிரமன்[10] என ஆழ்வார்கள் குறிக்கின்றனர்.

**கதைக்குறிப்பு**

நான்முகன் தோற்றுவிக்கப் பெற்றதைப் புராணங்கள் பலவும் விரிவாக எடுத்துரைக்கின்றன.

> ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா
> அன்று நான்முகன் தன்னொடு தேவர் உலகொடு
> உயிர்படைத்தான்[11]

என்னும் நம்மாழ்வார் பாசுரம் கொண்டு நான்முகன் தோற்றவிக்கப்பட்டதை உணரலாம். 'வேறுபட்ட பிறவி உடையவராய் நடை கற்ற வானோர் பலரும் யோனிகளைத் தத்தமது அதிகாரத்துக்குத் தக்கனவான மரியாதைகள் உண்டு. படைத்தல் முதலியவைகள்; அவற்றில் வந்தால் அறிவித்த சர்வேஸ்வரன் பக்கல் இருகால் மட்டுச் சென்று கேள்வி கொள்ள வேண்டாதபடி கற்று இருப்பவரான வானோர் பலரும் முனிவரும் ஆன பிறவிகளை உடையவர்களை. அவர்கள், முனிவர் எழுவர், பிரமர் பதின்மர், உருத்திரர் பதினொருவர், சூரியர் பன்னிருவர், வசுக்கள் எண்மர் இப்படிக் கூறப்படுகின்றவர். நீ படை என்று முந்துற நான்முகங்களை உடைய பிரமனைப் படைத்தான்'[12] என்று நான்முகன் படைக்கப்பெற்றமை விளக்கப்பெறும்.

**கதைச்சிறப்பு**

திருமாலின் இயக்குமாற்றலை விளக்க எழுந்தது இக்கதை. நான்முகன் திருமாலின் நாபியின் நற்கமலத்திலிருந்து தோன்றியவன் என்று ஆழ்வார்கள் குறிக்கின்றனர். உலகப் பொருள்கள் அனைத்திற்கும் காரியம், காரணம் இரண்டையும் ஆராய்வது சமயம். அவ்வடிப்படையில் திருமால்தான் அனைத்தையுமே தோற்றுவித்தான் என்று வைணவம் கூறுகிறது.

> மேவித்தொழும் பிரமன்சிவன் இந்திரனாதிக் கெல்லாம்
> நாவிக்கமல முதற்கிழங்கே[13]

என்று நம்மாழ்வார் போற்றும் நிலை மேற்கூறிய கருத்துக்குச் சான்றாகும். திருமால் தோற்றுவித்த நான்முகனே சிவனைப் படைத்தான் என்று திருமழிசையாழ்வார் பாடுகின்றார். [14] நான்முகனுடைய மூக்கிலிருந்துதான் திருமால் வராகமாய் வெளிப்பட்டான் என்று பாகவதம் கூறுகிறது. [15] இவற்றை நோக்க வைணவத்தில் நான்முகனுக்கு உரிய இடத்தை அறிய முடிகிறது.

உயிர்கள் படைப்பைப் பொறுத்தவரை நான்முகனே முதலில் படைக்கப்பெற்றவன் என்பதை எல்லாப் புராணங்களும் கூறுகின்றன. ஆயினும் சைவம் நான்முகனும் ஊழிக்காலத்தில் சிவனால் தன்னுள் அடக்கப்பெறுவான் என்று கூறுகிறது. அதை நோக்க நான்முகனுக்கு முக்கடவுளர் கொள்கையில் சிறப்பிடம் இல்லாமையை உணரலாம்.

**கடல் கடைந்தது**

தேவர்களும் அசுரர்களும் கடல் கடைந்தது பற்றிய புராணக் கதை மிகப்பரவலாக வழங்கி வருகிறது. திருமாலே அதற்குக் காரணமானவன் என்பதை வைணவ நூல்கள் வலியுறுத்துகின்றன. சைவம் சிவனே காரணமானவன் என்று கூறுகின்றது. அதனை,

மாலாயவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாயதேவர் பகரில் ஆமுதூட்டப் பேணி
காலய முந்நீர் கடைந்தார் [16]

என்னும் தேவாரப் பாடல் கொண்டு உணரலாம். ஆழ்வார்களின் பாடல்களில் திருமால், கடல் கடைந்ததற்குக் காரணமாகத் திகழ்ந்தமை மூன்று நிலைகளில் அமைகிறது.

1. ஆமையராய் வந்து மந்தரமலை சாயாதவாறு காத்தமை.
2. பெண்வடிவாய் வந்து அமுதத்தைத் தேவர்களுக்கு மட்டும் அளித்தமை.
3. கடல் கடைவதற்குக் காரணமாய் இருந்தமை.

முதலிரு நிலைகள் அவதாரங்கள் என்னும் நோக்கில் ஆழ்வார்களின் பாடல்களில் இடம்பெற்றன. அமுதத்தின் பொருட்டுக் கடல் கடைந்த நிகழ்ச்சியைப் பரிபாடலும் சிலப்பதிகாரமும் எடுத்துரைக்கின்றன. [17]

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

அரும்பெரும் ஆற்றல் உடைமை இறைக்கு உரியதாகும். அவ்வாறுஉரைக்கப்பெறுவனவற்றுள் கடல் கடைந்தது திரு மாலுக்குரிய உயரிய சிறப்பாக ஆழ்வார்களால் பாடப் பெறு கின்றது. அமுதத்தை அளித்தவன் என்ற நிலையில் ஆழ்வார்கள் திருமாலைப் போற்றுகின்றனர். திருமால் தானொருவனாய் நின்று ஆழ்கடல் கடைந்ததை,

> மலையாமை மேல்வைத்து வாசுகியைச் சுற்றித்
> தலையாமை தானொருகை பற்றி – அலையாமல்
> பீறக்கடைந்த பெருமான்[18]

என்று குறிப்பர். தேவர்கள் வேண்டியதன் காரணமாகத்தான் திருமால் கடல் கடைந்தான் என்பது ஆழ்வார்கள் பாடல்களின் வழி அறியலாகும் செய்தி.[19] திருமழிசையாழ்வார், 'கடைந்த பாற்கடல்' என்றும் 'வெள்ளை வேலை வெற்பு நாட்டி'[20] என்றும் குறிக்கின்றார்.

## கதைக்குறிப்பு

கடல் கடைந்த வரலாறு பழைய இலக்கியங்களில் விரிவாகக் கூறப்பெறவில்லை. பிற்காலப் புராணங்களே இக் கதையை விளக்குகின்றன. துர்வாச முனிவரின் சாபத்தால் தேவர் கள் தமக்குரிய பொருள்களை இழக்க அவர்கள் திருமாலிடம் சென்று சரண்புகுந்து வேண்ட, திருமால் மந்தரமலையை மத்தாகக் கொண்டு வாசுகியை நாணாக்கித் தேவர்கள் இழந்த அனைத்தையும் பெற்றுத் தரும்படியாகக் கலக்கினான்.[21] ஆழ்வார்கள் இக்கதையை முழுவதுமாகக் கூறவில்லை. கதை தொடர்பான குறிப்புக்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. மந்தரமலை மத்தாக அமைந்ததையும்[22] வாசுகி நாணாக அமைந்ததையும் ஆழ்வார்கள் பாடுகின்றனர்.[23]

## கதைச்சிறப்பு

திருமாலின் பங்கு மிகுதியாக அமைவதாலும் இறையின் பெருமையை விளக்கும் நிகழ்ச்சிகள் மிக்கிருப்பதாலும் இக் கதையை ஆழ்வார்கள் பெரிதும் போற்றுகின்றனர். ஆழ்வார்

களின் பாடல்களில் கடல் கடைந்த செயல் வருணிக்கப் பெறு கின்றது. மரங்கள் தேய மாநிலம் தேயக் கடல் கடைந்த தையும்,[24]

பாயிரும் பௌவம் பகடுவிண்டலறப் படுதிரை
விசும்பிடைப்படர
சேயிரு விசும்பும் திங்களும் சுடரும் தேவரும்
தாமுடன்திசைப்ப[25]

கடல் கடைந்ததையும் ஆழ்வார்கள் எடுத்துரைக்கின்றனர்.

கடல் கடைந்த செயலில் ஆழ்வார்கள் மூன்று வகையான நிகழ்ச்சிகளை உரைக்கின்றனர். 1. தேவர்களும் அசுரர்களும் கடல் கடைந்தமை. 2. திருமால் கடல் கடைந்தமை. 3. தேவர்களுக்கு வேண்டியதைத் திருமால் அளித்தமை என்பன அவை. அமுதம் வருவதற்கு முன்னால் ஏற்பட்ட நஞ்சைச் சிவன் உண்டதும்[26] திருமகள் தோன்றியதும்,[27] இந்திரனுக்குரிய ஐராவத யானையும் ஏனையவும் வந்ததும்[28] ஆழ்வார்களால் பாடப் பெறுகின்றன. ஆழ்வார்கள் கடல் கடைந்த இவ்வரலாற்றைத் திருமாலின் அருளும் குணத்திற்கு எடுத்துக் காட்டாகக் கூறுகின்றனர். தேவாசுரப் போருக்குக் காரணமான இந்நிகழ்ச்சியைத் திருமால் நடத்தினான் என்பதை,

வாளமர் வேண்டி வரைநட்டு – நீளரவைச்
சுற்றிக் கடைந்தான்[29]

என்னும் தொடர் விளக்கும்.

கடல் கடைந்தபோது ஏற்பட்ட நஞ்சையுண்டு உலக உயிர்களைச் சிவன் காத்தான் என்று சைவம் போற்றுகிறது. அதில் எழுந்த அமுதை அளித்துத் தேவர்களைத் திருமால் காத்தான் என வைணவம் கூறுகிறது. ஆதலின் இருபெரும் சமயங்களும் இக்கதைக்குச் சிறப்பிடம் அளிக்கின்றன.

## யானைக்கருளியது

கஜேந்திர மோட்சம் என்று கூறப்பெறும் இக்கதை பழைய இலக்கியங்களில் இடம்பெறவில்லை. ஆழ்வார்களே இதனைக் குறிக்கின்றனர். கம்பரும் இப்புராணக்கதையைச் சிறப்பாய்ப் போற்றுகின்றார்.[30] ஆழ்வார்களால் மிகுதியும் பாடப் பெற்றுள்ள புராணக்கதைக்குறிப்புக்களில் இதுவும் ஒன்று.

## ஆழ்வார்கள் பாடும்பாங்கு

இடர் உற்ற யானையின் துன்பம் போக்கியவன் என்ற நிலையில் திருமாலைப் பாடுகின்றனர். முதலை வாய்ப்பட்ட யானை கதறித் திருமாலை அழைத்தமை,[31] திருமால் புள்ளூர்ந்து வந்தமை[32] சக்கரத்தால் முதலையைத் துணித்தமை,[33] களிற்றுக்கு அருள் செய்தமை[34] ஆகியவை ஆழ்வார்களால் பாடப் பெறு கின்றன. துயரம் நீங்கத் திருமால் திருவருள் ஒன்றே முறையான வழி என்பதை விளக்க ஆழ்வார்கள் இக்கதையை எடுத்தாளு கின்றனர். அவதார நிகழ்ச்சிகளில் இது இடம் பெறவில்லை. ஆயினும் யானை கண்ணனை அழைத்ததாகக் கூறுவர்.[35]

## கதைக்குறிப்பு

' சாபத்தாலே கஜயோநியிலே பிறந்திருக்கச் செய்தேயும் பூர்வஜன்ம ஸ்மருதி குலையாமையிலே மிகவும் பகவத் பக்தியை உடைத்தாய்த் திருப்பள்ளித் தாமம் பறித்திட்டுத் திரியா நிற்க ஜகத்திலே ஒருமலர் கிடையாதபடி. வர்ஷாபாவமாய் வறண்டவளவிலே எங்கேயொரு பூ காணலாமென்று தேடித் திரியச் செய்தே தூரத்திலே ஒரு குளிர்ந்த சோலையும் பூத்த பொய்கையுமாம் தோற்றக்கண்டு ஓடிச்சென்று உள்ளே துஷ்டசத்துவம் கிடக்கிறது என்று அறியாமல் இழிந்து தன் அபிநிவேசநா குணமானிப் பூவைப் பறித்துக் கரையிலே ஏறுவற்கு முன்னே நெடுங்காலமெல்லாம் நம் சாபமோட்சத்திற்கு ஒரு கறையடிக் காணவல்லோமே என்று கிடக்கிறதொரு முதலை வந்து காலைப்பிடித்துக் கொள்ளுகையாலே அது நீர்க்கிழுக்கத் தான் கரைக்கிழுக்க இங்ஙனம் நெடுங்காலம் நின்றலைந்து தன்னால் செய்யலாவது அற்றவாறே திருவடிகளை நினைத்துக் கூப்பிட்டதோர் யானையை அந்தத்துவனி வழியே அதித் துவரையோடே அது இடர்பட்ட பொய்கையிலே சென்று அம் முதலையின் வாயிலிருந்தும் ஆனையை விடுவித்து அதன் கையில் பூ செவ்வியழியாமல் விடுவித்துக்கொண்டு அடிமை கொண்டவன்'[36] என்னும் உரையாசிரியர் கூற்றைக் கொண்டு கதைக்குறிப்பை அறியமுடிகிறது.

## கதைச்சிறப்பு

திருமால் யானைக்கருளிய செயல் விஷ்ணுபுராணம், பாகவதம் முதலானவற்றிலும் இடம்பெற்றுள்ளது. இக்கதைக் குறிப்பு ஆழ்வார்களின் பக்திப் பாங்கையும் திருமாலின் அருட் சிறப்பையும் விளக்குமுகமாக எடுத்தாளப்பெறுகிறது.

ஆழ்வார்களின் பாடல்களில் யானையின் இடர்தீர்த்த நிலையே கூறப்பெறுகிறது. உரையாசிரியர்கள் குறிப்பிடும் சாபவிமோசனங்கள் பற்றிய குறிப்பெதுவும் ஆழ்வார்களின் பாடல்களில் இல்லை. திருமங்கையாழ்வார் இக்கதையை விரி வாகப் பாடுகின்றார். அது இலக்கியச்சுவை பெற்றுத் திகழ்கிறது.

ஆழ்வார்கள் எடுத்தாளுகின்ற புராணக்கதைக் குறிப்புக் களில் இக்கதை சிறப்பிடம் பெறுகிறது. உலக உயிர்களுக்கும் புலன்களுக்கும் இறைவனுடன் அமைந்த தொடர்பை இது விளக்குகிறது. திருமால் ஒருவனே பிறவிக்கு மருந்தாவான் என்னும் கருத்து இதன் வழி விளக்கப் பெறுகிறது.

அகத்தியனுடைய சாபத்தால் தேவலன் என்னும் அரசன் கஜேந்திரன் என்ற யானையாகவும் கந்தர்வன் ஒருவன் முதலை யாகவும் பிறந்தனர் என்று பாகவதம் கூறுகின்றது.[37] ஆனால் இவை பற்றிய குறிப்பேதும் ஆழ்வார்களின் பாடல்களில் இல்லை.

## மதிகோள் விடுத்தது

வழங்கி வருகின்ற புராணக்கதைகளின் தொடக்கம் காண்பது அரிதாகும். சங்ககாலம் தொடங்கி வழங்கி வரும் கதைகள் சில இன்றளவும் மாறாமல் திகழ்வதையும் சில வேறுவடிவம் பெற்று விளங்குவதையும் காணமுடிகிறது. திருமால் மதிகோள் விடுத்த செய்தி கலித்தொகையில் இடம் பெற்றுள்ளது.[38] யாப்பருங்கலத்தின் மேற்கோள் பாடலில் இக்கதை எடுத்தாளப் பெறுகிறது.[39] திருமால் மதிக்கு ஏற்பட்ட இடரைப் போக்கியவன் என்று போற்றப் பெறுகிறான்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

கடவுளர்க்குரிய பெருமைகளில் மற்றைய தேவர்களுக்கு ஏற்பட்ட துயரைப் போக்கியவன் என்ற சிறப்பு, பெரிதாக

எடுத்தியம்பப் பெறுகிறது. மக்கள் துதிக்கும் ஒளிச்சுடரில் சந்திரனும் ஒருவனாவான். ஆழ்வார்கள், திருமால் சந்திரனுக்கு ஏற்பட்ட இடரைப்போக்கியவன் என்ற செய்தியைக் குறிப் பிட்டுப் பாடுகின்றனர். கோள்விடுத்த என்ற பொருளில் ஆழ்வார்கள் பாடுகின்றனர். 'மாமதிகோள் முன்னம் விடுத்த முகில் வண்ணன்'[40] என்ற தொடரும் முற்கூறிய கருத்தை விளக்கும்.

## கதைக்குறிப்பு

தக்கமுனிவன் சாபத்தால் சந்திரன் தேயும் நிலை எய்தினான் என்னும் செய்தியைப் பல புராணங்கள் எடுத்துரைக்கின்றன. அவனுக்கு ஏற்பட்ட அச்சாபத்தைச் சிவன் நீக்கினான் எனச் சைவப்புராணங்கள் கூறுகின்றன. ஆயினும் சந்திரன் தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்கத் திருவரங்கத் திருக்குளத்தில் மூழ்கி நல்லநிலை எய்தினான் என வைணவத் தோத்திரநூல் கூறு கின்றது.[41] தர்ம காசிபருடைய சாபத்தினால் தனது கலைகள் குறைய, சந்திரன் பெருந்தவம் செய்து திருவரங்கனின் அருளால் பழைய நிலையில் கலை நிரம்பப்பெற்றான் என்பதும் அறியப் பெறுகிறது.[42] இவ்வகையில் இக்கதை பலவித வடிவங்களில் மாறுபட்டுத் திகழ்கிறது என்பது விளங்கும். மேலும் இந்நிகழ்ச்சி பற்றிய தெளிவான கதைக் குறிப்புக்கள் இலக்கியங்களில் அமையவில்லை.

உரையாசிரியர்களின் விளக்கங்கள் வழி இக்கதை பற்றி இருவகையான குறிப்புக்களை அறியமுடிகிறது. சந்திரனுக்கு வந்த க்ஷயத்தைப் போக்கியவன் என்னும் செய்தி அனைத்துப் பாடல்களிலும் விளக்கப் பெறுகிறது. சந்திரனுக்கு ராகுவால் வந்த இடரை ஒக்கவே போக்கினவன் பரமோதாரன்.[43] என்னும் குறிப்பு ஒன்று மட்டும் வேறுபட்டு அமைகிறது. இதை ஒத்த நிலையில் சங்க இலக்கியமான கலித்தொகையில் அமைந்துள்ள கருத்து ஈண்டுக் கருதத்தக்கது. அக்குறிப்பே ஆழ்வார்களின் பாடல்களில் அமைகின்றது எனக் கொள்ளலாம். உரையாசிரியர் விளக்கங்கள் வடமொழி மரபிலிருந்து அமைந்தவை எனின் மிகையாகாது. சந்திரனின் அவலநிலையைப் போக்கிய சைவப்புராண வரலாறு நாடறிந்த கதையாகும். சைவ வைணவப் பூசல் மிக்கிருந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் உரையாசிரியர்கள்.

ஆதலின் சிவனுக்குரிய சிறப்புக்குத் திருமாலே காரணம் என்ற நிலையை விளக்கத் திருமால் க்ஷயத்தைப் போக்கினான் என்று கூறியுள்ளனர் எனலாம்.

மதியின் கோள் விடுத்த கதையில் ஆழ்வார்கள் திருமாலின் செயல்களையோ சந்திரனுடைய நிலைகளையோ எடுத்துரைக்க வில்லை. 'நாளிளம் திங்களைக் கோள்விடுத்து' [44] என்னும் தொடரைக் கொண்டு இளந்திங்களுக்கு ஏற்பட்ட இடரை நீக்கியவன் என்னும் பொருளை உணரமுடிகிறது.

சந்திரனைப் பால்மதி, [45] பனிமதி, [46] மாமதி [47] என ஆழ்வார்கள் சிறப்பித்துப் போற்றுகின்றனர். ஆழ்வார்கள் பாடும் நிலையிலிருந்து அவர்கள் காலத்தில் இக்கதை பெருவழக்காய் இருந்து வந்திருக்கிறது என்பதை உணர முடிகிறது. எவ்விதக்கதை விளக்கமும் இன்றி ஆழ்வார்கள் பாடுவதிலிருந்து மேற்கூறிய கருத்து விளங்குகிறது.

சங்ககாலம் முதல் வழங்கிவரும் இக்கதையை ஆழ்வார்களுள் மூவரே எடுத்தாளுகின்றனர். சந்திரன் தேவர்களில் சிறப்பிடம் பெறுகிறான். அழகுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குபவன் சந்திரன். இத்தனைச் சிறப்புடைய சந்திரனுக்கு ஏற்பட்ட அழிவைத் தடுத்தவன் என்னும் நிலை திருமாலுக்கு ஏற்றி உரைக்கப்பெறுகிறது. ஆழ்வார்களோ வைணவ உரையாசிரியர்களோ இக்கதை நிகழ்ச்சியைத் தெளிவாக எடுத்துக் கூறவில்லை.

## திருமால் உலகுண்டது

திருமால் பற்றிய புராணக்கதைகளை ஆழ்வார்கள் பாடும் வகையில் சிறப்பான ஒரு கூறினை அவர்கள் மிக எடுத்தாண்டு பாடும் மரபைக் காணலாம். திருமால் குழவியாய் உலகுண்டு ஆலிலையில் பள்ளி கொண்ட கதை ஆழ்வார்களை மிகவும் கவர்ந்துள்ளது. புராணக்கதைகளில் இக்கதையை ஆழ்வார்கள் மிகுதியும் எடுத்தாளுகின்றனர். திருமால் உலகுண்டு உமிழ்ந்த செய்தியைப் பழைய இலக்கியங்கள் கூறவில்லை. பிற்கால நூல்களே இதைக் குறிக்கின்றன. கண்ணன் அவதாரத்தில் அவனுடைய வாயில் வையம் கண்டது அவதாரக் கதையில் இடம்பெற்றுள்ளது. அதிலிருந்து இக்கதைக்குறிப்பு வேறு பட்டமைகிறது.

ஆழ்வார்கள் இக்கதைக்குறிப்பை மூன்றுவகைகளில் பாடுகின்றனர். 1. உலகுண்டது. 2. உலகுண்டு உமிழ்ந்தது. 3. ஆலிலையில் துயின்றது என்பன அவை. இம்மூவகை நிலைகளையும் ஆழ்வார்கள் திருமாலின் முழுமுதல் தன்மையை விளக்கக் கையாளுகின்றனர் எனலாம்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

திருமால் உலகுண்டமை இவ்வுலகையும் உயிர்களையும் காக்கச் செய்த செயல் என்ற கருத்தினை ஆழ்வார்கள் வலியுறுத்து கின்றனர்.

> உலகேழும் ஒழியாமை முனநாள்
> மெய்யின் அளவே அமுது செய்யவல ஐயன் "

என்னும் பாடல் மேற்கூறிய கருத்துக்குச் சான்றாகிறது. உலகுண்டு உமிழ்ந்ததாக அமையும் குறிப்புக்கள் திருமாலின் படைக்கும் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. உரையாசிரியர்கள் பிரம்ம ருத்திராதிகளுடைய சரீரத்துக்கும் ஆத்மாவுக்கு மந்தராத்மதயா நின்று சிருஷ்டி சம்காரங்களைப் பண்ணுகை யாலும் சுயரூபத்துடன் நின்று பாலனத்தைப் பண்ணுகை யாலும்' " எனக்குறிப்பர். மூன்றாவதாக அமையும் ஆலிலையில் துயின்ற செய்தி திருமாலின் செயற்கரிய செயலைச் செய்யும் ஆற்றலைக்கூறுவது. உயிர் உலகம் இவற்றை உண்டு ஒரு குழவி வடிவாய் ஆலந்தளிரில் பெருவெள்ளத்தில் திருமால் தவழ்ந்தான். திருமால் குழவி வடிவம் கொண்ட நிலை சிறப்பாக ஆழ்வார்களால் பாடப்பெறுகிறது.

இவற்றை நோக்க, இக்கதைக்குறிப்பு பற்றி அமையும் ஆழ்வார்களின் பாடல்கள் திருமாலின் முத்தொழில் சிறப்பையும் சிவன், நான்முகன் ஆகிய இருகடவுளரின் தாழ்நிலைகளையும் விளக்குவன எனலாம்.

## கதைக்குறிப்பு

இப்பிரபஞ்ச அழிவின் முடிவில் ஊழிப் பெருவெள்ளத்தில் உலகங்கள் எல்லாம் அழியப்புகத் திருமால் அவற்றை

யெல்லாம் தனது பெருவயிற்றில் இருத்திச் சிறியதோர் ஆலந்தளிரில் யோகநித்திரை செய்வதாகக் கூறுவது மரபு. ஏனைய கடவுளரான சிவனும் நான்முகனும் உலகோடு சேர்ந்து ஒடுங்குவர். இவ்வரலாற்றை ' மரக்கலங்களால் மிக்கிருந்துள்ள கடல்களேழும் பூமிக்கு ஆணி அடித்தா போலிருக்கிற மலை களும் அவற்றுக்கு அவகாசப் பிரதாநம் பண்ணுகிற ஆகாசமும் மற்றுமவற்றை வேலியாக உடைத்தாயிருக்கிற பூமிப்பரப்பை அடைய வயிற்றிலே பிரளயாபத்திலே எடுத்து வைத்து உள்ளே கிடந்து தளரவொண்ணாது என்று நிதியை விழுங்கி உமிழ்ந்து பார்ப்பாரைப் போலே வெளிநாடு காண உமிழ்ந்த என் ஸ்வாமி'[50] என உரையாசிரியர் விளக்கும் நிலையைக் காணலாம்.

## கதைச்சிறப்பு

திருமால் இவ்வுலகுண்ட நிகழ்ச்சியும் உலகையுமிழ்ந்த நிலையும் யோக நித்திரை கொண்ட தன்மையும் ஆழ்வார்களின் பாடல்களில் இலக்கிய நயத்துடன் அமைகின்றன. உலகில் திருமாலால் விழுங்கப் பெறாத பொருள்கள் ஏதுமில்லை என்பதை,

> கொண்டல் மாருதங்கள் குலவரைதொகு
> நீர்க்குரைகடல் உலகுடன் அனைத்தும்
> உண்ட மாவயிற்றோன்.[51]

என்ற தொடர்களால் திருமங்கையாழ்வார் விளக்குகிறார். ஒரு திருமொழி முழுவதிலுமே இவ்வுலகுண்ட நிலையைத் திருமங்கையாழ்வார் பாடுகின்றார்.[52] உண்டபின் உமிழ்ந்த செய்தியும் வராகமாய் உலகை மீட்ட செய்தியும் உலகைப் படைத்தசெய்தியும் வாமனனாய் உலகை அளந்த செய்தியும் இணைத்துப்பாடப் பெறுகின்றன.[53] ஆலிலையில் குழவி வடிவில் திருமால் துயின்றான் என்பதில் அவன் பாலகனாய்த் திகழும் நிலை,[54] துயில் கொண்ட தன்மை[55] முதலானவை அமைகின்றன. ஆழ்வார்களின் பாடல்கள் கடல் பெருவெள்ளம் தவிர ஏனைய அனைத்தும் அவன் பெருவயிற்றுள் பல்வகை யாலும் அடங்கின என்பதை வலியுறுத்துகின்றன. திருமாலின் முத்தொழில் சிறப்பைப் பெரிதும் விளக்க இக்கதையை

எடுத்தாளுகின்றனர். ஆழ்வார்கள் தம்முள் வேறுபடாது இக்கதைக்குறிப்பை எடுத்தாளுவது கருதத்தக்கது. தேவர் உலகமும் கடல்கள் ஏழும் மலைகள் ஏழும் ஒழியாமல் திருமால் உண்ட செயலைத் திருமங்கையாழ்வார் எடுத்துரைக் கின்றார்.[56]

பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து
அன்றுடனே விழுங்கி
கரந்து உமிழ்ந்து கடந்து இடந்தது[57]

என அனைத்தும் திருமாலால் விழுங்கப் பெற்றமையை நம்மாழ்வார் குறிப்பிடுகின்றார். மேலும் இவ்வுலகுண்ட திருமாலைக் கண்ணனாய்க் காணும் சிறப்பும் அவருடைய பாடல்களில் அமைகிறது.[58]

பன்னிரு ஆழ்வார்களில் மதுரகவியைத் தவிர ஏனைய பதினொரு ஆழ்வார்களும் இப்புராணக்குறிப்பை எடுத்தாளு கின்றனர். சைவத்தில் சிவனுக்கு முத்தொழில் 'தோற்றிய திதியே ஒடுங்கி '[59] என்று கூறப்பெறும். அதுபோல வைணவத்தில் திருமாலுக்குரிய முத்தொழில்களும் இதன் மூலம் விளக்கப் பெறுகின்றன. யோகநித்திரை வழி அனைத்தையும் அறியும் ஆற்றலும் உண்ணுதல் உமிழ்தல் வழி காத்தல், படைத்தல் முதலான செயல்களும் திருமாலுக்குரியனவாக அமைகின்றன.

உலகைக்காத்தல் என்ற அடிப்படையில் தன்னைச் சரணடைந்தார்க்கும், அடையாதார்க்கும் அருளும் குணம் இறைவனுக்குரியதாகும். திருமாலிடத்துக் கலவாத பொருள்கள் இல்லை. இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளுமாகக் காணப்படுகின்றவை எவையோ அவையெல்லாம் என்னையன்றி இல்லை என்பது கண்ணன் கூற்று.[60] அவ்வகையில் அனைத்துப் பொருள்களும் அவனிடம் அடக்கம் என்பது இக்கதைக்குறிப்பு விளக்கும் கருத்தாகும்.

### காமனைப் படைத்தது

காமன் வழிபாடும் காமனைப் பற்றிய குறிப்புக்களும் சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்றன.[61] தமிழகத்தில் காமன் வழிபாடு சிறப்பிடம் பெற்றிருந்தது. கலித்தொகை காமன்

வழிபாட்டு முறையைக் கூறுகிறது. சிலம்பு காமர்கோட்டத்தைப் பற்றிக் கூறுகிறது. ஆண்டாளும் அவனை வழிபடுகின்ற நிலையை எடுத்துரைக்கிறார். ஆயினும் காமனைப் பற்றிய புராணச்செய்திகள் ஏதும் சங்க இலக்கியத்தில் இல்லை. பிற் காலப் புராணங்களே காமனின் பிறப்பு, அழிவு இவற்றைக் கூறு கின்றன. கண்ணனின் மகனான பிரத்துயும்நனைக் காமனாகக் கூறுவர்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

ஆழ்வார்கள் திருமாலைக் காமனின் தந்தை என்றும் காமனைப் பயந்தவன் என்றும் விளிக்கின்றனர். இவையன்றி வேறு ஏதும் கதைக்குறிப்பு அவர்களுடைய பாடல்களில் அமையவில்லை. காமனை அழகுடையவன் என்று கூறுவது மரபு. பேரழகுடைய அவனைப் படைத்த திருமாலின் அழகு காமன் அழகைவிடச் சிறந்து விளங்கும் இயல்புடையது என்பதை விளக்க இக்கதையைப் படைத்தனர் எனலாம்.

சைவ, வைணவப் பூசலின் அடிப்படையில் காமன் படைக்கப்பெற்றநிலை வைணவத்தாலும் அவன் அழிக்கப் பெற்ற நிலை சைவத்தாலும் புராணக்கதைகளால் விளக்கப் பெறுகின்றன.

## வேதம் விரித்துரைத்தது

வைதிக சமயத்துக்கு அடிப்படையாக விளங்குவது வேதம். வேதம் தோன்றிய காலம் பற்றிப் பலவாக ஊகிக்கப் பெறுகிறது. சமயங்கள் தம் கடவுளர்கள் வேதத்தின் முடிபாகத் திகழ்பவர்கள் என்பதை வலியுறுத்துகின்றன. வேதத்தை ஓதியவன் சிவன் எனவும் வேதத்தின் நுண் பொருளான பிரணவத்தின் பொருள் உரைத்தவன் முருகன் என்றும் சைவப்புராணங்கள் கூறுகின்றன. திருமாலுக்கும் இத்தகைய சிறப்பை வைணவம் ஏற்றி உரைக் கின்றது. பரிபாடல் வேதத்தின் முடிபாகத் திகழ்பவன் திருமால் என்று போற்றுகின்றது. திருமால் வேதத்தைப் படைத்தவன், காத்தவன் என்பதை விளக்க வைணவம் பல கதைகளை எடுத்துரைக்கின்றது. ஆழ்வார்களும் அவ்வழி நின்று திருமால் வேதம் ஓதிய நிலையைப் பலவாகப் பாடுகின்றனர்.

திருமால் வேதம் ஓதியதாக அமையும் புராணக்கதைகளை மூன்று வகையாகக் கொள்ளலாம். 1. அன்னவடிவாய் இருந்து வேதத்தை வெளிப்படுத்தியது. 2. நரநாராயண வடிவாய் வந்து வேதப்பொருளை விளக்கியது. 3. கண்ணன் அவதாரத்தில் வேதப்பொருளின் சாரமான பகவத்கீதையை அர்ச்சுனனுக்கு உரைத்தது என்பன அவை. ஆழ்வார்கள் இதனை ஆங்காங்குக் குறிக்கின்றனர். ஆயினும் ஆழ்வார்கள் ' திருமால் வேதம் விரித்துரைத்தான் ' என்று பொருள்படும் தொடரைப் பல இடங்களில் கூறுகின்றனர். அதுபற்றிய கதை எதையும் பாடல்களில் குறிக்கவில்லை. திருமாலைப் போற்றிப் பாடும் முறையில் எல்லாக் கடவுளர்களுக்கும் மேலானவன் என்பதை விளக்க எண்ணிய ஆழ்வார்கள் இக்குறிப்பை எடுத்தாளுகின்றனர் எனலாம்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார் ஆகிய மூவரே இச்செயலைக் குறித்துப்பாடுகின்றனர். திருமங்கை யாழ்வாரே மிகுதியாகப் பாடுகின்றார். முனிவடிவாய் மும்மூர்த்தியாகி விண்ணோர் வணங்க வேதம் உரைத்தான் [67] என்றும் சங்குசக்கர மேந்தி உரைத்தான்[68] என்றும் அவர் குறிக்கின்றார். திருமாலே நான்கு வேதங்களையும் ஓதினான் என்னும் கருத்துத் தோன்ற ஆழ்வார்கள் பாடல்கள் அமைகின்றன. மேலும் 'இவை ஒருவருக்கு வராதபடி வேதார்த்தத்தை விளக்கி விவரித்த கீதோபநிஷத்து ஆசாரியன் என்னும்' [69] உரை கொண்டு கீதை உரைத்ததையும் இதற்குப் பொருளாகக் கூறுவதைக் காணலாம்.

## கதைச்சிறப்பு

வேதத்தைத் தொகுத்த வியாசர் திருமாலின் அவதாரம் என்பர். திருமாலை வேதம் விரித்துரைத்தவனாகப் போற்றும் நிலை இச்செய்தியுடன் தொடர்புடையது. சமயப் பாடல்கள் இறைவனின் பெருமை ஒன்றை மட்டுமே பேசுவன. பிற்காலத் தத்துவ விளக்கங்களே தர்க்க அடிப்படையில் இறையின் பெருமை கூறுவனவாயின. அதில் வேதம் தொடர்புப்படுத்தப் பெற்றது. ஆயினும் ஆழ்வார்கள் தம் காலம் முதலே

வேதத்தையும் திருமாலையும் இணைத்துக் கூறி வந்துள்ளனர். வேதத்துடன் திருமாலுக்குரிய தொடர்பை ஆழ்வார்கள், விரித்துரைத்தான், [70] ஓதினான், [71] அருள்செய்தான், [72] வேதம் கண்டான், [73] பயந்தான் [74] எனப் பல தொடர்களால் விளக்கு கின்றனர்.

சைவம், வைணவம் ஆகியவை இரண்டும் வேதங்களைப் பின்பற்றி அமைவன. வேதத்தால் சமயங்களும் சமயத்தால் வேதங்களும் சிறப்படைகின்றன. வேதத்தைச் சிவனுடனும் திருமாலுடனும் இணைத்துக் கூறப்பெறும் புராணக்கதை களில் திருமால் பற்றியவை மிகுதி. இந்நிலையில் ஆழ்வார்கள் குறிக்கும் தொடர்கள் மூன்று கதைகளையும் தத்துவ விளக்கங் களையும் நினைவூட்டுவனவாக அமைகின்றன. அவ்வகையில் இக்கதைக்குறிப்புச் சிறப்புடையதாக விளங்குகிறது.

வைதிக சமயங்களில் சைவமும் வைணவமும் சம நிலையில் திகழ்வன. அச்சமய இலக்கியங்கள் இதை விளக்கு கின்றன. சங்க இலக்கியம் இருபெருந்தெய்வம் ஒருங்குடன் இருந்ததைக் குறிக்கின்றது. [75] சிவனுடைய பெருமையை விளக்கத் திருமாலையும் திருமாலுடைய பெருமையை விளக்கச் சிவனையும் இணைத்துக் கூறும் புராணக்கதை மிகப்பலவாகும்.

சங்கம் மருவிய காலத்தில் முக்கடவுளர் வழிபாடு இருந்ததை அறியமுடிகிறது. சமயக்காழ்ப்பு இல்லாத சங்க காலத்திலிருந்து இக்காலம் மாறுபட்டு அமைகிறது. திருமாலின் அவதாரக் கொள்கை வலுப்பெற்றுவிட்ட நிலையில் சமயக் காழ்ப்பு இடம்பெற்றது. சங்கம் மருவிய காலத்தின் இறுதியில் தோன்றிய முத்தொள்ளாயிரம் அர்ச்சுனன் ,கண்ணன் திருவடியில் இட்ட மலரைச் சிவனுடைய முடியில் கண்டதைக் கூறுகிறது. [76] இந்நிகழ்ச்சி கண்ணனுக்குப் பெருமை சேர்ப்பதாகவும் சிவனுக்குச் சிறுமை சேர்ப்பதாகவும் அமைகிறது. இதுபோன்று சமயத்தொடர்பான அனைத்திலும் இத்தகைய நிலை அக் காலத்தில் தோன்ற ஆரம்பித்தது

சங்கம் மருவிய காலத்தையடுத்து ஆழ்வார்களும் சைவ குரவர்களும் ஒரே காலத்தில் வாழ்ந்து வந்துள்ளனர். மனதுக்கு ஏற்ற கடவுளரைப் பாடிப் பரவித் தம் சமயம் வளர்த்தனர்.

மன்னர்களும் தமக்கேற்ற சமயத்தைக் கடைப் பிடித்து வாழ்ந்து வந்தனர். திருஞானசம்பந்தரும் திருமங்கையாழ்வாரும் சந்தித்து உரையாடிய நிலையைக் காணமுடிகிறது.[77] ஆயினும் சைவ வைணவப்பிணக்கால் இருபெரும் சமயத்தாரும் வேறுபட்டிருந் தனர் என்றே கூறலாம்.

இருகடவுளர் தொடர்புடைய புராணக்கதைகள் சமயத்தின் அடிப்படையில் தம் கடவுளர்க்குப் பெருமை சேர்ப்பதாக அமைவதோடு மற்றைய கடவுளர்க்கு சிறுமை உண்டாக்கு வதாயும் அமைந்தன. ஒரே கோயிலில் இரு கடவுளர்கள் இடம்பெற்ற நிலையில் ஒரு கடவுளை உயர்த்திப் போற்று வதும் மற்றவரைத் தாழ்த்துவதும் நிகழ்ந்ததுண்டு. தில்லைத் திருச்சித்திரக் கூடத்தில் இருந்த திருமாலின் திருமேனி சோழ அரசனால் கடலில் எறியப்பட்டமை வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.[78]

முக்கடவுளர் கொள்கை இரு சமயங்களாலும் ஏற்றுக் கொள்ளப் பெற்றதாயினும் தம் கடவுளரன்றி ஏனைய இரு கடவுளரும் தாழ்ந்தவராகவே வலியுறுத்தப் பெறுகின்றனர். நான்முகன் இரு சமயத்தாராலும் குறைவாய் எண்ணப் பெறுகிறான். சைவ வைணவ சமயங்கள் நான்முகனுக்குத் தோற்றத்தையும் முடிவையும் கூறுகின்றன. ''நூறு கோடி பிரமர்கள்''[79] என்று சைவமும்,

> நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
> தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்[80]

என்று வைணவமும் நான்முகனைப் பற்றிக் கூறுகின்றன. நான்முகன் பற்றி எழுந்த புராணக்கதை இருபெரும் கடவுளர் களின் உயர்வைக் கூறவே எடுத்தாளப் பெற்றன.

ஆழ்வார்கள் பாடல்களில் பிற சமயக்கடவுளரைப் பற்றிய குறிப்புக்கள் சிலவே அமைந்துள்ளன. அவற்றில் சிவன் பற்றி அமையும் புராணக்குறிப்புகள் சிறப்பிடம் பெறுகின்றன. திருமாலின் முழுமுதல் தன்மையை விளக்க அவை பெரும்பாலும் எடுத்தாளப் பெறுகின்றன.

## சிவன் சாபம் தீர்த்தது

சிவனுக்கு ஏற்பட்ட சாபத்தைத் திருமால் நீக்குவித்தான் என்று வைணவம் போற்றுகின்றது. பழைய இலக்கியங்களில் சிவனுக்கு ஏற்பட்ட சாபம் பற்றியோ திருமால் அதைப் போக்கியது பற்றியோ குறிப்புக்கள் இல்லை. சமயக்காழ்ப்பும் புராணங்கள் வளர்ச்சியும் பெற்ற நிலையில் இக்கதை எழுந்திருக்கலாம். இப்புராணக்கதை சைவத்தில் வேறுவகையில் எடுத்துரைக்கப்பெறுகிறது. சிவனுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் கையாளப் பெறுகிறது.

சைவக்குரவருள் ஒருவரும் காலத்தால் முதலில் வாழ்ந்த வருமான திருஞானசம்பந்தர்,

அமரர்வேண்ட நிறம்கிளர் செந்தாமரையோன்
சிரம்ஐந்தின் ஒன்றறுத்த நிமலர் [81]

என்று நான்முகனின் ஐந்தலைகளுள் ஒன்றைச் சிவன் அறுத்ததைக் கூறுகிறார். சைவர்கள் நோக்கில் தேவர்களின் வேண்டுதலால் சிவன் நான்முகனுடைய தலையைக் கொய்தான் என்று உரைக்கப்பெறுகிறது. இக்கொலைப்பாவத்தால் சிவன் அடைந்த துயரைப் போக்கியவன் திருமால் என்னும் செய்தியை ஆழ்வார்கள் எடுத்துரைக்கின்றனர்.

தலையிழந்த நான்முகன் இட்ட சாபத்தால் சிவன் பிச்சையேற்றான். சிவன் கொண்ட கபாலத்தை நிறைத்துத் திருமால் நான்முகனுடைய சாபத்தைப் போக்கியநிலையை ஆழ்வார்கள் பாடுகின்றனர். திருமாலின் முழுமுதல் தன்மையும் ஏனைக் கடவுளரினும் சிறந்து விளங்கும் ஆற்றலும் இக்கதை மூலம் விளங்குகின்றது. 'அரன்கொண்டு திரியும் முண்டமது நிறைத்து அவன்கண் சாபமது நீக்கும் முதல்வன்'[82] எனத் திருமாலின் சிறப்புக் கூறப்பெறுகின்றது. அரனுக்கு ஏற்பட்ட இத்துன்பம் சாபம்[83] வெவ்வினை,[84] துயர்,[85] துக்கம்,[86] இடர்,[87] நடலை,[88] குறை,[89] மாபாவம்[90] என்னும் சொற்களால் விவரிக்கப் பெறுகின்றது.

ஆழ்வார்கள் பாசுரங்களில் இடம்பெறும் இக்கதை தொடர்பான குறிப்புக்கள் சிவனுக்குக் குறை சேர்ப்பனவாகவே உள்ளன என்பதில் ஐயமில்லை. சைவத்தைத் தூற்றிய திருமழிசை யாழ்வாரும் சமரச நோக்கம் கொண்டவர்கள் என்று கூறப்பட்டும் முதலாழ்வார்களும் ஒரே நிலையில் திருமால் பெருமை விளக்க இக்கதைக்குறிப்பைக் கையாளுகின்றனர்.

## கதைக்குறிப்பு

நான்முகன் சிவனைப் போன்று ஐந்து தலைகளுடன் திகழ்ந்தான். தன்னைப் போன்று ஐந்து தலைகளுடன் இருப்பதைக் கண்ட சிவன் ஐந்தாவது தலையைக் கிள்ளி எறிந்தான் என்பது பொதுவாகக் கூறப்பெறும் கதையாம். கங்கையைத் தன்னுள்ளே அடக்கிய சிவந்த சடையை உடைய வனும் ஆலகாலவிடத்தாலே கறுத்த கண்டத்தை உடையவனு மாகிய சிவன் அயன் இட்ட சாபத்தாலே தலையாகிய கபாலத் தாலே உணவு பெற்று உயிர் வாழ்ந்தவன். உலகுக்கும் சிவனுக்கும் தந்தையானவனும் குருவானவனுமாகிய நான்முகன் தலையை அறுத்ததாலே வந்த பாதகத்தை உடையவனானான். அவனுடைய வலிய துக்கம் நீங்கத் திருமாலையை உடையதான திருமார்பில் தோன்றிய நீராலே திருமால் கபாலம் நிறைத்தான்.[31] அக் கபாலத்தை ஊறு செங்குருதியால் திருமால் நிறைத்ததாகவும் கூறுவர்.[32]

## கதைச்சிறப்பு

அரன் பிச்சையேற்ற நிலையை ஆழ்வார்கள் பாடுகின்றனர். அவனுடைய வடிவை அவர்கள் வருணிக்கின்றனர்.

ஊனமர் தலையொன்றேந்தி உலகெலாம் திரியுமீசன்
ஈனமர் சாபம் நீக்காயென்ன ஒண்புனலை ஈந்தான்[33]

என்னும் தொடர்கள் சிவன் இரந்துநின்றதைக் கூறுவன. இவ்வுலகப் பொருள்கள் அனைத்தையும் இட்டாலும் நிரப்ப இயலாத நிலையை ஆழ்வார்கள் குறிக்கின்றனர்.[34] திருமாலைத் தன் துன்பம் தீர்க்குமாறு சிவன் இறைஞ்சினான்.[35] என்று பாடும்

ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் சிவனுக்குரிய தலைமைப் பண்பையும் ஒரோவழி ஏற்கின்றனர்.[96] வைணவர்கள் மும்மூர்த்திகளில் திருமாலையடுத்து நான்முகனை ஏற்கும் இயல்பினர். அவ்வகையில் இப்புராணக்கதை அமைகிறது.

அடியார் வேண்டுவனவற்றை அவர்க்கருளி நிறைவளிக்கும் சிறப்பு, திருமாலுக்கு உரியதாகும். சிவன் வேண்ட அவனுக் கருளித் தன் பெரும் அருட்குணத்தைத் திருமால் வெளிப் படுத்தினான். ஏனைய தேவர்கள் உயர்ந்தோராயினும் தம்மியல் பால் தவறு செய்யும் குணமுடையோர் ஆவர். அதன் பயனால் கேடும் சூழும். அக்கேட்டைப் போக்கத் தன் நிலை எண்ணித் திருமாலை வழிபட்டால் அவர்கட்கும் அருளும் திறன் திருமால் ஒருவனுக்கே உண்டென்பது இதன் மூலம் விளக்கப்பெறுகிறது.

> ஒற்றை விடையனும் நான்முகனும்
> உன்னையறியாப் பெருமையோனே[97]

எனப் பாடுவதற்கு ஏற்ப இப்புராணக்குறிப்புத் திருமாலின் முழுமுதல் தன்மையை விளக்குவதாய் அமைகிறது. ஆழ்வார்கள் பிறகடவுள் என்ற நிலையில் சிவனை மிகுதியும் குறிக் கின்றனர். அவர்கள் சிவவழிபாட்டை நிந்திக்கவில்லை. ஆயினும் பிற்கால உரையாசிரியர்கள் சிவனைப் பற்றி தாழ்த்தியுரைக்க இக்கதையைப் பெரிதும் விளக்கினர்.

நான்முகன் தன் தலையை இழந்ததற்கான காரணங்கள் சில புராணங்களில் வேறுவகையாக உரைக்கப்பெறுகின்றன. நான்முகன் திலோத்தமை என்னும் தேவமகள் மேல்கொண்ட காமநோயால் தன் தவப்பயனை இழந்து நான்கு முகங்களைப் பெற்றதாகக் கந்தபுராணம் கூறுகின்றது.[98] பிரமன் ஐந்து முகங்களைப் பெற்றுத் தேவமகளிர்க்கு இடர் செய்து வந்தான். இதை அறிந்த தேவர்கள் சிவனிடம் வேண்ட, அவன் இத்தீமை செய்யாதிருக்கப் பிரமனின் மேல்தலையைக் கிள்ளி எறிய, பிறகு சிவன் எல்லோராலும் பழிக்கப்பட்டுத் தனது பதவியை இழந்தான். இச்செய்தி தருமபரீக்ஷை என்னும் சைனநூலில் மூன்றாம் படலத்தில் கூறப்பட்டுள்ளது என்பர்.[99]

நான்முகன் சிரம் கொய்த செயல் வைணவத்தில் சிவனுடைய குற்றமாகவும் சைவத்தில் அவனுடைய அட்டவீரச்

செயல்களில் ஒன்றாயும் கூறப்பெறுகிறது. சமய அடிப்படையில் இவ்விரண்டும் வெவ்வேறாய் அமையினும் அவற்றுக்காகக் கூறப்பெறும் விளக்கங்கள் பொருள் உடையனவாகவே அமைகின்றன. கடவுளர் பற்றிய கதைகள் பல வடிவங்களில் திகழ்கின்றன என்பதற்கு இக்கதை தக்க சான்றாகும்.

## சிவனுக்குப் பாகமளித்தது

சிவனும் திருமாலும் தமிழகத்தில் பழங்காலம் தொட்டு வணங்கப் பெற்றுவரும் இருபெருந்தெய்வங்கள். இடைக் காலத்தெழுந்த புராணங்களும் தலபுராணங்களும் திருமாலையும் சிவனையும் தத்தம் நோக்கில் சிறப்பித்துக் கூறுகின்றன. வைதிக சமயங்களில் தத்துவ அடிப்படையில் வேறுபாடுகள் அமையினும் கடவுளர் பற்றிய புராணக்கதைகள் சில ஒன்றுபடுகின்றன.

சைவக்குரவர்களும் ஆழ்வார்களும் ஒரே காலத்தில் வாழ்ந்து வந்துள்ளனர். சமய ஒற்றுமை என்னும் நோக்கில் அவர்களுடைய பாக்களில் சில புராணக்கதைகள் ஒன்றாகவே அமைகின்றன. சிவனையும் திருமாலையும் இணைத்துப் பார்க்கும் நிலை அதற்குத் தக்க சான்றாகும். சைவர்கள் சிவன் திருமாலுக்குக் கூறுகொடுத்த நிலையை, 'ஒருபாலும் மேனி அரியான்'[100] ' மாலுமோர் பாகமுடையார் '[101] என்று பாடுகின்றனர். வைணவர்கள் திருமால் பாகம் கொடுத்ததை, ' மல்கிய தோளும் மானுரியதளும் உடையவர் தமக்குமோர் பாகம் நல்கிய நலமோ' [102] என்று குறிப்பர்.

இத்தகைய தொடர்களை நோக்க இருபெரும் கடவுளர்களின் சிறப்புக்கள் இணைத்து விளக்கப் பெறுகின்றன என்பதை அறியலாம். ஆயினும் சமயப்பூசல் பெருகிய காலத்தில் இக்கதையை அவரவர் நோக்கில் தம்கடவுளர்க்கு மட்டுமே சிறப்பளிக்கும் வகையில் எடுத்தாண்டமை விளங்குகிறது.

இப்புராணக்குறிப்பு இடைக்காலப் புராணங்களில் காணப்படுகிறது. சங்க காலத்தில் வழங்கியதற்கான சான்றுகள் இல்லை. சமயப்பூசல் காலத்தில் சமயப் பொறையுடையார் இக்கதையைப் புனைந்துரைத்தனர்.

### ஆழ்வார்கள் பாடும் பாங்கு

சமயக் காழ்ப்பில்லாத முதலாழ்வார்கள் மூவரும் திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் சைவசமய வெறுப்புடைய திருமழிசையாழ்வாரும் இப்புராணக்கதையைக் குறிக்கின்றனர். ஆழ்வார்களின் பாடல்கள் சிவனுடைய விருப்பத்திற்கு ஏற்பத் திருமால் இடம் கொடுத்ததாகக் கூறுகின்றன. ஆழ்வார்கள் சிவனுடைய தோற்றத்தையும் ஆங்காங்கு எடுத்துரைக்கின்றனர்.

பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்துக்
கறைதங்கு வேல்தடங்கண் திருவை மார்பில்
கலந்தவன் [103]

எனக்கடவுளர் பலரும் திருமாலின் மேனியில் பாகம் பெறும் சிறப்பு அவனுக்குரிய கடவுள் தன்மையைக் காட்டுகிறது. இத்தகைய புராணக்குறிப்புக்கள் அமையும் பாடல்கள் மூலம் சமயக்காழ்ப்பை அறிய இயலவில்லை.

### கதைக்குறிப்பு

திருமால் சிவனுக்குப் பாகம் அளித்தமை குறித்த முழுமையான கதை ஏதும் ஆழ்வார்களின் பாடல்களில் அமைய வில்லை. ஆயினும் உரையாசிரியர்கள் இதை விளக்க முயலு கின்றனர். வைணவத்தின் பெருமை கூறும் நிலையில் இது அமைந்து உள்ளது என்பதில் ஐயமில்லை, தாமசம், இராசதம், சாத்விகம் என்பன முக்குணங்கள். சிவன் தாமத குணமுடையவன்; அவன் செய்த தவத்தால் உள்ளம் உவந்து திருமால் அவனுக்குத் தனது வலப்பாகத்தில் இடம் அளித்தான் என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர். [104] இக்கதை பற்றிய பழைய செய்திகள் ஏதும் அறிய இயலவில்லை. தலபுராணங்களில் இடம்பெறுகின்ற கதைகளின் அடிப்படையில் இக்கதை வழங்கி இருக்கலாம்.

திருமால் சிவனுக்குக் கூறுகொடுப்பினும் சிவன் எப்போதும் அவனுடைய உடலில் இடம் பெறுவதில்லை. ஆபத்துக் காலங்களில் மட்டிலுமே திருமால் சிவனுக்கு

இடமளிப்பான் என்று உரைப்பர்.[105] இத்தன்மையால் துயர் வரும்போதெல்லாம் காக்கும் திருமாலின் சிறப்பு விளங்குகிறது.

படைத்தல் தொழிலையே கொண்டிருக்கிற பிரமனும் சுடுதடி போல இவற்றை அடைய அழித்துக் கொண்டிருக்கிற சிவனும் திருமாலால் பணிக்கப்பட்ட படைத்தல், அழித்தல் என்னும் தொழில்களை உடையவர்களாய் இருக்கின்றார்கள். இவர்கள் திருமாலின் திருமேனியை விட்டு நீங்கின் ஆற்றல் இல்லாதவர்களாய் ஆவர்[106] என்னும் பொருள் தோன்ற அமையும் விளக்கமும் உளது.

## கதைச்சிறப்பு

திருமால் சிவனுக்குப் பாகம் அளித்ததைக் கூறும்போது சிவனுடைய உருவ அமைப்பையும் ஆழ்வார்கள் பாடுகின்றனர். ஆழ்வார்கள் சிவனுக்கும் சிறப்பிடம் தந்தே இப்புராணக் கதையைப் பாடியுள்ளனர் எனக் கொள்ளலாம்.

## மார்க்கண்டேயனுக்கருளியது

மார்க்கண்டேயனுக்கு நீண்ட வாழ்வளிக்கச் சிவன் காலனைக் காலால் உதைத்துக் கொன்ற செயல் சைவ சமயத்தில் சிறப்பிடம் பெறுகிறது. சிவனுடைய அட்டவீரச்செயல்களில் இதுவும் ஒன்று.

> ஆற்றல் நல்லடியிணை யலர்கொண் டேத்துவான்
> சாற்றிய அந்தணன் தகுதி கண்டநாள்
> மாற்றல னாகிமுன் னடர்த்து வந்தணை
> கூற்றினை யுதைத்தனர் கொள்ளிக் காடரே .[107]

என்று அவ்வரலாற்றைச் சைவத்தில் போற்றுவர். ஆயினும் வைணவத்தில் இக்கதை வேறுவகையில் கூறப்பெறுகிறது. பரத்துவநிலையில் அனைத்தையும் இயக்கும் ஆற்றல் திருமாலுக்கே உரியது. இயக்குமாற்றல் என்ற அடிப்படையில் காலன் அழிவும் சிவன் ஆற்றலும் திருமால் வழியே இயங்கு கின்றன. இதை வலியுறுத்த ஆழ்வார்கள் இக்கதையை எடுத்தாளுகின்றனர்.

## கதைக்குறிப்பு

நான்மறைகளை நன்கு பயின்ற முனிவனின் மகனாகிய மார்க்கண்டேயனின் அழிவுக்காலத்தில் காலன் அவனை நெருங்க, அவன் அஞ்சி உன்னுடைய சரண் எனத் திருமாலைச் சரணடைய குற்றமுடைய காலனை அழியுமாறு வெகுண்டவனே என்றும் பின்பும் தன் அழிவு போக்கிய காரணத்தால் மார்க்கண்டேயன் உன்னுடைய திருவடியாகிய பேரருளைப் பெற்றான் என்றும் திருமங்கையாழ்வார் குறிக்கின்றார். [108] சைவத்தில் காலனைக் கொன்ற சிறப்புச் சிவனுக்குரியது. திருமாலை மனத்தில் எண்ணியே சிவன் காலனைக் கொன்றான் என்று வைணவர் கூறுவர். இதை,

புக்கடிமையினால் தன்னைக் கண்டமார்க்
கண்டேயனவனை
நக்க பிரானும் அன்று உய்யக் கொண்டது நாராயணன்
அருளே [109]

என்னும் நம்மாழ்வார் பாடல் வழி அறியலாம்.

## கதைச்சிறப்பு

மார்க்கண்டேயன் பற்றிய கதையை மூன்று ஆழ்வார்கள் ஐந்து இடங்களில் குறிக்கின்றனர். [110] திருமாலுக்குரிய முழுமுதல் தன்மையை விளக்க ஆழ்வார்கள் எடுத்தாளுகின்றனர். ஆழ்வார்கள் பாடல்களின் வழி ஏனைய குறிப்பேதும் அறிய இயல வில்லை. பாகவதத்திலும் பாரதத்திலும் இக்கதை விரிவாக விளக்கப்பெறுகின்றது. [111]

## பிரமன் மடியில் குழந்தையாய்த் தவழ்ந்தது

இப்புராணக்குறிப்பு ஆழ்வார்கள் பாடல்களில் மட்டுமே காணப்பெறுகிறது. வேறு இலக்கியங்களிலோ புராணங்களிலோ இடம்பெறவில்லை. ஆழ்வார்கள் அவர்கள் காலத்திலிருந்த இவ் வழக்குக்கதையை எடுத்தாண்டிருக்கக் கூடும்.

## கதைக்குறிப்பு

இராவணன் கடுந்தவம் செய்து நான்முகனைக் கண்டு வரம் வேண்டிக் கொள்ளும்போது திருமால் ஒரு குழவியாய் நான்முகன்

மடியில் தூங்குவது போலக் கிடந்து, அவன் பத்துத் தலைகளை உடையவன்; உலகிற்கு நலிவை உண்டாக்குவான் என்பதை அறிவிக்கவும் தான் இராமனாய் அவதரித்து அவனுடைய தலைகளைக் கிள்ளி எறியப் போகிறேன் என்பதை உணர்த்தவும் தன் கால்விரல்களை எண்ணிக் காட்டினான் என்பது ஆழ்வார் பாடல் வழி விளங்கும் கதையாம்.[112]

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய மூவரே இக்கதையைப் பாடுகின்றனர்.[113] திருமால், குழவியாய்ப் பிரமன் மடியில் தவழ்ந்தது,[114] பாதத்தால் எண்ணிக் காட்டியது[115] முதலானவற்றை இம்மூவரும் குறிக்கின்றனர்.

மறைகளைப் பயின்றவனும் முக்காலங்களை உணரக்கூடிய நான்முகனும் கூடச் சில நேரங்களில் மேல் விளைய இருக்கும் செயல்களை அறிய இயலாதவனாய்த் திகழ்கின்றான். அவனுக்கு நல்லறிவை உணர்த்தி நல்வழியைக் காட்டும் ஆற்றல் திருமால் ஒருவனுக்கே உரியது என்பதை ஆழ்வார்கள் இக்கதை வழி விளக்குகின்றனர்.

## திருமால் வடிவுடன் நீங்கா இடம் பெறுவன

திருமகளை விட்டு நீங்காத திருமாலே பரதத்துவமாய் விளங்குகிறான். ஆழ்வார்கள் திருமாலை எல்லாப் பொருள் களிலும் தங்கும் தன்மையனாய், அவற்றை இயக்கும் சிறப்புடையவனாய்க் காணுகின்றனர். அதற்கும் மேலாக மிகக் கருணை உடையவனாகவும் எல்லோரையும் காப்பவனாகவும் வீடுபேற்றை அருளுபவனாகவும் திருமாலைப் போற்றி வணங்கும் நிலையைக் காணலாம்.

திருமாலின் ஐந்து நிலைகளில் பரத்துவமே மூல வடிவுடையது. திருவைகுந்தத்தில் திருமாமணி மண்டபத்தில் திருவனந்தாழ்வான் மேல் அமர்ந்து திருமாலும் திருமகளும் அருளாட்சி செய்து வருகின்றனர். திருமகளும் திருமாலும் இணைபிரியாநிலையே அருளுக்குக் காரணமாவது என்பது வைணவர்களின் கொள்கை. வைணவர்கள் திருமாலின் ஆபரணங்களையும் ஆயுதங்களையும் போற்றும் சிறப்பைக்

காணலாம். ஆபரணங்களும் ஆயுதங்களும் தத்துவங்களாகத் திகழ்கின்றன என்று விஷ்ணுபுராணம் குறிக்கின்றது.[116] தத்துவ விளக்கங்கள் பின் தோன்றியவை. ஆனால் ஆழ்வார்கள் ஆபரணங்களையும் ஆயுதங்களையும் மிகுதியும் பாடியுள்ளனர்.

ஆழ்வார்கள் பாடியுள்ள அக்குறிப்புகளுக்கு உரையாசிரியர்கள் விளக்கங்கள் தந்துள்ளனர். திருமாலைவிட்டு நீங்காத பொருள்களை ஆழ்வார்கள் பாடும் முறையைக் கீழ்வருமாறு பிரிக்கலாம். அவையாவன, 1. திருமாலும் திருமகளும் 2. திருமாலும் கருடனும் 3. திருமாலும் ஆயுதங்களும் 4. திருமால் பள்ளி கொண்டுள்ள நிலை.

## திருமாலும் திருமகளும்

திருமாலும் திருமகளும் ஐவகை நிலைகளிலும் இணை பிரியார் என்று வைணவர் கூறுவர். திருமகளுக்கு ஏற்றம் அளிக்கும் வகையில் பாடல்களும் அமைகின்றன. திருமாலைப் பிரியாத திருமகள் செயல் அவனை நெறிப்படுத்துவதாகக் கூறுவர். திருமாலுடன் திருமகளை இணைத்துக் கூறும் மரபு சங்ககாலம் முதல் வழங்கிவருகிறது.[117]

திருமகளை ஏனைய சமயங்களும் போற்றுகின்றன. திருமகள் தோன்றியது பற்றிப் பழைய இலக்கியங்கள் கூற வில்லை. திருமங்கையாழ்வார், திருப்பாற்கடலில் அமுது கடைந்தபோது அதில் திருமகள் தோன்றினாள் என்று கூறுகின்றார்.[118]

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

திருமால் திருமகளுக்குத் தன் மார்பில் இடம் கொடுத்ததை ஆழ்வார்கள் சிறப்பாகக் கூறுகின்றனர். திருமகளை, செய்யவள்[119] திருமங்கை,[120] திருவுடையாள்,[121] தூமலராள்,[122] தாமரையாள்,[123] அரவிந்தப்பாவை,[124] அல்லி மாமலர் மங்கை,[125] புண்டரீகப் பாவை,[126] பொன்பாவை,[127] மலர்மகள்[128] எனப்பல தொடர்களால் குறிக்கின்றனர். ஆழ்வார்கள் திருமாலைப் போற்றுதற்கும் துதித்தற்கும் பெரும்பான்மை திருமகளையும் இணைத்தே பாடுகின்றனர்.

திருமாலை ஐந்நிலைகளிலும் விட்டு நீங்காத திருமகளை மனதில் கொண்டு ஆழ்வார்கள் பாடுகின்றனர். திருமாலுக்குரிய தேவியராகப் பூமாதேவியையும் நீளாதேவியையும் குறிப்பது உண்டு. ஆயினும் ஆழ்வார்கள் திருமகளுக்கே பெருஞ் சிறப் பளித்துப் பாடுவதைக் காணமுடிகிறது. இதற்கான காரணங்களை இருவகையில் உரைக்கலாம்.

பக்திஇயக்க காலத்தில் சிவனுக்குரிய சிறப்பு அவனுடைய தேவியான உமைக்கும் அளிக்கப்பெற்றது. அதுபோல வைணவமும் திருமகளைப் போற்றித் துதித்தது. சைவ சித்தாந்தம் சக்தியை விடச் சிவனுக்கே ஏற்றம் உரைக்கிறது. ஆனால் வைணவ தத்துவம் திருமகளுடன் இருக்கும் திருமாலுக்கே சிறப்பளிக்கிறது.

திருமகளைச் செல்வத்தின் அடையாளமாக வணங்கும் மரபு இந்தியா முழுவதும் நிலவுகிறது. திருமகள் பாற் கடலிலிருந்து தோன்றியவள் என்பதைப் புராணங்கள் கூறு கின்றன. அழகிற் சிறந்த பெண்ணைத் திருமகள் போல் இருக்கிறாள் என்று கூறும் மரபு இலக் கியங்களில் அமைகின்றது. இவற்றை நோக்க எல்லா வகையாலும் திருமகளுக்குச் சிறப்பு அளிக்கப் பெற்றமை விளங்கும்.

அருள் செய்யும் திருமாலை விட்டு விலகாத, தனித் தியங்கும் ஆற்றலையும் அமுங்கும்படிச் செய்து சரணம் அடையும் பக்தனின் குற்றங்கள் அவனுடைய நெஞ்சில் படாதவாறு செய்யும் ஆற்றல் உடையவள் திருமகள். ஸ்வாதந்தர்யத்தாலே அமுங்கியிருக்கும் நீர்மை (சௌசீல்யம்) எளியதன்மை (சௌலப்பியம்) குற்றங்களையும் குணங்களாய்க் கொள்ளும் தன்மை (வாத்சல்யம்) உடையவனாய் இருக்கும் தன்மை (சுவாமித்வம்) என்னும் திருமாலின் குணங்களை வெளிப் படுத்தி, அடையும் அடியவர் சேர்த்து வைத்திருக்கும் பாபங்களைத் திருமால் பொறுக்குமாறு செய்து அவருக்கு அருளுபவள் திருமகள்.

திருமகள் என்னும் சொல் வடமொழியில் ' ஸ்ரீ ' என்று கூறப்பெறும். அவள் பக்தர்களுக்காகத் திருமாலிடம்

பரிந் துரைக்கும் செயல் புருஷகாரம் எனப்படுகிறது. திருமகள் எந்நாளும் மணம் மாறாத தாமரைப் பூவில் வாழுபவள். ' ஸ்ரீ ' என்னும் சொல் ச்ரு என்ற வினைப் பகுதியினின்றும் தோன்றி அழிப்பவள் என்ற பொருளைத் தரும். பக்தர்களின் பிரபத்தி செய்யவிடாது தடுக்கும் பாபங்களையும் அழிப்பவள் என்ற பொருளில் ' ஸ்ரீ ' எனும் சொல் அமையும். [129]

சேதனர்கள் தம் குற்றங்களைப் பொறுத்துப் பரிந்துரைக்கும் தாயை எண்ணுகின்றனர். குற்றங்களைப் பெரிது படுத்தாத நிலை பிராட்டியிடமே அமைகிறது. பல முன்னோர்கள் திருமகளை முன்னிட்டே திருமாலை வணங்குகின்றனர். நம்மாழ்வார் முதலானோர் இதற்குச் சான்றாவர். வேதங்களும் உபநிடதங் களும் திருமாலை அடைய விரும்புபவன் முதலில் திருமகளை அடைதல் வேண்டும் என்கின்றன. இவற்றால் வைணவத்தில் திருமகளுக்குரிய சிறப்பு விளங்கும்.

## நிலமகள் கேள்வன்

இப்பூவுலகைப் பெண்ணாகவும் தாயாகவும் வணங்கும் மரபு உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவுகிறது. இப்பூமியைத் திருமாலின் தேவியாகக் கூறும் மரபு வைணவத்தில் இடம் பெற்றுள்ளது.

பூமியைப் பற்றிய இரு புராணக்கதைகள் திருமாலுடன் தொடர்பு உடையனவாக அமைகின்றன. 1. பாரம் தாங்க இயலாமல் குறைக்க வேண்டும் எனக் கண்ணனிடம் பூதேவி முறை யிட்டமை. 2.வராக அவதாரத்தில் வராகமாய்ப் பூமியை நீரி லிருந்து மீட்டமை என்பன அவை. வைணவத் தத்துவ விளக்கங் கள் திருமகளும் பூமகளும் திருமாலின் வலஇடப் பக்கங்களில் விளங்குகின்றனர் என்று கூறுகின்றன.

ஆழ்வார்கள் நிலமகளையும் திருமாலின் தேவியாகக் கூறுகின்றனர். நிலமகள்,[130] பூமகள்[131] என நிலமகளை விளிக் கின்றனர். நிலமகளின் துணைவனே எனத் திருமாலைப் போற்றும் சிறப்பு ஒன்று மட்டும் ஆழ்வார்கள் பாடல்களில் அமைகிறது. உரையாசிரியர்கள் 'பூபாரத்தைப் போக்குகையாலே பூமிப் பிராட்டிக்கு இனிமையானவன் '[132] என்று குறிக்கின்றனர்.

### திருமகள் - நிலமகள் - ஆய்மகள்

திருமகளும் பூமகளும் திருமாலுடன் இணைந்திருக்கும் நிலையை,

மங்கையர் இருவரும் மலரன அங்கையில்
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை[133]

என்று கூறுவர். ஆய்மகளான நப்பின்னையையும் இணைத்து ஆழ்வார்கள் வணங்குகின்றனர். இதை,

திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்
திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல் [134]

என்னும் கூற்று விளக்குகிறது. நப்பின்னை பற்றிய வரலாறு தமிழ் மரபுக்கே உரியதாகும் ஆய்மகளை மூன்று தேவியர்களில் ஒருவராகக் குறிக்கும் சிறப்பை ஆழ்வார்கள் அமைக்கின்றனர்.

குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும்
நிழற் போல்வனர் கண்டு நிற்கும் [135]

என்று மூன்று தேவியரையும் குறிப்பர். ஆழ்வார்களைப் போன்றே உரையாசிரியர்களும் இதை ஏற்கின்றனர். ' பிராட்டிமார் மூவரொடும் கூட வருமவன் ' [136] என்னும் கூற்றின் வாயிலாக இதை உணரலாம். வடமொழி மரபுகளை மிகுதியும் பற்றும் உரையாசிரியர்களும், ஆழ்வார்களைப் போன்று நப்பின்னையைப் போற்றுகின்றனர்.

### திருமாலும் கருடனும்

இறைவனின் பரத்துவ நிலையை விளக்குவனவாக இருவகைத் தன்மைகளைச் சமயங்கள் சுட்டுகின்றன. 1. இறைவனுடைய செயல்கள். 2. இறைவனைவிட்டு நீங்காத பொருள்கள் என்பன அவை. செயல்கள் கதைகள் வழி விளக்கப்பெறும். பொருள் என்பன ஆபரணங்கள், ஊர்திகள், ஆயுதங்கள் முதலானவை. சிவன் பாம்பினை ஆபரணமாக உடைமையும், முருகன் கழல் அணிந்துள்ளமையும், திருமால் 'கௌத்துவம்' என்னும் இரத்தினத்தை அணிந்துள்ளமையும்

அவ்வச் சமயங்களில் போற்றப்பெறும். சிவனுக்கு விடையூர்தியும், முருகனுக்கு மயிலூர்தியும், திருமாலுக்குக் கருடஊர்தியும் உரியன. சமயஇலக்கியங்கள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

சமய அடையாளமாக அவை கொள்ளப் பெற்றநிலை பிற்காலத்தில் அமைந்தது. ஊர்தியாக உடையவை கொடியாகவும் கொள்ளப்பெற்றமை சமயத்தில் இடம்பெறுகிறது. அல்லவை தேய நல்லவை வளர ஆற்ற வேண்டிய செயலுக்கு ஊர்திகளில் கடவுளர்கள் விரைந்து வந்ததைப் புராணங்கள் கூறுகின்றன. ஊர்திகளும் மக்களால் வணங்கப் பெற்றன. அவற்றை இறையின் குறியீடாக வணங்குகின்றனர். பிற்காலத்தில் தத்துவ விளக்கங்கள் கூறப்பெற்றபோது அவ்வூர்திகளுக்கும் சிறப்பான விளக்கங்கள் தரப்பெற்றன.

ஊர்திகளை இறையுடன் இணைத்துக் கதைகள் பலவாக எழுந்தன. அவை இறைக்கும் ஊர்திகளுக்கும் பெருமை சேர்ப்பனவாயின. விலங்குகளும் பறவைகளும் ஊர்திகளாக விளங்குகின்றன. எல்லாக் கடவுளர்க்கும் இது பொருந்தும். திருமாலுக்குக் கருடனை ஊர்தியாகக் கூறுவர். கருடனைப் பெரியதிருவடி என்றும் அனுமனைச் சிறிய திருவடி என்றும் வைணவர்கள் போற்றுகின்றனர். பறவையில் கருடன் ஊர்தியாய் அமையும் தன்மை திருமாலுக்குரிய சிறப்புக்களில் ஒன்று. ஆழ்வார்கள் அனுமனை ஊர்தியாகக் கூறவில்லை. கருடனை மட்டுமே ஊர்தியாகக் கூறுகின்றனர்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

திருமால் கருடனை ஊர்தியாக உடையநிலை பரிபாடலில் கூறப்பெற்றுள்ளது.[137] கருடன் தன் தாயின் துயரைப் போக்கியவன் என்ற செய்தியைப் பரிபாடல் கூறுகின்றது. [138] திருமால் கருடனை ஊர்தியாகக் கொண்டதை ஆழ்வார்கள் ஈடுபாட்டுடன் பாடுகின்றனர். ஆழ்வார்கள் கருடனைப் புள், [139] பறவை, [140] உவணம், [141] ஆடற்பறவை , [142] கருளன் [143] என்ற சொற்களால் குறிக்கின்றனர்.

ஆழ்வார்கள் ஊர்தியாக மட்டுமே கருடனைக் குறிக்கின்றனர். கருடன் பற்றிய முழுவரலாறு ஆழ்வார்கள் பாடல்களில் அமையவில்லை. திருமங்கையாழ்வார் பாடல்கள் வழி கருடன் பற்றிய கீழ்வரும் குறிப்புக்களை அறியமுடிகிறது. அவை 1. ஆணவத்துடன் திரிந்த கருடனின் கர்வத்தைத் திருமால் அடக்கியமை [144] 2. சிவனுடைய விடையூர்தியைக் கருடனால் அஞ்சியோடும்படிச் செய்தமை என்பன .[145] ஆணவத்துடன் இருந்த கருடனைத் தன் கால்விரல் ஒன்றால் திருமால் அழுத்தி அடக்கினான் என்று திருமங்கையாழ்வார் குறிக்கின்றார். 'ருத்திரனுடைய பெரிய வேகத்தை உடைய வடிவை அசைத் தானாய்த்து ரிஷபம் வாலெடுத்துக் கொண்டோடத் தான் ஜடையைப் பிரித்துக்கொண்டு கிருஷ்ணகிருஷ்ண மஹோ பாஹோ என்றாப்போல சொல்லிக் கொண்டோடும்படிப் பண்ணின திருவடியை '[146] என்னும் உரைவிளக்கம் கொண்டு இரண்டாவது கதைக்குறிப்பை உணரலாம். இராவணனுடன் போரிட்டபோது பறவை ஏறிச்சென்று மாலியின் தலையைக் கொண்டமை உரையில் விளக்கப்பெறுகின்றது.[147]

கருடன் மேல் திருமால் ஏறி வரும்நிலையே ஆழ்வார் களின் பாடல்களில் இடம்பெறுகிறது. புள்ளூர்ந்து வந்து அரக்கர்களை அழித்ததை ஆழ்வார்கள் பாடுகின்றனர். பிற்காலத்தில் கருடனுக்குத் தத்துவ விளக்கம் கூறப்பெற்றது.

*சிரம்சேதனன் விழிதேகஞ்சிறைபின்சினை பதங்கந்*
*தரந்தோற் கருளுருவடிவம் பெயர்எசுர் சாமமுமாம்*[148]

எனக் கருடனை எசுர் சாம வேதங்களின் ஸ்வரூபமாக் கூறுவதைக் காணலாம். வேதமே திருமாலைச் சுமந்து வருகிறது என்பதைக் கருடன் வழி வைணவர்கள் விளக்குகின்றனர்.

## கருடக்கொடி

ஊர்தியைக் கொடியாகக் கொண்டநிலை இந்தியச் சமயங்களில் அமைகின்றது. திருமால் கருடனைக் கொடியாகக் கொண்டுள்ளதை ஆழ்வார்கள் எடுத்துரைக்கின்றனர். ஆழ்வார் கள் கருடக்கொடியை நாகப்பகைக்கொடி,[149] கருளக் கொடி,[150] புட்கொடி[151] என்ற தொடர்களால் குறிக்கின்றனர். அக்கொடியைக்

கொண்டுள்ளதால் திருமாலுக்குச் சிறப்பு ஏற்றி உரைக்கப்பெறுகிறது. திருமால் வலிமை பொருந்திய கருடனைக் கொடியாகக் கொண்டுள்ளான் என நம்மாழ்வார் குறிக்கின்றார்.[152]

## திருமாலும் ஆயுதங்களும்

இந்தியக் கடவுளர்கள் கையில் ஆயுதங்களுடன் படைக்கப் பெற்றுள்ளனர். கைக்கொண்ட ஆயுதங்களால் கடவுளர்கள் பெயர் பெற்றுள்ளனர். சிவன் கையில் கொண்ட மழுவால் மழுவாளி என்றும் முருகன் வேலோன் என்றும் திருமால் சக்கரபாணி என்றும் போற்றப் பெறுகின்றனர். திருமாலுக்கு உரியனவாக ஐந்து ஆயுதங்களைக் கூறுவதும் உண்டு. ஐந்து ஆயுதங்கள் பொறிக்கப்பெற்ற ஓர் அணியைக் குழந்தைகட்கு அணிவிக்கும் மரபு சங்ககாலம் முதல் நிலவி வருகிறது.[153] வாள், வில், தண்டு, சங்கு, சக்கரம் என்பன அவ்வைந்து ஆயுதங்களாகும்.

திருமாலின் ஐந்நிலைகளிலும் அவை அவனைவிட்டு நீங்குவதில்லை. அவை ஆழ்வார்களாக அவதரித்ததை அம்சம் என்ற சொல்லால் குறிப்பர். திருமாலுடைய பஞ்சாயுதங்கள் அல்லவை தேய அவனால் இயக்கப் பெறுகின்றன. ஆழ்வார்கள் அவை திருமாலுக்குப் பெருமை சேர்க்கும் நிலையை விளக்கு கின்றனர். ஐந்து ஆயுதங்களைத் திருமால் ஏந்தியுள்ளதைப் பெரியாழ்வார் 'சங்கு வில்வாள் தண்டு சக்கரம் ஏந்திய அங் கைகள்'[154] என்று குறிக்கின்றார். இவற்றுள் சங்கும் சக்கரமும் சிறப்பாகப் போற்றப் பெறுகின்றன. சங்கு சக்கரம் இவற்றின் செயல்கள் கண்ணன் அவதாரத்திலும் வில்லின் செயல் இராமாவதாரத்திலும் விரிவாக எடுத்துரைக்கப் பெற்றன.

## சங்கும் சக்கரமும்

திருமால் இருகரங்களிலும் கொண்டுள்ள, சங்கு சக்கரங்கள் பகைவரை அழிக்கும் ஆற்றல் உடையவை. பரிபாடல் இதை விரிவாக விவரிக்கின்றது.[155] சிலம்பு, திருவேங்கடவன் கையில் கொண்டுள்ள ஆழியும் சங்கும் சூரியசந்திரர்களைப் போலத் திகழ்கின்றன என்று கூறுகிறது.[156] இவ்வாறு அமையும் சங்கும் சக்கரமும் ஆழ்வார்களின் பாடல்களில் சிறப்பிடம் பெறுகின்றன.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

ஆழ்வார்கள் திருமாலின் ஆயுதங்களில் ஈடுபாடு கொண்டு பாடுகின்றனர். அவர்கள் நான்கு வகைகளில் பாடும் சிறப்பைக் காணமுடிகிறது. 1. திருமால் சங்கினைக் கொண்டுள்ள நிலை. 2. திருமால் சக்கரத்தைக் கொண்டுள்ள நிலை.3. சங்கையும் சக்கரத்தையும் உடைய நிலை.4. பஞ்சாயுதங்களுடன் கூறப் பெறும் நிலை என்பன அவை. இந்நால்வகைகளிலும் பாடும் முறையால் சங்கும் சக்கரமும் சிறப்பிடம் பெறுகின்றன.

## கதைக்குறிப்பு

- திருமாலின் சங்கு சக்கரங்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளனவேயன்றி அவை எவ்வகையில் திருமாலுக்கு உரியனவாயின என்பதை ஆழ்வார்கள் கூறவில்லை. திருமால் கைக்கொண்டுள்ள சங்கைப் பாஞ்சசன்னியம் என்ற பெயரால் குறிப்பர். [157] சங்கின் வரலாற்றை,

கடலில் பிறந்து கருதாது பஞ்சசனன்
உடலில் வளர்ந்து போய் ஊழியான் கைத்தலத்
திடரில் குடியேறித் தீயவசுரர்
நடலைப் பட முழங்கும் [158]

என்னும் ஆண்டாள் பாசுரத்தால் அறியமுடிகிறது.

கடலில் மாண்ட தன் குருவின் மகனை மீட்கக் கண்ணன் பாஞ்சசனனுடன் போரிட்டான்.* கண்ணன் அப்பாஞ்சசனனைத் தன் கைத்தலத்தே கொண்டான். பாஞ்சசன்னியம் என்று பெயர் பெற்ற அப்பாஞ்சசன், என்றும் திருமாலிடம் இருந்து நீங்கா நிலை எய்தினான். இக்குறிப்புகள் இரண்டு மட்டுமே சங்கு பற்றி அமையும் கதைக்குறிப்புக்களாகும். பாரதப் போரில் கண்ணன் சங்கொலி எழுப்பப் பகைவர்கள் அழிந்ததை ஆழ்வார்கள் எடுத்துரைக்கின்றனர். [159]

சங்கு, [160] வலம்புரி, [161] வளை, [162] சங்கம் [163] என்னும் தொடர் களால் ஆழ்வார்கள் சங்கைக் குறிக்கின்றனர். திருமால் சங்கினை இடக்கையில் கொண்டுள்ளதை ' மெச்சூதும் சங்கமிடத்தான்' [164]

என்ற தொடரால் அறியலாம். சங்கு சந்திரனைப் போன்று ஒளிவீசும் இயல்புடையது என்று வருணிக்கின்றனர். ஆழ்வார் கள் பாடும் முறையால், திருமாலுக்கு உரிய சிறப்பு சங்கின் வழி விளங்கும் வகையில் பாடுகின்றனர் எனலாம்.

**சக்கரம்**

வைணவத்தில், சங்கை ஒத்த நிலையில் சக்கரமும் சிறப் பிடம் பெறுகிறது. வைணவ சமய அடையாளங்களில் அவை இரண்டும் அமைகின்றன. சக்கரம் பற்றிய கதைக்குறிப்பு ஏதும் ஆழ்வார்களின் பாடல்களில் இடம்பெறவில்லை. கண்ணன் அவதாரத்தில் ஆழி கொண்டு சூரியனை மறைத்த வரலாறு ஒன்று மட்டும் அமைகிறது.[165]

சக்கரத்தை வைணவர்கள் சுதர்சனாழ்வான் என்று குறிப் பிடுவர். ஆழ்வார்கள் சக்கரத்தை, சக்கரம்,[166] ஆழி,[167] நேமி[168] என்ற தொடர்களால் குறிக்கின்றனர். சக்கரத்தைச் சூரியனுக்கும் சங்கை மதிக்கும் ஒப்பிடுவர். இதை, 'திகழி சுடரென்றும் வெண்சங்கம் வானில் பகரும் மதி என்றும்'[169] என்ற பேயாழ்வார் கூற்றைக் கொண்டு உணரலாம். திருமால் வேண்ட, சிவன் சக்கரத்தைக் கொடுத்தான் என்று சைவம் கூறுகின்றது.

> சங்கரன் எம்பிரான் சக்கரம் மாற்கருளியவா .[170]
> மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் .[171]

என்னும் தொடர்கள் சிவன் திருமாலுக்குச் சக்கரம் அளித்ததை விளக்குவன. சக்கரம் எல்லாவற்றிக்கும் அடிப்படையானது என்பதை,

> ஞாலத்திகிரி முதுநீர்த்திகிரி நடாத்துமிந்தக்
> காலத்திகிரி முதலானயாவும் கடல் கடந்த
> நீலத்திகிரி.[172]

என்ற தொடர்களால் அறியலாம்.

**சார்ங்கம்**

பஞ்சாயுதங்களில் சங்கு சக்கரம் ஆகியவற்றுக்கு அடுத்துச் சிறப்புடையதாக அமைவது திருமாலின் வில்லாகும். அதைச்

சார்ங்கம் என்னும் பெயரால் குறிப்பர். திருமால் சார்ங்கத்தைக் கைக்கொண்ட நிலையை ஆழ்வார்கள் போற்றுகின்றனர். ஆயினும் அது பற்றிய கதைக்குறிப்பு எதையும் ஆழ்வார்கள் எடுத்துரைக்கவில்லை.சார்ங்கம் பற்றிய குறிப்பு இதர புராணங் களிலும் தெளிவாக இல்லை. சாரங்கம் மூங்கிலால் ஆனது என்பதை, முகுந்தன் மூங்கிற் சார்ங்கம் [173] என்னும் கூற்றால் அறியலாம்.

## பஞ்சாயுதங்கள்

பஞ்சாயுதங்களைப் பற்றி ஆழ்வார்கள் எடுத்துரைக் கின்றனர். ஆயினும் முன் கூறிய மூன்று தவிர ஏனைய இரண்டும் அவ்வளவு சிறப்பாகப் போற்றப் பெறவில்லை. வாளை ' நாந்தகம் ' என்று குறிக்கின்றனர் . [174] தண்டைப் போற்றும் மரபும் ஆழ்வார்களின் பாசுரங்களில் காணப்படுகிறது. ஆயுதங்களின் செயலை,

> படைக்கும் கமலம் அளிக்கும் மின்னாழிப் படை
> படைக்கும்
> துடைக்கும் கதை முத்தி மாற்றாது நல்கும்குஞ்சுரி
> சங்கமே [175]

என்று குறிக்கக் காணலாம். திருமாலின் ஆயுதங்கள் அன்பர்க்கு ஆபரணங்களாகவும் அல்லாதவர்களுக்கு ஆயுதங்களாகவும் அமையும் என்பர்.

## அரவணை - திருப்பாற்கடல்

இந்தியச் சமயங்கள் நாகவழிபாட்டை ஏற்றுக் கொண்டவை. சிறப்புடைய கடவுளர் அனைவரும் நாகத்துடன் இணைத்துக் கூறப்பெறுகின்றனர். திருமால் நாகத்தணையில் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ளான் எனப் புராணங்கள் கூறுகின்றன. ஆதிசேடன் என்ற அந்நாகம் உலகைத் தாங்கு வதாகவும் நம்பப் பெறுகிறது. திருமாலை விட்டு நீங்காத சிறப்பு ஆதிசேடனுக்கு உண்டு.

ஆதிசேடன்மேல் பள்ளி கொண்டுள்ள நிலை திருமாலின் ஐவகை நிலைகளில் வியூகத்தின் பாற்பட்டதாகும். இவ்வியூக

வடிவில் ஆதிசேடன் அளவை, 'கட்செவியின் பிறங்கு ஆகம்மும்மை இலக்கம் யோசனை'[176] என்றும் பாற்கடல் அளவை, 'பாற்கடல் நால் எட்டிலக்கம் யோசனை'[177] என்றும் கூறுவர். ஆதிசேடன் உலகைத் தன் உச்சியில் ஏந்தும் நிலையையும் சிறப்பாகக் கூறுவதைக் காணலாம். ஆதிசேடன் திருமாலை விட்டு நீங்கா நிலையை,

> சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
> நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
> புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
> அணையாம் திருமாற் கரவு [178]

என்று பாடுவர்.

## ஆழ்வார்கள் பாடும் பாங்கு

ஆழ்வார்கள் திருமால் பள்ளி கொண்டுள்ளதை மூன்று நிலைகளில் பாடுகின்றனர்.

1. பாம்பணையில் பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள நிலை.
2. அரவணையில் பள்ளி கொண்டுள்ள நிலை.
3. கடலில் கிடந்துள்ள நிலை.

பாற்கடல் பள்ளி கொண்டது பற்றிய கதைக்குறிப்பு ஏதும் ஆழ்வார்கள் பாடல்களில் இல்லை. அரவணையில் பள்ளி கொண்டுள்ள நிலை ஆழ்வார்களின் பாடல்களில் மிகுதியாக உரைக்கப் பெறுகிறது. அரவு,[179] நாகம்,[180] என்னும் சொற்கள் ஆதிசேடனைக் குறிப்பனவாய் அமைகின்றன. 'ஐவாய் அரவணை'[181] என்றும் 'அரவரசப்பெருஞ்ஜோதி அனந்தன்'[182] என்றும் ஆதிசேடனை ஆழ்வார்கள் குறிக்கின்றனர். திருமால் பள்ளி கொண்டுள்ள இடத்தை அலைகடல் என்றும் பாற்கடல் என்றும் பாடுகின்றனர். அரவத்தமளியோடு அழகிய பாற்கடலில் அரவிந்தப்பாவையுடன் திருமால் இருப்பதைப் பெரியாழ்வார் துதிக்கின்றார்.[183] கடலில் பள்ளி கொண்டுள்ள நிலையை ஆழ்வார்கள், 'பரவை துயின்றான்'[184] 'புனற்பள்ளி தேவபிரான்'[185] என்ற தொடர்களாலும் விளக்குவர்.

ஆழ்வார்கள் பாடல்களின் வழி கடலுக்கும் திருமாலுக்கு முரிய தொடர்பு பற்றிய கதைகளை அறிய இயலவில்லை. சிவனைத் தழலோனாகக் கூறும் மரபு உண்டு. திருமாலைப் புனலோனாகக் கூறும் வகையில் கடலைத் திருமாலுடன் தொடர்புபடுத்தியிருக்கக் கூடும்.

## சிவனைப் பற்றிய கதைகள்

தமிழகச் சமய வரலாற்றில் சைவமும் வைணவமும் சம பங்குடையவை. வைணவம் சிவனைத் தாழ்த்தியும் சைவம் திருமாலைத் தாழ்த்தியும் உரைக்கும் வகையில் புராணக் கதைகளைப் படைத்துள்ளன. ஆழ்வார்கள், சைவக்குரவர்கள் ஆகியோர் பாடல்களிலும் இவை இடம் பெற்றுள்ளன. தாழ்த்துதல் என்பது இழிவுபடுத்துதல் என்ற பொருளில் அமையாது, தம் இறைக்கு அடங்கி இயங்குபவன் என்ற பொருளிலேயே அமைகின்றது. ஆழ்வார்கள் குறிப்பிடும் சிவன் சாபம் தீர்த்த வரலாறும், சிவனுக்குக் கூறு கொடுத்த வரலாறும் அவ்வகையில் அமைவன. சைவமும் திருமால் செயல்கள் சில வற்றைக் கூறுகின்றது.

குறிய மாணுருவாகிக் குவலயம் அளந்தான்
குருந் தொசித்த பெருந்தகை [186]

என்பன அதற்குச் சான்றுகளாகும்.

வைணவர்கள் திருமாலோடு ஒப்பிட்டு உரைக்கக் கூடிய சிறப்பு சிவனுக்கு மட்டுமே உரியது என்று கொள்ளுகின்றனர். அதனால்தான் சிவனினும் மேம்பட்டவன் திருமால் என்னும் கருத்தை விளக்க ஆழ்வார்கள் சிவன் பற்றிய கதைகளை எடுத் தாளுகின்றனர். அவற்றில் சிவனுக்குரிய சிறப்பியல்புகள் இடம் பெற்றுள்ளன. அவற்றை ஆழ்வார்கள் ஏற்றுக்கொண்டு உள்ளனர் என்பது இதன்முலம் விளங்குகிறது.

இருபெரும் சமயங்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் கருத்துடைய பாடல்களும் ஆழ்வார்களின் எண்ணங்களாய் மலர்ந்துள்ளன. பேயாழ்வார் சங்கும் மழுவும் உடையவனாகத் திருமாலைக் காணுகின்றார். பெரும்பான்மை ஆழ்வார்கள் சமயக்காழ்ப்பின்றிச் சிவனைக் குறிக்கின்றனர். சிவனுக்குப்

பெருமை சேர்க்கும் சில கதைகளும் ஆழ்வார்களின் பாடல்களில் அமைகின்றன. கடல் கடைந்த போது வந்த நஞ்சை சிவன் ஏற்றது, திரிபுரம் எரித்தபோது திருமால் அம்பானது ஆகிய இரண்டும் அதற்குச் சான்றாவன. ஆழ்வார்கள் இந்நோக்கிலேயே பாடி இருப்பினும் உரையாசிரியர்கள் திருமாலுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பொருள் விரித்துள்ளனர். திருமால் சிறப்பு ஒன்றையே பேச எண்ணிய ஆழ்வார்கள் சிவனை முற்றிலும் விலக்க இயலாத நிலையில் பாடல்களைப் பாடினர் எனலாம்.

ஆழ்வார்கள் சிவனைப்பற்றிப் பாடியுள்ள கதைக் குறிப்புக்களை மூன்று வகைகளாகக் கூறலாம்.1. திருமாலுக்குப் பெருமை சேர்க்கச் சிவனைத் திருமாலுக்குக் கீழ்ப்பட்டவனாகக் கூறுதல். 2. சிவனைப் பற்றிய கதைகள். 3. சிவனைப் பற்றி அமைந்த குறிப்புக்கள் என்பன அவை. அவற்றுள் சிவனுக்குச் சாபம் தீர்த்தது, பாகம் அளித்தது, மார்க்கண்டேயனுக்கு நீண்ட வாழ்வளித்தது ஆகிய மூன்றையும் திருமாலின் முழுமுதல் தன்மையை நிலை நாட்ட ஆழ்வார்கள் எடுத்தாளுகின்றனர். சைவத்தில் பின்னிரண்டும் சிவனுக்கு மிகச் சிறப்பளிப்பனவாக அமையும்.

ஆழ்வார்கள் சிவனுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சில புராணக்கதைகளையே எடுத்தாண்டுள்ளனர். திரிபுரம் எரித்தமை, தக்கன் வேள்வி தகர்த்தமை, நால்வருக்கு உபதேசித்தமை என்பன அவை.

## திரிபுரம் எரித்தமை

சிவன் திரிபுரம் எரித்த செய்தி சங்ககாலம் தொடங்கி வழங்கி வருவதாகும்.[107] சிவனுடைய அட்டவீரச் செயல்களில் இதுவும் ஒன்று.

கல்லா னிழற் கீழாயிடர் காவாயென வானோ
ரெல்லா மொரு தேராயயன் மறைபூட்டி நின்றுய்ய
வல்லா யெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல்
வில்லாலெயி லெய்தானிடம் வீழிம்மிழலையே[108]

மைம்மருவு மேருவிலு மாகணநா ணரியெரிகால் வாளியாக
மும்மதிலும் நொடியளவிற் பொடி செய்த முதல்வனிட
முதுகுன்றமே[109]

என்று சைவர்கள் இக்கதையை மிகச் சிறப்பாகப் போற்றி உரைக்கின்றனர். இப்புராணக்குறிப்புப் பழைய வடமொழி இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளது. வியாசபாரதத்தில் கர்ணபருவத்தில் இருபத்து நான்காம் அத்தியாயம் முதலாக நான்கு அத்தியாயத்தில் மிக விரிவாக விளக்கப்பெறுகிறது.

வித்யுந்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்னும் மூன்று அரக்கர்களைக் கொல்ல, தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சிவன் பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மேருவை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும், வாயுவைச் சிறகாகவும், அக்னியை முனையாக உடைய அம்பின் முனையில் திருமால் நிற்கப் போர் தொடங்கு முன் சிவன் சிரிக்க அத்தீயில் மூன்று அரக்கர்களும் எரிந்தனர்; முப்புரங்களும் சாம்பலாயின என்பது வரலாறு.[190] திரிபுர தகனத்தில் திருமால் அம்பான செய்தியை,

குழல் நிறவண்ண! நின்கூறு கொண்ட
தழல்நிற வண்ணன் நண்ணார் நகரம்
விழநனிமலை சிலைவளைவு செய்து
அங்கழல் நிறவம்பது ஆனவனே [191]

என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார். திரிபுரம் எரித்த வரலாற்றைத் திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், நம்மாழ்வார் முதலோர் எடுத்துரைக்கின்றனர். [192]

## தக்கன் வேள்வி தகர்த்தது

சிவனுடைய ஆற்றலை விவரித்துக் கூறும் இக்கதை சிவபுராணங்களில் இடம் பெற்றுள்ளது. தக்கன் சிவனை அவமதித்துச் செய்யப் புகுந்த வேள்வியைச் சிவன் வீரபத்திரக் கடவுளை ஏவி அழித்துத் தக்கனுக்குதவ முன்வந்த தேவர் களையும் அழித்ததை இக்கதை கூறுகிறது. தக்கயாகத்தைப் பற்றிய ஒரு பரணிநூல் எழுந்திருப்பதே இதன் சிறப்பை நன்கு விளக்குகிறது. சைவத் திருமுறைகளில் இப்புராணக்குறிப்பு பல இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது. இச்செயலைத்

திருமங்கையாழ்வார், 'தக்கன் வேள்வி தகர்த்த தலைவன் '[193] என்று குறிக்கின்றார். ஏனைய ஆழ்வார் பாடல்களில் இது இடம் பெறவில்லை. 'ருத்திரனை எல்லோரையும் கீழாக்கித் தானே மேலாக வேணும் என்று அபிமானித்திருக்கிறவனுடைய துக்கத்தைப் போக்கின ஆபத்சகனானவன் '[194] என்னும் உரைக்கூற்று கொண்டு வைணவ சமயத்தார் சிவன் செயலுக்குக் கூடத் திருமாலின் அருள் இன்றியமையாதது என்பதை விளக்க முயல்கின்றனர் என்பது விளங்கும்.

## சிவன் நால்வருக்கு உபதேசித்தது

சிவன் கல்லால மரத்தின் அடியில் சனகாதி முனிவர்களுக்கு தத்துவங்களை உபதேசித்தான் எனச் சைவம் கூறுகின்றது. சங்க இலக்கியம் ஆலமர் கடவுள்[195] என்று சிவனைப் போற்று கின்றது. வைணவர்கள் அகத்தியர், புலத்தியர், தட்சர், மார்க்கண்டேயர் என்னும் நால்வருக்கு ஆலமரத்தடியில் அமர்ந்து சிவன் ஸ்ரீமன் நாராயண தத்துவோபதேசம் உரைத்தான் என்று கூறுவர்.[196] இதை,

> ஆலநிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு
> மேலையகத்துரைத்தான் மெய்த்தவத்தான் [197]

எனத் திருமழிசையாழ்வாரும்

> ஆலமர நீழல் அறம்நால்வர்க்கு அன்றுரைத்த
> ஆலமமர் கண்டத் தரன் [198]

எனப் பொய்கையாழ்வாரும் குறிப்பிடுகின்றனர்.

## சிவனைப் பற்றிய வருணனை

சிவனைப் பற்றிக் கூறுகையில் ஆழ்வார்கள் அவனுடைய வடிவைப் பற்றி உரைக்கின்றனர். சிவன் பிணங்களுடைய காட்டில் நடனமாடுபவன்,[199] மான் தோலை ஆடையாய் உடையவன், [200] சுடுநீறு மெய்யில் பூசியவன்,[201] உமைபங்கன் ,[202] தழல் நிறவண்ணன், [203] மழுவாளி, [204] நஞ்சுண்ட கண்டன், [205] சடையுடையவன், [206] பிறையுடையவன், [207] கங்கையைச் சடையில் உடையவன்,[208] விடையேற்றன்[209] முதலான செய்திகள் ஆழ்வார் களின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

ஆழ்வார்களின் பாசுரங்களில் பிற கடவுளரைப் பற்றிய செய்திகள் குறைவே. முக்கடவுளர் கொள்கை வலுப்பெற்றிருந்த காலத்தில் ஆழ்வார்கள் வாழ்ந்தார்கள் என்பது நன்கு விளங்குகிறது. வழிபாட்டு நிலையில் நான்முகன் வழிபாடு வலுவிழந்து, சைவமும் வைணவமும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்ததை அறியமுடிகிறது. அதனால் ஆழ்வார்கள் திருமாலின் பெருமையை விளக்கவும் முழுமுதல் தன்மையை உணர்த்தவும் சிவனைப் பற்றிய கதைகளையும் வடிவம் பற்றிய வருணனையையும் தம் பாசுரங்களில் எடுத்துரைக்கின்றனர்.

## அடியவர் பற்றிய கதைகள்

பக்திப்பாக்கள் அடியவர்கள் சிறப்பை இறைவனுடைய பெருமையோடு இணைத்துக் கூறுகின்றன. சைவத்தில் அடியவர்களைப் பற்றிய வரலாற்றைத் திருத்தொண்டர் மாக்கதையும் வைணவத்தில் குருபரம்பரையும் கூறுகின்றன. சைவக்குரவர்கள் புராணஇதிகாசங்களில் இடம்பெற்றுள்ள அடியவர்கள் பற்றிய வரலாறுகளை எடுத்துரைக்கின்றனர். ஆழ்வார்களும் இத்தகைய நிலையை மேற்கொண்டுள்ளனர்.

## முதலாழ்வார்கள்

முதலாழ்வார்கள் மூவரும் இராம பரத இலக்குமணனைப் போல அடுத்தடுத்து அவதரித்தவர்கள். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் திருமாலின் திருவாணையால் சேனைமுதலியார் திருமந்திரப் பொருளை உணர்த்த உணர்ந்தவர்கள். அவர்கள் மூவரும் தனித்தனியே திரிந்து கொண்டிருந்து ஓரிடத்தில் சேர்ந்து திருமாலின் அருளுக்கு ஆளானவர்கள்.

திருக்கோவலூரில் மூவரும் சந்தித்து நெருக்குண்டதைக் குருபரம்பரை விளக்குகிறது.[210] இம்மூவரோடு நாலாமவராய்த் திருமால் இருந்து அவர்களை நெருக்கினான் என்பர். இவ்வரலாற்றை,

> நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
> பாயும் பனிமறைத்த பண்பாளா - வாசல்
> கடைகழியா வுள்புகாக் காமர் பூங்கோவல்
> இடைகழியே பற்றியினி [211]

என்னும் பொய்கையாழ்வார் பாடல் எடுத்துரைக்கின்றது. ஆழ்வார்கள் பற்றி அமையும் கதைக்குறிப்பு இதுவொன்றே எனலாம்.

## திருக்கோட்டியூர் செல்வநம்பி

பெரியாழ்வார், அடியவர்களில் சிறப்புடையவராகத் திருக்கோட்டியூர் செல்வநம்பி என்பவரைக் குறிக்கின்றார். 'அல்வழக்கு ஒன்றுமில்லா அணிகோட்டியர்கோன் அபிமான துங்கன் செல்வனைப் போல'[111] என்று அவரைப் பாராட்டும் நிலையைக் காணலாம். பாண்டிய மன்னனுக்குப் பரதத்துவம் பற்றிய ஐயம் எழுந்தபோது அதைத் தெளிவிக்கப் பெரியாழ் வாரை அழைக்கச் செய்தவர் செல்வநம்பியே ஆவார். பாண்டிய மன்னனான ஸ்ரீவல்லப தேவனுக்குச் செல்வநம்பி அமைச்சராய் இருந்து அருஞ்செயல் ஆற்றியவர்.

செல்வநம்பியைப் பற்றிய வேறு செய்திகள் ஏதும் பெரியாழ்வார் பாடல்களின் மூலம் அறிய இயலவில்லை. 'பகவானுக்கு அடியனே என்று அபிமானித்திருப்பதன்றியில் பாகவதர்களுக்கும் அடியராக அறுதியிட்டிருப்பவர் உகந்தருளின நிலங்களில் உண்டான குறை நிறைவுகளையும் தம்முடையதாக நினைத்திருப்பவர்'[112] என்று செல்வநம்பியின் சிறப்பை உரையாசியர்கள் விளக்குவர்.

அடியவர்க்கு அடியாராய்த் தொண்டாற்றும் குணம் வைணவர்களுக்கு இன்றியமையாதது. இது பாகவத சேஷத்துவம் என்று போற்றப் பெறுகின்றது. இக்குணம் செல்வநம்பி மூலம் எடுத்து இயம்பப் பெறுகிறது.

## கோவிந்தசாமி என்னும் அடியவன் பற்றிய வரலாறு

கோவிந்தசாமி என்னும் அந்தணன் ஒருவன் தன் உடல் வருத்தித் தவம் செய்து, கண்ணன் அவதாரச் செயல்களைக் கண்முன்னே காணவிரும்பினான். திருமாலும் அவ்வண்ணமே அவன் எண்ணம் ஈடேறச் செய்தான். மேலும் திருமால் உனக்கு வேண்டுவது யாதென அவனிடம் கேட்க அந்தணனும் அத்தாணிச் சேவகனாய் இருக்க விருப்பம் தெரிவித்தான். திருமால் அவன்

உள்ளம் உணர்ந்து அவனுக்குப் பக்குவ நிலை ஏற்படாததைத் தெளிந்து 'உலக இன்பங்களை நுகர்ந்துவா' என்று கூறி மறைந்தான். [214] இச்செய்தியைத் திருமங்கையாழ்வார் மட்டுமே உரைக்கின்றார்.

மாக மாநிலம் முழுவதும்வந் திறைஞ்சும்
மலரடி கண்ட மாமறை யாளன்
தோகை மாமயி லன்னவர் இன்பம்
துற்றிலா மையில் அத்தஇங் கொழிந்து
போகம் நீயெய்திப் பின்னும் நம்மிடைக்கே
போதுவாய் என்ற பொன்னருள் [215]

என்னும் பாடல் இக்கருத்தை விளக்குகிறது. ஏனைய ஆழ்வார் பாடல்களில் இக்கதை பற்றிய குறிப்பேதும் இல்லை.

## கத்திரபந்து பரகதி அடைந்தது

கத்திரபந்து என்பவன் கொடிய குணம் உள்ளவனாகக் கானகத்தில் திரிந்தான். முனிவர் ஒருவரின் அறிவுரை கேட்டுத் திருமாலின் திருநாமமாகிய ' கோவிந்தா' என்னும் மந்திரம் ஓதி மறுபிறப்பில் சிறப்புப்பேறு பெற்றான். [216] திருமால் திருநாமம் எல்லா நன்மையையும் அளிக்கும் என்பதை விளக்க இக்கதை எடுத்தாளப் பெறுகின்றது.

மொய்த்த வல்வினையுள் நின்று மூன்றெழுத்துடைய
பேரால்
கத்திரபந்து மன்றே பராங்கதி கண்டு கொண்டான் [217]

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் இக்கதையைக் குறிக்கின்றார்.

## நமனும் முற்கலனும் பேசியது

முற்கலன் என்பவன் கொடிய பாவியாவான். கண்ணனின் பெயர் சொல்லித் தானம் செய்தமையால் அவன்புகுந்த நரகம் சுவர்க்கம் ஆயிற்று. இதைத் தொண்டரடிப் பொடியாழ்வார்,

நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி [218]

என்று பாடுகின்றார். இக்கதை ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் தொண்ணூறாவது அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளது.

இறைவனுடைய பெருமையை விளக்க இவ்வகைப் புராணக்கதைகள் எடுத்தாளப்பெறுகின்றன. இறைவன் சிறப்பும் அடியார் சிறப்பும் இவற்றின்வழி விளங்குகின்றன. அவதார நிகழ்ச்சிகளில் அடியவர்கள் பற்றிய கதைகள் இடம்பெற்றுள்ளன. மேலும் இவ்வகைக் கதைகள் மற்றைய நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

## அரசர் பற்றிய கதைகள்

அரசர்கள் பற்றிய செய்திகள் வரலாறுகளில் இடம் பெறுவனவாயினும் புராணங்களும் அவற்றை எடுத்துரைக்கின்றன. சில மன்னர்களைப் பற்றிய செய்திகள் ஆழ்வார்கள் பாடல்களின் வழி அறியலாகின்றன.

பாண்டிய குலத்து அரசன் ஒருவன் தனது நாட்டிலிருந்து மேருமலைவரை போய் வழியிலுள்ள காடுகளைக் களைந்து பகைவர்களை அழித்துத் தன்வெற்றி தோன்றும்படி மேருமலையின் முடியில் தன் மீன்கொடியைப் பொறித்தான். இதைப் பெரியாழ்வார், 'பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல் ' [219] என்று குறிப்பிடுகின்றார்.

மலயத்துவஜராஜன் என்னும் மன்னன் திருமாலிருஞ்சோலை அடைந்து திருமாலின் அறிவுரைப்படி அங்குள்ள சிலம்பாற்றில் மூழ்கி அருள்பெற்றான். இதை,

கொன்னவில் கூர்வேல்கோன் நெடுமாறன்
தென்கூடற்கோன்
தென்னன் கொண்டாடும் தென்திருமாலிருஞ்
சோலையே [220]

என்று பெரியாழ்வார் கூறுகின்றார்.

தொண்டைமன்னன் ஒருவன் திருவேங்கடவனுக்கு உற்ற நண்பனாக இருந்ததாகவும் திருவேங்கடவன் தன்னுடைய ஆழி, சங்கு முதலானவற்றை அவனுக்கு அளித்துப் போரில் அவன் வெற்றி பெறச் செய்ததாகவும் கூறுவர்.[221] தொண்டைமன்னன் பற்றிய குறிப்பை,

துளங்குநீண் முடியரசர் தங்குரிசில்
தொண்டை மன்னவன் திண்டிறல் ஒருவனுக்கு
உளங்கொள் அன்பினோடு இன்னருள் சுரந்து [222]

என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார்.

மேலும் சீமாலிகன், வாணன், பௌண்டரகவாசுதேவன், காசி மன்னன், வக்கரன் முதலான அரசர்கள் பற்றிய வரலாறுகளும் ஆழ்வார்கள் பாடல்களில் காணப்படுகின்றன. திருமங்கை யாழ்வார் பல்லவன், சோழன் கோச்செங்கணான் பற்றிய சில குறிப்புகளை எடுத்தாளுகின்றார்.

## கங்கையைப் பற்றிய கதைக்குறிப்புக்கள்

நதிகளை வணங்கும் நிலை பழங்காலம் தொட்டே வழங்கி வருகிறது. அவ்வகையில் ஆழ்வார்கள் சிலம்பாறு, காவிரி, கங்கை என்ற மூன்று நதிகளைக் குறிக்கின்றனர். அவற்றில் கங்கை பற்றிய சில புராணக்குறிப்புக்கள் சுட்டப் பெறுகின்றன.

1. அமரர் வேண்ட கங்கை பூவுலகத்தில் இழிந்தமை.[223]
2. மாமுனி தவம் செய்து கொணர்ந்தமை.[224]
3. திருமாலின் திருவடியிலிருந்து பெருகியமை.[225]
4. சதுமுகன் கையில் சதுப்புயன்தாளில் சங்கரன் சடையில் தங்கியமை.[226]

என்பன கங்கையைப் பற்றியமையும் கதைகளாகும்.

## திருமடல்கள் காட்டும் கதைகள்

திருமங்கையாழ்வார் திருமடல்களில் சில கதைகளை எடுத்துரைக்கின்றார். அவை தலைவன் தலைவியை விட்டுப் பிரியாநிலைக்குச் சான்றாகக் காட்டப் பெறுகின்றன. சிறிய திருமடல்,

*வாரார்வனமுலை வாசவதத்தையென்று*
*ஆரானுஞ்சொல்லப்படுவாள் - அவளுந்தன்*
*பேராயமெல்லா மொழியப் பெருந்தெருவே*
*தாரார் தடந்தோள் தளைக்காலன் பின்போனாள்* [227]

என்று வாசவதத்தை வரலாற்றைக் கூறுகிறது. இக்கதை பற்றிய தெளிவான விளக்கங்களை அறிய இயலவில்லை. தமிழ் நூல்களில் இக்கதை இடம் பெறவில்லை. ' தோழிமாருடைய பெரிய திரளைக்கடுகவிட்டு விலங்கிட்டிருக்கிற வத்ஸராஜன் பின்னே போனாள் ' [228] என்னும் உரைவிளக்கம் கொண்டு அவள் காதலன் பெயர் வத்ஸராஜன் என்பதை மட்டும் அறிய முடிகிறது. இக்கதை கதாஸரிதசாகரம் என்னும் வடமொழி நூலில் காணப் பெறும் கதையோடு ஒத்தமைகிறது என்பர். [229]

பெரியதிருமடல் காதலர்களைப் பற்றிய சில கதைகளை எடுத்துரைக்கின்றது. சீதை இராமனுடன் கானகம் போனது, வேகவதி தன்னுடைய கணவனுடன் சென்றது, பன்னகராயன் மடப்பாவை பார்த்தனை மணந்தது, உழை அநிருத்தனை மணந்தது, உமை சிவனைச் சேர்ந்தது முதலான பல கதைகள் இலக்கிய அமைப்பில் சிறப்பாய் உரைக்கப் பெறுகின்றன.

### சீதை இராமனுடன் கானகம் சென்றது

*கானகம் சென்ற இராமனைச் சீதை பின்தொடர்ந்ததை,*
*பின்னும் திரைவயிற்றுப் பேயே திரிந்துலவா*
*கொன்னவிலும் வெங்கானத் தூடு-கொடுங்கதிரோன்*
*துன்னு வெயில்வறுத்த வெம்பரல்மேல் பஞ்சடியால்*
*மன்னன் இராமன்பின் வைதேவி* [230]

என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார். ஏனைய ஆழ்வார் களும் இந்நிகழ்ச்சிகளைப் பாடுகின்றனர். ஆயினும் இலக்கிய அடிப்படையில் ஈண்டு இக்குறிப்பு சிறப்புடையதாய் அமைகிறது.

### வேகவதி தன் கணவனுடன் சென்றது

வேகவதி என்கிற ஒரு பெண்பிள்ளை தனது இனிய உயிர்போன்ற தன் கணவனைத் தான் காண வொட்டாமல் தனது

தமையன் தன்னைக் கொண்டு போக அவ்வவஸ்தையிலே அந்தத் தமையனை லக்ஷ்யம் பண்ணாமல் இழிவான சொற்களைச் சொல்லி அவனை இகழ்ந்து, தான் புறப்பட்டுப் போய்ப் பெரிய போர்க்களத்திலே மலைபோல் திண்ணிய தோளை உடையவனும் காளை போல் செருக்குற்றிருப்பவனுமான தனது காதலனைக் கைப்பிடித்தாள் [331] என்று உரையாசிரியர் வேகவதி வரலாற்றைக் கூறுகின்றார்.

உதயணனுடைய வரலாற்றைக் கூறும் பெருங்கதையுடன் தொடர்புடையது இக்கதை. ஆயினும் முழுவரலாற்றை அறிய இயலவில்லை. இக்கதை' கதாஸரிதஸாகரம் ' என்னும் வடமொழி நூலில் இடம் பெற்றுள்ளது என்பர். [332]

## பன்னாகராயன் மடப்பாவை பார்த்தனை மணந்தது

பார்த்தனைப் பற்றிய கதை ஒன்று பெரிய திருமடலில் காணப்பெறுகின்றது.

கொன்னவிலும் நீள்வேல் குருக்கள் குலமதலை
தன்னிகர் ஒன்றில்லாத வென்றித் தனஞ்சயனைப்
பன்னாக ராயன் மடப்பாவை–பாவைதன்
மன்னியநாண் அச்சம் மடம்யென்றிவையகல
தன்னுடைய கொங்கை முகம்நெரிய–தானவன்தன்
பொன்வரை யாகம் தழீஇக்கொண்டுபோய்த் தனது
நன்னகரம் புக்கு நயந்தினிது வாழ்ந்ததுவும் [333]

என்று திருமங்கையாழ்வார் விளக்குகிறார். அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை சென்றபோது கங்கையில் நீராடிய நிலையில் உலூபி என்னும் நாகக்கன்னியைச் சேர்ந்ததைக் கூறுகிறது இக்கதை.

## உழை அநிருத்தனை மணந்தது

உழை அநிருத்தன் கதை சிலம்புக்காலம் தொட்டு வழங்கி வருவதாகும். ஆயினும் அதுபற்றிய தெளிவான வரலாறு தமிழ் இலக்கியத்தில் இல்லை. திருமங்கையாழ்வார் அதனைக்

குறிக்கிறார். வாணன் என்ற அசுரனின் பெண்ணாகிய உழை, தன் கனவில் ஓர் ஆடவனுடன் சேர, அச்செய்தியைத் தன் தோழியிடம் கூற அவளும் கனவில் வந்தவன் அநிருத்தன் என்பதைக் கூறி யோகச்செயலால் அவனைத் தூக்கி வந்து உழையிடம் சேர்ப்பித்தாள் என்னும் கதைக்குறிப்புப் பெரிய திருமடலின் வழி அறியப் பெறுகிறது.[234] ஏனை ஆழ்வார்களின் பாடல்களில் இக்கதை, குறிப்புக்களாய் உள்ளனவேயன்றி முழுநிகழ்ச்சி இடம் பெறவில்லை.

## ஆசாரியர்கள் உரைவழி அறியும் கதைகள்

ஆழ்வார்கள் பற்பல புராணக்கதைகளையும் நேரடியாக எடுத்துரைக்க முயல்கின்றனர். இவையல்லாது மேலும் சில கதைகள் உரையாசிரியர்களின் உரைகளில் காணப்பெறுகின்றன. ஆழ்வார்கள் அவற்றை எடுத்துரைப்பதாகக் கூறுகின்றனர். உரோமசன் என்பவன் நான்முகன் செருக்கு அடக்கிய செயலைத் திருமங்கையாழ்வார் சுட்டுவதாக உரைக்கின்றனர்.[236]

இராமாவதாரம் பற்றிய திருமங்கையாழ்வாரின் பாசுரமான 'கோதில் வாய்மையினானொடு முடனே உண்பன் நான் என்ற ஒண்பொருள்'[237] என்பது இராமன் சொல்லிய வண்ணம் அனுமனுடன் ஓரிலையில் உணவுண்டதைக் குறிப்பதாய்க் கொள்ளலாம் என்பர்.[238]

ஆழ்வார்கள் பலவகையாலும் புராணக்கதைக் குறிப்புக் களை எடுத்துரைக்கின்றனர். அவை வைணவ சமயத்தையும், அதன் சிறப்பையும் நன்கு எடுத்தியம்புகின்றன என்பது மேற் கூறியவற்றால் இனிது விளங்கும்.

## குறிப்புக்கள்

1. முல்லைப்பாட்டு அடி. 1. 5.
2. முன்றுறை அரையனார், பழமொழி, பா. 12.
3. சிவஞானபோதம். சூத்திரம். 8.
4. பெரும்பாணாற்றுப்படை. அடி. 403-404
5. நான்முகன் திருவந்தாதி. பா. 1.

6. பெரியாழ்வார் திருமொழி. 4. 10. 5.
7. மேற்படி. 2. 5. 8.
8. பெருமாள் திருமொழி. 6. 4.
9. பெரியதிருமொழி. 2. 2. 4.
10. மேற்படி. 3. 9. 4.
11. திருவாய்மொழி. 4. 10. 1.
12. மேற்படி. 1. 5. 3.
13. மேற்படி. 10. 10. 3.
14. நான்முகன் திருவந்தாதி. பா. 1.
15. பாகவதம். பா. 116.
16. தேவாரம். பொது. திருப்பதிகம். பா. 10.
17. பரிபாடல். 2. அடி. 69-73. சிலப்பதிகாரம் காதை. 17. முன்னிலைப் பரவல். 1.
18. நான்முகன் திருவந்தாதி. பா. 49.
19. திருவாய்மொழி. 3. 4. 9.
20. திருச்சந்தவிருத்தம். பா. 81., 88.
21. பெரியாழ்வார் திருமொழி. 1. 6. 10.
22. நாச்சியார் திருமொழி. 9. 1.
23. பெரியாழ்வார் திருமொழி. 1. 6. 10.
24. திருச்சந்தவிருத்தம். பா. 21.
25. பெரியதிருமொழி. 5. 7. 4.
26. மேற்படி. 6. 1. 2.
27. மேற்படி.
28. மேற்படி. 1. 4. 7.
29. முதல் திருவந்தாதி பா. 81.
30. கம்பராமாயணம். பா. 3782.
31. பெரியாழ்வார் திருமொழி. 2. 1. 9.
32. பெரியதிருமொழி. 6. 8. 3.
33. மூன்றாம் திருவந்தாதி. 99.
34. திருவாய்மொழி. 8. 7. 2.
35. பெரியாழ்வார் திருமொழி. 2. 1. 9.
36. மேற்படி. 4. 2. 5. மணவாளமாமுனிகள் வியாக்கியானம். ப. 432
37. பாகவதம். 12. 2. 51.
38. கலித்தொகை. பா. 105. அடி. 12-16.
39. இளங்குமரன். இரா. (பதி), யாப்பருங்கல விருத்தி, ப. 83.

40. பெரியதிருமடல். கண்ணி. 96.
41. அண்ணங்கராசாரியர் (பதி), ரங்கராஜஸ்தவம், சுலோகம். 8.
42. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம். ப. 46.
43. பெரியதிருமொழி. பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம். ப. 169.
44. திருவாய்மொழி. 3. 8. 3.
45. பெரியதிருமொழி. 1. 8. 6.
46. மேற்படி. 8. 3. 3.
47. பெரியதிருமடல். கண்ணி. 96.
48. பெரியதிருமொழி. 5. 10. 2.
49. மேற்படி. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்.ப.482.
50. மேற்படி. 5. 9. 2. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப-ள். 1004-1105.
51. மேற்படி. 1. 4. 9.
52. மேற்படி. 11. 6.
53. பெரியாழ்வார் திருமொழி. 4. 3. 9, திருவாய்மொழி. 3. 1. 10.
54. நாச்சியார் திருமொழி. 2. 2.
55. திருச்சந்தவிருத்தம். பா. 30.
56. பெரியதிருமொழி. 5. 6. 6.
57. திருவாய்மொழி. 4. 10. 3.
58. மேற்படி. 2. 2. 1.
59. சிவஞானபோதம். சூத்திரம். 1.
60. பகவத்கீதை. அத்தியாயம். 10. சுலோகம். 39.
61. அகநானூறு. பா. 237. அடி. 3-7
62. கலித்தொகை. பா. 106. அடி. 9-13.
63. சிலப்பதிகாரம்.காதை. 9. அடி. 60.
64. நாச்சியார் திருமொழி. 1.
65. பரிபாடல். 3. அடி. 47.
66. பெரியதிருமொழி. 2. 2. 8.
67. மேற்படி. 2. 8. 8.
68. மேற்படி. 2. 8. 4.
69. திருவாய்மொழி. 2. 10. 10. ஈடு. ப. 200.
70. பெரியதிருமொழி. 2. 8. 5.

71. இரண்டாம் திருவந்தாதி. பா. 48.
72. பெரியதிருமொழி. 2. 8. 5.
73. மேற்படி. 8. 10. 1.
74. திருவாய்மொழி. 6. 6. 5.
75. புறநானூறு. பா. 58. அடி. 14-17.
76. முத்தொள்ளாயிரம். பா. 3.
77. குருபரம்பரை. 80-81.
78. சதாசிவ பண்டாரத்தார், டி. வி. பிற்காலச் சோழர் சரித்திரம். ப. 112.
79. தேவாரம் பொது. ஆதிபுராணத் திருக்குறுந்தொகை. 3.
80. நான்முகன் திருவந்தாதி. பா. 1.
81. தேவாரம். 1. 132. 7.
82. பெரியதிருமொழி. 3. 9. 3.
83. நான்முகன் திருவந்தாதி. பா. 31.
84. மேற்படி. பா. 58.
85. அமலனாதிபிரான். பா. 6.
86. பெரியதிருமொழி. 5. 2. 6.
87. மேற்படி. 6. 9. 1.
88. மேற்படி. 10. 1. 5.
89. இரண்டாம் திருவந்தாதி. பா. 17.
90. திருவாய்மொழி. 2. 2. 2.
91. திருச்சந்தவிருத்தம். பா. 113. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 332.
92. மேற்படி. பா. 42.
93. பெரியதிருமொழி. 5. 2. 6.
94. பெரியாழ்வார் திருமொழி. 1. 8. 9.
95. பெரியதிருமொழி. 1. 5. 8.
96. மேற்படி. 5. 2. 6.
97. பெரியாழ்வார் திருமொழி. 4. 10. 4.
98. கந்தபுராணம். 6. 3. 11.
99. சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியர் உரை. ப. 110.
100. தேவாரம். 4. 32. 7.
101. மேற்படி. 7. 4. 2.
102. பெரியதிருமொழி. 10. 9. 4.
103. மேற்படி. 3. 4. 9.
104. திருவாய்மொழி. 1. 3. 9. ஈடு. ப.

105. பெரியதிருமொழி. 6. 7. 9. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 1153.
106. திருவாய்மொழி. முதல் பத்து. ஈடு. ப. 217.
107. சம்பந்தர் தேவாரம். பதிகம். 274. பா. 2.
108. பெரியதிருமொழி. 5. 8. 6.
109. திருவாய்மொழி. 4. 10. 8.
110. மேற்படி. 4. 10. 8, 5. 2. 7., 7. 5. 7. நான்முகன்திருவந்தாதி.பா.15, பெரியதிருமொழி. 5.8.6.
111. பாகவதம். 7. 15. 4., வில்லிபாரதம். பா. 2438.
112. நான்முகன் திருவந்தாதி. பா. 44.
113. முதல் திருவந்தாதி.பா.45, மூன்றாம் திருவந்தாதி.பா.77 நான்முகன் திருவந்தாதி.பா. 44.
114. முதல் திருவந்தாதி. பா. 46.
115 மூன்றாம் திருவந்தாதி. பா. 77.
116. விஷ்ணுபுராணம். ப. 103.
117. பரிபாடல். 1. அடி. 36.
118. பெரியதிருமொழி. 6. 1. 2.
119. பெரியாழ்வார் திருமொழி. 1. 5. 1.
120. நாச்சியார் திருமொழி. 8. 4.
121. பெரியாழ்வார் திருமொழி. 1. 5. 1.
122. மேற்படி. 2. 7. 9.
123. முதல் திருவந்தாதி. பா. 67.
124. பெரியாழ்வார் திருமொழி. 5. 2. 10.
125. பெருமாள் திருமொழி. 2. 10.
126. திருச்சந்தவிருத்தம். பா. 22.
127. நான்முகன் திருவந்தாதி. பா. 59.
128. திருவாய்மொழி. 1. 3. 1.
129. சில்லரைரஹஸ்யம். ப. 396.
130. பெரியதிருமொழி. 7. 8. 6.
131. திருவாய்மொழி. 1. 9. 3.
132. பெரியதிருமொழி. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்.ப. 1739.
133. திருவெழுக்கூற்றிருக்கை. அடி. 27-28 .
134. முதல் திருவந்தாதி. பா. 42.
135. திருவிருத்தம். பா. 3.
136. பெரியதிருமொழி, பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 507.
137. பரிபாடல். 3. அடி. 16.
138. மேற்படி. நச்சினார்க்கினியர். உரை. ப. 37.

139. பெரியாழ்வார் திருமொழி. 4. 9. 10.
140. மேற்படி. 5. 4. 2.
141. பெரியதிருமொழி. 3. 8. 4.
142. மேற்படி. 9. 9. 10.
143. பெரியதிருமொழி. 10. 8. 3. திருவாய்மொழி. 5. 7. 3.
144. பெரியதிருமொழி. 5. 8. 4.
145. மேற்படி. 5. 6. 6.
146. மேற்படி. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 922.
147. மேற்படி. ப-ள். 1449-50.
148. அஷ்டப்பிரபந்தம். திருவரங்கத்துமாலை. பா. 88.
149. திருப்பல்லாண்டு. பா. 8.
150. நாச்சியார் திருமொழி. 10. 5.
151. திருச்சந்தவிருத்தம். பா. 19.
152. திருவாய்மொழி. 2. 4. 4.
153. பெரும்பாணாற்றுப்படை. அடி. 106-109.
154. பெரியாழ்வார் திருமொழி. 1. 8. 2.
155. பரிபாடல். 2. அடி. 36-99.
156. சிலப்பதிகாரம். காதை. 11. அடி. 43.
157. திருப்பல்லாண்டு. பா. 1.
158. நாச்சியார் திருமொழி. 7. 2.
159. பெரியாழ்வார் திருமொழி. 3. 3. 5 பெரியதிருமொழி 6. 7. 8., 8. 5. 4. மூன்றாம் திருவந்தாதி பா. 60.
160. பெருமாள் திருமொழி. 4. 1.
161. பெரியதிருமொழி. 1. 6. 2.
162. மேற்படி. 3. 7. 4.
163. திருவிருத்தம். பா. 86.
164. பெரியாழ்வார் திருமொழி. 2. 1. 1.
165. பெரியாழ்வார் திருமொழி 4. 1. 8. நான்முகன் திருவந்தாதி. 16. பெரியதிருமொழி. 2. 4. 3., 5. 7. 8 முதல் திருவந்தாதி பா. 8.
166. பெரியாழ்வார் திருமொழி. 1. 4. 4.
167. பெருமாள் திருமொழி. 3. 9.
168. திருவாய்மொழி. 3. 8. 7.
169. மூன்றாம் திருவந்தாதி. பா. 67.
170. திருவாசகம். திருத்தோள்நோக்கம், பா. 10.
171. சேந்தனார், திருப்பல்லாண்டு, பா. 12.
172. அஷ்டப்பிரபந்தம், திருவரங்கத்துமாலை, பா. 84.
173. தக்கயாகப் பரணி. தாழிசை. 745.
174. பெரியாழ்வார் திருமொழி. 4. 1. 2.

175. அஷ்டப்பிரபந்தம். திருவரங்கத்துமாலை, பா. 83.
176. மேற்படி. பா. 5.
177. மேற்படி. பா. 6.
178. முதல் திருவந்தாதி. பா. 53.
179. பெரியாழ்வார் திருமொழி. 2. 2. 1.
180. பெரியதிருமொழி. 7. 7. 9.
181. மேற்படி. 7. 9. 8.
182. பெருமாள் திருமொழி. 1. 1.
183. பெரியாழ்வார் திருமொழி. 5. 2. 10.
184. பெரியதிருமொழி. 7. 3. 6.
185. திருவாய்மொழி. 6. 6. 5.
186. திருநாவுக்கரசர், தேவாரம், திருப்பழனம். பா. 7.
187. புறநானூறு. பா. 55. அடி. 1. 2.
188. சம்பந்தர், தேவாரம், திருவீழிமிழலை, பா. 6.
189. மேற்படி. திருமுதுகுன்றம். பா. 4.
190. அண்ணங்கராசாரியர். பகவத் கதாம்ருதம், ப. 58.
191. பெரியதிருமொழி. 6. 1. 3.
192. பெரியதிருமொழி. 6. 1. 9, 5. 2. 6.,
முதல் திருவந்தாதி. பா. 28, திருவாய்மொழி. 1. 3. 9.
193. பெரியதிருமொழி. 5. 2. 6.
194. மேற்படி. பெரியவாச்சான் பிள்ளை
வியாக்கியானம். ப. 849.
195. அகநானூறு. பா. 57. அடி . 1.
196. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம், ப. 58.
197. நான்முகன் திருவந்தாதி. பா. 17.
198. முதல் திருவந்தாதி. பா. 4.
199. பெரியதிருமொழி. 2. 2. 7.
200. மேற்படி. 10. 9. 4.
201. மேற்படி. 1. 5. 8.
202. மேற்படி. 4. 2. 8.
203. மேற்படி. 6. 1. 3.
204. மேற்படி. 7. 9. 4.
205. முதல் திருவந்தாதி. பா. 4.
206. பெரியதிருமொழி. 1. 8. 9.
207. அமலனாதிபிரான். பா. 6.
208. நான்முகன் திருவந்தாதி. பா. 74.
209. மேற்படி. பா. 58.
210. குருபரம்பரை. ப. 11.
211. முதல் திருவந்தாதி. பா. 86.
212. திருப்பல்லாண்டு. பா. 11.

213. மேற்படி. வியாக்கியானம். ப. 156.
214. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம், ப. 49.
215. பெரியதிருமொழி. 5. 8. 5.
216. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம், ப. 63.
217. திருமாலை. பா. 4.
218. மேற்படி. பா. 12.
219. பெரியாழ்வார் திருமொழி. 5. 4. 7.
220. மேற்படி. 4. 2. 7.
221. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம், ப. 51.
222. பெரியதிருமொழி. 5. 8. 9.
223. மேற்படி. 1. 4. 7.
224. மேற்படி. 1. 4. 8.
225. திருச்சந்தவிருத்தம். பா . 24.
226. பெரியாழ்வார் திருமொழி. 4. 7. 3.
227. சிறியதிருமடல். கண்ணி. 66-68.
228. மேற்படி. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 67.
229. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம், ப. 59.
230. பெரியதிருமடல். கண்ணி. 49-50.
231. மேற்படி. 52-55.
232. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம், ப. 60.
233. பெரியதிருமடல். கண்ணி. 55-56.
234. மேற்படி. 60-64.
235. மேற்படி. 65-67.
236. பெரியதிருமொழி. பெரியாவாச்சான் பிள்ளை வியாக்கியானம். ப. 572.
237. மேற்படி. 5. 8. 2.
238. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம், ப. 25.

# 6. ஆழ்வார்கள் பாடியுள்ள திறம்

பக்தி நோக்கம் கொண்டு திருமால் சிறப்பைப் பாட வந்தவர்கள் ஆழ்வார்கள். காலந்தோறும் தாம் கற்றவற்றையும் உணர்ந்தவற்றையும் பக்திவசத்தால் ஆழ்வார்கள் பல வடிவங் களில் படைத்தனர். இலக்கிய நோக்கம் பக்தியால் தடைபடக் கூடியதாயினும் அவர்களின் பாடல்களில் இவ்விரண்டும் ஒன்றின் ஒன்று உயர்ந்து விளங்குகின்றது. இலக்கிய உணர்வாலும் பக்தி நிலையாலும் புராணக்கதைகள் அவற்றில் பலவாக இடம் பெற்றுள்ளன. அவற்றை விடுத்துப் பக்திப்பாக்களை நோக்குதல் இயலாததாகும். புராணக்குறிப்புகளைப் பாக்களில் அமைத்துப் பாடுதல் பொதுவியல்பாகத் தோன்றினும் பாடப்பெறும் முறையால் அவற்றைச் சில வரையறைகளுக்குள் அடக்கலாம். அவ்வகையில் பன்னிரு ஆழ்வார்களும் பாடுகின்ற பாக்களில் சில பொதுவியல்புகளும் அவரவர்க்கே உரிய சிறப் பியல்புகளும் அமைந்துள்ளன.

பொதுவாக ஆழ்வார்கள் உயிர்கள் சரணாகக் கருதி அடைய வேண்டிய இறைவனின் திறம் பேசுகின்றனர். அவர்களுடைய பாக்கள் திருமாலுக்குரிய குணங்களைப் புலப்படுத்துகின்றன.

1. எல்லாவற்றிக்கும் முதன்மை உடையவனாக விளங்கும் நிலை.
2. இயக்கத்துக்குக் காரணமான ஆற்றல் உடைமை.
3. நிறைவு பெற்ற நிலைமை.
4. எளியோர்க்கருளும் குணம்.
5. சரணடையத் தகுதி உடையதாய் இருக்கும் இருப்பு.
6. வரம்பில் ஆற்றல் உடைமை.
7. விரும்பிய வண்ணம் செய்து முடிக்கும் தன்மை.

ஆழ்வார்கள் இக்குணங்களை வலியுறுத்தியும் வாழ்த்தியும் பாடும் வகையால் திருமால் பற்றிய புராணக்குறிப்புக்கள்

மிகுதியாக இடம்பெறுகின்றன. பன்னிரு ஆழ்வார்களும் அவற்றை எடுத்தாண்டுள்ள முறையில் சில பொதுவியல்பு களும் சிறப்பியல்புகளும் வெளிப்படுகின்றன.

## புராண நிகழ்ச்சியைக் குறித்தல்

திவ்வியப் பிரபந்த பாடல்கள் பெரும்பான்மை யானவற்றில் புராணக்கதைக்கூறுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றைப் பாடும் வகையால் ஆழ்வார்கள் ஒப்புமை பெற்று விளங்குகின்றனர். பொதுவாக, அவற்றில் திருமாலின் சிறப்பு இடம்பெற்றாலும் அவற்றுக்கான காரணங்கள் பலவாகும். புராணங்களில் கதைகள் முழுதுமாகக் கூறப்பெற்றிருப்பினும் அவற்றை ஒரு நிகழ்ச்சிக் குறிப்பாக ஆழ்வார்கள் எடுத் தாளுகின்றனர். தொடர்பில்லாத இரு நிகழ்ச்சிகள் பாடல்களில் இணைக்கப்பெறுகின்றன. அதற்கு இலக்கியச் சுவையும் இறையின் பெருமை பாடுதலுமே காரணம் எனலாம்.

## இலக்கியச் சுவை

ஆழ்வார்களின் இலக்கியச் சிறப்புக்கள் பிற்கால இலக்கியப் பெருக்கத்துக்கு வழிகோலியவை.[1] திருமாலின் திறம் கூறும் பாடல்களில் இலக்கியச் சுவையும் இடம் பெற்றால்தான் கற்பார் மனதில் பக்தியுணர்வு மிகப் பதியும் என்று ஆழ்வார்கள் கருதினர். ஆழ்வார்கள் திருமாலிடம் கொண்ட பக்தியை அகச்சுவைப் பாடல்கள் நன்கு விளக்குகின்றன. திருமங்கை யாழ்வாரின் திருமடல்களில் இடம் பெற்றுள்ள தலைவன், தலைவி பற்றிய குறிப்புக்கள் இலக்கியச் சுவையை ஊட்டு வனவாகத் திகழ்கின்றன. மடலேறும் தலைவியின் கூற்றாய் அமையும் கதைகள் அன்புடையார் கொண்ட நிலையையும் உலகளாவிய செய்தியையும் இலக்கிய வடிவில் விளக்குகின்றன.

## இறையின் பெருமை பேசுதல்

புராணக்கதை வழி ஆழ்வார்கள் திருமாலின் சிறப்புக்களை விளக்குகின்றனர். அவற்றிலிருந்து அவர்கள் திருமாலைப் பாடும் முறையைக் கீழ்வரும் வகைகளில் அடக்கலாம். அவையாவன,

1. திருமகளை என்றும் நீங்காதிருக்கும் நிலை.
2. திருமகளுடன் இணைந்து இருப்பதால் திருமால் நற்குணங்களை உடையவனாய் இருக்கும் இருப்பு.
3. சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு ஆகிய சிறப்புடைய ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நிலை.
4. சிறப்புடைய ஆபரணங்களை உடைமை.
5. திருநாட்டில் திருமகளுடன் எழுந்தருளி ஏழுலகும் தனிக்கோல் செலுத்தும் மாண்பு.
6. தேவர்களால் எப்போதும் துதிக்கப்பெறும் சிறப்பு
7. எல்லாப் பொருள்களிலும் பரவி இருப்பினும் அவற்றால் பாதிக்கப்படாத நிலை.
8. நாராயணன் முதலான திருப்பெயர்களை உடைமை.
9. உலக உயிர்களில் எவ்வுருவும் எடுக்கும் குணம்.
10. அடியவர்களின் குற்றங்களைப் பொறுத்தருளும் பான்மை.
11. அடியவர்களுக்குப் பாதுகாவலனாய் இருந்து அவர்கள் வேண்டும்போது வந்தருளும் சிறப்பு.
12. மற்றைக் கடவுளரைக் காட்டிலும் மேன்மை உடையவனாய் இருக்கும் நிலையாகிய முழுமுதல் தன்மை.

ஆழ்வார்கள் எடுத்தாளும் புராணக்கதைகளை எல்லாம் இவ்வகைகளில் அடக்கிவிடலாமெனினும் அவர்கள் அவற்றைப் பாடும் முறையால் சிறப்பியல்புகளும் வெளிப்படுகின்றன.

## பெரியாழ்வார்

ஆழ்வார்களில் பெரியவர் என்று போற்றப்பெறும் சிறப்புப் பெற்றவர் பெரியாழ்வார். கண்ணன் அவதார நிகழ்ச்சிகளில் நாற்பத்தெட்டு செய்திகளை இவர் குறிக்கின்றார்.[2] இதைக் கொண்டே புராண நிகழ்ச்சிகளை எடுத்தாளுவதில் இவருக்குரிய சிறப்பிடம் விளங்கும். பிள்ளையைப் பற்றிப் பாடும் மரபு சங்ககாலம் முதல் நிலவி வருகிறது. ஆயினும் கண்ணனைக் குழந்தையாகப் பாடும் மரபை இவருடைய இலக்கியமே அறிமுகப்படுத்துகிறது. கண்ணன் அவதாரம் வழி பிள்ளைத்தமிழ் இலக்கியம் பிறக்கக் காரணமாக இருந்தவர் இவரே எனின் அது மிகையாகாது. ஆண்டாளை வளர்த்ததன் காரணமாகக்

கண்ணனின் பிள்ளைப் பருவச் செயல்களில் இவருடைய மனம் ஈடுபட்டதென்பர். [3] பெரியாழ்வார் கண்ணன் அவதார நிகழ்ச்சிகளிலிருந்துதான் புராணக்கதைக் குறிப்புக்களை மிகுதியாக எடுத்தாண்டுள்ளார். பாகவதம், விஷ்ணுபுராணம் முதலானவை கூறும் கண்ணன் அவதார நிகழ்ச்சிகள் இவருடைய பாடல்களில் இடம் பெற்றுள்ளன. வடமொழியில் இவர் ஒரு நூல் எழுதியதாகக் குறிப்பர். [4] வடமொழிப் புலமையால் பெரியாழ்வாரின் பாசுரங்களில் வடமொழி நூல்களில் அமைந்த புராணக்கதைக்குறிப்புகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

பெரியாழ்வாரும் ஆண்டாளும் கண்ணன் அவதாரத்தில் ஈடுபட்டதை, 'பிராமணோத்தமரான பெரியாழ்வாரும் திரு மகளாரும் கோப ஜன்மத்தை ஆஸ்த்தாநம் பண்ணினார்கள்'[5] என்று வைணவர் போற்றுவர். பெரியாழ்வாரின் திருப் பல்லாண்டு வைணவ தத்துவத்தின் சாரமாகக் கொள்ளப் பெறுகிறது. திருமாலிடம் கொண்ட பரிவால் இவர் பல்லாண்டு பாடினார்.

- பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்[6]

என்னும் தொடர்கள் திருப்பல்லாண்டால் இவருக்குண்டான சிறப்பை விளக்குகின்றன. அத்தகைய திருப்பல்லாண்டின் முதல் பாடலிலேயே 'மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா' எனக் கண்ணனின் வீரச்செயலைக் குறிக்கின்றார். பெரியாழ் வாரின் பாடல்களில் கண்ணனின் குழந்தைப் பருவச் செயல்கள் மிகுதியும் இடம்பெற்றுள்ளன.

'ஸ்ரீகிருஷ்ணனை இந்தியாவின் ஆத்மா என்று கூறுவதுண்டு. இந்தியாவின் ஆத்மா என்றும் இளமை வாய்ந்தது. எனவே கிருஷ்ணனையும் குழந்தையாக வழிபடுகிறோம். குழந்தை கிருஷ்ணன் நமது நாட்டில் தோன்றிய பக்தர்களான பல கவிஞர்களின் இன்னிசையிலே -ஆனந்தக் கனவுகளிலே சிருஷ்டி உற்சாகத்திலேதவழ்ந்து வருகிறான். இத்தகைய பக்த கவிகளின் கூட்டத்தில் பெரியாழ்வாருக்கும் ஒரு ஸ்தானமுண்டு' [8] என்னும் கூற்று இந்தியக் கவிஞர்களில் பெரியாழ்வாருக்குரிய சிறப்பை விளக்கும்.

பெரியாழ்வார் கண்ணன் அவதார நிகழ்ச்சிக் குறிப்புக் களை மிகுதியாக எடுத்தாளுவதைப் போன்று ஏனைய அவதார நிகழ்ச்சிகளையும் புராணக்கதைகளையும் எடுத்தாளுகின்றார். அவை வைணவ சமய, தத்துவக் கருத்துக்களை விளக்கும் விதத்தை உரையாசிரியர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

## ஆண்டாள்

ஆண்டாள் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்று வைணவர்களால் பாராட்டப்பெறும் சிறப்பைப் பெற்றவள். திருவரங்கன் மேல் பெருங்காதல் கொண்டு அவனுடன் இரண்டறக் கலந்தவள். சம்சாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள்; இவள், தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாளாகையாலே, அவர்களிலும் இவள் விலக்ஷணை [9] என்பதால் திருமாலிடம் ஆண்டாள் கொண்ட ஈடுபாட்டின் சிறப்பு விளங்கும்.

கண்ணனைக் குழந்தையாக எண்ணிப் பாடினார் பெரி யாழ்வார். அவனைக் காதலனாக எண்ணி வாழ்ந்தவள் ஆண்டாள். அதனால் ஆண்டாளுடைய இலக்கியங்களில் கண்ணனுடைய செயல்கள் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. கண்ணனை அடைய அவள் கொண்ட பாவைநோன்பு சிறப்புடைய ஒன்றாகும். கண்ணன் அவதாரத்திலே தோய்ந்த ஆண்டாளின் அன்பு,

> மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
> கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ [10]

எனத் திருமணம் முதலான கனாக்களைக் காணச் செய்கிறது. பலதேவன், அசோதை, நப்பின்னை முதலானோரிடத்தில் கொண்ட ஈடுபாடும் பாவைப் பாடல்கள் வழி விளங்குகின்றது.

ஆண்டாள் புராணக்கதைக் குறிப்புகளைத் திருமாலின் திருச்சக்கரத்திடத்துக் கொண்ட ஈடுபாட்டிலும் [11] கண்ணனைச் சிற்றில்சிதைக்காதே என்று வேண்டும் செயலிலும் , [12] குருந்த மரத்திலிருந்த கண்ணனிடம் ஆடை வேண்டும் நிலையிலும், [13] கண்ணனை விருந்தாவனத்தே கண்ட நிலையிலும் [14] மிகுதியாக

எடுத்தாண்டுள்ளமையைக் காணமுடிகிறது. கண்ணனிடம் கொண்ட அன்பால் அவனைப் பற்றிய குறிப்புக்களே மிகுதியும் இடம் பெறுகின்றன. ஏனைய கதைக் குறிப்புக்கள் குறைவே.

## குலசேகராழ்வார்

குலசேகராழ்வார் ஆழ்வார்களில் அரசராய் இருந்தவர். அரசனாய் அவதரித்த இராமனிடம் பெரும் ஈடுபாடு கொண்டவர். திருமாலின் அர்ச்சாவடிவில் இவர் கொண்ட பக்தியை இவருடைய இலக்கியம் விளக்குகிறது. அவ்வடிவில் கொண்ட ஈடுபாட்டால் ' இராஜாவான ஸ்ரீகுலசேகரப் பெருமாள் திரியக் ஸ்தாவர ஜந்மங்களை ஆசைப்பட்டார்'[15] என்று குறிப்பர். இறைவனோடு தொடர்பில்லாப் பிறப்பு அறிஞர்களால் பழிக்கப் பெறும்; தொடர்புடைய தாழ்ந்த பிறப்புக்கள் கூடச் சிறப்புப் பெறும் என்னும் நோக்கில் இவர் பாடல்களை யாத்தார்.

திருவிக்கிரக வடிவங்களில் குலசேகராழ்வார் மிக ஈடுபாடு கொண்டாராயினும் அவர் பாசுரங்கள் இராமாவதார நிகழ்ச்சிகளை மிகுதியாகக் கொண்டுள்ளன. அவை குறிப்புக்களாயும் வரலாறுகளாயும் அமைந்துள்ளன. தசரதன் புலம்பலும்,[16] கோசலைத் தாலாட்டும்[17] இராமாவதார நிகழ்ச்சிகளின் அடிப்படையில் அமைவன. கண்ணன் வளர் சீரை அசோதை போல் தானும் காணப் பெறாத இழப்பை எண்ணித் தேவகி புலம்பும் நிலையும் [18] இலக்கிய வடிவமாக அமைகிறது.

மன்னுபுகழ்க் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் [19]

என்றாற்போன்று அமையும் தொடர்கள், குலசேகரர் இராமாவதாரத்தின் மேல் கொண்ட ஈடுபாட்டை விளக்குவன. ' குலசேகரர் தயரதனாயும் தேவகியாகவும் நின்று பாடிய பாடல்களில் ஒட்ட உணர்தல் என்ற நிலையைக் காணலாம்' என்பர். [20]

## திருமழிசையாழ்வார்

திருமழிசையாழ்வார் முனிவர் குடியில் பிறந்தவர். இவர் வாழ்வில் பல அற்புதங்களை நிகழ்த்தியவர். சமயங்கள் பல

வற்றுள்ளும் உள்ள நூல்களைப் பயின்று அவற்றின் பரதத்துவம் பற்றிய தெளிவுரைகள் இல்லாததால் மற்றைய சமயங்களுக்கு மாறி உண்மைப்பொருள் அறிய முயன்றார் என்று இவருடைய வரலாற்றின் மூலம் தெரியவருகிறது.

பொதுவாக, திருமழிசையாழ்வார் புராணக்குறிப்புக்களை மிகுதியாக எடுத்துரைக்கும் இயல்பைக் காணலாம். இவருடைய பாடல்களின் சந்தநயம் மிக்கிருப்பதால் அதற்கேற்றாற் போல் அவை இடம் பெறுகின்றன.

> படைத்த பாரிடந்தளந்து அதுண்டுமிழ்ந்து பௌவநீர்
> படைத் தடைத்ததிற் கிடந்துமுன் கடைந்த பெற்றியோய்
> மிடைத்த மாலிமாலிமான் விலங்கு காலனூர்புக
> படைக்கலம் விடுத்த பல்படைத் தடக்கை மாயனே [21]

என்ற பாசுரம் புராணக்கதைகள் மிகுதியும் இவருடைய பாடல்களில் இடம் பெற்றுள்ளது என்பதற்கு ஒரு சான்றாகும்.

சிவனைக் கண்டு அவனுடன் வாதித்து நாரணனே மிகச் சிறந்த கடவுள் எனத் திருமழிசையார் நிறுவியதாகக் கூறுவர். [22] அவ்வடிப்படையில் சிவனைத் தாழ்வாகக் கொள்ளும் குறிப்புக் கள் இவருடைய பாடல்களில் அமைகின்றன. 'யதுகுலத்திலே பிறந்து கோப குலத்திலே வளர்ந்தாப் போலே ரிஷி புத்திரராய்ப் பிறந்து தாழ்குலத்திலே யாய்த்து வளர்ந்தது'[23] என்று இவருடைய வாழ்க்கையைக் கண்ணன் அவதாரத்துடன் ஒப்பிட்டுக் கூறுவர். அவ்வகையில் இவரும் கண்ணன் அவதாரச் செயல்கள் பலவற்றைப் பாடுகின்றார். சர்வயோக சந்நியாசி என்னும் தொடரால் இவருடைய சிறப்பு விளக்கப் பெறுகின்றது.[24] திருமாலைப் பற்றிய அனைத்துக் கதைகளும் கதைக் குறிப்புக் களும் அவனுடைய பரத்துவத்தை விளக்குகின்றன. சைவத்தில் திருஞானசம்பந்தரும் அப்பரும் இவ்வகையில் சிவனைப் புகழ்ந்து பாடியுள்ளனர் என்பர். [25]

## தொண்டரடிப்பொடியாழ்வார்

இவருடைய இயற்பெயர் விப்ரநாராயணர். மிகுந்த வேதப்படிப்பிற்கும் சாத்திரக்கல்விக்கும் பின்பு இவர் திருவரங்கப் பெருமாளுக்கு மலர்த்தொண்டு செய்துவந்தார்.

திருவரங்கனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்ததால் அவதார நிகழ்ச்சிகளையும் புராணக் குறிப்புக்களையும் அர்ச்சை வடிவமான திருவரங்கனுக்கு உரியதாகவே பாடுகின்றார். இவர் பாடிய திருப்பள்ளியெழுச்சி திருமாலைத் துயிலெழுப்புவதைக் கூறுவது. திருவரங்கனிடம் இவர் கொண்ட ஈடுபாட்டைக் காட்டுவது. இவரின் வடமொழிப் பயிற்சி கத்திரபந்து,[36] நமன் முற்கலன்,[37] முதலானவர்களின் கதைகளை எடுத்தாளும் வகையால் விளங்குகிறது.

## திருப்பாணாழ்வார்

திருவரங்கனையும் திருவேங்கட நாதனையும் பரமபதநாதனையும் பாடித் துதித்தவர் திருப்பாணாழ்வார்.

*மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள்*
*சந்தி செய்ய நின்றான் அரங்கத்தர வினணையான்*[38]

என்னும் பாசுரத்தால் இவர் அர்ச்சாவடிவங்களில் கொண்ட ஈடுபாட்டை உணரமுடிகிறது. முனிவாகனர் என்ற சிறப்புப் பெற்ற இவர் பாடியுள்ள ஒரே பிரபந்தத்தில் அமைந்துள்ள பத்துப்பாடல்களில் ஏழு புராணக்கதைகளைக் குறிக்கின்றார். அவற்றில் இராமன், கண்ணன் ஆகிய இருஅவதார நிகழ்ச்சிகள் மிகுதியாக உள.

## மதுரகவியாழ்வார்

ஆழ்வார்களில் பதினொருவரும் இறைவனாகிய திருமாலைப் பாடிச் சிறப்புப் பெற்றவர்கள். மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைப் பாடிச் சிறப்புப் பெற்றவர்.

தேவுமற்றறியேன் குருகூர்நம்பி
பாவினின்னிசை பாடித்திரிவனே[39]

என்ற பாசுரத்தால் இவருடைய பாகவதபக்தி விளங்குகிறது. புராணக்கதை போற்றும் இயல்பு இவர் பாடல்களில் அமைய வில்லை.

## திருமங்கையாழ்வார்

ஆழ்வார்கள் அனைவருமே திருமால் அருள் பெற்றவர் களாயினும் ஏனைய ஆழ்வார்களினும் திருமங்கையாழ்வார்க்குப்

பெரும் சிறப்புண்டு. திருமால் நேரில் வந்து திருமந்திரப் பொருளை விளக்கி அவரை ஆட்கொண்டதாகக் குருபரம்பரை கூறுகின்றது.[30] இத்தகைய பேறுபெற்ற திருமங்கையாழ்வார் பிரபந்தங்களின் எண்ணிக்கையால் மற்றை ஆழ்வார்களைக் காட்டிலும் சிறப்புப் பெறுகின்றார். பேரெண்ணிக்கையின் காரணமாக இவருடைய பாடல்களில் புராணக்கதைக் குறிப்புக் களும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. அவருடைய பாக்களில் 1. புராணக் குறிப்புக்கள் 2. திருப்பதிகள் பற்றிய செய்திகள் 3. அகப்பொருட் கூறுகள் ஆகியவை பேரிடம் பெற்றுள்ளன. திவ்விய தேசங்களைப் பற்றிப் பாடும் பாடல்களில் பெரும் பான்மை முதலிரு அடிகளில் கதைக்குறிப்புக்களும் அடுத்த இரு அடிகளில் திருப்பதிகள் பற்றிய மற்றச் செய்திகளும் இடம் பெறுகின்றன. பத்தவதாரக் கதைக் குறிப்புக்களைப் பாடிய ஆழ்வார்களில் இவரும் ஒருவர்.[31]

திருஞான சம்பந்தரைப் போன்று பாடல்களைப் பாடியுள்ள இவருடைய இலக்கியங்களில் மகளிர் விளையாட்டுக்கள் இடம் பெற்றுள்ளன. பெரியாழ்வார் போன்று பிள்ளைத் தமிழ் உறுப்புக் களையும் பாடியுள்ளார். அவற்றில் எல்லா வகையான புராணக் கதைக் குறிப்புக்களும் அமைந்துள்ளன.

## முதலாழ்வார்கள்

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோர் முதலாழ்வார்கள் எனப்படுவர். இவர்களுடைய பாக்கள் அந்தாதித் தொடையில் வெண்பாக்களாக அமைந் துள்ளன. இவர்கள் 'எப்புவியும் பேசுபுகழ் பொய்கையார் பூதத்தார் பேயார்'[32] என்று போற்றப்பெறும் சிறப்பைப் பெற்றவர்கள்.

முதலாழ்வார்கள் மூவரும் கதைக் குறிப்புக்களை எடுத் தாளும் முறையில் ஒருவகையான ஒற்றுமை காணப் பெறுகிறது. பாவமைப்பும் அவர்கள் வாழ்ந்த காலமும் சூழ்நிலையும் அதற்குக் காரணங்கள் எனக் கூறலாம். அவதார நிகழ்ச்சிகளும் புராணக் கதைகளும் இவர்களுடைய பாக்களில் இடம் பெற்றுள்ளன.

## நம்மாழ்வார்

ஆழ்வார்களின் தலைவராகக் கூறப்பெறும் சிறப்பைப் பெற்றவர் நம்மாழ்வார். பாசுர எண்ணிக்கை வகையாலும் நம்மாழ்வார் போற்றப் பெறுகிறார். அவர் கண்ணன் அவதார நிகழ்ச்சிகளையும் புராணக் குறிப்புக்களையும் மிகுதியாக எடுத்தாளுகின்றார். இவருடைய பாடல்கள் வைணவ தத்துவ விளக்கத்துக்குச் சான்றாக எடுத்தாளப் பெறுகின்றன.

அவனே யகல்ஞாலம் படைத் திடந்தான்
அவனே அஃதுண்டு மிழ்ந்தானளந்தான் [33]

என உலகத் தொடக்கம், இயக்கம், அழிவு இவையாவும் திருமாலின் செயல்களே என்பதை வலியுறுத்த, புராணக்கதைக் குறிப்புக்களை எடுத்தாளும் முறை இவருடைய பாடல்களில் அமைகின்றது. எல்லா நிலைகளிலும் திருமகளை விட்டு நீங்காத திருமாலின் தன்மையை வணங்கும் பண்பு இவருடைய பாக்களில் இயல்பாக அமைந்துள்ளது. அவ்வகையில் புராணக் கதைகள் பாடல்களில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

## புராண நிகழ்ச்சிகளை இணைத்தல்

ஆழ்வார்கள் தம் பாக்களில் திருமாலைப் பாடுதல் என்ற அடிப்படையில்,

1. அவதார, புராணக்கதை நிகழ்ச்சிகளைப் பாடுதல்
2. திருப்பதிகளைப் பாடுதல்
3. திருமாலின் முழுமுதல்தன்மையைப் பாடுதல்
4. பக்தியுணர்வை வெளிப்படுத்தல்
5. அருள் வேண்டல்

என்ற நிலைகளில் ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றனர்.

ஆழ்வார்கள் புராணக்கதைகளைக் குறிப்புக்களாய் அமைத்து இணைத்துப் பல்வேறு நிலைகளில் பாடுகின்றனர். திருமாலின் செயல்கள் எல்லாம் உலக உயிர்களின் நலன் கருதியே நிகழ்கின்றன என்பதை இவை வலியுறுத்துகின்றன.

பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் பாடல்களில் பல குறிப்புக்கள் ஒரே பாடலில் இணைக்கப் பெறுகின்றன.

இருவேறான கதைக்குறிப்பு இணைக்கப் பெறுவதற்குப் பாவமைப்பும் காரணமாகும். முதலாழ்வார்கள் மேற்கொண்ட வெண்பா யாப்பு அமைந்த பாடல்களில் தாம் சொல்ல வந்த கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்ல வேண்டும் என்ற பேரவாவின் காரணமாகக் கதைகள் தொடர்பு படுத்தப் பெறுகின்றன. இந்த அடிப்படையில் ஆழ்வார்கள் மேற்கொண்ட நிலைகளைக் கீழ்வருமாறு கொள்ளலாம்

1. இருவேறு கதைகளை இணைத்து, திருமால் பல வடிவாய்த் திகழினும் அவன் செயல் உலக உயிர்களின் நன்மை நோக்கியே என்று வலியுறுத்தல்.

2. அவதாரத்தைக் கூறி ஏனைய கதைகளை எடுத்துக் கூறி அவதாரத்தைச் சிறப்பித்துப் பாடுதல். இத்தகைய நிலையால் அவதாரங்களைப் பெரிதும் போற்றுவதை உணர்த்தல் .

3. திருமால் திருக்கோவில்களில் எழுந்தருளியுள்ள நிலையில் அப்பதியைச் சிறப்பிக்க வெவ்வெறு கதைகளை இணைத்து அப்பதி இறைவனுக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் பாடுதல்.

4. இலக்கியச் சிறப்பை அடிப்படையாகக் கொண்டு ஒலிநயம், யாப்பமைதி இவற்றின் அடிப்படையில் வெவ்வேறு புராணக்கதைகளை இணைத்துப் பாடுதல்.

## பெரியாழ்வார்

பெரியாழ்வார் கண்ணன் அவதாரத்தில் ஈடுபாடு கொண்டவராயினும் ஏனைய அவதாரங்களையும் பாடுகின்றார். திருமாலை அந்தந்த அவதாரமாக நோக்கும் இயல்பு இவரிடம் அமைகிறது. அவதாரங்களை இணைத்துத் திருமாலைப் போற்றுவதும் இவருடைய பாடல்கள் வழி அறியலாகிறது.

> எதிரில்பெருமை இராமனை இருக்குமிடம் நாடுதிரேல்
> அதிரும் கழற்பொருதோள் இரணியனாகம் பிளந்தரியாய்[14]

என்னும் பாசுரம் மேற்கூறிய கருத்துக்குச் சான்றாகிறது. அவதார நிகழ்ச்சியையும் புராணக் கதையையும் இணைத்து,

ஒருவாரணம் பணிகொண்டவன் பொய்கையில்
கஞ்சன்தன்
ஒருவாரணம் உயிருண்டவன் [35]

என்று இரு வேறு செயல்களைத் தொடர்பு படுத்தும் இலக்கிய நோக்கும் பெரியாழ்வாருடைய பாடல்களிலே அமைகின்றது.

## ஆண்டாள்

ஆண்டாளை 'ஆயர்குல வேந்தன் ஆகத்தாள் ' [36] என்று போற்றுவர். அந்தணர் குலத்தவளாயினும் யது குலத்தில் பிறந்த கண்ணனிடம் அவள் கொண்ட காதலை வைணவர் பாராட்டும் நிலையைக் காணலாம். திருமாலின் ஏனைய அவதாரங்கள், செயல்கள் முதலானவை கண்ணனுக்குரியனவாக உரைப்பதை ஆண்டாளின் பாக்களில் காணமுடிகிறது. கண்ணனை வாமன வடிவத்திலும் திரிவிக்கிரம வடிவத்திலும் ' அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமான் ' [37] என்று காணும் நோக்கு அறியத்தக்கது.

ஆண்டாள் பாக்களின் வழி 1. திருமாலைப் பாடுதல், 2. கண்ணனைப் பாடுதல். 3. தலைவனைப் பாடுதல் என்னும் நுவல் பொருள்கள் அறியலாகின்றன. இறையை இந் நோக்கில் காணும் ஆண்டாள் அவதாரநிகழ்ச்சிகளில் இடம்பெறாத, புராண இலக்கியத்தில் அமைந்த கதைக்குறிப்பு ஒன்றைக் கண்ணனுக்கு ஏற்றி உரைக்கும் தன்மை பாக்களில் அமைகிறது. 'வங்கக் கடல் கடைந்த மாயனே ' [38] என்று கடல் கடைந்த வரலாறும் யானைக் கருளிய செயலும் [39] கண்ணனுக்கு ஏற்றி உரைக்கப் பெறுகின்றன.

## குலசேகராழ்வார்

' வாரங்கொடு குடப்பாம்பிற் கையிட்டவன் ' [40] என்று குலசேகரரின் பாகவத பக்தியை வைணவர்கள் பாராட்டுவர். இவர் திருமாலைப் பாடுவதை மூன்று வகையாய்க் கூறலாம்.

1. இராமனிடம் ஈடுபாடு கொண்டு பாடுதல். 2. கண்ணனிடம் ஈடுபாடு கொண்டு பாடுதல். 3. திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள திருமாலைப் பாடுதல் என்பன அவை.

இராமனைப் போற்றும் நிலையில் "இராமாவதார நிகழ்ச்சிக்குத் தொடர்பில்லாத பல புராணக் குறிப்புக்களைக் குலசேகரர் இணைத்துப் பாடும் மரபைக் காணலாம். தாமரை மேலயனவனைப் படைத்தவனே [41]

ஆலினிலைப் பாலகனாய் அன்றுலக முண்டவனே [42]
அலைகடலைக் கடைந்து அமரர்க்க முதருளிச்
செய்தவனே [43]

என மூன்று செயல்கள் இராமாவதாரத்துடன் இணைத்துப் பாடப்பெறுகின்றன. படைப்பிற்கும் ஒடுக்கத்திற்கும். காரண மானவன் இராமன் என்று விளக்கப் புராணக்கதைகளை ஆழ்வார் எடுத்தாளும் மரபைக் காணலாம்.

கண்ணன் அவதாரத்தில் பரத்துவநிலை கண்ணனுக்கு உரியதாக உரைக்கப் பெறுகின்றது. கண்ணனை, 'பையரவின் அணைப் பள்ளியினாய்' [4] எனக் காணும் சிறப்புக் குலசேகராழ்வார் பாடல்கள் வழி அறியலாகின்றது. குலசேகராழ்வார் திருவரங்கம், திருவேங்கடம் இவற்றின் மேல் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இத்திருப்பதிகள் பற்றிய அவருடைய பாடல்களில் அனைத்துப் புராணக் கதைகளும் எடுத்தாளப் பெறுகின்றன. அவை திருவரங்கனுக்கும் திருவேங்கடவனுக்கும் உரியனவாக அமைகின்றன.

## திருமழிசையாழ்வார்

திருமழிசையாழ்வாரை உலகை விடவும் உயர்வானவர் என்று போற்றுவர். சந்தநயத்தால் சிறந்து விளங்கும் இவருடைய பாடல்கள் திருமாலின் முழுமுதல் தன்மையை விளக்குவன. சந்த நயத்தின் காரணமாகப் பல்வேறு கதைகளை இணைத்துப் பாடும் மரபு இவருடைய பாடல்களில் இயல்பாக அமைகிறது.

ஆனை காத்து ஓரானை கொன்று [45]
படைத்த பாரிடந்தளந்து அதுண்டுமிழ்ந்து பௌவநீர்
படைத்தடைத்து அதில்கிடந்து முன்கடைந்த [46]

என்னும் தொடர்கள் மேற்கூறிய கருத்துக்குச் சான்றுகளாகும். திருமாலுக்குரிய பெருமைகளை விளக்க,

மதித்தாய் மதிகோள் விடுத்தாய் - மதித்தாய்
மடுக்கிடந்த மாமுதலை கோள்விடுப்பான் [47]

என்று இருவேறு கதைகளை எடுத்தாளும் நிலையும் இவருடைய பாக்களில் அமைகிறது.

தொண்டரடிப்பொடியாழ்வார் இரு புராணக்கதைகளை இணைத்துப் பாடும் வகையில் இருபாசுரங்களைப் பாடியுள்ளார். முனிவாகனரான திருப்பாணாழ்வார் திருவரங்கனைத் துதிக்கும் நிலையில் 'பரியனாகி வந்த அவுணன் உடல் கீண்ட அமரர்க்கு அரிய ஆதிப்பிரான் அரங்கத் தமலன்' [48] எனப் புராணக்கதை நிகழ்ச்சியைத் திருவரங்கனுக்கு ஏற்றியுரைக்கிறார். ஆசாரியனின் சிறப்பைப் பாடும் மதுரகவி ஆழ்வார் ஒரே ஒரு கதைக்குறிப்பை மட்டுமே எடுத்தாளுகின்றார்.

## திருமங்கையாழ்வார்

'மந்திரங்கொள் மங்கையர் கோன்' [49] என்று வைணவர்களால் போற்றப் பெறும் சிறப்புடையவர் திருமங்கையாழ்வார். பல்வேறு கதைகளை இணைத்துப் பாடும் முறையில் இவருடைய பாக்களில் சில பொதுநிலைகள் காணப்பெறுகின்றன. 1. திருமாலின் முழுமுதல் தன்மையை விளக்குதல். 2. அவதாரங்களை இணைத்துப் பாடுதல். 3. திருமாலின் அர்ச்சை வடிவைப் பாடுதல் என்பன அவை. இவற்றில் பல்வேறு கதைகள் இணைக்கப் பெறுகின்றன.

பள்ளியாவது பாற்கடலரங்கம் இரங்கவன் பேய்முலை
பிள்ளையாய் உயிருண்ட வெந்தை [50]
கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள் மேவிக்
கிளர் பொறியமறி திரிய அதனின் பின்னே
படர்ந்தானை [51]

என்பன அம்சசாவடிவுடன் அவதாரப் புராணக்குறிப்புக்கள் தொடர்பு படுத்தப் பெறுவதை விளக்குவன.

அனைத்து அவதாரங்களையும் இணைத்துப் பார்க்கும் நோக்கு ஆழ்வார்களின் பாடல்களில் அமைகிறது. அவ்வகையில் திருமங்கையாழ்வார்,

> முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து அரக்கன்
> மன்னூர் தன்னை வாளியினால் மாளமுனிந்து அவனே
> பின்னோர் தூது ஆதிமன்னர்க் காகி [illegible]

என இரு வேறுபட்ட அவதாரச் செயல்களை இணைத்துக் காணுகிறார்.

வாமனாவதாரமும் கண்ணன் அவதாரமும் இவருடைய பாடலில்

> ஆங்கு மாவலி வேள்வியில் இரந்துசென்று
> அகலிடமளந்து ஆயர்
> பூங்கொடிக்கு இனவிடை பொருதவனிடம் [illegible]

என இணைக்கப் பெறுகின்றன.

## முதலாழ்வார்கள்

காலத்தால் முதன்மையானவர்களாகக் கூறப்பெறும் சிறப்பைப் பெற்றவர்கள் முதலாழ்வார்கள்.'பாவலர் பாதிநாள் இரவில் மூவரும் நெருக்கி மொழிவிளக்கு ஏற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு' [illegible] என்னும் பாடல் அவர்களுக்குரிய சிறப்பை உணர்த்தும். மூவர் பாக்களிலும் எல்லாப் புராணக்கதைகளும் அவதாரக்கதைகளுடன் இணைக்கப் பெறுகின்றன. வெண்பா யாப்பு அதற்கொரு காரணமாகும். பொய்கையாழ்வார் சிவனையும் திருமாலையும் இணைத்து,

> ஏற்றான் புள்ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
> நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் - கூற்றொருபால்
> மங்கையான் பூமகளான் வார்சடையான் நீள்முடியான்
> கங்கையான் நீள்கழலான் காப்பு [illegible]

எனப் பாடுகின்றார். இதில் திருமால் பற்றிய புராணக்

குறிப்புக்களும் சிவனைப் பற்றிய புராணக்குறிப்பும் இணைக்கப் பெறுகின்றன. பூதத்தாழ்வார் திருமால் உலகளந்ததையும் கடல் கடந்ததையும் இணைத்துப் பாடுகின்றார்.[56] இவர்கள் இருவரினின்றும் பேயாழ்வார் சற்று மாறுபட்டுத் திகழ் கின்றார். அவர் இரு அவதார நிகழ்ச்சிகளைப் பெரும்பான்மை இணைத்துப் பாடுகிறார். இராமாவதாரமும்[57] கண்ணன் அவதாரமும் [58] அவ்வாறு இடம் பெறுகின்றன.

> கீளா மருதிடைப் போய்க் கேழலாய் - மீளாது
> மண்ணகலம் கீண்டங்கோர் [59]

என இருவேறு அவதாரங்களையும் இணைத்துக் காணும் நோக்கும் அவருடைய பாக்களில் அமைகிறது.

## நம்மாழ்வார்

ஆழ்வார்களை அவயவங்கள் என்றும் நம்மாழ்வாரை அவயவி என்றும் போற்றுவர். இவருடைய பாடல்கள் தத்துவ விளக்கங்களாக அமைந்துள்ளன. திருமங்கை யாழ்வார் திருமால் திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள அர்ச்சை வடிவங்களில் ஈடுபாடு கொண்டவர். நம்மாழ்வார் திருமாலின் பரத்துவத்திலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவ்வடிப் படையிலே நம்மாழ்வார் எடுத்தாளும் கதைகள் அமைகின்றன.

> கோவாகிய மாவலியை நிலங் கொண்டாய்
> தேவாசுரம் செற்றவனே திருமாலே [60]

> அவனே யகல்ஞாலம் படைத் திடந்தான்
> அவனே அஃதுண்டு மிழ்ந்தா னளந்தான் [61]

என்பன பரத்துவத்தை விளக்க ஆழ்வாரால் எடுத்தாளப் பெறுகின்றன.

## புதிய நிகழ்ச்சிகளைப் படைத்தல்

ஆழ்வார்கள் சமயச் சான்றோர்களாய் மட்டுமல்லாது சிறந்த புலவர்களாயும் திகழ்ந்தவர்கள். அவர்கள் பல்வகையான கதை

களிலும் தம் கற்பனையால் இலக்கியச் சுவையைப் புகுத்தியுள்ளனர். இதிகாசங்களிலிருந்தும் புராணங்களிலிருந்தும் எடுக்கப்பெற்ற அவை ஆழ்வார்களின் பாக்களில் இலக்கிய வடிவம் பெற்றன. ஆழ்வார்களின் கற்பனை ஆற்றலும், சிந்தனைத்திறமும் ஒன்றுபட்டுப் புதிய கதைகள் பல எழுந்தன. ஆழ்வார்கள் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள் என்பதற்கு அவர்களுடைய கற்பனை வளமிக்க பாடல்கள் சான்று பகர்கின்றன.

ஆழ்வார்கள் புதியனவாகப் படைக்கும் நிகழ்ச்சிகளை இருவகையாகக் கூறலாம். 1. தமிழ்ப்புராண நூல்களில் இடம் பெறாத கதைகளைக் கூறுதல். 2. புராணக்கதைகள் இடம் பெற்ற பாத்திரங்களைக் கொண்டு சிறிது கற்பனை சேர்த்துப் புதிய நிகழ்ச்சிகளைப் படைத்தல் என்பன அவை. ஆழ்வார்கள் ஏனைய நூல்களில் இல்லாத சில புதிய கதைகளைப் பாடியுள்ளனர். உரையாசிரியர்கள் அவை ஆழ்வார்களின் மயர்வற்ற மதிநலத்தால் அமைந்தவை என்பர். [௯]

ஆழ்வார்கள் திருமாலிடம் மிக ஈடுபட்டுப் பாடும் பக்திப் பாக்களின் வழி அவர்களுடைய மனநிலையை உணரமுடிகிறது. திருமாலைப் பெரியாழ்வார் கண்ணனாகக் கண்டார். திருமழிசை யாழ்வார் முழுமுதல்பொருளாய்க் கண்டார். தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கனாகக் கண்டார். திருப்பாணாழ்வார் திருவரங்கனாகவும் திருவேங்கடனாகவும் கண்டார். திருமங்கை யாழ்வார் திருவிக்கிரக வடிவங்களாகக் கண்டார். முதலாழ் வார்கள் ஒன்றி உணர்ந்து தம்மில் ஒருவனாய்க் கண்டனர். நம்மாழ்வார் பரதத்துவமாகக் கண்டார். இத்தகைய தன்மை களுக்கு ஏற்ப ஆழ்வார்கள் புராணக்கதைகளைப் பாடுகின்றனர். புதிய குறிப்புக்களும் எடுத்தாளப் பெறுகின்றன.

## பெரியாழ்வார்

பெரியாழ்வார் கண்ணனின் அவதாரச் செயல்களின் பெரும்பாலானவற்றைக் குறிக்கின்றார். மேற்கூறிய இரு வகையிலும் புதிய கதைநிகழ்ச்சிகள் இவருடைய பாடல்களில் அமைந்துள்ளன. மஞ்சளால் கண்ணனின் நாவழிக்க அவன் வாயில் அசோதை வையம் கண்டதைப் [௰] பெரியாழ்வார்

கூறுகின்றார். கண்ணன் வெண்ணெய் திருடியது,[64] ஆய்ச்சியர்களின் கோபம்[65] முதலியன கற்பனை நயத்துடன் புனைந்துரைக்கப் பெற்றுள்ளன. சீமாலிகனை அழித்தது, [66] வாமனன் சுக்கிரனின் கண்ணைக் கீறியது,[67] நமுசியை வானில் சுழற்றியது,[68] சீதை இராமனை மல்லிகை மாலையால் கட்டியது,[69] முதலிய நிகழ்ச்சிகள் பெரியாழ்வார் பாடல்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளன. ஏனைய ஆழ்வார்களின் பாடல்களில் இவை காணப் பெறவில்லை. பிற தமிழ் நூல்களிலும் இல்லை.

## ஆண்டாள்

வில்லிபுத்தூர்க் கோதை என்ற பெயர் உடைய ஆண்டாள் எடுத்தாளும் கதைகளில் இருவகையிலும் புதியன அமைகின்றன. காமவேள் நோன்பு பற்றிய ஆண்டாளின் பாடல்கள் புதியவை. புராணக்கதை மாந்தர்களைத் தம் காலத்தில் வாழ்ந்தவர்களாக எண்ணி ஆண்டாள் பாடும் திருப்பாவை ஈண்டுக் கருதத்தக்கது. பாவையில் அசோதை, பலதேவன், நப்பின்னை ஆகியோர்களைத் துயில் எழுப்பும் நிலையும் சங்கை விளிக்கும் பாடல்களும் புதியனவாக அமைவன. புராணக் கதைகளில் பஞ்சசனன் என்பவன் பற்றிய செய்தி ஆண்டாளின் பாடலில் மட்டுமே இடம் பெற்றுள்ளது.[70] கண்ணனை விருந்தாவனத்தே கண்டதாகக்கூறும் திருமொழியும்,[71] சிற்றில் சிதையாதே என்றுரைக்கும் திருமொழியும், [72] குருந்திடையே இருந்த கண்ணனைத் தம் ஆடை வேண்டும் வகையில் அமையும் திருமொழியும்[73] கற்பனை நயத்துடன் புதியனவாய்ப் பாடப் பெற்றுள்ளன.

## குலசேகராழ்வார்

குலசேகரர் இராமன் பிறப்பு முதல் திருவடி சோதிக்கு எழுந்தருளும் வரையில் பாடும் திருமொழி புதியதாக அமைந்துள்ளது. [74] இச்செய்திகள் இதற்கு முன் ஏனைய தமிழ் இலக்கியங்களில் காணப் பெறவில்லை. உத்தர காண்ட செய்திகள் பல அத்திரு மொழியில் இடம் பெற்றுள்ளன. தசரதன் புலம்பலும் [75] கோசலைத் தாலாட்டும் [76] தேவகி வருத்தமும் [77] கற்பனை நயத்துடன் புதிதாக அமைக்கப் பெற்றுள்ளன.

## திருமழிசையாழ்வார்

சமயக் காழ்ப்பால் சிவனைத் தாழ்த்தியுரைக்கும் வகையில் அமைந்துள்ள புராணக்கதைகள் திருமழிசையார் பாடல்களில் மிகுதி. வாணன் என்னும் அசுரன் பற்றி இவர் கூறும் செய்தி அதற்குத் தக்க சான்றாகும். வாணனுடன் திருமால் போரிட்ட போது சிவனும் முருகனும் வாணனுக்குத் துணையாய் வந்ததாகவும் திருமாலுடன் போரிட்டு அவர்கள் தோற்று ஓடிய தாகவும் இவர் குறிப்பிடுகின்றார்.[78] இச்செய்தி அவர் காலத்துக்கு முன் தமிழ் இலக்கியங்களில் இல்லாததாகும். சமயக் காழ்ப்பால் புதியதாக உரைத்த செய்தி பிற்காலப் புராணங்களில் இடம் பெற்றுள்ளது. இராவணன் நான்முகனிடன் வரம் கேட்க வந்தபோது திருமால் குழவியாய் நான்முகன் மடியில் தவழ்ந்து பத்துத் தலைகளை விரல்களால் எண்ணிக் காட்டினான் என்ற கதையைத் திருமழிசையாழ்வார் எடுத்துரைக்கின்றார்.[79] இக்குறிப்பு ஏனைய புராணங்களில் இல்லை.

## தொண்டரடிப்பொடியாழ்வார்

துளபத் தொண்டாற்றிய தொண்டரடிப் பொடியாழ்வார் பாடல்களின் எண்ணிக்கை குறைவேயாதலின் இடம் பெற்றுள்ள புராணக்கதைகளும் மிகக் குறைவே. கற்பனை கலந்த கதைகள் அவருடைய பாடல்களில் இல்லை. ஏனைய ஆழ்வார்கள் கூறாத கத்திரபந்து,[80] நமன், முற்கலன்[81] பற்றிய கதைகளை எடுத் தாளுகின்றார். திருவரங்கனுடன் தொடர்புடைய இரு செய்தி களை இவர் பாடுகின்றார். திருவரங்கன் தென்திசை நோக்கிப் பள்ளி கொண்டுள்ள நிலையையும்[82] வீடணன் வழிபாடு செய்த செய்தியையும்[83] இவர் மட்டுமே குறிக்கின்றார். இலங்கைக்குச் செல்ல வானரங்கள் அணை கட்டியபோது அணில்கள் உதவி செய்ததைப் புதிதாகப் பாடுகின்றார்.

பாடல் எண்ணிக்கை வகையால் குறைவான பாடல் களைப் பாடிய திருப்பாணாழ்வாரும் மதுரகவியாழ்வாரும் புதிய புராணக்கதை நிகழ்ச்சிகளைப் பாடவில்லை.

## திருமங்கையாழ்வார்

புராணக்கதைகளில் புதிய பல நிகழ்ச்சிகளை இணைத்துப் பாடும் சிறப்புத் திருமங்கையாழ்வார் பாடல்களில் அமைகிறது.

புதியனவாகப் பாடும் போக்கில் மற்றைய ஆழ்வார்கள் கூறாதனவற்றைக் கூறுதல், புராண நிகழ்ச்சிகளில் புதிய கற்பனையைச் சேர்த்துப் பாடுதல் என்னும் இருவகை நிலைகளும் அமைகின்றன. இவர் திருமாலின் திவ்விய தேசங்களையும் அவதாரங்களையும் மிகுதியாகச் சிறப்பித்துப் பாடுகின்றார். மரக்கால் கூத்து பற்றிய செய்தி இவருடைய பாடல்களில் மட்டுமே அமைந்துள்ளது. [34] குரக்கினத்திடம் சிக்கிய அரக்கர் குலம் தம்மை விடுவிக்க வேண்டி இரப்பதாக அமையும் திருமொழி கற்பனையாய்ப் படைக்கப் பெற்றுள்ளது.[35] பரத்துவம் பற்றி விளக்கும் கதைகளில் திருமால் ஆலிலையில் துயின்றதாகக் கூறும் குறிப்புப் பத்துப் பாடல்களில் மிக விரிவாக அமைந்துள்ளது. [36]

திருமடல்களில் காணப்பெறும் தலைவன் தலைவி பற்றிய கதைகள் திருமங்கையாழ்வாரால் மட்டுமே பாடப் பெறுகின்றன. சிவன் உமை,[37] வாசவதத்தை தளைக்காலன்,[38] வேகவதி [39] முதலானவர் பற்றிய கதைகள் அவ்வகையில் அடங்குவன. திருமங்கையாழ்வார் பாக்களில் புராணக்கதைகள் இயல்பாகவே அமைகின்றன. அவருடைய புராண நூலறிவும் காலச் சூழ்நிலையும் இலக்கியப் புலமையும் அதற்குரிய காரணங்களாகும்.

### முதலாழ்வார்கள்

பொய்கையாழ்வார் சமயப் பொறையைக் கடைப் பிடித்தவர். அவ்வடிப்படையில் புராணக்கதைகளை இணைத்துப் பார்க்கும் போக்கு இவருடைய பாக்களில் அமைகிறது. நான் முகன் மடியில் திருமால் குழவியாய்த் தவழ்ந்ததை இவரும் குறிக்கின்றார்.[40]

பூதத்தாழ்வார் பெரும்பான்மையும் பொய்கையாழ்வாருடன் ஒத்தமையும் வகையில் பாடுகின்றார்.

> தவஞ்செய்து நான்முகனே பெற்றான் தரணி
> நிவந்தளிப்ப நீட்டிய பொற்பாதம் - சிவந்ததன்
> கையனைத்தும் ஆரக் கழுவினான் கங்கைநீர்
> பெய்தனைத்துப் பேர்மொழிந்து பின் [41]

என்னும் நிகழ்ச்சி ஆழ்வார்களுக்கு முன் தமிழ் இலக்கியங்களில் இடம் பெறாத ஒன்றாகும். பேயாழ்வார் முதலிரு ஆழ்வார் களையும் அடியொற்றிப் பாடினும் புதிய புராணநிகழ்ச்சிகளைக் கூறவில்லை எனலாம்.

## நம்மாழ்வார்

ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் மிகுதியும் புராணங்களில் இடம் பெற்றுள்ள கதைகளையே பாடுகின்றார். தத்துவ விசாரணை அமைந்துள்ள அவருடைய பாக்களில் கற்பனைக் கலப்பு மிகக் குறைவு. மற்றைய ஆழ்வார்களின் பாடல்களில் அமைந்துள்ள கதைகளே இவருடைய பாடல்களில் இடம் பெற்றுள்ளன. கண்ணன் காலில் இட்ட மலர் சிவன் முடியில் பார்த்தன் கண்டது என்னும் புராணக்குறிப்பு இவரால் மட்டுமே குறிக்கப்பெறுகிறது.

## கதை முழுவதையும் பாடுதல்.

கருத்தை விளக்கவும் எளிமைப்படுத்தவும் பாடல்களின் அமைப்பும் எண்ணிக்கையும் இன்றியமையாதவை. பாடல்களில் கருத்தைக் குறிப்பால் உணர்த்தும்போது, உணர்வார்க்குப் பொருள் தெளிவாய் விளங்குதல் வேண்டும். அவ்வகையில் ஆழ்வார்களின் பாடல்கள் அமைகின்றன. மேலும் திருமால் பெருமை ஒன்றையே பாடுதல் என்னும் அடிப்படையில் திருமாலைப் பற்றிய கதைகளை முழுவதும் பாடுதல் இன்றியமையாததாகிறது.

1. கருத்தை விளக்க, கதைகள் முழுவதையும் பாடுதல்- திருமங்கையாழ்வாரின் பெரியதிருமடல், சிறிய திருமடல் முதலானவை இவ்வகையில் அமைவன.

2. கதையை விளக்க வேண்டும் என்ற அடிப்படையில் புராணக் கதையை முழுமையாகப் பாடுதல்- குலசேகரர் இராமாயண நிகழ்ச்சிகளைப் பாடுதல் இதற்குச் சான்றாக அமையும்.

இவ்விரு நிலைகளும் ஆழ்வார்களின் பாடல்களில் அமைகின்றன. ஆண்டாள், திருமழிசையாழ்வார், தொண்டரடிப்

பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவியாழ்வார், முதலாழ்வார்களின் பாக்களில் கதை நிகழ்ச்சி முழுவதையும் பாடும் இயல்பு காணப்பெறவில்லை. அவர்களுடைய யாப்பமைதி ஒரு வகையில் அதற்குரிய காரணமாகும். அவர்களுடைய பாக்களில் கதைகள் குறிப்புக்களாகவே அமைந்துள்ளன. பெரியாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கை யாழ்வார், நம்மாழ்வார் ஆகியோருடைய பாக்களில் நிகழ்ச்சிகள் கதைகள் முழுவதையும் பாடும் போக்கைக் காணமுடிகிறது.

பெரியாழ்வார் கண்ணன் அவதாரச் செயல்களை முழுமையாகப் பாடுகின்றார். சீதையிடம் அனுமன் அடையாளம் உரைத்ததாகப் பாடும் திருமொழி[94] கதை முழுவதையும் பாடுவதற்கான முயற்சியேயாகும். இராமாவதாரம் பற்றி முழுமையாகப் பாடிய பெருமை குலசேகராழ்வாருக்கு உரிய தாகும். இராமன் பிறந்தது முதல் திருநாடு சென்றடைந்தது வரை அவர் பாடுகின்றார். ஆழ்வார்களில் இவர் ஒருவரே இராமா வதாரம் முழுவதையும் பாடுகின்றார்.[95] திருமங்கை யாழ்வார் பத்து அவதாரங்களையும் முறையாகப் பாடுகின்றார். அவர் அவதாரங்களையும் அவதாரச் செயல்களையும் மிக விரிவாகப் பாடுகின்றார். ஏனைய ஆழ்வார்களின் பாடல்களில் இவ்வாறு அமையவில்லை. பெரியதிருமடலும் சிறிய திருமடலும் கூறும் தலைவன் தலைவி பற்றிய கதைகள் முழுவதுமாகப் பாடப் பெறுகின்றன. திருமால் உலகுண்டு ஆலிலையில் துயின்ற நிலையைத் திருமங்கையாழ்வார் மிகச் சிறப்பாகப் பாடுகின்றார்.

### நம்மாழ்வார்

பாடல் எண்ணிக்கையாலும் கருத்து நுட்பத்தாலும் நம்மாழ்வார் பிரபந்தங்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

இடரின்றியே யொருநாளொரு போழ்தில்
எல்லாவுலகும் கழிய
படர்புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் உடனேறத்
திண்டேர்கடவி

சுடரொளியாய் நின்ற தன்னுடைச்சோதியில் வைதிகன் பிள்ளைகளை
உடலொடும் கொண்டுகொடுத் தவனைப்பற்றி ஒன்றும் துயரிலனே [96]

என்றாற் போன்று நிகழ்ச்சிகளை முழுவதுமாகப் பாடும் மரபைக் காணலாம். தத்துவ விளக்கங்களைத் தெளிவுப்படுத்த நம்மாழ்வார் புராணக்குறிப்புக்களை எடுத்தாளுகின்றார். கதை களைப் பாட வேண்டும் என்னும் நோக்கம் நம்மாழ்வாருக்கு இல்லை என்றே கூறலாம்.

### ஏனைய கடவுளருடன் இணைத்துப் பாடுதல்

சமயக் கடவுளரைப் பற்றிப் பாடும் நிலையில் ஏனைய சமயக் கடவுளருடன் ஒப்பிட்டுப் பாடுதலும் உயர்த்திப் பாடுதலும் பிற சமயக் கடவுளரைத் தாழ்த்திப் பாடுதலும் இரு சமயப் பக்திப் பாடல்களிலும் காணப் பெறுகின்றன. திருமாலை,

தானும் சிவனும் பிரமனுமாகிப் பணைத்த தனிமுதலை.[97]
எருத்துக் கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் மற்றும்
ஒருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறி வாருமில்லை[98]
வள்ளிக்கொழுநன் முதலாய மக்களோடு முக்கணான்
வெள்கியோட விறல்வாணன் வியன்தோள் வனத்தைத் துணித்துகந்தான் [99]

என மற்றைய கடவுளரைக் காட்டிலும் சிறப்புடையவன் என ஆழ்வார்கள் பாடுகின்றனர். இவ்வாறன்றி ஏனைய கடவுளர் களையும் தேவர்களையும் ஆழ்வார்கள் குறிக்கின்றனர்.

### பெரியாழ்வார்

கண்ணனைப் பாடுபொருளாகக் கொண்ட பெரியாழ்வார் பிரமன், ஈசன், இந்திரன், அமரர்கள், வயிச்சிரவணன், வருணன், கலைப்பாகி முதலான தேவர்களையும் கடவுளர்களையும் குறிக்கின்றார்.[100] அவை கதைநிகழ்ச்சிகளாக அமையாது குறிப்புக்

களாக மட்டுமே அமைந்துள்ளன. நாரதர் பற்றி ஒரு குறிப்பு மட்டுமே அமைகிறது. [101]

## ஆண்டாள்

கண்ணனை அடைதற்குக் கனாக் கண்ட ஆண்டாள் அவனையே தன் மனத்தாலும் வாக்காலும் துதிக்கின்ற நிலை அவளுடைய பாக்களில் அமைகிறது. கண்ணனை அடைதற்குரிய வழியாகப் பாவைநோன்பையும் காமவேள் நோன்பையும் ஆண்டாள் மேற்கொண்டாள். காதலுக்குக் கடவுளான மன்மதனைத் துதிக்கும் நிலையும் [102] கண்ணனின் தமையனான பலதேவனை வணங்கும் நிலையும் [103] ஆண்டாளின் பாக்களின் வழி அறியலாகின்றன. இவையன்றி ஏனைய கடவுளர் பற்றிய குறிப்பேதும் இடம் பெறவில்லை.

## குலசேகராழ்வார்

சிந்தையும் செயலும் இராமனையே எண்ணிச் செயல்பட ஏனைய ஒன்றையும் அறியா இயல்புடையவர் குலசேகராழ்வார். சடையை உடைய சிவனும், நான்முகனும், இந்திரனும் புகுதற்கு அரிய வைகுந்தம் எனத் திருமலையின் பெருமையை விளக்கும் இடத்திலும், பிறையேறு சடையானுக்கும் பிரமனுக்கும் இந்திரனுக்கும் குறை முடிக்கும் மறையாகத் திருமால் விளங்கு கின்றான் எனக் கூறுமிடத்திலும் பிற கடவுளர் பற்றிய செய்தி களைக் குறிப்பிடுகின்றார். சைவ சமயக் காழ்ப்பைக் கொண்ட திருமழிசையாழ்வார் இந்திரன், சிவன் முதலான தேவர்கள் திருமாலை விடத் தாழ்ந்தவர்கள் என வலியுறுத்துகின்றார்.

> மற்றுமோர் தெய்வ முண்டே மதியிலா மானி டங்காள்
> உற்றபோ தன்றி நீங்கள் ஒருவனென்று உணரமாட்டீர் [104]

என்று கூறும் தொண்டரடிப்பொடியார் பிற சமயத்தை இழித் துரைக்கின்றார். முனிவாகனரான திருப்பாணாழ்வார் திரு வரங்கனையும் திருவேங்கடவனையுமன்றி வேறொன்றை அறியாதவர்.

## திருமங்கையாழ்வார்

திருமங்கையாழ்வார் சிவனையல்லாது இந்திரன், தேவர்கள் பற்றிக் குறிக்கின்றார். ஆயினும் அவற்றின் வழி கதைகள் ஏதும் விளக்கப் பெறவில்லை. இவர் சிவனைப் பற்றிக் குறிக்கும் கதைகள் சிவனுக்குரிய சிறப்பை ஏற்கின்றன. சிவன் நஞ்சுண்டதையும்[106] திருமால் சிவனுக்குக் கூறு கொடுத்ததையும்[106] போற்றும் வகையால் இதை அறிய முடிகிறது.

## முதலாழ்வார்கள்

சமயப் பொறையால் சிவனையும் திருமாலையும் இணைத்துக் காணும் நோக்கு இவ்வாழ்வார்களுக்கு மட்டுமே உரியதாகும். இவ்விரு கடவுளர் பற்றிய குறிப்புக்களன்றி ஏனைய செய்திகள் இவ்வாழ்வார்களின் பாடல்களில் காணப் பெறவில்லை.

## நம்மாழ்வார்

திருமாலை முழுமுதல் பொருளாய்க் காணும் நம்மாழ்வார் ஏனைய கடவுளருடன் இணைத்து நோக்கும் நிலை அமைகிறது. தேவரிலும் மூவரினும் உயர்ந்தவன் திருமாலே என்பதும் அவனே முதல்வன் என்பதும் பெறப்படுகிறது. அவ்வகையில் நம்மாழ்வார் சிவனுடன் தொடர்புப்படுத்திக் கூறும் கதைகளன்றி ஏனையவை சிறப்பாக அமையவில்லை.

## பெயர்களை மட்டும் சுட்டுதல்

இறை ஈடுபாட்டில் இறைவனின் திருப்பெயர் போற்றுதல் சிறப்பிடம் பெறுகிறது. ஆழ்வார்களும் திருமாலின் பல்வேறு திருப்பெயர்களைச் சுட்டுகின்றனர். திருமாலின் எண்ணற்ற திருப்பெயர்களில் பன்னிரு திருப்பெயர்கள் சிறப்புடையவை. அவை கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், சிரீதரன், இருடீகேசன், பத்பநாபன், தாமோதரன் என்பன.

## பெரியாழ்வார்

பெரியாழ்வார் திருமாலின் பன்னிரு திருநாமங்களையும் பாராட்டிப் பாடுகின்றார்.[107] பத்து அவதாரங்களின் பெயர் களை மட்டும் சுட்டும் சிறப்பும் இவருடைய பாடல்களில் அமைகிறது. [108] நாரணன் திருநாமமே மக்கட்கு இடல் வேண்டும் என்னும் உயர்ந்த கொள்கை உடையவராக இவர் திகழ்கின்றார்.

> கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித்திருமினோ
> நாயகன் நாரணன் தம்மன்னை நரகம்புகாள் [109]

என்ற அவருடைய கூற்று அக்கருத்தை வலியுறுத்துகிறது. அவ்வடிப்படையில் அவதாரங்களைக் கூடப் பெயராய் விளிக்கும் இயல்பு இவருடைய பாக்களில் அமைகிறது.

## ஆண்டாள்

ஆண்டாள் இறைவன் திருப்பெயர்களைச் சுட்டுவதில் தந்தையை ஒருவகையில் பின்பற்றுகிறார் என்று கூறலாம்.

> ஓங்கி உலகளந்த உத்தமன் [110]

> மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
> தூயபெருநீர் யமுனைத் துறைவனை
> ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கை '[111]

எனப் பலவாறு திருமாலை விளிக்கும் நிலையைக் காணலாம். ஆண்டாள் வாமனாவதாரப் பெயரைத் தம்பாசுரங்களில் மிகுதியாக எடுத்தாளுகின்றார்.

## குலசேகராழ்வார்

அர்ச்சைவடிவில் குலசேகரர் திருவரங்கத்திலும் திரு வேங்கடத்திலும் ஈடுபடுகிறார். ' வேலை வண்ணனை, என் கண்ணனை வன்குன்றமேந்தி ஆவினை அன்று உய்யக் கொண்ட ஆயரேற்றை '[112] எனத் திருவரங்கனைக் கண்ணனாய்ச் சுட்டும்

சிறப்பு, குலசேகராழ்வாருக்கு உரியது. இராமனின் பெயரை மிகுதியாக விளிக்கும் தன்மை இவருடைய பாக்களில் அமை கின்றது.

## திருமழிசையாழ்வார்

சந்தத்தால் சிறப்புப் பெற்ற திருமழிசையாழ்வார் ஒலி நயத்துக் கேற்பப் பற்பல திருநாமங்களைப் படைத்துத் திருமாலைப் போற்றுகிறார்.

> காலநேமி காலனே கணக்கிலாத கீர்த்தியாய்
> ஞாலமேழும் உண்டுபண்டொர் பாலனாய பண்பனே [113]

எனப் பல்வகைப் பெயர்களைத் திருமாலுக்கு உரித்தாக்கிப் பாராட்டித் துதிக்கின்றார்.

அவதாரங்களின் பெயர்களை மட்டும் சுட்டும் தன்மை தொண்டரடிப்பொடியாழ்வார் பாடல்களில் அமைகிறது. திருப்பாணாழ்வார் பதிகத்தின் தொடக்கத்திலேயே திருமாலின் சிறப்பை 'அமலன் ஆதிபிரான் ' என்று தெளிவிக்கிறார். மதுரகவி கண்ணனின் பெயரை மட்டும் விளிக்கும் இயல்பை வெளிப் படுத்துகிறார்.

## திருமங்கையாழ்வார்

ஆழ்வார்களில் திருமாலின் திருநாமத்திற்குரிய இம்மை மறுமைப் பயன்களை விளக்கியவர் திருமங்கையாழ்வார். பெரிய திருமொழி நாராயண நாமத்தின் சிறப்புக் கூறியே தொடங்கு கிறது. பன்னிரு நாமங்களைப் போற்றிப் பாடுவதும் அவதாரப் பெயர்களைக் கூறித் திருமால் பெருமை விளக்குவதும் இவருடைய பாக்களில் மிகப் பயின்று வருகிறது.

> மீனோ டாமை கேழல்அரி குறளாய் முன்னும் இராமனாய்த்
> தானாய் பின்னும் இராமனாய்த் தாமோ தரனாய்க்
> கற்கியும் [114]

எனப் பத்தவதாரப் பெயர்களை இணைத்துக் காணும் வகையில் அமையும் பாசுரம் மேற்கூறிய கருத்துக்குச் சான்று பகர்கின்றது.

### முதலாழ்வார்கள்

பொய்கையாழ்வார் தம் பெரும்பான்மையான பாடல்களில் கதை நிகழ்ச்சிகளின் பெயர்களைச் சுட்டுகிறார். பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் அவதாரங்களின் பெயர்களைக் குறிப்பிடு கின்றனர்.

### நம்மாழ்வார்

நம்மாழ்வார் திருமாலின் திருப்பெயரை மட்டும் கூறி இறையியல்பை உணர வைக்கும் முயற்சியில் சிறப்பிடம் பெறுகிறார். திருமாலின் பன்னிரு திருநாமங்கள், அவதாரப் பெயர்கள் ஆகியவை மட்டுமன்றி உலகில் உள்ள அனைத்துப் பொருள்களின் பெயர்களையும் திருமாலுக்கு இட்டு உரைக்கும் இயல்பு இவரிடம் அமைகிறது. பூமி, பரவை, தீ, ஆகாசம், இருசுடர் எனத் தொடங்கிப்[115] பல பொருள்களாய்க் கண்டு' 'எண்ணுமாறு அறிய மாட்டேன் யாவையும் யவரும் தானே '[116] என எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருக்கும் நிலையைக் கூறுகிறார்.

### திருப்பதிகளும் புராணக்கதைகளும்

ஆழ்வார்கள் திருமாலின் அர்ச்சை வடிவுடன் அனைத்துக் கதைகளையும் இணைத்துப் பாடுகின்றனர். திருப்பதிகளின் பெருமையையும் புராணக்கதைகளையும் பிரித்தறிய இயலாத நிலை ஆழ்வார்கள் பாக்களின் வழி புலனாகிறது. ஆயினும் ஆழ்வார்கள் ஏதாவது ஒரு புராணக்கதையை ஒரு திருப்பதியுடன் மிக இணைத்துக் காணும் நோக்குடையவராக உள்ளனர். அதற்கு இருவகையான காரணங்கள் அமையலாம். 1.ஈடுபாடுடைய கதையை ஈடுபாடு கொண்ட திவ்விய தேசத்துடன் இணைத்துப் பாடுதல். 2. திருப்பதியின் அர்ச்சை வடிவும் குறிப்பிட்ட கதையும் தொடர்புடையதாய் இருத்தல் என்பன அவை. நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஆழ்வார்கள் மிக ஈடுபாடு கொண்ட திருவரங்கம், திருவேங்கடம் ஆகியவற்றுடன் அனைத்துக் கதைகளும் இணைத்துப் பாடப் பெறுகின்றன.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கமன்றி ஏனைய திருப்பதிகளில் ஈடுபாடில்லாதவர். மதுரகவியாழ்வார் நம்மாழ் வாரைத் துதித்தவர்.

பெரியாழ்வார் கண்ணன் பிறப்பு முதல் பாடுகின்றார். அதனால் திருஆய்ப்பாடி என்னும் திருப்பதி கண்ணனுடன் இணைத்துப் பாடப்பெறுகிறது.[117] பெரியாழ்வார் திருவெள்ளறை என்னும் திருப்பதியைப் பற்றிப் பாடும்போது அத்திருமொழி முழுவதும் கண்ணனுடன் இணைத்துப் பாடப்பெறுகிறது.[118] ஆண்டாள் கண்ணனை ' அனுங்க என்னைப் பிரிவு செய்து ஆயர்பாடி கவர்ந்துண்ணும்'[119] என்று ஆய்ப்பாடியுடன் தொடர்புப் படுத்துகின்றார். குலசேகராழ்வார் இராமகாதையைத் தில்லை திருச்சித்திரக்கூடத் திருப்பதிக்கு உரியதாகப் பாடுகின்றார்.[120] திருத்துவரையை,

ஆயன் துவரைக்கோ னாய்நின்ற - மாயனன்று
ஓதிய வாக்கதனைக் கல்லார் உலகத்தில்
ஏதிலராம் மெய்ஞ்ஞான மில்[121]

எனக் குறிக்கின்றார் திருமழிசையாழ்வார்.

மிகுதியாகப் பாடல்களைப் பாடிய திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த திருப்பதிகள் எண்பத்தாறு. அவற்றுள் பெரும்பான்மையான திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள திரு மாலுடன் அனைத்து வகைக் கதைகளும் தொடர்புப்படுத்தப் பெறுகின்றன. சிங்கவேள்குன்றம் திருமொழி ஒன்றில் மட்டும் திருமங்கையாழ்வார் நரசிம்மாவதாரச் செய்தியைப் பத்துப் பாடல்களிலும்குறிக்கின்றார்.[122] திருவல்லிக்கேணித் திருப்பதியில் 'பார்த்தன் தன் தேர்முன் நின்றானை '[123] எனப்பாடி அர்ச்சை வடிவைப் புராணக்கதையுடன் தொடர்புப்படுத்து கின்றார்.

முதலாழ்வார் மூவரும் திருப்பாற்கடலாகிய திருப் பதியைப் பாடுகின்றனர். திருமாலின் வியூக வடிவாகிய இந்நிலையைப் பொய்கையாழ்வார் வராக அவதாரமாகவும்[124] பூதத்தாழ்வார் கண்ணன் அவதாரமாகவும்[125] பேயாழ்வார் நரசிம்மாவதாரமாகவும்[126] காணுகின்றனர். இவ்வாறு நோக்குவார் தன்மைக்கு ஏற்பத் திருப்பதிகளுடன் இணைத்துக் காணும் போக்கு அமைகிறது.

நம்மாழ்வார் பாடியுள்ள திருப்பதிகளின் எண்ணிக்கை முப்பத்தாறாகும். அவற்றுள் புராணக்குறிப்புக்கள் எடுத்தாளப் பெற்றுள்ளமை குறைவேயாகும். திருப்பதிகளைப் பற்றிய திரு மொழிகளைப் பாடுகையில் ஏதாவது ஒரு கதையை நம்மாழ்வார் எடுத்தாளும் மரபை மேற்கொண்டுள்ளார். திருமோகூரைப் பாடுகையில்'கூத்தன் கோவலன் குதற்றுவல்லசுரர் கூற்றம் '[127] என்றும், திருவாட்டாறு என்னும் திருப்பதியைப் பாடுகையில், 'மன்அஞ்சப்பாரதத்துப் பாண்டவர்க்காப் படைதொட்டான் '[128] என்றும், போற்றும் நிலையைக் காணலாம். இவ்வாறு இடை யிடையே இடம் பெறும் கதைகள் கூட, கண்ணன் அவதாரத்தில் அமைந்த நிகழ்ச்சிகளாய் உள்ளன.

ஆழ்வார்களின் பக்திப் பரவசத்தால் எழுந்த பாசுரங்களில் பல கூறுகள் ஒன்றுபடுகின்றன. அவர்களின் கருத்தாழமும் கவித் திறமையும் பக்திப்பெருக்கும் அதற்குக் காரணமாகின்றன. ஆயினும் அவர்கள் வாழ்ந்தகாலமும் சூழலும் வாழ்வும் இலக்கிய அமைப்பில் பெரும் தாக்கத்தை உண்டாக்கின. அதனால்தான் ஆழ்வார்கள் கதைகளை எடுத்தாளும் முறையால் பெரும்பான்மை ஒன்றுபட்டும் சிறுபான்மை வேறுபட்டும் திகழ்கின்றனர்.

## குறிப்புக்கள்

1. வரதராசன், மு.டாக்டர்,தமிழ்இலக்கிய வரலாறு, ப.133.
2. அரங்கநாதன், தி, பெரியாழ்வாரின் பக்திப் பாசுரங்கள் -ஓர் ஆய்வு, பின்னிணைப்பு. 5.
3. பி. ஸ்ரீ., திவ்வியப் பிரபந்த சாரம், ப. 192.
4. Subbu Reddiar, N. Dr. Religion and Philosophy of Nalayiram special Reference to Nammalvar. P. 240
5. வசனபூஷணம். மூலம். 241.
6. உபதேசரத்தினமாலை. பா. 18.
7. திருப்பல்லாண்டு. பா. 1.
8. பி. ஸ்ரீ., திவ்வியப் பிரபந்தசாரம், ப. 194.
9. திருப்பாவை வியாக்கியானம் ப. 2.
10. நாச்சியார் திருமொழி. 6. 6.

11. மேற்படி. 7 ஆம் திருமொழி
12. மேற்படி. 2 ஆம் திருமொழி
13. மேற்படி. 3 ஆம் திருமொழி
14. மேற்படி. 14 ஆம் திருமொழி
15. வசனபூஷணம். மூலம் 240.
16. பெருமாள் திருமொழி. 9.
17. மேற்படி. 8.
18. மேற்படி. 7.
19. மேற்படி. 8. 1.
20. சஞ்சீவி, ந. (பதி) தெய்வத்தமிழ், ப. 422.
21. திருச்சந்தவிருத்தம் பா. 28.
22. குருபரம்பரை பிரபாவம். ப. 63.
23. திருச்சந்தவிருத்தம். பெரியவாச்சான் பிள்ளை ப. 252. வியாக்கியானம். ப. 252.
24. வார்த்தாமாலை. 252.
25. சஞ்சீவி, ந. தெய்வத்தமிழ், ப. 409.
26. திருமாலை பா. 42.
27. மேற்படி. பா. 43.
28. அமலனாதிபிரான் பா. 10.
29. கண்ணிநுண்சிறுதாம்பு பா. 21.
30. குருபரம்பரை பிரபாவம். ப. 77.
31. பெரியதிருமொழி. 8. 8 . 10.
32. உபதேசரத்தினமாலை பா. 6.
33. திருவாய்மொழி 9. 3. 2.
34. பெரியாழ்வார் திருமொழி 4. 1. 1.
35. மேற்படி 4. 2. 5.
36. நாச்சியார் திருமொழி தனியன்.
37. திருப்பாவை. பா. 17.
38. மேற்படி. பா. 30.
39. நாச்சியார் திருமொழி. 2. 3.
40. பெருமாள் திருமொழி தனியன்.
41. மேற்படி. 8. 4.
42. மேற்படி. 8. 7.
43. மேற்படி. 8. 8.
44. மேற்படி. 6. 7.
45. திருச்சந்தவிருத்தம் பா. 28.

46. மேற்படி. பா. 40.
47. நான்முகன் திருவந்தாதி. பா. 12.
48. அமலனாதிபிரான். பா. 8.
49. உபதேசரத்தின மாலை. பா. 38.
50. பெரியதிருமொழி. 1. 8. 2.
51. மேற்படி. 2. 5. 6.
52. மேற்படி. 2. 2. 3.
53. மேற்படி. 3. 1. 5.
54. வில்லிபுத்தூராழ்வார் பாரதம் சிறப்புப் பாயிரம். 9.
55. முதல் திருவந்தாதி. பா. 74.
56. இரண்டாம் திருவந்தாதி. பா. 52.
57. மூன்றாம் திருவந்தாதி. பா. 52.
58. மேற்படி. பா. 54.
59. மேற்படி. பா. 54
60. திருவாய்மொழி. 9. 8. 7.
61. மேற்படி. 9. 3. 2.
62. அண்ணங்கராசாரியர், பகவத்கதாம்ருதம் ப. 1.
63. பெரியாழ்வார் திருமொழி 1. 2. 15.
64. மேற்படி. 2. 9.
65. மேற்படி. 2. 9.
66. மேற்படி. 2. 7. 8.
67. மேற்படி. 1. 8. 7.
68. மேற்படி. 1. 8. 8.
69. மேற்படி. 3. 10. 2.
70. நாச்சியார் திருமொழி. 7. 2.
71. மேற்படி 14 ஆம் திருமொழி.
72. மேற்படி 2 ஆம் திருமொழி.
73. மேற்படி 3 ஆம் திருமொழி.
74. பெருமாள் திருமொழி. 10.
75. மேற்படி. 9.
76. மேற்படி. 8.
77. மேற்படி. 7.
78. திருச்சந்தவிருத்தம். பா. 53.
79. நான்முகன் திருவந்தாதி. பா. 44.
80. திருமாலை. பா. 4.
81. மேற்படி. பா. 4.

82. திருப்பள்ளியெழுச்சி. பா. 6.
83. மேற்படி. பா. 5.
84. திருநெடுந்தாண்டகம். அடி. 16.
85. பெரியதிருமொழி. 10. 3.
86. மேற்படி. 11.6
87. பெரியதிருமடல். கண்ணி. 65-77.
88. சிறியதிருமடல். கண்ணி. 66-68.
89. பெரியதிருமடல். கண்ணி. 52-55.
90. முதல் திருவந்தாதி. பா. 45.
91. இரண்டாம் திருவந்தாதி. பா. 78.
92. உபதேசரத்தினமாலை. பா. 2.
93. திருவாய்மொழி. 2. 8. 6.
94. பெரியாழ்வார் திருமொழி. 3. 10.
95. பெருமாள் திருமொழி. 10.
96. திருவாய்மொழி. 3. 10. 5.
97. மேற்படி. 8. 8. 4.
98. பெரியாழ்வார் திருமொழி. 5. 3. 6.
99. பெரியதிருமொழி. 6. 7. 6.
100. பெரியாழ்வார் திருமொழி. 1. 3.
101. மேற்படி. 4. 9. 5.
102. நாச்சியார் திருமொழி. 1. 1.
103. திருப்பாவை. பா. 15.
104. திருமாலை. பா. 9.
105. பெரியதிருமொழி. 6. 1. 2.
106. மேற்படி. 6. 7. 1.
107. பெரியாழ்வார் திருமொழி. 2. 3.
108. மேற்படி. 4. 9. 9.
109. மேற்படி. 4. 6. 1.
110. திருப்பாவை. பா. 3.
111. மேற்படி. பா. 5.
112. பெருமாள் திருமொழி. 8. 4.
113. திருச்சந்தவிருத்தம். பா. 31
114. பெரியதிருமொழி. 8. 8. 10.
115. திருவாய்மொழி. 3. 4. 1.
116. மேற்படி. 3. 4. 9.
117. பெரியாழ்வார் திருமொழி. 1. 1. 2.

118. மேற்படி. 2. 8.
119. நாச்சியார் திருமொழி. 14. 2.
120. பெருமாள் திருமொழி. 10.
121. நான்முகன் திருவந்தாதி. பா. 71.
122. பெரியதிருமொழி. 1. 7.
123. மேற்படி. 2. 3. 1.
124. முதல் திருவந்தாதி. பா. 25.
125. இரண்டாம் திருவந்தாதி. பா. 28.
126. மூன்றாம் திருவந்தாதி. பா. 31.
127. திருவாய்மொழி. 10. 1. 6.
128. மேற்படி. 10. 6. 4.

# துணைநூற் பட்டியல்


அக்கினி ஹோத்திரம் ராமானுஜதாதாசாரியார் : வரலாற்றில் பிறந்த வைணவம், சாரங்கபாணி சுவாமி தேவஸ்தானம், கும்பகோணம், 1973.

அண்ணங்கராசாரியர் (பதி.) : தத்துவத்ரயம், கிரந்த மாலா ஆபீஸ்,காஞ்சிபுரம், முதல் பதிப்பு, 1966.

அண்ணங்கராசாரியர் (பதி.) : திருச்சந்தவிருத்தம் வியாக்கியானம், வைஷ்ணவகிரந்த முத்திராபகசபை, காஞ்சிபுரம், முதல் பதிப்பு, 1916.

அண்ணங்கராசாரியர் (பதி.) : நாச்சியார் திருமொழி வியாக்கியானம், வைஷ்ணவ கிரந்த முத்ராபக சபை, காஞ்சிபுரம், முதல் பதிப்பு, 1916.

அண்ணங்கராசாரியர் (பதி.) : நாலாயிர திவ்வியப்பிரபந்தம், கிரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம், முதல் பதிப்பு, 1971.

அண்ணங்கராசாரியர் (பதி.) : பகவத்கதாம்ருதம், கிரந்த மாலா ஆபீஸ்,காஞ்சிபுரம், முதல் பதிப்பு, 1975.

அண்ணங்கராசாரியர் (பதி.) : பெரிய திருவந்தாதி வியாக்கியானம், வைஷ்ணவகிரந்த முத்திராபகசபை, காஞ்சிபுரம், முதல் பதிப்பு, 1916.

அண்ணங்கராசாரியர் (பதி.) : திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும் கிரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம், ஐந்தாம் பதிப்பு, 1972.

அண்ணங்கராசாரியர் (பதி.) : திருப்பல்லாண்டு
பெரியாழ்வார் திருமொழி
வியாக்கியானம்,
வைஷ்ணவ கிரந்த முத்திராபக
சபை, காஞ்சிபுரம்,
முதல் பதிப்பு, 1916.

அண்ணங்கராசாரியர் (பதி.) : முமுட்சுப்படி வியாக்கியானம்,
கிரந்த மாலா ஆபீஸ்,
காஞ்சிபுரம்,
முதல் பதிப்பு, 1966.

அண்ணங்கராசாரியர் (பதி.) : ரங்கராஜஸ்தவம்,
கிரந்த மாலா ஆபீஸ்,
காஞ்சிபுரம்,
முதல் பதிப்பு, 1975.

அண்ணா (உரை.) : ஸ்ரீமத் பாகவத ஸாரம்,
ஸ்ரீராம கிருஷ்ண மடம்,
சென்னை,
முதல் பதிப்பு, 1965.

அதிவீரராம பாண்டியர் : கூர்மபுராணம்,
லக்ஷ்மி விலாச அச்சுக்கூடம்,
சென்னை.

அரங்கசாமி நாயகர்,பி.ஆர்.,(பதி.): வில்லிபாரதம்,
அரங்கசாமி நாயகர் பதிப்பு,
சென்னை,
முதல் பதிப்பு, 1952.

அருணாசலக் கவுண்டர், கு. : தமிழ்ப் பண்பாட்டில்
வைணவம்,
சமுதாயம் பிரசுராலாயம்,
கோவை,
முதல் பதிப்பு, 1982.

இராகவையங்கார், மு., : ஆராய்ச்சித் தொகுதி,
பாரி நிலையம், சென்னை,
இரண்டாம் பதிப்பு, 1964.

இராமநாத பிள்ளை, ப., : திருவாசகம்-தெளிவுரை,
கழக வெளியீடு,சென்னை,
முதல் பதிப்பு, 1978.

இளங்குமரன் (பதி.) : யாப்பருங்கல விருத்தி,
கழக வெளியீடு, சென்னை,
முதல் பதிப்பு, 1976.

| | | |
|---|---|---|
| இளம் பூரணர் (உரை.) | : | தொல்காப்பியம், கழக வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 1967. |
| இஸ்மாயில், மு. மு. | : | கம்பன் கண்ட இராமன், வானதி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1982. |
| கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் | : | கந்தபுராணம்-1,2,3 பகுதிகள், காசிமடம், திருப்பனந்தாள், முதல் பதிப்பு, 1952, 1953. |
| கம்பர் | : | கம்பராமாயணம் கம்பன் கழகம் வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 1976. |
| கிருஷ்ணசுவாமி அய்யாங்கார்,எஸ்.(பதி.) | : | ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் சுதர்சனம் வெளியீடு, திருச்சி, இரண்டாம் பதிப்பு, 1975 |
| கிருஷ்ணசுவாமி அய்யாங்கார்,எஸ்.(பதி.) | : | வார்த்தாமாலை சுதர்சனம் வெளியீடு, திருச்சி, முதல் பதிப்பு, 1983. |
| கிருஷ்ணவேணியம்மையார், எஸ். | : | செம்பொருள், திருமலை-திருப்பதி தேவஸ்தான வெளியீடு, முதல் பதிப்பு, 1952. |
| குமரகுருபரன் பிள்ளை, டி.எம்.(பதி.) | : | மூவர் தேவாரம் ஸ்ரீ குமர குருபரன் சங்கம், ஸ்ரீ வைகுண்டம், முதல் பதிப்பு, 1968. |
| சஞ்சீவி, ந. | : | தெய்வத் தமிழ், சென்னைப்பல்கலைக் கழகம், சென்னை, முதல் பதிப்பு, 1975. |
| சதாசிவ பண்டாரத்தார், தி.வை. | : | பிற்காலச் சோழர் சரித்திரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு, 1957. |
| சாமிநாத ஐயர், உ.வே. (பதி.) | : | சிலப்பதிகாரம், தியாகராச விலாச வெளியீடு, சென்னை, எட்டாம் பதிப்பு, 1968. |

சாமிநாத ஐயர், உ.வே. (பதி.) : சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1949.

சாமிநாத ஐயர், உ.வே. (பதி.) : தக்கயாகப் பரணி, உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1960.

சாமிநாத ஐயர், உ.வே.(பதி.) : மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், தியாகராச விலாச வெளியீடு, சென்னை, ஆறாம் பதிப்பு, 1965.

சிங்காரவேலு முதலியார் : அபிதான சிந்தாமணி, ஆசியன் எஜுகேஷனல் சர்வீஸ், புதுடெல்லி, முதல் பதிப்பு, 1982.

சித்பவானந்தர் (பதி.) : ஸ்ரீமத் பகவத் கீதை, தபோவனப் பிரசுராலயம், திருப்பராய்த்துறை, ஐந்தாம் பதிப்பு, 1964.

சுப்பிரமணியம், கே. (பதி.) : திருவிசைப்பா திருப்பல்லாண்டு, ஸ்ரீ குமர குருபரன் சங்கம், ஸ்ரீ வைகுண்டம், முதல் பதிப்பு, 1974.

செவ்லை சூடுவார் : பாகவதம், திருமலை-திருப்பதி தேவஸ்தான வெளியீடு, திருப்பதி. முதல் பதிப்பு, 1985.

சேதுரகுநாதன், ந. (உரை) : முத்தொள்ளாயிரம், கழக வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 1981.

திருமங்கையாழ்வார் : பெரியதிருமொழி - 1,2,3 பகுதிகள், ஸ்ரீ வைஷ்ணவ கிரந்த முத்திராபக சபை, காஞ்சிபுரம், முதல் பதிப்பு, 1908 (1), 1909 (2), 1911 (3).

திருவள்ளுவர் : திருக்குறள், உ.வே.சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை. முதல் பதிப்பு, 1961.

தொல்காப்பியர் : தொல்காப்பியர்,
கழக வெளியீடு, சென்னை,
இரண்டாம் பதிப்பு, 1954.

நச்சினார்க்கினியர் (உரை.) : தொல்காப்பியம்-செய்யுளியல்,
கழக வெளியீடு, சென்னை,
முதல் பதிப்பு, 1965.

நடராஜன், அ.லெ. : ஸ்ரீமத் பாகவதம்,
சமுதாயம் பிரசுராலயம்,
கோவை,
முதல் பதிப்பு, 1982.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் : அஷ்டப் பிரபந்தம்,
வை.மு.கோபாலகிருஷ்ண
மாசார்யா கம்பெனி, சென்னை,
நான்காம் பதிப்பு, 1966.

பின்பழகிய பெருமாள் ஜீயர் : ஆறாயிரப்படி குரு பரம்
பராப்ரபாவம்,
ஸ்ரீ வைஷ்ணவ சுதர்சனம்
வெளியீடு, திருச்சி,
இரண்டாம் பதிப்பு, 1975.

பி.ஸ்ரீ. : திவ்வியப் பிரபந்த சாரம்,
ஆனந்த விகடன் காரியாலயம்,
சென்னை,
முதல் பதிப்பு 1938.

புருஷோத்தம நாயுடு, பு.ரா.(பதி.): ஆசாரிய ஹிருதயம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை,
முதல் பதிப்பு, 1968.

புருஷோத்தம நாயுடு.பு.ரா. (பதி.): திருவாய் மொழி-முதல் பத்து
ஈட்டின் தமிழாக்கம்,
சென்னை பல்கலைக்கழகம்,
சென்னை,
மூன்றாம் பதிப்பு, 1971.

புருஷோத்தம நாயுடு, பு.ரா. (பதி.): திருவாய்மொழி-இரண்டாம்
பத்து ஈட்டின் தமிழாக்கம்,
சென்னைப்பல்கலைக் கழகம்,
சென்னை,
முதல் பதிப்பு, 1971.

புருஷோத்தம நாயுடு,பு.ரா. (பதி.): ஸ்ரீவசன பூஷணம்,
நாராயணசாமி நாயுடு பதிப்பு,
கடலூர்,
முதல் பதிப்பு, 1970.

மணவாள மாமுனிகள் : ஆர்த்திப் பிரபந்தம்,
கிரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம்,
முதல் பதிப்பு. 1966.

மணவாள மாமுனிகள் : உபதேசரத்தின மாலை,
கிரந்த மாலா ஆபீஸ், காஞ்சிபுரம்,
முதல் பதிப்பு, 1966.

மயிலை மாதவதாசன் (பதி.) : திருப்பாவை வியாக்கியானங்கள்,
திருவருளகம், சென்னை,
முதல் பதிப்பு, 1954.

முன்றுறை அரையனார் : பழமொழி,
நியு செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை,
இரண்டாம் பதிப்பு, 1981.

மெய்கண்டார் : சிவஞான போதம்,
தருமபுர ஆதீனம், தருமபுரம்,
1981.

வரதராசன், மு. : தமிழ் இலக்கிய வரலாறு,
சாகித்திய அக்காதெமி, புதுதில்லி,
நான்காம் பதிப்பு. 1980.

வேணுகோபால் நாயுடு : விஷ்ணுபுராணம்,
வலிவலம்,
முதல் பதிப்பு, 1909.

வையாபுரிப் பிள்ளை, எஸ் : சங்க இலக்கியம், (இருபகுதிகள்)
(பாட்டும் தொகையும்)
பாரிநிலையம், சென்னை,
இரண்டாம் பதிப்பு, 1967.

ஸ்ரீ ராமதேசிகாசார்யர், (பதி.) : சில்லரை ரஹஸ்யங்கள் முதல் பாகம்,
சாரதா விலாஸ் பிரஸ்,
கும்பகோணம்,
முதல் பதிப்பு, 1972.

ஸ்ரீ ராமதேசிகாசார்யர், (பதி.): தேசிகப் பிரபந்தம்,
லிட்டில் பிளவர் கம்பெனி,
சென்னை,
இரண்டாம் பதிப்பு, 1982.

## ஆங்கில நூல்கள்


Braj Bihary Chauby : Treatment of Nature in RG Veda, Oriental Publishers, New Delhi, I Edition, 1972.

Subbu Reddiar, N, : Religion and Philosophy of Nalayiaram with special, Reference to Nammalvar, Sri Venkateswara University, Tirupati, I Edition, 1977.

Thirumeni, C. : An Exploration of the Origin of Kambaramayanam, Kovala Nilayam, Tiruchi, I Edition, 1981.

Wilkins, W.J. : Hindu Mythology-Vedic and puranic, Delhi Book Store, Delhi, I Edition, 1972.


## ஆய்வேடு


அரங்கநாதன், தி. : பெரியாழ்வாரின் பக்திப் பாசுரங்கள் ஓர் ஆய்வு, திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி, 1980.